பக்கங்கள் இருபத்துஆறு

Registered as a Newspaper

# சஞ்சீவி

விலை ரூபா 10-00

மலை 9 : வள்ளுவர் ஆண்டு 2030 ஆனி 05 சனிக்கிழமை (19-06-1999) SANJEAVY - Regenerative Tamil Weekly சிகரம் :3

## செம்மணியில் தோண்டி எடுக்கப்பட்ட

# இரண்டு எலும்புக்கூடுகளும் அடையாளம் காணப்பட்டன!

## அரியாலை கராஜில் வேலை செய்தவர்கள்

யாழ்ப்பாணம்,ஜூன்19

**செம்மணிப் பகுதியில் கடந்த புதன், வியாழன் இரு தினங்களும் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுப் பணியின்போது மீட்கப்பட்ட இரண்டு சடலங்களுக்குரிய எலும்புகள் மற்றும் எச்சங்கள் என்பன நேற்று உறவினர்களால் அடையாளம் காட்டப்பட்டன.**

**அரியாலைப் பகுதியில் கராஜ் ஒன்றில் வேலை செய்துவந்த சமயம் காணாமற்போன இரு ஆண்களுடைய சடலங்களே அவை என்று உறவினர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.**

யாழ்.பொலீஸ் நிலையத்துக்கு அருகில் அமைக்கப்பட்டிருந்த கொட்டகையில் இந்த எலும்புக்கூடுகளும் அகழ்வின்போது கண்டுபிடிக்கப்பட்ட தடயப் பொருள்களும் உறவினர்கள் அடையாளம் காட்டுவதற்காக வைக்கப்பட்டிருந்தன.

யாழ்.மேலதிக நீதிவான் எம்.இளஞ்செழியன் முன்னிலையில் இடம்பெற்ற இந்த நிகழ்வின்போது குற்றப்புலனாய்வுத்துறை அதிகாரிகளும் சட்டமாஅதிபர் திணைக்கள அதிகாரிகளும் சர்வதேச அமைப்புக்களின் பார்வையாளர்களும் உடன் இருந்தனர்.

உயிரிழந்த இருவரும் அரியாலைப்பகுதியில் உள்ள மோட்டார் சைக்கிள் திருத்தும் ரவி கராஜ்ஜில் மெக்கானிக்காகப் பணியாற்றி வந்தவர்கள் என்றும் -

1996ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 19ஆம் திகதி இருவரும் வேலை முடிந்து வீட்டுக்குத் திரும்பிக்கொண்டிருந்த சமயம் படையினரால் கைது செய்யப்பட்ட பின்னர் காணாமற் போய் விட்டதாகவும் - அவர்களின் உறவினர்கள் நேற்று அளித்த வாக்குமூலத்தில் தெரிவித்தனர்.

(ஐ-3-5)



எலும்புக்கூட்டுக்கு உரியவர் என்று நேற்று அடையாளம் காணப்பட்ட இருவரில் ஒருவரான மீசாலையைச் சேர்ந்த இராசையா சதீஸ்குமார் என்பவரின் தாயார் தலையில் கைவைத்தவாறு அழுது புலம்பிய நிலையில் யாழ். பொலீஸ் நிலையத்திற்கு வெளியே அமர்ந்திருந்த காட்சி. அருகே மற்றொரு பெண் காணப்படுகிறார்.

## மாங்குளம் மோதலில் நான்கு படையினர் பலி

வவுனியா, ஜூன்19

மாங்குளத்துக்கு மேற்கே நேற்று முன்தினம் படையினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற மோதல் ஒன்றில் 4 படையினர் உயிரிழந்தனர். 2 படையினர் காயம் அடைந்தனர்.

இந்த மோதலில் 6 விடுதலைப் புலிகள் உயிரிழந்தனர் என்று வவுனியா படைத்தரப்பு தெரிவித்தது. (ஐ-3-164)

## நல்லூரில் சடலம்

யாழ்ப்பாணம்,ஜூன்19

நல்லை ஆதீனத்துக்கு அருகே சிவன்கோயிலுக்குப் பின்புறமாக உள்ள குளத்துக்குச் சமீபமாக அநாதரவான நிலையில் சடலம் ஒன்று நேற்றுக்காலை காணப்பட்டது.

யாழ்ப்பாணம் கே.கே.எஸ்.வீதியைச் சேர்ந்த சுப்பையா நாராயணசாமி (42வயது) என்பவருடைய சடலமே அது என அடையாளம்காணப்பட்டது.

சடலம் மரணவிசாரணைக்காக யாழ். ஆஸ்பத்திரியில் பொலீஸாரால் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ஐ-15-30-139)

## பல், ஆடைகள், பதக்கம் என்பன அடையாளம் காண்பதற்கு உதவின!

யாழ்ப்பாணம்,ஜூன்19

செம்மணியில் மீட்கப்பட்ட இரண்டு எலும்புக் கூடுகளையும் அடையாளம் காண்பதற்கு அவற்றுடன் மீட்கப்பட்ட தடயப் பொருள்களான ஆடைகள், கழுத்துப பதக்கம்(பென்ரன்) ஆகியவையும் பற்களும் உதவியுள்ளன.

அடையாளம் காணப்பட்ட எலும்புக்கூடுகளில் ஒன்று வேம்பிராய் சந்தி மீசாலையைச் சேர்ந்த 29 வயதுடைய இராசையா சதீஸ்குமார் என்பவருடையதாகும்.

இவரது உள்ளாடை மற்றும் ரீசேட் போன்றவற்றை அவரது மனைவி அடையாளம் காட்டினார். வெற்றிலை போடும் பழக்கம் உடைய இவரின் பற்கள் காவிநிறமாக இருந்ததை சம்பந்தப்பட்ட கராஜ் உரிமையாளரான சுப்பையா ரவி என்பவர் அடையாளம் காட்டினார்.

மற்றைய எலும்புக்கூடு நல்லூரைச் சேர்ந்த 23 வயதுடைய மகேந்திரன் பாபு என்பவருடையது என அடையாளம் காணப்பட்டது.

அவர் கடைசியாக அணிந்திருந்த கடும் பச்சைநிற நீளக்காற்சட்டை, ரீசேட் மற்றும் கறுத்த நூலில் கட்டப்பட்டிருந்த வெள்ளியினாலான பென்ரன் ஆகியவற்றை வைத்து கராஜ் உரிமையாளர் அந்த எலும்புக்கூட்டை அடையாளம் காட்டினார்.

சதீஸ்குமாரின் மனைவி தனது சிறு குழந்தையுடன் வந்து கணவனின் எலும்புக்கூட்டை அடையாளம் காட்டியபோது அங்கு அழுது புலம்பினார்.

காணாமற்போனோரின் உறவினர்கள் பத்துப்பேர் எலும்புக்கூடுகளைப் பார்வையிட்டதையடுத்து இந்தப் பணி நிறுத்தப்பட்டது.

பின்னர் எலும்புக்கூடுகளை ஆய்வுக்காகக் கொழும்புக்கு எடுத்துச் செல்ல ஏற்பாடாகியிருந்தது. (ஐ-3-5)

## பொலீஸ் நிலையம் முன்பாக அழுது புலம்பிய உறவினர்கள்

### நெஞ்சை நெருட வைத்த நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூன்19

எலும்புக்கூடுகளை அடையாளம் காட்டுவதற்காக காணாமற்போனோரின் பெற்றோர்கள், உறவினர்கள சுமார் 300பேர் நேற்றுக்காலை முதல் யாழ். பொலீஸ் நிலையத்துக்கு முன் கண்ணீரும் கம்பலையுமாகக் கூடியிருந்தனர்.

அவர்களில் பலர் தங்கள் பிள்ளைகள், உடன்பிறப்புக்கள், கணவன்மாரைத் தம்மிடம் ஒப்படைக்குமாறு கோரி கேவிக்கேவி அழுதனர். இதனால் அப்பகுதியே சோகமயமாகக் காணப்பட்டது.

அரச சட்டவாதி யஸந்த கோத்தாக்கொட அங்கு சமுகமளித்து கூடியிருந்தோர் மத்தியில் உரையாற்றினார்.

காணாமற் போனவர்கள் விடயம் தொடர்பாக இதுவரை எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை அவர் அங்கு எடுத்துக் கூறினார்.

"இத்தனை வருடங்களாக எங்களை ஏமாற்றியது போதும். விரைவாக எமக்கு நிவாரணம் தாருங்கள்." என்று கூடியிருந்தோர் கோரினர்.

## துரையப்பா புதைகுழி வழக்குக்கு நிபுணர்கள் குழு சமுகந் தரவில்லை

யாழ்ப்பாணம், ஜூன்19

யாழ்.துரையப்பா ஸ்ரேடிய புதைகுழி விவகாரம் நேற்று யாழ். மேலதிக நீதிவான் எஸ்.ஏ.ஈ.ஏகநாதன் முன்னிலையில் எடுக்கப்பட்டபோது புதைகுழி தோண்டும் பணிக்கு உதவி கோரப்பட்ட நிபுணர்கள் நீதிமன்றத்துக்குச் சமுகமளிக்கவில்லை.

தற்போது சமுகமளிக்க முடியவில்லை என்று தெரிவித்து நீண்டகாலத் தவணை வழங்குமாறு கோரி சட்ட மருத்துவ நிபுணர் நெரியல்ல, மண்ணியல் நிபுணர் நந்தசேன, இரசாயனப் பகுப்பாய்வாளர் மெண்டிஸ் ஆகியோர் தனித்தனிக் கடிதங்களை நீதிவானுக்கு அனுப்பியிருந்தனர்.

"இந்த விவகாரத்தை நீடித்துக் கொண்டுபோக முடியாது. பொலீஸார் இந்த விடயத்தில் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும். பொலீஸாரின் விருப்பப்படியே இந்த நிபுணர்களை அழைக்க ஆணை வழங்கினேன்.அவர்கள் வரமுடியாது போனால் வேறு ஒரு குழுவை நியமிக்க ஏற்பாடு செய்ய வேண்டியதுதானே." என்று நீதிவான் பொலீஸாரிடம் கேள்வி எழுப்பினார்.

அதேநேரம் சட்டமருத்துவத்துறை நிபுணர் நெரியல்ல நீதிமன்றுக்கு அனுப்பியுள்ள கடிதங்களுக்கு சில விளக்கங்களை நீதிமன்றம் அறிய விரும்புகின்றது என்றும் -

அதற்காக அவரை நீதிமன்றத்தில் சமுகமளிக்கச் செய்யவேண்டும் என்றும் -பொலீஸாருக்கு நீதிவான் உத்தரவிட்டார். (உ-3-5)

## தெற்கில் டாக்டர்கள் வேலைநிறுத்தம் நீடிப்பு

கொழும்பு,ஜூன்19

சுகாதார மற்றும் வைத்திய சேவைகளை அரசாங்கம் அத்தியாவசிய சேவைகளாகப் பிரகடனம் செய்துள்ள போதிலும் தெற்கில் டாக்டர்கள் தமது வேலைநிறுத்தப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தி வருகின்றனர்.

இந்தப் பிரகடனத்தை ஏற்று டாக்டர்கள் வேலைக்குத் திரும்பாத பட்சத்தில் பொலீஸாரின் உதவியுடன் அவர்களைப் பலவந்தமாகச் சேவையில் ஈடுபடுத்துவது தொடர்பாக அரசாங்கம் ஆலோசித்து வருவதாக கொழும்பு செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

வேலைநிறுத்தம் காரணமாக பல ஆஸ்பத்திரிகளில் வைத்தியப் பணிகள்சீர்குலைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

## குண்டுவெடிப்பில் குழந்தை பலி!

மட்டக்களப்பு, ஜூன்19

மட்டக்களப்பு வாழைச்சேனை பேய்த்தாளையில் வீடு ஒன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் ஒன்றரை வயது நிரம்பிய பத்மநாதன் நிக்ஷன் என்ற குழந்தை மரணமானது.

உயிரிழந்த குழந்தையின் சகோதரன் நிரோஷன்(9வயது)காயமடைந்து மட்டக்களப்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ-3-21)

## குப்பைஏற்றும் வாகனத்தில் குண்டுவெடிப்பு

கொழும்பு, ஜூன்19

கொழும்பில் பிரபல ஹில்டன உல்லாச ஹோட்டலில் கழிவுகளை ஏற்றி வருவதற்காகச் சென்ற கொழும்பு மாநகரசபை வாகனம் ஒன்றுக்குள் குண்டு வெடித்துள்ளது.

கோட்டை உலகசந்தை, விஜேவர்த்தன மாவத்தை மற்றும் லேக் ஹவுஸ் நிறுவனம் ஆகிய இடங்களில் இருந்து கழிவுகளை ஏற்றிக்கொண்டு சென்ற அந்த வாகனம் ஹில்டன் ஹோட்டலின் பின்புறத்தில் குப்பைகளை ஏற்றிக் கொண்டிருந்த சமயம் அதற்குள் இருந்து குண்டு வெடித்ததாகப் பொலீஸார் தெரிவித்தனர். இக்குண்டு வெடிப்பினால் பெரியளவில் சேதம் எதுவும் ஏற்படவில்லை. (ஐ-8)

## கண்டி ரயில் நிலையத்தில் குண்டுப் பீதி

கொழும்பு, ஜூன்19

கண்டி ரயில் நிலையத்தில் வெடிப்பொருள்களுடன் பெட்டி ஒன்று கைப்பற்றப்பட்டதை அடுத்து நேற்று அங்கு பதற்றம் நிலவியதாகத் தெரிவிக்கப்பட்டது.

குண்டு பொருத்துவதற்கான வயர், சிறுகுண்டு மற்றும் இராணுவச்சீருடை ஆகியன அப்பெட்டியில் காணப்பட்டன என்றும் -

அதைத்தொடர்ந்து மோப்ப நாய்கள் கொண்டுவரப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது என்றும் -

தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

## கட்டுநாயக்காவில் தண்ணீரில் விஷம்; 400 பேர் மயக்கம்

கொழும்பு, ஜூன்19

கட்டுநாயக்காப் பகுதியில் உள்ள ஆடை தயாரிப்புத் தொழிற்சாலையில் நேற்றுக்காலை குடிதண்ணீர் அருந்திய 400 ஊழியர்கள் மயக்கமடைந்த நிலையில் ஆஸ்பத்திரிகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

குடிதண்ணீரில் கலக்கப்பட்ட விஷம் காரணமாகவே இவர்கள் மயக்கமடைந்தனர் என்று ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துடுப்பாட்டம் அன்றும் இன்றும்

-கோபி-

21

நாளை உலகக் கிண்ண இறுதியாட்டம். அது பற்றிப் பேசு முன் ஒரு கேள்வி. நேற்று முன் தினம் இரவு ஆஸ்திரேலிய-தென்னாபிரிக்க ஆட்டத்தைப் பார்த்தீர்களா? பார்க்கவில்லையென்றால் வாழ்க்கையில் அரைவாசியை இழந்து விட்டீர்கள் போங்கள்.

அது என்ன அற்புதமான ஆட்டம்! 'படையப்பா' திரைப்படம் மாதிரித் திகிலாக - இறுதி வரை என்ன நடக்கப் போகிறது? யார் வெல்லப் போவது? - என்று தெரியாமல்.... அப்பப்பா!


அக்ரம்

இறுதியாட்டத்தில் தென்னாபிரிக்கா ஒவ்வொரு பந்து வீச்சிலும் இரு ஓட்டங்கள் எடுக்க வேண்டியநிலை.(8க்குப் 16). குளூஸ்னர் விளாசுகிறார். பந்து ரெய்.்.பெலின் கைகளிற் பட்டு எல்லைக் கோட்டைக் கடக்க....ஸ்ரீவ்வோ அக்கணமே வாழ்க்கை வெறுத்துச் சந்நியாசியாகாதது அதிசயம்தான்.

பின்னர் இறுதிப் பந்துப் பரிமாற்றத்தின் முதலிரு பந்து வீச்சுக்களில் குளூஸ்னர் அற்புதமான நான்குகளை அடிக்க... சமநிலை. அந்த நேரத்தில் ஆண்டவன் கூட ஆஸ்திரேலியா இறுதியாட்டத்திற்கு செல்லும் என்று நினைத்திருக்க மாட்டான். ஆனால் வெண்ணெய் திரண்ட நேரம் தாழி உடைந்தது போல குளூஸ்னர் முட்டாள் தனமாக ஓடி... ஐயகோ! தென்னாபிரிக்க இரசிகர்களின வாயில் மண். (அவர்கள் இனி "அடுத்த உலகக் கிண்ணம் நமக்குத் தான்!" என்று சொல்லிக் கொண்டிருக்க வேண்டியது தான்)


அக்ரர்

சரி. நடந்ததை விட்டுவிட்டு நடக்கப் போவதைப் பார்ப்போம். நாளை இருபதாம் நூற்றாண்டின் இறுதி உலகக் கிண்ணத் தொடரின் இறுதியாட்டம். உலகின் இரு மிகச் சிறந்த அணிகள் மோதிக்கொள்ளப் போகின்றன என்று கூறிவிட முடியாதுதானெனினும் ஆஸ்திரேலிய, பாகிஸ்தான் அணிகளைக் குறைத்து மதிப்பிட்டு விடமுடியாது. வெல்லப்போவது யார்?

## கிண்ணம் யாருக்கு?

துடுப்பாட்டத்தில் எதுவும் நடக்கலாம். எனவே எதையும் எதிர்வு கூறிவிட முடியாது தான். எனினும் ஆட்டக்காரர்களின் தனிப்பட்ட சாதனைகளைக் கொண்டு அணியினை ஓரளவு மதிப்பீடு செய்யலாம். அவ்வகையில் ஆஸ்திரேலிய, பாகிஸ்தானிய வீரர்கள் இன்று(19.06.99) வரை பங்குபற்றிய போட்டிகளில் பெற்ற ஓட்டங்கள் மற்றும் இலக்குகள் பற்றிய விவரத்தை அட்டவணை தருகின்றது.


அன்வர்

இனி மீண்டும் அணிகளின் பக்கம் பார்வையைச் செலுத்துவோமே.

## அணித்தலைவர்கள்

வசீம் அக்ரம் - ஸ்ரீவ்வோ! உதாரண புருஷர்கள். தம் அணி வீரர்களுக்கு இப்படித் தான் பந்து வீச வேண்டும், இப்படித்தான் துடுப்பெடுத்தாடவேண்டும் என்பதையெல்லாம் சொல்லால் மட்டுமன்றி செயலாலும் காட்டிநிற்பவர்கள்.

அவர்களது திறமைக்கு இந்த உலகக் கிண்ணத் தொடரிலேயே பல உதாரணங்கள்!


வாஸ்ரி

தென்னாபிரிக்காவிற்கு எதிராக ஸ்ரீவ் 110 பந்து வீச்சுகளில் பெற்ற சதம் (120*) அவரது 256 ஆட்ட அனுபவத்தில் இரண்டாவதுதான். ஆனால் அதனைப் பெற்ற விதம்.... பெற்ற தருணம்.......

வசீமைப் போலவே ஸ்ரீவும் ஒரு சகலதுறை வல்லுநர் தான். வசீம் துடுப்பெடுத்தாடக் கூடிய பந்தாளர். ஸ்ரீவ் பந்து வீசக் கூடிய துடுப்பாளர். அண்மைக் காலங்களில் உடல் நிலை இடந்தராததால் ஸ்ரீவ் அதிகம் பந்து வீசுவதில்லை எனினும் அவரது பந்து வீச்சு பற்றிய விவரங்கள் அவரது திறமைக்கு சான்று.

ஆஸ்திரேலியாவிற்கெதிரான தெரிவுப் போட்டியின் இறுதிப் பந்துப் பரிமாற்றத்தை வீசி இறுதி இரு ஆஸ்திரேலியர்களையும் ஆட்டமிழக்கச் செய்து அணியை வெற்றிப் பாதையில் கொண்டுசென்றமை வசீமின் திறமைக்கும் துணிவுக்கும் நல்ல எடுத்துக்காட்டு.

இறுதிநிலைத் துடுப்பாளர்களால் வசீமை எதிர்கொண்டு என்ன செய்துவிட முடியும் என்று எண்ண முடியாது. நான்காவது உலகக் கிண்ணத் தொடரில் பாகிஸ்தானிய இறுதி இணை வோல்ஷின் இறுதிப் பந்துப் பரிமாற்றத்தில் வெற்றிக்கு வேண்டிய 14 ஓட்டங்களையும் பெற்றதனை நினைத்துப் பாருங்கள்.

ஆனால் அதையெல்லாம் நினைக்காமல் தானே இறுதிப் பந்துப் பரிமாற்றத்தை வீசியமை வசீமின் தன்னம்பிக்கையின் உச்சத்தை விளக்கி நிற்கிறது.

களத்தில் ஸ்ரீவ் அணியினைத் தலைமை தாங்கும் பாணி அமைதியானது. அவர் அதிகம் உணர்ச்சி வசப்படார். மெல்லிய இமை வெளியினூடு தெரியும் கண்களில் எப்போதும் நம்பிக்கை ஒளியுடன் காணப்படுவார். ஆனால் வசீமின் பாணி வித்தியாசமானது. இலக்கினை வீழ்த்தி விட்டு தலைமயிர் எம்பி எம்பிக் குதிக்க சிங்கம் போல கர்ச்சித்தவாறு வசீம் ஓடி வருகின்ற காட்சியை ஒரு முறை உங்கள் மனக் கண்களால் பாருங்கள். தலைமை என்பது வசீம் இம்ரானிடம் கற்ற பாடம். சுருக்கமாகச் சொல்வதானால் வசீம் ஒரு தலைவன். இதற்கு மேல் விளக்கம் அவசியமில்லை.

வசீமிற்கு இந்தத் தொடருடன் ஓய்வு பெறும் எண்ணம் இருக்கிறது. ஸ்ரீவ்வோவைப் பொறுத்த வரையில் உலகக் கிண்ணத்தை வெல்வதென்பது நீண்டகாலக் கனவு. அதனை இம்முறையிலேயே நனவாக்கி விட வேண்டும். ஏனெனில் அவர் அடுத்த உலகக் கிண்ணத் தொடர்வரை ஆடுவதற்குச் சாத்தியங்கள் குறைவு.


ஸ்ரீவ்

எனவே இரு அணித்தலைவர்களும் தங்கள் அணிகளின் திறமையை நன்கு பயன்படுத்தி வெற்றிபெறப் போராடுவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

இங்கிலாந்து மைதானங்களில் முதல் 15 பந்துப் பரிமாற்றங்களில் அதிகம் இலக்குகளை இழக்காமல் ஆடும் அணிக்கே வெற்றி வாய்ப்புகள் அதிகமாக உள்ளன. எனவே நாளை ஆரம்பத் துடுப்பாளர்களுக்கு அதிக வேலையிருக்கிறது.

## ஆரம்பத் துடுப்பாளர்கள்

இரண்டு அணிகளிலுமே - ஆரம்ப இணை வலதுகை - இடதுகை துடுப்பாளர்களைக் கொண்டதாகச் சிறப்பாக அமைந்துள்ளது. ஆஸ்திரேலியாவின் மார்க் வோவும் பாகிஸ்தானின் சாயிட் அன்வரும் உலகின் முன்னணித் துடுப்பாளர்களுள் இருவர். இவர்களிருவரும் தொடரின் ஆரம்ப ஆட்டங்களில் பெரிதாக சோபிக்கவில்லையெனினும் இப்போது நன்றாக ஆடத் தொடங்கியுள்ளனர்.

மார்க்வோ சிம்பாப்வேக்கு எதிரான சிறப்புச் சுற்று ஆட்டத்தில் சதம் அடித்தார். அன்வர் கடைசி இரு ஆட்டங்களிலும் அடுத்தடுத்து சதம் பெற்று உறுதியான நிலையிலிருக்கிறார். மார்க் வோவுடன் இணைந்து களமிறங்கும் கில்கிறிஸ்ற் தொடரில் இதுவரை பெரிய எண்ணிக்கைகள் எதையும் பெறவில்லை. எனவே அவர் நாளை நிச்சயம் ஏதாவது சாதிக்க முயல்வார்.

அன்வருடன் இணைந்து களமிறங்கும் வாய்ப்பு அப்ரீடியை விட வாஸ்ரிக்கே அதிகம் உள்ளது. வாஸ்ரி பொறுமையாகவும் ஆடக் கூடியவர். ஒரு பொறுமையான ஆரம்பத் துடுப்பாளரைக் கொண்டிருப்பது இங்கிலாந்து நிலைமைகளுக்கு ஏற்றது.

பாகிஸ்தான் ஆரம்பத்திலேயே இலக்கொன்றை இழந்தால் ரஸாக் களமிறங்கலாம். ஏனெனில் அவரும் ஒரு பொறுமையான துடுப்பாளர். ஆரம்பத்தில் பொறுமையாக ஆடி கடைசியில் வெளுத்து வாங்கும் - இங்கிலாந்து கள நிலைமைகளுக்கு ஏற்ற - உத்தியைப் பாகிஸ்தான் கைக்கொள்கிறது. இது முதலில் துடுப்பெடுத்தாடும்போதே பெரிதும் கைகொடுக்கும். எனவே முதலில் துடுப்பெடுத்தாடுவது பாகிஸ்தானுக்கு சாதகமாயிருக்கும். ஆனால் ஆஸ்திரேலியர்களுக்கு முதலிற் துடுப்பெடுத்தாடவும் தெரியும் துரத்திப் பிடிக்கவும் தெரியும்.


சக்லேய்ன்

## ஏனைய துடுப்பாளர்கள்

பாகிஸ்தானிய அணியின் பெரும் சிறப்பம்சம் அவர்களது சகலதுறை வல்லுநர்கள். ரஸாக், அக்ரம், மஹ்மூட் என ஒரு படையையே வைத்திருக்கிறார்கள். சக்லெயின் ஓரளவு துடுப்பெடுத்தாடுவார். அதிரடி அப்ரீடி ஓரளவு பந்து வீசுவார்.

ஆஸ்திரேலிய அணியில் ஸ்ரீவ் வோ, மார்க் வோ, வோண், மூடி, ரெய்.்.பெல் ஆகியோர் சகலதுறை வல்லுநர்களாகத் தெரிந்தாலும் வோணிடமும் ரெ.்.பெலிடமும் அதிக ஓட்டங்களை எதிர்பார்க்கமுடியாது. அதுபோல் வோ சகோதரர்களிடம் அதிக இலக்குகளையும் எதிர்பார்க்கமுடியாது.

வோ சகோதரர்கள் இப்போது பெரும்பாலும் துடுப்பாளர்களாகத்தான் பிரகாசிக்கிறார்கள். மேலும் பொன்ரிங், பெவன் போன்ற சிறந்த துடுப்பாளர்களும் ஆஸ்திரேலிய அணியிலிருக்கின்றனர். பெவனின் ஓட்டச் சராசரியைப் பாருங்கள். ஒரு நாள் போட்டிகளின் வரலாற்றிலே அதிகூடிய சராசரியைக் கொண்டிருப்பவர் அவர். பொன்ரிங் இந்தத் தொடரிலே பெற்ற ஓட்ட எண்ணிக்கைகள் 33, 47, 47, 18*, 20, 23, 36, 69, 37. பயனுள்ள துடுப்பாளர். டறன் லெமனாலும் சிறப்பாக ஓட்டங்களைப் பெறமுடியும்.


பெவன்

பாகிஸ்தானின் துடுப்பாளர் வரிசையிலே இஜாஸ் அஹ்மட், இன்ஸமாம் உல் ஹக் எனும் இரு பெரும் மலைகள் இருக்கின்றன. உருவத்திலும் திறமையிலும் மலைகள்! 'ரண் அவுட்' முறை மட்டும் இல்லாவிட்டால் இன்ஸமாம்தான் உலகின் முன்னணித் துடுப்பாளராக இருப்பார். இஜாஸிடம் விக்கெட்டின் குறுக்கே வந்து LBW ஆகும் குறைபாடு இருக்கிறது. ஒரு நாள் போட்டிகளில் மிகுந்த அனுபவம் உள்ள துடுப்பாளர்கள் இவர்கள்.


மார்க்

இவர்களின் பின் மொயின் கான், அப்ரீடி ஆகிய வேகத் துடுப்பாளர்கள் இருக்கிறார்கள். இந்த பாகிஸ்தானிய ஏவுகணைகள் இந்தியாவை விடுத்து ஆஸ்திரேலியாவைக் குறி பார்க்கின்றன. விளைவை நாளை பார்ப்போமே.

## பந்தாளர்கள்

பந்தாளர்களைப் பற்றி எண்ணியவுடன் ஞாபகத்தில் தோன்றுபவர் 'ராவல்பிண்டி' எக்ஸ்ரஸ்! ஆமாம்! சொயிப் அக்ரர்தான். அவர் வீசும் அற்புதமான 'ஜோக்கர்கள்'.....89, 92, 95..... என அதிகரிக்கும் அதிவேகம் (மைல்/மணி)....... வீசுகின்ற வேகத்தில் கையும் கழன்ற பின் தான் ஓய்வார் போலிருக்கிறது. அக்ரருடன் அனுபவத்தில் முதிர்ந்த அக்ரம் இருப்பது பாகிஸ்தானுக்கு பயனுள்ளதாயிருக்கும்.

ஆஸ்திரேலியாவின் மெக்ராத் அற்புதமான பந்தாளர். லாறாவை, டெண்டுல்கரை அவர் ஆட்டமிழக்கச் செய்த விதங்கள் அவரைப் பற்றி அதிகம் கூறும். .்.பிளெமிங்,ரெய்.். பெல் ஆகியோரும் சிறந்த பந்தாளர்களே. அற்புதச் சுழல் பந்தாளர் ஷேன் வோண் முன்னேறி வந்து தாக்கும் பாகிஸ்தானியர்கள் முன் தாக்குப் பிடிக்கிறாரோ தெரியவில்லை.


மெக்ராத்

பாகிஸ்தானின் முன்னணி சுழல் பந்தாளர் சக்லேய்ன் முஷ்ராக். அவருக்கு வயது 22 மட்டுந்தான். ஆனால் 200 இலக்குகளை ஏற்கனவே வீழ்த்திவிட்டார். பாகிஸ்தானின் ரஸாக், மஹ்மூட் ஆகியோரும் சிறந்த பந்தாளர்களே.

ஆஸ்திரேலியாவைப் பொறுத்தவரையில் ஐந்தாவது பந்தாளர் விடயத்தில் சிறிது சிரமமிருக்கிறது. மூடி, மார்க் வோ, பெவன் போன்றோர் அந்தப் பொறுப்பைப் பங்கிட்டுக் கொள்ளலாம். ஆயினும் இவர்கள் மொயின்கான் போன்றோரிடம் மாட்டிக் கொண்டால்...... ஸ்ரீவ் இது பற்றி ஏதாவது யோசித்து வைத்திருப்பார்.

இறுதியாட்டத்தில் இரு சிறந்த அணிகள். இவையிரண்டும் ஏற்கனவே தெரிவுப் போட்டிகளிலே மோதிக் கொண்டுள்ளன. அப்போது பாகிஸ்தானுக்கு வெற்றி.

அந்த வெற்றி பாகிஸ்தானியர்களை உளரீதியாகப் பலப்படுத்தியிருக்கிறது. ஆனால் பாகிஸ்தானியர்களைப் போலவே ஆஸ்திரேலியர்களும் இறுதி மூச்சு வரை போராடுபவர்கள். இது அக்ரத்திற்கு தெரியும்.

ஆக, வெற்றிக்கு அதிக வாய்ப்பு யாருக்கு உள்ளதென்று.... என்னால் சொல்லத் தெரியவில்லை. உங்களால் முடிகிறதா? ஏன் சிரமம்? அதிகம் அலட்டிக் கொள்ளாமல் நாளை இரவு வரை பொறுத்திருந்து பார்த்து விட்டால் போகிறது.



## ஆஸ்திரேலியா

### துடுப்பெடுத்தாடல்

| | M | I | No | Runs | Hs | AVG | 100 | 50 |
|---|---|---|---|---|---|---|---|---|
| பெவன் | 113 | 101 | 39 | 3748 | 108* | 60.45 | 3 | 26 |
| டேல் | 26 | 10 | 7 | 59 | 15* | 19.66 | - | - |
| .்.பிளெமிங் | 60 | 20 | 13 | 44 | 8* | 6.28 | - | - |
| கில்கிறிஸ்ற் | 67 | 65 | 4 | 2031 | 154 | 33.29 | 5 | 7 |
| யூலியன் | 25 | 17 | 0 | 224 | 35 | 13.17 | - | - |
| லீ | 25 | 21 | 4 | 288 | 47 | 16.94 | - | - |
| லெமன் | 53 | 50 | 6 | 1424 | 110* | 32.36 | 2 | 8 |
| மெக்ராத் | 95 | 29 | 16 | 50 | 10 | 3.84 | - | - |
| மாட்டின் | 35 | 32 | 6 | 658 | 59* | 24.15 | - | 3 |
| மூடி | 69 | 61 | 10 | 1188 | 89 | 23.29 | - | 10 |
| பொன்ரிங் | 82 | 82 | 9 | 2896 | 145 | 39.67 | 5 | 15 |
| ரெய்.்.பெல் | 91 | 57 | 21 | 503 | 58 | 13.97 | - | 1 |
| வோண் | 124 | 73 | 22 | 630 | 55 | 12.35 | - | 1 |
| மார்க் வோ | 190 | 185 | 13 | 6599 | 130 | 38.36 | 12 | 42 |
| ஸ்ரீவ் வோ | 267 | 243 | 48 | 6239 | 120* | 31.99 | 2 | 37 |

### பந்து வீச்சு

| | O | M | R | W | AVG | BEST | 4W | 5W |
|---|---|---|---|---|---|---|---|---|
| பெவன் | 278.2 | 4 | 1370 | 32 | 42.81 | 3/36 | - | - |
| டேல் | 227 | 27 | 874 | 28 | 31.21 | 3/18 | - | - |
| .்.பிளெமிங் | 528.5 | 41 | 2308 | 95 | 24.29 | 5/36 | 3 | 1 |
| யூலியன் | 191 | 11 | 997 | 22 | 45.31 | 3/40 | - | - |
| லீ | 146.3 | 9 | 671 | 22 | 30.5 | 5/33 | - | 1 |
| லெமன் | 69 | 1 | 376 | 8 | 47.00 | 2/11 | - | - |
| மெக்ராத் | 855.3 | 70 | 3439 | 138 | 24.92 | 5/14 | 5 | 3 |
| மாட்டின் | 26.4 | 0 | 153 | 1 | 153.0 | 1/30 | - | - |
| மூடி | 414.5 | 23 | 1783 | 43 | 41.46 | 3/39 | - | - |
| பொன்ரிங் | 14 | 0 | 62 | 1 | 62.0 | 1/41 | - | - |
| ரெய்.்.பெல் | 778.4 | 84 | 3066 | 105 | 29.2 | 4/13 | 5 | - |
| வோண் | 1160.4 | 73 | 4818 | 198 | 24.33 | 5/33 | 10 | 1 |
| மார்க்வோ | 558.3 | 11 | 2658 | 81 | 32.81 | 5/24 | 1 | 1 |
| ஸ்ரீவ் வோ | 1439.2 | 56 | 6532 | 190 | 34.37 | 4/33 | 4 | - |

## பாகிஸ்தான்

### துடுப்பெடுத்தாடல்

| | M | I | No | Runs | HS | AVG | 100 | 50 |
|---|---|---|---|---|---|---|---|---|
| ரஸாக் | 22 | 18 | 2 | 258 | 60 | 16.12 | - | 1 |
| மஹ்மூட் | 69 | 52 | 11 | 712 | 65* | 17.36 | - | 2 |
| இஜாஸ் | 234 | 217 | 29 | 6142 | 139* | 32.67 | 10 | 33 |
| இன்சமாம் | 191 | 180 | 24 | 6106 | 137* | 39.14 | 6 | 43 |
| மொயின் | 138 | 115 | 30 | 2131 | 69* | 25.07 | - | 7 |
| முஷ்ராக் | 130 | 69 | 31 | 343 | 26 | 9.02 | - | - |
| அன்வர் | 179 | 177 | 15 | 6525 | 194 | 40.27 | 17 | 30 |
| மலிக் | 283 | 256 | 38 | 7169 | 102 | 32.88 | 5 | 47 |
| சக்லேய்ன் | 107 | 62 | 23 | 509 | 30* | 13.05 | - | - |
| அப்ரீடி | 89 | 85 | 2 | 2012 | 109 | 24.24 | 2 | 10 |
| அக்ரர் | 24 | 10 | 7 | 54 | 36 | 18.00 | - | - |
| வாஸ்ரீ | 7 | 7 | 0 | 236 | 84 | 33.71 | - | 1 |
| யூனிஸ் | 173 | 86 | 31 | 548 | 37 | 9.96 | - | - |
| அக்ரம் | 274 | 216 | 39 | 2836 | 86 | 16.02 | - | 6 |
| யூகானா | 24 | 20 | 3 | 737 | 100 | 43.35 | 1 | 6 |

### பந்து வீச்சு

| | 0 | M | R | W | AVG | BEST | 4W | 5W |
|---|---|---|---|---|---|---|---|---|
| ரஸாக் | 163.4 | 7 | 751 | 27 | 27.81 | 3/25 | - | - |
| மஹ்மூட் | 531.3 | 34 | 2347 | 66 | 35.56 | 5/38 | 1 | 1 |
| இஜாஸ் | 105.2 | 1 | 474 | 5 | 94.80 | 2/31 | - | - |
| இன்சமாம் | 6.4 | 0 | 52 | 2 | 26.00 | 1/4 | - | - |
| முஷ்ராக் | 1120.3 | 43 | 4842 | 144 | 33.62 | 5/36 | 2 | 1 |
| அன்வர் | 36.2 | 3 | 176 | 5 | 35.20 | 2/9 | - | - |
| மலிக் | 584.1 | 10 | 2959 | 89 | 33.24 | 5/35 | 1 | 1 |
| சக்லேய்ன் | 935.4 | 46 | 3991 | 203 | 19.66 | 5/29 | 9 | 5 |
| அப்ரீடி | 594 | 13 | 2827 | 54 | 52:35 | 3/33 | [illegible] | [illegible] |
| அக்ரர் | 203.5 | 21 | 881 | 43 | 20.48 | 4/37 | 1 | - |
| வாஸ்ரி | 5.1 | 0 | 40 | 3 | 13.33 | 3/36 | [illegible] | [illegible] |
| யூனிஸ் | 1435.5 | 96 | 6581 | 284 | 23.17 | 6/26 | 11 | 9 |
| அக்ரம் | 2349.3 | 171 | 9016 | 385 | 23.41 | 5/15 | 16 | 5 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமைகளுக்கும் மனித நேயத்துக்கும் சவால் விடும் செம்மணிப் பயங்கரங்கள்!

ஒரு வருட காலமாக எதிர்பார்க்கப்பட்ட செம்மணிப் புதைகுழிகளைத தோண்டும் வேலைகள் கடந்த புதன்கிழமை விதிமுறைப்படி ஆரம்பமாகின. மனித புதைகுழிகள் அப்பகுதியில் இருப்பதாக தகவல் வெளியிட்ட இராணுவத்தைச் சேர்ந்த கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ பாதுகாப்புடன் அங்கு கூட்டிவரப்பட்டார். அவர் நீதிமன்றத்தில் வாக்குமூலம் அளித்தார். அவரது வாக்குமூலத்தில் தெரிவிக்கப்பட்ட தகவல்கள் திடுக்கிடவைப்பனவாகவும், நினைக்கப் பயங்கரமானவையாகவும் உள்ளன.

தமிழர்கள் மிருகங்களை விடவும் கேவலமாகக் கருதப்பட்டு அவர்களது உயிர்கள் மதிப்பற்றவையாக - செல்லாக்காசுகளாக - கருதப்பட்டு கொன்று குவிக்கப்பட்டு, புதைக்கப்பட்ட விவரங்களை ராஜபக்ஷவின் சாட்சியம் படம் பிடித்துக் காட்டுகிறது.

தமிழர்கள் நாதியற்றவர்கள்; அதனால் அவர்களைக் கொன்றாலும் குற்றமில்லை; அதற்குத் தண்டனையும் கிடையாது என்ற நிலை. படையினர் மத்தியில் இதுவரை காலமும் வளர்ந்திருந்ததால் இத்தகைய படுபாதகமான சம்பவங்கள் நடந்திருக்கின்றன. அரசாங்கங்களும் அரச இயந்திரமும் இவற்றுக்கு ஊக்கமளிப்பது போன்று, மனித உரிமைகளுக்கு அப்பாற்பட்ட சட்டங்களை இயற்றி நடைமுறைப்படுத்தியமையும், தென்னிலங்கையில் விதைக்கப்பட்ட இனத்துவேசமும் இத்தகைய சம்பவங்களின் ஊற்றுக்கால்கள் என்பதனையும் மறந்துவிடுவதற்கில்லை.

குறிப்பாக போர் தொடங்கிய கடந்த பதினைந்து வருட காலத்தில் தமிழர்கள் மீதான மனித உரிமை மீறல்கள் எவ்வாறு பரவலான முறையில் மனித நீதிக்கும் மனிதநேயத்துக்கும் சவால் விடுவது போன்று நடத்தப்பட்டிருக்கின்றன என்பதனை உறுதி செய்யும் விதத்தில் செம்மணி விவகாரம் அமைந்துள்ளது.

கிருஷாந்தி பாலியல், கொலை விடயத்தைப் போலவே அரசாங்கம் செம்மணி விடயத்திலும் திறந்த மனதுடன் செயற்பட முன்வந்துள்ளது. சர்வதேசப் பார்வையாளர்களின் முன்னிலையில் புதைகுழி தோண்டும் பணிகள் தொடங்கப்பட்டமையும் ஏனைய நடவடிக்கைகளும் மக்களுக்கு இப்போதைக்குத் திருப்தி அளிப்பனவாக உள்ளன.

இந்த விடயத்தை அரசு மூடிமறைத்துச் சமாளித்து விடப்போகிறதோ என்ற சந்தேகம் ஆரம்பத்தில் குடாநாட்டு மக்களிடம் நிலவியது. இது விடயத்தில் சர்வதேச சமூகத்தின் பார்வையை அகற்ற இயலாது அல்லது திசை திருப்ப முடியாது என்ற நிலையும் இருந்தது. எப்படியோ, இப்போது அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் உண்மைகளை வெளிக்கொண்டு வர உதவும் என எதிர்பார்க்கலாம். ஆனால் இது போன்ற கொடுமைகள் இனியும் நடைபெறாமல் தடுக்கப்பட வேண்டும். அதற்கு அரசு நடவடிக்கை எடுத்தால் மட்டுமே செம்மணி விவகாரத்தில் அரசுக்கு உள்ள திறந்தமனது நேர்மையானதாக அமையும்.

செம்மணி விவகாரம் சம்பந்தமான நடவடிக்கைகள் இத்தகைய வடிவம் எடுப்பதற்கு தேசிய மனித உரிமை ஆணைக்குழு மேற்கொண்ட செயற்பாடுகள் பெருமளவில் உதவின.

தமிழர்கள் இந்த நாட்டில் சம உரிமை உடைய பிரஜைகள், சிங்கள மக்கள் அனுபவிக்கும் சகல உரிமைகளையும் அனுபவிக்க உரித்துடையவர்கள், அவர்களும் மனிதர்கள், அவர்களது உயிர்கள் மதிப்பற்றவை என்று கருதலாகாது என்ற உணர்வும் பக்குவமும் குறிப்பாக அரச ஆயுதப்படைகளிடமும், அரசாங்க அதிகாரிகளிடமும் தோற்றுவிக்கப்பட வேண்டும்.

சட்டத்தையும் நீதியையும் நிலைநாட்டும் பொறுப்பில் உள்ளவர்களே தமிழர்களுக்கு அவை தேவையில்லை அல்லது பொருந்தாது என்ற தோரணையில் நடந்து கொள்கிறார்கள். இதற்குக் காரணம் பதவிக்கு அடுத்தடுத்து வந்த அரசுகளின் தமிழர் விரோதப் போக்குகளும் நடவடிக்கைகளுமே என்பதில் சந்தேகமில்லை.

செம்மணி விவகாரத்தில் - புதைகுழிகள் தோண்டப்படுவதன் மூலம் - உண்மைகள் வெளிவரும்போது படையினருக்கும், அரசாங்கத்துக்கும், நாட்டுக்கும் சர்வதேசரீதியில் அவமானம் உண்டாகும். அதனையும் பொருட்படுத்தாது அரசு இது விடயத்தில் திறந்த மனதுடன் செயற்படுவது தனது நேர்மையை வெளிநாடுகள் பாராட்டும் என்ற நம்பிக்கையுடனேயே ஆகும்.

செம்மணிப்புதைகுழிகளை அடையாளம் காட்டினால் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷவின் குடும்பத்தினர் கொலை செய்யப்படுவர் என்ற அச்சுறுத்தல் இருந்த போதிலும் உண்மையின் பெயரால் தமக்குத் தெரிந்தவற்றை, அறிந்த தகவல்களை ராஜபக்ஷ நீதிமன்றத்தில் துணிச்சலுடன் வெளியிட்டிருக்கிறார். தமது குடும்பத்துக்குக் கொலைப்பயமுறுத்தல் வந்திருப்பதால் அவர் உண்மைகளைச் சொல்லத் தயங்குவார் என்றே பரவலாக எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அவர் யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் எம். இளஞ்செழியன் முன்னிலையில் அளித்த வாக்குமூலம் பெரும் திருப்பமாக அமைந்தது.

அவரைப் போன்று படுகொலைகள், புதைகுழிகள் குறித்துத் தகவல் வெளியிட்டிருக்கும் இராணுவச் சிப்பாய் டி.எம்.ஜெயதிலக, மற்றும் ராஜபக்ஷ தமது வாக்குமூலத்தில் பிரஸ்தாபித்த சிப்பாய் ஏ.எஸ்.பெரேரா ஆகியோரின் தகவல்களையும் ஊர்ஜிதம் செய்து எல்லாப் புதைகுழிகளையும் தோண்டி எலும்புக்கூடுகளை மட்டுமன்றி உண்மைகளையும் வெளிக்கொணர வேண்டும். சட்டரீதியான அரசாங்கத்தின் படைகளின் கையில் தமிழர்கள் பட்டபாடு வெளிச்சமாக வேண்டும்.

யாழ்ப்பாணம் மாநகரத்தின் (கண்டி வீதி வழியான) நுழை வாயிலாக விளங்குவது செம்மணி. அந்த செம்மணியில் புதைக்கப்பட்ட குடாநாட்டு மக்களின் எலும்புக்கூடுகள் அடக்குமுறையின் கொடுமைகளை வெளிக்காட்டும் வாயிலாக விளங்குமெனின் அது சரித்திரப் பதிவாகிவிடும்.



செம்மணிப் புதைகுழி தொடர்பாக யாழ்.நீதிமன்றத்தில் இடம்பெற்ற விசாரணைக்காக வருகைதந்த சட்டமா அதிபர் திணைக்களத்தைச் சேர்ந்த அரச சட்டவாதி யசந்த கொட்டக்கொட, குற்றப்புலனாய்வுத்துறைப் பணிப்பாளர் கீர்த்தி கஜநாயக்க, இரசாயனப்பகுப்பாய்வாளர் மெண்டிஸ், சட்ட வைத்தியத்துறை நிபுணர் நெரியல்ல ஆகியோர் நீதிமன்ற வளாகத்தில் காணப்படுகின்றனர்.

## கொலைப்பயமுறுத்தலின் மத்தியிலும் திணுக்குற வைக்கும் ராஜபக்ஷவின் தகவல்கள்

* * *

### அது எப்படி நியாயம்?

யாழ்ப்பாணக் குடாநாட்டில் சுற்றிவளைப்புக்கள், தேடுதல்கள், சந்தேகத்தின் மீதான கைதுகள் என்றும் குறைந்ததாகக் கொள்வதற்கில்லை. குறிப்பிட்ட சில பகுதிகளின் நீண்ட நாள்களாக அவை இடம்பெறவில்லை என்பதால் மேற்படி நடவடிக்கைகள் குறைந்து விட்டன என்று சொல்ல முடியாதுள்ளது. 14 பிரதேச சபை நிலப்பரப்பில் ஏதோ ஒரு பகுதியில் அவை நடைபெற்றுக்கொண்டிருக்கும் எனச் சொல்லக் கூடிய அளவுக்கு உண்டு.



லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட சமயம் நீதிமன்றத்துக்கு வெளியே கூடியிருந்த காணாமற் போனோரின் உறவினர்கள் மத்தியில் தாயார் ஒருவர் மயங்கிய நிலையில் காணப்படுகிறார்.

இந்த நடவடிக்கைகளின் போது சந்தேகத்தின் மீது கைது செய்யப்படுவோர் காங் கேசன் துறையில் தடுத்து வைக்கப்பட்டுப் பின்னர் அனுராதபுரம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படுவதற்காக அங்கு கூட்டிச் செல்லப்படுகின்றனர். இதனால் போக்குவரத்துக் கஷ்டமான இக்காலத்தில் பெற்றோர்களும் உறவினர்களும் படும் கஷ்டம் சொல்லுந்தரமன்று.

யாழ்ப்பாணத்தில் நீதிமன்றங்கள் ஏதோ ஒரு வகையில் இயங்கும் போது கைது செய்யப்படுபவர்களை இங்கேயே ஆஜர் செய்வதற்கான சாதக நிலை குறித்து அரச தரப்பு இன்னும் கவனத்தில் எடுக்காது இருப்பது ஏன்?

அரியாலை நெடுங்குளம் பகுதியில் கடந்த மாதம் 25ஆம் திகதி இரவு 7 மணியளவில் இராணுவ கப்டன் மாஸ்பிரசாந்த் அஸ்மின ஜாயா என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து அடுத்த நாள் அப்பகுதி முழுவதும் சுற்றிவளைக்கப்பட்டது. கொழும்புத்துறையைச் சேர்ந்த ஐந்து பேர் படையினரால் கைது செய்யப்பட்டு காங்கேசன்துறையில் தடுத்துவைக்கப்பட்டிருந்தனர்.

தமது பிள்ளைகள் அப்பாவிகள் என்றும் அவர்களை ஒன்றும் செய்ய வேண்டாம் விடுதலை செய்யுங்கள் என்றும் படையினரிடம் பெற்றோர்கள் கேட்டபோது -

இராணுவக் கப்டனையும் விடுதலைப்புலிகள் சுட்டுவிட்டு ஓடுவதை இவர்கள் பார்த்தார்கள் என்று படைத் தரப்பில் தெரிவிக்கப்பட்டதாம்.

ஏதுமறியாத தமது பிள்ளைகள் தடுத்து வைக்கப்பட்டிருப்பது குறித்து பெற்றோர்கள் பலருடன் தொடர்பு கொண்டபோதிலும் அவர்கள் விடுவிக்கப்படவில்லை. காங்கேசன்துறை முகாமிற்கு ஐந்து பேரும் கொண்டு செல்லப்பட்டனர்.

இதற்கிடையில் -

இராணுவக் கப்டனின் கொலை தொடர்பாக அவருடன் கடமையாற்றிய லெப்டினன்ட் ஒருவர் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டு யாழ். சிறைச்சாலையில் விளக்க மறியல் வைக்கப்பட்டார். பொலீஸார் நடத்திய விசாரணையின் போது இராணுவ கப்டனைத் தானே சுட்டதாக லெப்டினன்ட் ஒப்புக்கொண்டார்.

இச்சம்பவம் தொடர்பாக சம்பந்தப்பட்ட இராணுவத்தில் ஒருவர் தடுத்து வைக்கப்பட்டுள்ள போதிலும் ஏற்கனவே இச்சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட ஐந்து அப்பாவி இளைஞர்களும் காங்கேசன்துறை பயங்கரவாத தடுப்பு முகாமில் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

யாழ்ப்பாணச் சிறைச்சாலையில் பாதுகாப்பு இல்லாத காரணத்தால் லெப்டினன்டை பலாலியில் உள்ள இராணுவ பொலீஸ் தலைமையகத்திற்கு மாற்றுமாறு இராணுவப் பொலீஸ் பிரிவினால் நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது.

இம்மனுத்தாக்கல் செய்யப்பட்ட அன்றே இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட ஐந்து பொது மக்கள் இதுவரையும் விடுவிக்கப்படவில்லை. அவர்களை உடன் விடுவிக்க வேண்டும் என்று கோரி மற்றொரு மனுவை கைது செய்யப்பட்டவர்களின் சார்பில் சட்டத்தரணி ஒருவர் சமர்ப்பித்தார்.

இந்த இரு மனுக்களையும் விசாரணைக்கு எடுத்த யாழ்.மேலதிக நீதிவான் எஸ்.ஏ.ஈ.ஏகநாதன் அங்கு பிரசன்னமாகியிருந்த இராணுவ பொலீஸ் அதிகாரியிடம் -

இந்த கொலை உள்வீட்டு வேலை என்று நீதிமன்றத்தில் தெரிவித்து படைஅதிகாரி ஒருவரை ஆஜர் செய்து விட்டு இச்சம்பவத்தை அடுத்து கைது செய்யப்பட்ட பொதுமக்களை தடுத்து வைத்திருப்பது நியாயமானதா? -

இராணுவ அதிகாரி ஒருவரின் கொலை தொடர்பாக கைது செய்யப்பட்ட இராணுவ அதிகாரியை யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்கிறீர்கள் ஆனால் அதே சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட பொதுமக்களை மட்டும் பயங்கரவாத தடுப்புச்சட்டத்தின் கீழ் தடுத்து வைத்து அனுராதபுரம் நீதிமன்றுக்கு அனுப்பிகின்றீர்களே. இது நியாயமானதா? - என்று கேட்டார். அதுமட்டுமல்ல 18ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ். நீதிமன்றத்தில் இந்த ஐந்து பேரும் ஆஜர் செய்யப்பட வேண்டும் என்றும் காங்கேசன்துறை பயங்கரவாத தடுப்பு முகாம் பொறுப்பதிகாரிக்கு கட்டளையிட்டார்.

யாழ். மேலதிக நீதிவான் இவ்வாறு கட்டளையிட்ட (அனேகமாக) அதேநேரத்தில் (அன்று காலையே), வழக்குத் தாக்கல் செய்ய அத்தாட்சி ஏதுவும் இல்லை என்று தெரிவித்து காங்கேசன் துறைப் பொலீஸார் மல்லாகம் நீதிமன்றத்தில் [illegible] ஐவரையும் ஆஜர் செய்ய, மல்லாகம் நீதிபதி இ. விக்னராஜா அவர்களை விடுதலை செய்தார்.

யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்படும் சந்தேக நபர்களை ஏன் யாழ் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யமுடியாது என்று அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்த வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் அசோக ஜெயவர்த்தனாவிடம் பத்திரிகையாளர் கேட்டபோது - யாழ்ப்பாணத்தில் பகிரங்க நீதிமன்றம் இயங்கவில்லை என்றும், அவ்வாறு இயங்கினால் மட்டுமே தாங்கள் சந்தேக நபர்களை இங்குள்ள நீதிமன்றங்களில் ஆஜர் செய்ய முடியும் என்றும் ஆளுநர் கூட இருந்த படை அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஆனால் இராணுவ லெப்டினன்டை யாழ்ப்பாண நீதிமன்றில் ஆஜர் செய்ய முடியுமானால் சந்தேகத்தின் பெயரில் கைதாகும் பொதுமக்களை அனுராதபுரத்துக்கு அனுப்புவது எந்தவிதத்திலும் நியாயம் ஆகாது.

* * *

### என்று சுருங்கும் இந்தப் பட்டியல்?

வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் யாழ்ப்பாணம் வந்திருந்த வேளை, சமாதானத்திற்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழு மருந்து விலை உயர்வு, பற்றாக்குறை என்பன குறித்து அவரிடம் எடுத்துக்கூறியது.

## உள்ளும் புறமும்

குறுமுனி

ஆளுநரிடம் கையளித்த மகஜரில் யாழ்ப்பாணத்தில் அரசாங்கத்தின் மருந்து விநியோக நிறுவனமான "ஒசுசல"வின் கிளை ஒன்றை நிறுவி அதன் மூலம் நியாய விலையில் மருந்து வகைகள் கிடைக்க வழி செய்யலாம் என்று ஆலோசனையும் தெரிவித்தது.

யாழ்ப்பாணம் போதானா வைத்தியசாலையில் மருத்துவ ஆளணியினர், உப - மருத்துவ ஆளணியினர் ஆகியோருக்கு நிலவும் பற்றாக்குறை குறித்தும் மேற்படி குழு ஆளுநரிடம் எடுத்துரைத்தது.

புனர்வாழ்வு புனரமைப்புத் திட்டத்தின் கீழ் போதிய மருத்துவ ஆளணியினரை யாழ்ப்பாணத்தில் பணியில் ஈடுபடுத்தவும், உபமருத்துவ ஆளணியினருக்கு பயிற்சி அளிக்கும் திட்டத்தை ஆரம்பிக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஆளுநருக்கு யோசனை கூறப்பட்டது.

யாழ் போதனா வைத்தியசாலையில் நவீன மருந்துக்களஞ்சியம் ஒன்றை நிர்மாணித்து, மூன்று மாதங்களுக்குரிய மருந்து வகைகள் எப்போதும் இருக்கக்கூடியதாக இருப்பை அதிகரிக்க வேண்டும் என்று சமாதானக் குழுவினர் யோசனை தெரிவித்தனர்.


தெல்லிப்பளை புற்றுநோய் ஆஸ்பத்திரியை மீண்டும் இயங்கச் செய்ய வேண்டும் என்றும் மார்பு நோய் சிகிச்சை நிலையத்துக்குப் புதிய கட்டடம் ஒன்று நிறுவப்பட்டு மருத்துவ ஆளணியினரும் உபகரணங்களும் வழங்கப்பட வேண்டும் எனவும் ஆளுநரிடம் கேட்கப்பட்டது.

(7ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நீங்கா நினைவில்

13 வருடங்கள    16 வருடங்கள



அந்தோனிப்பிள்ளை
அந்தோனியாப்பிள்ளை

தோற்றம்: **15-10-1918**
மறைவு : **19-06-1986**

நீக்கிலாப்பிள்ளை
அந்தோனிப்பிள்ளை (நாகசெட்டி)

தோற்றம்: **04-04-1908**
மறைவு : **07-04-1983**

தேடக்கிடையா திரவியங்களே
அருணன் ஒளிக் கதிரிழந்த அம்புயங்கள்
அழகிழந்தே கண்ணீரில் அமிழ்ந்தி இங்கே
உருகியுளம் துடிதுடிக்கப் பறந்து சென்றீர்
உள்ளன்பின் அரவணைப்பில் உயர்ந்த நாங்கள்
திருமுகங்கள் காணாதே தவிக்கின்றோமே
தேடமுடியாத தவத் திரவியங்காள்!
கருணை வடிவான பரன் பதமே வாழ்வீர்
கலங்கும் உளக்கவலையற வேண்டுவீரே

**நெஞ்சின் நினைவு நீங்காப் பிள்ளைகள்.**

"பற்றிமாவாசம்"
சில்லாலை, பண்டத்தரிப்பு.
*39, மடம் வீதி, யாழ்ப்பாணம்.*

(66674)


**ACTIVE MULTI-ANTENNA**

**EUROMIND™**

பூஸ்ரர் தேவையில்லை!




உங்கள் டிவியில் அனைத்து அலைவரிசைகளையும் பல்தொழில் திறனுடைய தனியொரு அன்டெனா மூலம் தெளிவாக தங்குதடையின்றிக் கண்டுகளிக்கலாம்!

- VHF/UHF டிவி அலைவரிசைகள்
- FM ரேடியோ அலைவரிசைகள்
- மின்சாரத்தாலும் பற்றரியாலும் இயங்கக்கூடியது

**யாழ்ப்பாணத்திற்கான மொத்த வியாபாரிகள் தேவை**

மொத்த வியாபாரிகளுக்கு விஷேட விலைக்கழிவு உண்டு

**UKAAYE**

**169, BODHIRAJA MAWATHA, COLOMBO -11.**
**(Gaswork Street, Pettah)**
**TEL : 075-370019 FAX : 075-370018**



## புதுக்கடைத் திறப்பு விழா

*அன்புடையீர்!*

நிகழும் பிரமாதி வருடம் ஆனித்திங்கள் 5ஆம் நாள் (19-06-99)
சனிக்கிழமை முற்பகல் 10-30 முதல் 11-30 மணி வரையுள்ள
சுபமுகூர்த்த வேளையில்
எங்களால் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள

**நிருத்திகா ஜீவெல்லர்ஸ்**
**NIRUTHIGA JEWELLERS**

என்னும் நகை வியாபார ஸ்தாபனத்துக்கான திறப்பு விழா நடத்த
இறையருள் கூடியுள்ளதால் தாங்கள் வருகைதந்து சிறப்பிக்கும்
வண்ணம் அன்புடன் அழைக்கின்றேன்.

இங்ஙனம்
தங்கள் நல்வரவை நாடும்
[illegible]

177, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(66687)


# யாழ்.பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்புக்கள் பீடம்

யாழ்ப்பாணம், ஜூன்19

யாழ்.பல்கலைக்கழகத்தில் "பட்டப் படிப்புக்கள் பீடம்" கடந்த 16ஆம் திகதி சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மேற்படி பீடத்தின் பீடாதிபதியாக கலாநிதி அ.சண்முகதாஸ் நியமனம் பெற்றுள்ளார். இவா முன்னாள் கலைப் பீடாதிபதியாகக் கடமையாற்றியவர். கலைபீடாதிபதியாக புதியஒருவரைத் தெரிவுசெய்வது தொடர்பான விசேட நிகழ்வு ஒன்று அடுத்த வாரம் யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெறும். (இ-7)

# முதியோருக்கு தனி சிகிச்சைப்பிரிவு

யாழ்ப்பாணம், ஜூன்19

யாழ்.போதனா வைத்திய சாலையின் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றுவரும் வயோதிபர்களின் எண்ணிக்கை அதிகரித்ததைத் தொடர்ந்து 60வயதிற்கு மேற்பட்டோருக்கு சிகிச்சையளிக்கவென விசேட சிகிச்சைப்பிரிவு ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

வெளிநோயாளர் சிகிச்சைப் பகுதியிலுள்ள 10ஆவது அறையில இன்று சனிக்கிழமை தொடக்கம் இந்த சிகிச்சைப்பிரிவு இயங்கவுள்ளது. சுகாதார அமைச்சின் பணிப்பின் பேரிலேயே இந்தச் சிகிச்சைப்பிரிவு ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் -

வயோதிபர்கள் படும் கஷ்டங்களை நீக்கும் பெருட்டே மேற்படி சிகிச்சைப்பிரிவு ஆரம்பிக்கப்படுவதாகவும் யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் தெரிவித்தார். (இ-7-ரி)

## லங்கா சிமெந்து ஊழியர் சம்பளம்

யாழ்ப்பாணம்,ஜூன்19

லங்கா சிமெந்து நிறுவன ஊழியர்களின் ஏப்ரல், மே மாதக் கொடுப்பனவுகள் எதிர்வரும் 22ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9மணி முதல் யாழ்.வர்த்தகவங்கியில வைத்து வழங்கப்படும் என கணக்காளர் அறிவித்துள்ளார். (இ-7)

## புகையிலை தேக்கம்

சண்டிலிப்பாய்,ஜூன்19

புகையிலை விலை வீழ்ச்சியடைந்ததால் இணுவில்,கோண்டாவில் பகுதிகளைச் சேர்ந்த புகையிலை வியாபாரிகளிடம் பெருமளவு புகையிலை விற்கப்படாமல் தேக்கமடைந்துள்ளது.

கப்பல் மூலம் கொழும்புக்கு புகையிலையை அனுப்புவதில் பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்கவேண்டியிருப்பதால் உள்ளூரில் குறைந்த விலைக்கு அதனை விற்க வேண்டியிருப்பதாகவும், இதனால் தாங்கள் நஷ்டமடைவதாகவும் புகையிலை வியாபாரிகள்கருத்துத் தெரிவித்தனர். (உ-135)

## மாணவருக்கு யுனிசெவ் உதவி

குருநகர்,ஜூன் 19

யாழ்.மாவட்டத்தில் உள்ள வறிய மாணவர்களுக்கு வழங்குவதற்காக 20ஆயிரம் பாடசாலை "பாக்"குகளை யுனிசெவ் அமைப்பு வழங்கவுள்ளது.

யாழ்ப்பாணத்துக்கு அண்மையில் திரும்பி வந்துள்ள மாணவர்கள், வறுமையில் உள்ள குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள், விதவைக் குடும்பங்களைச் சோந்த்த மாணவர்கள், அனாதை இல்லங்களில் உள்ள மாணவர்கள் ஆகியோருக்கு இவைகள் கிடைக்கக் கூடியதாக தரவுகளைத் தயாரிக்குமாறு யாழ்ப்பாணம், வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, தீவக வலயங்களின் கல்விப்பணிப்பாளர்களை யாழ்.கல்வி வலயங்களின் இணைப்பாளா கலாநிதிச.நா.தணிகாசம்பிள்ளை கேட்டுள்ளார். (இ-51)

## வானில் வெடிபொருள்

கொழும்பு, ஜூன்19

கொழும்பிலிருந்து திருமலை - நிலாவெளி நோக்கிச் சென்றுகொண்டிருந்த வான் ஒன்றில் இருந்து ஒரு தொகுதி வெடிப்பொருள்களைக் கைப்பற்றியுள்ளதாகப் பொலீஸார் அறிவித்துள்ளனர்.

தம்பலகாமம் வீதிச் சோதனை முகாமில் காவலில் நின்ற பொலீஸார் மேற்படி வானை சோதனை செய்தபோது குண்டுகளைத் தயாரிப்பதற்கான 123 ஜெலிக்நைற் குச்சிகளையும், வயர்களையும் கண்டுபிடித்தனர் எனவும் -

வானின் சாரதியும் கிளீனரும் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

## சிப்பாய் வீட்டில் சிறுமி கொலை

மட்டக்களப்பு, ஜூன்19

விமானப்படைச் சிப்பாய் ஒருவரின் வீட்டில் வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்த தமிழ்ச்சிறுமி ஒருத்தி பொல்லால் அடித்துத் தாக்கப்பட்டுப் பரிதாபகரமாக உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய் காலை வவுனியா நகரப்பகுதியில் இடம்பெற்றது.

பலாலிப்படைத்தலைமை அலுவலகத்தில் வேலை செய்யும் விமானப்படைச் சிப்பாய் ஒருவரின் வீட்டிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

சம்பவம் இடம்பெற்றபோது குறித்த சிப்பாய் பலாலியில் கடமையில் இருந்தார் எனவும் -

அவருடைய மனைவியே சிறுமியைத் தாக்கினார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-7-21)

## வீர விதான இயக்கத்துக்கு எதிராக நடவடிக்கை

கொழும்பு, ஜீன்19

இனத்துவேசத்தைத் தூண்டும் விதத்தில் இயங்கும் வீரவிதான போன்ற அமைப்புக்களுக்கு எதிராக தனது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி கடும்நடவடிக்கை எடுக்கப்போவதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடந்த உயர்மட்ட மாநாடு ஒன்றிலே அவர் இதனைத் தெரிவித்தார்.

இனத்துவேசத்தை தூண்டுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்க இன்னும் எனது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தவில்லை. இத்தகைய அமைப்புக்களுக்கு எதிராக எனது அதிகாரத்தைப் பயன்படுத்தி அவற்றை அடக்குவேன் -

என்றார் ஜனாதிபதி. (இ-3)

## கண்காட்சி

யாழ்ப்பாணம்,ஜூன்19

வடமராட்ச்சி வடக்கு பிரதேச செயலகம் சுகாதார, போசாக்கு வாரத்தை முன்னிட்டு நடத்தும் கண்காட்சி இன்று சனிக்கிழமை காலை 9மணி தொடக்கம் தம்பசிட்டி மெதடிஸ்த தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெறும்.

வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் ஆ.சிவசுவாமி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் சி.சிவராசா பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்வார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜபக்ஷவின் சாட்சியத்தில் இருந்து வெளியாகும் புதிய உண்மைகள்

**பாசுபதன்**

இந்த வாரம் இலங்கையில் வெகுஜனத் தொடர்பு சாத னங்களில் முக்கிய இடத்தைப் பிடித்த—அதிக பரபரப்பை ஏற்படுத்திய — விடயம் செம் மணிப் புதைகுழி தோண்டும் நடவடிக்கைதான்.

இலங்கையில் நிலைகொண் டுள்ள வெளிநாட்டு செய்தி நிறுவனங்களின்செய்தியாளர் களும் கூட அதிக முக்கியத்து வம் கொடுத்துஅக்கறையுடன் செம்மணி புதைகுழிதோண்டு தல் தொடர்பான தகவல் களைத் திரட்டிக்கொண்டி ருந்தனர்.

கொழும்பில் உள்ள உள் நாட்டு, வெளிநாட்டுச்செய்தி நிறுவனங்களின் அலுவலகங் கள், பத்திரிகையாளர்கள், செய்தியாளர்களின் வீடுகள், வெகுஜனத்தொடர்பு நிலை யங்கள் ஆகியவற்றிலிருந் தும்—

புதுடில்லி, சென்னை போன்ற இடங்களில் உள்ள செய்தி நிறுவனங்களின் அலு வலகங்களில் இருந்தும்—

கனடா, பிரிட்டன், ஜேர் மன், பிரான்ஸ், ஆஸ்தி ரேலியா போன்ற ஈழத் தமிழர்கள் அதிகம் குடியேறி வாழும் இடங்க ளில் உள்ள — ஈழத்தமிழர்க ளுடன் தொடர்புடைய — வெகுஜனத் தொடர்பு சாத னங்களில் இருந்தும்—

செம்மணிப் புதைகுழி தோண்டுதல் தொடர்பான முன்னேற்றத்தையும், தகவல் களையும் அறிந்து கொள்வ தற்காக கடந்த புதனும், வியாழனும் ஓயாமல்—விடா மல்— 'உதயன்' அலுவல கத்துக்கு தொலைபேசி அழைப்புகள் வந்த வண்ண மிருந்தன.

உதயனின் இரண்டு தொலைபேசி இணைப்புகள் ஊடாக வரும் அழைப்புகளை செவிமடுத்து, தோண்டுதற் பணி தொடர்பான விடயங் களை 'ரன்னிங்-கொமண்ட்ரி' போல் ஆங்கிலத்திலும், தமிழிலும் — அவரவர் தேவைக்கேற்ப — விவரிப்ப தற்காக ஆசிரிய பீடத்தின் இரண்டு அலுவலர்களை தனியாக ஈடுபடுத்த வேண் டியிருந்தது என்றால் செம் மணியின் முக்கியத்துவத்தை நீங்களே உணர்ந்துகொள்ள லாம்.

கடந்த புதன், வியாழக் கிழமைகளில் செம்மணி தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பலருக்கு மனத்திருப்தியையும் பல ருக்கு எரிச்சலையும் தந்திருக் கின்றது என்றால் மிகையா காது.

சுமார்மூன்றுவருடங்களுக்கு முன்னர் காணாமற் போன வர்கள் குறித்து...

சுமார் ஒரு வருடத்துக்கு முன்னர், கொழும்பு மேல் நீதி மன்றத்தில் சோமரத்ன ராஜ பக்ஷ வெளியிட்ட தகவல் களின் அடிப்படையில்...

இப்போதாவது நடவடிக்கை எடுக்கத் தொடங்கியிருக்கின் றார்களே என்ற மன ஆறுதல் சிலருக்கு.

படையினர் சிலர் புரிந்த மனித உரிமை மீறல்களை அரசு சகித்துக்கொள்ளப் போவதில்லை. உரியசட்ட நடவடிக்கையை — உரிய முறையில் — உரிய காலத் தில் — எடுக்கும் என்று கூறி வந்த அரசுக்கும், அதன் ஆதரவாளர்களுக்கும், மூத்த படை அதிகாரிகளுக்கும் இது விடயத்தில் நேர்மை யாக நடப்பவர்களாகத் தங் களைக் காட்டிக் கொள்ள முடிந்திருப்பதாக மனத் திருப்தி.

அறுநூறு, ஆயிரம் பேரைக் காணவில்லை. அவர்கள் அனைவரையும் கொன்று ஒன்றாக செம்மணியில் புதைத்திருப்பார்கள். செம் மணியில் புதைகுழி தோண்ட ஆரம்பித்ததும் டசின், டசி னாக எலும்புக் கூடுகள் வெளி வரும் என்று கருதி இருந்த வர்களுக்கு ஏமாற்றம்.

பெரிய ஆரவாரத்துடன் தோண்டுதல் பணிக்காக விஞ்ஞான ஆய்வியல் நிபுணர் களும், சட்ட அதிகாரிகளும், சர்வதேச நிபுணர்கள் மற் றும் பார்வையாளர்களும் யாழ். புறப்பட்டு வந்து முகா மிட்டதால் செம்மணியை ஒரு கலக்குக் கலக்கி அங்கு புதைக்கப்பட்டிருக்கக் கூடிய முழு எலும்புக் கூடுகளையும் வெளியே எடுத்து உண்மை களைப் புட்டுப்புட்டு வைப் பார்கள் என்று காத்திருந்த பார்வையாளர்களுக்கு ஏதோ ஓரிடத்தில், சுமார் இரண்டு இரண்டரை அடி கிண்டி இரண்டு எலும்புக் கூடுகளை வெளியே எடுத்து விட்டு, முதலாம் கட்டத் தோண்டு தல் பணி முடிவடைந்து விட் டது என்று கூறி, விடயத்தை ஒரு மாதத்துக்குக் குறையாத காலத்துக்கு ஒத்திவைத்து விட்டு நிபுணர்களும் ஏனை யோரும் பெட்டி படுக்கை களை கட்டியிருப்பது ஏதோ ஒரு வகையில் எரிச்சல்.

''சோமரத்ன ராஜபக்ஷ சொல்வது முழுப்பொய். அப் படி யாரும் கொல்லப்படவு மில்லை. அப்படிப் பெரிய மனித உரிமைகள் மீறல் எது வும் இடம்பெறவுமில்லை'' என்று படைத்தரப்பைக் காப் பாற்ற முயற்சித்த தென்பகுதி யினருக்கு சோமரத்ன ராஜ பக்ஷவின் வாக்கு மூலத்தில் சரியோ, பிழையோ ஓரள வேனும் உண்மை இருக்கின் றது என்பதை செம்மணியின் இரண்டு நாள்கள் மேற் கொள்ளப்பட்ட தோண்டு தல் பணி உறுதிப்படுத்தி யிருப்பதால் மன உளைச்சல்.

மூன்று வருடங்களுக்கு முன் னர் படையினரால் கைது செய்யப்பட்ட பின்னர் காணாமற்போன தங்கள் உறவுகள் குறித்து ஏதேனும் பயனுள்ள தகவல்கள் கிடைக் கும் என்று கண்ணீரும் கம் பலையுமாக நீண்டகாலம் காத்திருந்த உறவினர்களுக்கு பயன் ஏதும் கிடைக்காததால் மனவிரக்தி.

இப்படி கலந்து பல உணர்வு களை வெளிப்படுத்திய செம் மணிப் புதைகுழி விடயத்தில் இவ்வார நிகழ்வுகளை ஓர் அலசு அலசுவோமா?

கிருஷாந்தி பாலியல் வல்லு றவுக் கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப் பட்டதும் குற்றவாளியான சோமரத்ன ராஜபக்ஷ நீதி மன்றத்தில் வைத்து வெளி யிட்ட தகவல்கள்தான் செம் மணி விவகாரம் அம்பலமான தின் ஆரம்பம்.

''பல நூற்றுக்கணக்கான யாழ்ப்பாணத் தமிழ் மக்கள் கைதான பின்னர் கொன்று குவிக்கப்பட்டனர். அவர்கள் செம்மணிப் பிரதேசத்தில் புதைக்கப்பட்டுள்ளனர். உரிய சந்தர்ப்பம் வரும்போது அதனை நேரில் காட்டத் தயாராக இருக்கிறேன்'' என்று நீதிமன்றத்தில் அப் போது பகிரங்கமாக வாக்கு மூலம் கொடுத்து பரபரப்பை ஏற்படுத்தினார் ராஜபக்ஷ.

அவரின் வாக்கு மூலம் யாழ்ப்பாணத்தையும் ஏனைய இடங்களையும் எட் டியதும் இங்குள்ள அனை வரும் (நாம் உட்பட) இந்த விடயம் குறித்து எங்கள் மன துக்குள் ஒரு படத்தைப்போட் டுக் கொண்டோம்.

''சோமரத்ன ராஜபக்ஷ குறிப்பிடும் — சம்பந்தப்பட்ட — காலத்தில் இங்கு நானூறு முதல் ஆயிரம் பேர் வரை யானோர் கைதான பின்னர் காணாமற் போனதாகக் கூறப்படுகின்றது. இவர்கள் அனைவரும் படுகொலை செய்யப்பட்ட பின்னர் தொகுதி தொகுதியாகவோ அல்லது ஒன்றாகவோ செம் மணி வெளிக்குள் பெரிய மனித புதைகுழிக்குள் போட்டு புதைக்கப்பட்டிருக்க வேண்டும்'' என்பதே பெரும் பாலானோரின் கருதுகோ ளாக இருந்தது.

ஆனால் கடந்த புதனன்று யாழ்ப்பாணம் மேலதிக நீதி வான் நீதிமன்றத்தில் சோம ரத்ன ராஜபக்ஷ கொடுத்த வாக்குமூலம் வேறான தக வல்களை வெளிப்படுத்துப வையாக இருந்தன. அதன் படி பின்வரும் விடயங்களை ஊகிக்க முடிகின்றது.

1) அரியாலைப் பகுதியில் ஒன்று அல்லது இரண்டு கப் டன்களுக்குக் கீழ் இருந்த ஒரு படையணி புரிந்த மனித உரிமை மீறல்கள், படு கொலைகள் போன்றவை மட் டுமே ராஜபக்ஷவுக்குத் தெரி யும். அதுவும் அப்படைப் பிரிவில் இடம் பெற்ற இந்த கைய ஒழுங்கீனங்களில் ஒரு பகுதிதான் அவருக்குத் தெரிந் துள்ளது.

2) அவருக்கும் அவரது சகாக்களுக்கும் தெரிந்தவரை ஓர் இடத்தைத் தவிரப் பிற இடங்கள் எவற்றிலும் இரு பத்தைந்து, முப்பது சடலங் கள் கூட ஒன்றாகப் புதைக் கப்படவில்லை.

3) சடலங்கள் செம்மணி வெளியில் மட்டுமல்ல — மக் கள் குடியிருப்புகள் உள்ள— (கோப்பாய் சந்தி, நெடுங் குளம் வீதி, துண்டி பேஸ்) இடங்களிலும் பொதுமக்க ளின் வீடுகளிலும் ஒன்றிரண் டாக அல்லது பலவாக ஒன்று சேர்த்துப் புதைக்கப்பட்டுள் ளன.

(4) ராஜபக்ஷ வாக்கு மூலத்தில் மேலோட்டமாகத் தெரிவித்த தகவல்களைப் பார்க்கும் போது அவரும் அவரோடு மரணதண்டனை விதிக்கப்பட்ட கைதிகளான டி. எம். ஜெபதிலக, ஏ.எஸ். பெரேரா ஆகியோரும் அடை யாளம் காட்டக் கூடிய சுமார் இருபது புதைகுழிகளில் மிஞ் சிப் போனால் ஒரு நூறு சடலங்களை அல்லது அவற் றின் எச்சங்களை மீட்கக் கூடியதாக இருக்கும்.

(5) 1996இல் காணாமற் போன — எஞ்சிய பல நூற் றுக்கணக்கானோர் குறித்து (பெரும்பாலும் அரியாலைக்கு வெளியே கைது செய்யப்பட் டோர் குறித்து) பலனளிக் கக் கூடிய தகவல் எதையும் ராஜபக்ஷ அம்பலப்படுத்தப் போவதில்லை.

உதாரணமாக அரி யாலைக்கு அப்பால் தனங் கிளப்புப் பகுதியில் மட்டும் ஒரே நாளில் கைது செய்யப் பட்ட 45 பேர் அங்குள்ள அரிசி ஆலை ஒன்றில் தடுத்து வைக்கப்பட்ட பின்னர், மர்ம மான முறையில் காணாமற் போயிருக்கின்றார்கள்.

தனங்கிளப்புப் பகுதியில் ராஜபக்ஷவின் படை அணி

[6 ஆம் பக்கம் பார்க்க]

## யாழ். நீதிமன்றத்துக்குள் நடந்த கூத்துக்கள்

செம்மணி விவகாரம் கடந்த புதனன்று யாழ். நீதிவான் நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்ட போது நீதிமன்ற விசாரணைக்குப் புறம்பாகப் பல கூத்துக்கள் நடந்தன.

சர்வதேச மன்னிப்புச்சபை, 'ஏஸியா பவுண்டேஷன்' ஆகிய சர்வதேச அமைப்புக்களின் பிரதிநிதிகள் இந்த விசாரணைகளில் பார்வையாளர்களாகக் கலந்துகொள்ள அரசால் அழைக்கப்பட்டிருந்தனர். நீதிமன்றத்தில் அலை மோதிய கூட்டம் அவர்கள் பார்வையாளர்களாகக் கலந்து கொள்ள அனுமதிக்கவில்லை.

ஒரு சின்னக் கூடத்துக்குள் யாழ். நீதிவான் நீதி மன்றம் கூடுவது நமக்குத் தெரிந்த விடயம். நீதிவானுக்கு முன்னால் ஒரு சிறிய மேசையைச் சூழ சட்டத்தரணிகளும் குற்றப் புலனாய்வு அதிகாரிகளும், ஆய்வு நிபுணர்களும் நெருக்கி அடித்துக்கொண்டு உட்கார, கொழும்பில் இருந் தும், உள்ளூரில் இருந்தும் திரண்டுவந்த பத்திரிகையாளர் கூட்டம் அதற்குப் பின்னால் முண்டியடித்துக் கொண்டு நல்லூர்த் தேர் நெரிசல் போல இடிபட்டது. அதற்குப் பின் னால் போடப்பட்டிருந்த ஓரிரு வாங்குகளில் பத்திரிகை யாளரின் முதுகைப் பார்த்தபடி இடித்துப் பிடித்துக் கொண்டிருந்த சர்வதேச பார்வையாளர்கள் நீதிமன்ற விசாரணை நடைபெற்ற ஒன்றரை மணி நேரமும் வேறு வழியின்றி நீதிமன்றத்தில் தாம் அமர்ந்திருந்த வாங்குக ளுக்கு மேலே ஏறிநின்று தொங்கிக்கொண்டு நீதிமன்ற நடவடிக்கைகளைப் பார்க்க முயன்று தோற்றனர்.

வழக்கமாக நீதிமன்றங்கள் நடக்கும் போது வாங்கு களில் தவறான முறையில் இருப்பதே நீதிவானால் தண் டிக்கப்படும் குற்றமாகும். அத்தோடு நீதிமன்றத்துக்குள் படம் எடுக்கவும் அனுமதிக்கப்படுவதில்லை.

ஆனால் அன்று நடைபெற்ற களேபரத்தில் சர்வ தேச அமைப்புக்களின் பிரதிநிதிகளே வாங்கின்மேல் ஏறிநின்று நீதிமன்ற நடவடிக்கைகளைப் பார்வையிட் டனர்.

பத்திரிகையாளர்களின் கமராக்கள் கூட நீதிமன் றுக்குள் 'பளீர் பளீர்' எனப் 'பிளாஷ்' அடித்துத் தள் ளின.

சிரேஷ்ட பொலீஸ் அதிகாரிகள் கூட இவற்றை எல் லாம் பார்த்துக்கொண்டு வாளாவிருந்தது எமது நீதிமன் றம் குறித்து மனச்சோர்வை ஏற்படுத்தியது.

தாம் தென்னிலங்கையில் இருந்து கூட்டிவந்த பத் திரிகையாளர்கள் நீதிமன்றத்துக்குள் சிரேஷ்ட பொலீஸ் இராணுவ அதிகாரிகள் முன்னிலையில் படங்களை எடுத் துத் தள்ளுவதற்கு அனுமதித்த பொலிஸார் — (அவ்வாறு எடுக்கப்பட்ட — சோமரத்ன ராஜபக்ஷ நீதிமன்றத்துக்குள் வாக்கு மூலம் அளிக்கும்— படம் அடுத்த நாள் உதயனிலும் முன்பக்கத்தில் வெளியாகி யிருந்தது வேறு விடயம்) நேற்று யாழ். பொலீஸ் நிலைய வாசலில் — செம்மணியில் மீட்கப்பட்ட எலும்புக்கூடு களை அடையாளம் காட்டுவதற்காக— கூடியிருந்த பொதுமக்களை 'உதயன்' படப்பிடிப்பாளர் படம்பிடித்த போது 'கமரா'வை பறித்து தடுத்து வைத்தனர்.

பின்னர் மற்றொரு செய்தியாளர் பொலீஸ் அதி காரியுடன் கதைத்துஅதை மீட்க வேண்டியதாயிற்று. பொலீஸாரின் சட்டம், ஒழுங்கைப்பேணும் போக்கு இவ் வளவு 'நியாயமாக' இருக்கின்றது.

## மரபணுப் பரிசோதனையும் இங்கு நடத்த வாய்ப்பு?

செம்மணியிலோ அல்லது எந்த இடங்களிலோ உள்ள புதைகுழிகளில் இருந்து மீடகப்படும் எலும்புக் கூடுகளை எப்படி அடையாளம் காண்பார்கள்?

அதற்கு ஒரு வலிமையான விஞ்ஞான முறை இருக் கின்றது. அதுதான் மரபணுப்பரிசோதனை முறை.

ஒவ்வொரு விலங்கிலும் ஒவ்வொரு கலத்திலும் அதன் பரம்பரை விடயங்களைக்கடத்துகின்ற பரம்பரை அலகுகள் உள்ளன. மீட்கப்படக் கூடிய எலும்பின் அல்லது அது போன்ற ஓர் உடற்பகுதியின் கலத்தில் உள்ள பரம்பரை அலகைப் பரிசோதிப்பார்கள். பின்னர் அந்த எலும்பு யாரு டையது எனச் சந்தேகிக்கின்றார்களோ அவரின் பெற் றோரின் அல்லது பிள்ளையின் 'கலத்தில் உள்ள பரம்பரை அலகுகளுடன் அதைஒப்பிட்டு அந்தத் தந்தையின் பிள் ளையா இவர்?' அல்லது 'அந்தப் பிள்ளையின் தந்தையா இவர்?' என்று உறுதிப்படுத்துவார்கள். இவ்வாறு தாய்—பிள்ளை, தந்தை—பிள்ளை மற்றும் சகோதர உறவு முறைகளை விஞ்ஞான ரீதியில் உறுதி செய்வதன் மூலம் எலும்புக் கூட்டை, எச்சங்களை அடையாளம் காண முடி யும்.

ஆனால் இத்தகைய ஆய்வுகளைச் செய்வதற்கு பெரிதும் விலையுயர்ந்த கருவிகள் தேவை; அதிக நிபு ணத்துவம் உடைய ஆய்வாளர்கள் அவசியம்; செலவும் மிக அதிகம்.

செம்மணியில் தோண்டுதல் பணி இரண்டாம் கட் டத்தை அடையும் போது இந்த ஆய்வுகளை நடத்தக் கூடிய வசதிகளுடன் ஆய்வுகூடம் ஒன்று யாழ்ப்பாணத்துக் குக் கொண்டு வரப்படுமா என்பது தெரியவில்லை.

ஆனால் இந்த மரபணுப் பரிசோதனையை மேற் கொள்வதில் தேர்ச்சியுடைய நிபுணர்களும் இந்தத் தோண்டுதல் பணியில் ஈடுபடுவதால் அந்தப் பரிசோதனை யும் நடத்தப்படும் என்பதை ஓரளவு உறுதிப்படுத்த முடி கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜபக்ஷவின் சாட்சி...

(5 ஆம் பக்கத்தொடர்)

யுடன் தொடர்பில்லாத வேறு டிவிஷன் படை அணி அப்போது நிலைகொண்டிருந்தது.

— இவ்வாறு தன்னோடு தொடர்பில்லாத படை அணிகள் புரிந்ததாகக் கூறப்படும் மனித உரிமை மீறல் சம்பவங்கள் அல்லது அவர்களால் கைது செய்யப்பட்ட பின்னர் காணாமற் போனதாகக் கூறப்படுவர்களின் நிலை போன்றவை குறித்து ராஜபக்ஷ பயனுள்ள தகவல்களைத் தரப்போவதில்லை.

— இப்படி ராஜபக்ஷவின் வாக்குமூலத்திலிருந்து ஊகித்தறியப்படும் விவரங்கள், காணாமற் போனோரின் உறவினர்களில் பலரது எதிர்பார்ப்பை நிச்சயம் நொருக்கித் தள்ளிவிட்டன என்பது உண்மைதான்.

★ ★ ★

இம்முறை செம்மணிப்புதைகுழிகள் தோண்டுவது தொடர்பான ஏற்பாடுகளுடன் குற்றப்புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள், சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகள் மற்றும் சட்ட மருத்துவவியல், மண்ணியல், இரசாயனப் பகுப்பாய்வு ஆகிய துறைகளைச் சேர்ந்த நிபுணர்களும் இங்கு புறப்பட்டு வந்தபோது தோண்டும் நடவடிக்கைத் திட்டம் ஒன்றை தமக்குள் தயார் செய்து கொண்டே இங்கு வந்ததாகத் தெரிகின்றது.

எலும்புக்கூடுகள் மற்றும் மனிதஎச்சங்களைத் தோண்டி எடுக்கின்ற பெரும் மனித புதைகுழிகள் இருக்கின்ற விடத்து—

அவ்வாறு மீட்டெடுக்கப்படும் எலும்புகள், தடயங்கள் மற்றும் துப்புகள் உடனுக்குடன் ஆய்வு செய்யக்கூடிய நவீன விஞ்ஞானகூடம் ஒன்றும் அருகில் இருப்பது அவசியம் என்பது அவர்கள் கருத்து.

எலும்புகள் மாத்திரம் இல்லாமல் அவற்றைச் சூழவுள்ள மண்கூட உடனுக்குடன் நவீன விஞ்ஞான முறைப்படி ஆய்வுக்குட்படுத்தப்பட்டால்தான் பல உண்மைகளைக் கண்டறியலாம் என அவர்கள் கூறுகிறார்கள். இதற்கு நவீன ஆய்வுகூடம் அருகில் இருப்பது அவசியம்.

சோமரத்ன ராஜபக்ஷவின் வாக்குமூலத்தில் உள்ள உண்மைத் தன்மைகளை அறியாமல் உத்தேச ஆய்வு கூடத்தை யாழ்ப்பாணத்தில் புதைகுழிப் பிரதேசத்துக்கு கிட்டவாக — பெருஞ் செலவில்— அமைப்பது பொருத்தமற்றது என அவர்கள் கருதினார்கள்.

எனவே சோமரத்ன ராஜபக்ஷ முதலில் காட்டும் இடத்தில் முதல் கட்டமாக தோண்டும் நடவடிக்கையை மேற்கொள்வது என்றும்—

அவரின் வாக்கு மூலத்தில் உண்மை இருந்து அந்தப் புதைகுழிகளில் சடலங்கள் மீட்கப்பட்டால் அவற்றின் நான்கு முதல் ஏழு சடலங்களை மட்டும் முதலில் தோண்டி எடுத்து கொழும்புக்கு கொண்டு சென்று அவற்றில் ஆய்வு நடத்துவது என்றும்—

மேற்படி அங்கு முதற் கட்டமாக மீட்கப்படக்கூடிய இந்த மனித எச்சங்களின் மீதான அந்த ஆய்வுகளில் அவற்றின் காலம், உயிரிழப்புக்கான காரணம் ஆகியவற்றைக் கண்டுபிடித்து அவை தொடர்பாக ஏற்கனவே சோமரத்ன தெரிவித்த தகவல்கள் அவற்றுடன் பொருந்திப் போகின்றனவா என அறிந்து கொள்வது என்றும்—

சோமரத்தினவின் வாக்கு மூலத்தில் உண்மை இருப்பது இதன் மூலம் ஊர்ஜிதப்படுத்தப்பட்டால் தோண்டுதல் பணியை அடுத்த கட்டத்தில் ஆரம்பித்து முழுவீச்சில் மேற்கொள்வதற்கான ஆயத்தங்களைச் செய்வது என்றும்—

உரிய கருவிகள் மற்றும் வசதிகளை யாழ்ப்பாணத்துக்கு கொண்டுவந்து நவீன விஞ்ஞான ஆய்வு கூடம் ஒன்றை இங்குநிறுவி, தோண்டுதல் பணியை முழுவீச்சில் தொடர்வது என்றும் —

அவர்கள் திட்டமிட்டிருந்தனர்.

ஆனால் சோமரத்ன ராஜபக்ஷ இரண்டே இரண்டு சடலங்கள் புதைக்கப்பட்ட புதைகுழியை முதலில் காட்டியதால் தமது முதலாம் கட்ட அகழ்வுப் பணியை இரண்டு சடலங்களுடன் அவர்கள் நிறுத்த வேண்டியதாயிற்று.

இரண்டு சடலங்கள் மட்டும் புதைக்கப்பட்ட இந்தப் புதைகுழியை முதலாவதாக சோமரத்ன ஏன் அடையாளம் காட்டினார்?

இதற்கு முக்கியமாக இரண்டொரு காரணங்கள் உள்ளன.

முதலாவது — தனக்குத் தெரிந்த புதைகுழிகள் உள்ள இடங்களில் இருந்து இந்த ஒருவருட காலத்துக்குள் எச்சங்களை அல்லது எலும்புகளை சம்பந்தப்பட்ட படைத் தரப்பினர் அகற்றி இருக்கலாம் என்ற சந்தேகம் சோமரத்னவுக்கு இருந்தது என்பது யாழ். நீதிமன்றத்தில் புதனன்று அவர் அளித்த வாக்கு மூலத்திலேயே புலனாகின்றது.

எனவே குறைந்த எண்ணிக்கையுடைய சடலங்கள் புதைக்கப்பட்ட ஒரு புதைகுழியைக் காட்டி அங்கு சடலங்கள் அல்லது எலும்புக் கூடுகள் அகற்றப்படாமல் இருக்கின்றனவா என்பதை உறுதிசெய்து பார்க்க அவர் விரும்பினார்.

இரண்டாவது — முதன் முதலில் தான் காட்டும் இடத்தில் தான் குறிப்பிடும் எண்ணிக்கையில் சரியான [illegible] சடலங்கள் இருந்தால்தான் அல்லது சடலங்கள் இருந்ததற்கான அடையாளங்களாவது இருந்தால்தான் — தனது வாக்கு மூலத்தில் தான் குறிப்பிட்ட விடயங்கள் குறித்து ஒரு நம்பிக்கைத்தன்மை ஏற்படும் என்பதை அவர் நன்கு உணர்ந்திருந்தார்.

மூன்றாவது—தானும், கிருசாந்தி குமாரசாமி கொலை வழக்கில் மரணதண்டனை விதிக்கப்பட்ட ஏனைய கைதிகளும் சேர்ந்து புதைத்த — அதாவது தங்களுக்கு மட்டும் தெரிந்த — மற்றையோருக்கு அதிகம் தெரிந்திராத — புதைகுழி ஒன்றிலிருந்து இந்த ஒரு வருட காலத்துக்குள் வேறு ஆள்கள் சடலங்களை அப்புறப்படுத்தி இருப்பதற்கு வாய்ப்புக் குறைவென்பதால் அத்தகைய புதைகுழி ஒன்றைக் காட்டுவதற்கு அவர் முடிவு செய்தார்.

அத்தோடு குடியிருப்புப் பகுதிகளில் புதை குழிகள் இருந்த போதிலும் தனது வாக்குமூலத்தை செம்மணியோடு தொடர்பு படுத்தி அதிகம் பிரசாரப் படுத்தப்பட்டிருந்தால் வாக்கு மூலத்தின் உண்மைத் தன்மையை வெளிப்படுத்துவதற்காக செம்மணியில் குறைந்தது ஒரு புதைகுழியையாவது முதலாவதாக அடையாளம் காட்ட வேண்டிய தேவை அவருக்கு இருந்தது.

மேலும் பரந்த வெளிப் பிரதேசமான செம்மணியில் உறுதியான ஓர் இடத்தை காட்டுவதற்கு வசதியான அடையாளங்கள் அவசியம். அத்தகைய அடையாளங்கள் உள்ளஇடத்தில் இந்தப் புதைகுழி இருந்ததால் அதனை முதலில் காட்ட அவர் தேர்ந்தெடுத்தார்.

செம்மணி—நல்லூர் வீதியில், கண்டிவீதி வளைவிலிருந்து சுமார் ஒரு கிலோ மீற்றர் தொலைவில் வலப்புறத்தில் செம்மணி உப்பளத்துக்குப் பிரிந்து செல்வதற்கான வயற் பாதை ஒன்று உள்ளது.

அது பிரியும் சந்திப் பகுதியில்— விடுதலைப் புலிகளின் காலத்தில்— வயல் பாதைக்கு இருமருங்கிலும் இரு கம்பங்களை நட்டு, அதில் ஒரு வளைவு அமைத்து அந்த வளைவில் 'செம்மணி உப்பளம்' என்று பெயர் பொறிக்கப்பட்டிருந்தது.

அந்தப் பெயர் பொறிக்கப்பட்ட வளைவு இப்போது கழற்றி வீசப்பட்டு விட்டது. என்றாலும் அந்த இரு இரும்புக் கம்பங்களும் அப்படியே இருக்கின்றன. அந்தக் கம்பங்களோடு பாதை பிரியும் மூலையில் வெட்டப்பட்டிருந்த பதுங்கு குழிக்குள் இந்த இரு சடலங்களும் போடப்பட்டு மூடப்பட்டது என்பது சோமரத்னவுக்கு நன்கு தெரியும். எனவே அந்தக் கம்பங்களை அடையாளம் வைத்து சரியான இடத்தை — திட்டவட்டமான ஸ்தானத்தை—காட்ட முடியும் என்பதால் அந்தப் புதைகுழியை முதலில் காட்டுவதற்கு சோமரத்ன தேர்ந்தெடுத்தார்.

★ ★ ★

கடந்த புதனன்று பிற்பகல் ஒரு மணியளவில் தோண்டும் பணி ஆரம்பமானது. முதல் இரண்டு மணி நேரத்தில் சடலங்கள் ஏதும் இருந்ததற்கான அடையாளங்கள் தெரிய வரவில்லை. அதனால் உள்ளூர்காரருக்கு மன வேதனை; மற்றும் பலருக்கோ சந்தோஷம்.

ஒரு கட்டத்தில் ஓர் எலும்புக்கூடு வெளியே வந்தது. ஆனால் அது மனித எலும்புக்கூடு அல்ல. ஒரு செத்த எலியின் எலும்புக்கூடே அது.

கடும் வெய்யிலுக்கு மத்தியில் உணவு, தண்ணீர் இன்றி காத்திருந்த நமது பத்திரிகையாளர் ஒருவர் பல மணி நேரமாக ஒரு பிட்டியை வெட்டியும் ஒன்றும் வராததால் சலிப்புற்று எலியின் எலும்புக் கூட்டைப் பார்த்ததும் ''மலையைக் கெல்லி எலியைப் பிடித்த கதை இது தான்'' என்றுகூற அனைவரும்கொல்என்று சிரித்தனர். இரத்மலானைக்கு திரும்புவதற்கான விமானத்துக்கு நேரம் போனதால் அந்தக் கட்டத்தோடு கொழும்பில் இருந்து வந்த பத்திரிகையாளர்கள் செம்மணியில் இருந்து பலாலிக்குப் புறப்பட்டனர். அவர்களில் பலர் பின்னர் கொழும்பு சென்றடைந்ததும் 'உதயன்' அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு அன்று மாலையில் ஒரு எலும்புக் கூட்டின் முழங்கால் பகுதி ஒன்று கண்டுபிடிக்கப்பட்ட தகவலை உறுதி செய்து தங்கள் பத்திரிகைகளில் பிரசுரித்தன.

ஆனால் இனவாதம் கிளப்பும் ஓர் ஆங்கிலப் பத்திரிகை மட்டும் செம்மணியில் ஓர் எலியின் எலும்புக்கூடு மட்டுமே கண்டுபிடிக்கப்பட்டது என்ற தலைப்புடன் செய்தி வெளியிட்டு தனது கீழ்நரப் போக்கை மீண்டும் ஒரு தடவை நிரூபித்துக் கொண்டது.

நீண்ட நேரம் தோண்டியும் ஏதும் வராததால் சலிப்புற்ற பெரும்பான்மைச் சமூக நிபுணர் ஒருவர் சட்டத்துடன் தொடர்புடைய — அதே இனத்தைச் சேர்ந்த — அதிகாரி ஒருவரிடம் ''தோண்டத் தோண்ட ஒன்றுமில்லை. இப்போது களிமண் வர ஆரம்பித்து விட்டது''—என்றார்.

அதைக் கேட்டதும் அந்த சட்ட அதிகாரி என்ன பதில் சொன்னார் தெரியுமா?

''அந்தக் களி மண்ணைப் பத்திரமாக எடுத்து வைத்திருங்கள். சோமரத்னவின் தலைக்குள் இருக்கும் களி மண் போதாது. அவருக்குக் கொஞ்சம் கொடுக்க வேண்டியிருக்கும்''— என்று பதிலளித்தாராம்.

அருகில் கேட்டுக் கொண்டிருந்த உள்ளூர்சட்டத்தரணி ஒருவர் உடனடியாக தனித்து வந்து எம்மிடம் இதனை வேதனையுடன் சொன்னார்.

''பார்த்தீர்களா! இது ஒன்றே என்ன எதிர்பார்ப்புடன்— அணுகு முறையுடன் — அவர்கள் இங்கு (செம்மணிக்கு) வந்திருக்கின்றார்கள் என்பதைக் காட்டுவதற்குப் போதுமானது!'' — என்றார் அவர்.

★ ★ ★

சர்வதேச மன்னிப்புச் சபையைப் பொறுத்தவரை செம்மணி விடயத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் அதற்கு திருப்தி அளிப்பதாகத் தெரிகின்றது.

''செம்மணியில் மட்டுமல்ல பல இடங்களிலும் உள்ள அனைத்துப் புதைகுழிகளையும் தோண்டி எல்லா உண்மைகளையும் நாம் வெளிச்சத்துக்குக் கொண்டுவர வேண்டும். இது விடயத்தில் இதுவரை எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் போதுமானவை என்று நாம் கூறவில்லை. ஆனால் நடவடிக்கைகள் ஆரோக்கியமான திசையை நோக்கி இடம்பெறுகின்றன. நிறைவு செய்யப்பட வேண்டிய பணி ஏராளமாக இருக்கின்றது. ஏதோ சற்று முன்னோக்கி நகரும் நிலைமை ஏற்பட்டிருப்பது வரவேற்கத் ''தக்கதுதான்.''

''ஓர் அரசுக்கும், அதன் படைகளுக்கும் எதிராகச் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக் குறித்து, அந்த அரசின் ஒத்துழைப்போடு இந்தளவு தூரம் நடவடிக்கை எடுக்கச் செய்திருப்பது ஆக்கபூர்வமான ஒன்று என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.''

— இப்படி சர்வதேச மன்னிப்புச் சபை பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

★ ★ ★

சரி. செம்மணி புதைகுழி தோண்டுவது தொடர்பான முதற் கட்டப்பணி முடிவடைந்து விட்டதாக அரசுத் தரப்பு கூறிவிட்டது. இனி அடுத்த கட்டம் எப்போது? ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்.

தற்போது மீட்கப்பட்ட இரு எலும்புக்கூடுகள் மீதான இரசாயனப் பகுப்பாய்வு

(10 ஆம் பக்கம் பார்க்க)


## வாழ்க வளமுடன்

இன்று மணவாழ்க்கையில் காலடிவைக்கும்
எமது நிறுவன விஞ்ஞான ஆசிரியர்
**திரு. கருணாகரன்**
அவர்கள் ஞானகியுடன் இணைந்து
பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

இயக்குநர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்,
நல்லூர் சயன்ஸ் அக்கடமி

(66717)



ஓம் ஸ்ரீ கணேசயா நம

விடத்தற்பளை
**சம்பாவெளிப் பிள்ளையார் கோயில்**
**வருடாந்த மகோற்சவ பெருவிழா**
**1999**

உ கொடியேற்றம்—ஆனி 5 ஆம் நாள் (19-06-99) சனி
உ தேர்த்திருவிழா—ஆனி 13 ஆம் நாள் (27-06-99) ஞாயிறு
உ தீர்த்தத்திருவிழா—ஆனி 14 ஆம் நாள் (28-06-99) திங்கள்

பிரதம குரு
பிரம்மஸ்ரீ தி.கிருஷ்ணமூர்த்தி குருக்கள்
(கல்வயல்)

விநாயகர் அருள்வழியில்
ஆலய பரிபாலன சபை.

சம்பாவெளி,
விடத்தற்பளை.

(சி/7937)



## 3 ஆம் ஆண்டு நெஞ்சகலா நினைவுகள்

தோற்றம்
15 — 10 — 1962



மறைவு
22 — 06 — 1996

**திருமதி தேவராசா கெங்காதேவி**
திதி: 19–06–1999

காலம் கழிகிறது — ஆனால்
உந்தன் நினைவு — எங்கள்
மனதில் என்றுமே — அழியா
உருவம் பெற்று விட்டது.

என்றும் உந்தன் நினைவுடன்
திருமதி மா. அன்னலட்சுமி
(தாய்),
திரு. மா, தேவராசா
(கணவன்).

சங்கத்தானை,
சாவகச்சேரி.

(சி/7942)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## இறைச்சிக் கோழி

Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் (பாதிக் கோழி உட்பட) தினமும் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். மிகநுட்பமான நிறுவை. அத்துடன் அடைமுட்டையும் வாழைக் குட்டிகளும் உண்டு. தொடர்பு:- (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு)19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (66632)

இறைச்சிக் கோழி (Broiler) விற்பனைக்குண்டு. தினமும் சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: இல. 40,கோயில் வீதி,யாழ்ப்பாணம். (66665)

இறைச்சிச்கோழி (Broiler), இறைச்சிக்குகந்த கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. தினமும் சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: இல68,பழைய பூங்காவீதி, யாழ்ப்பாணம். (66676)

## O/L MATHS

2ஆவது பிரிவு ஆரம்பமாகி விட்டது. சனி, ஞாயிறு, வியாழன் ஆகிய நாள்களில் மாலை 5 மணி தொடக்கம் 6 மணி வரை. முதலாவது பிரிவு திங்கள், புதன், வெள்ளி காலை 6-7 மணி வரையும் கற்பிக்கப்படுகின்றன. இ.தாசன், கோண்டாவில் கிழக்கு, நெட்டிலிப்பாய் பிள்ளையார் வீதி,(விவேகானந்தா சனசமூக நிலையத்துக்கு அருகில்) (66634)

## விற்பனைக்கு

பாவிக்காத மின்சார Kenwood குக்கர் ஓவனுடன், Beater, மிக்ஸி, சுமீத் கிறைண்டர், அலுமாரிகள், கட்டில்கள், பெட்டகம், அண்டா என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: P.M.சோமசுந்தரம், 11/1,நாயன்மார் வீதி, முத்திரைச்சந்திக்கு அருகில், நல்லூர். (66668)

## SPOKEN ENGLISH

சுலபமான முறையில் ஆங்கிலத்தில் பேசப் பயில மேற்படிப்பு மாணவர்களுக்கும் வேலை பார்ப்பவர்களுக்குமான விசேட வகுப்புக்கள் ந.விக்கினேஸ்வரன் ஆச்சாரி, 426, (302) காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் மற்றும் பிளாக் (நாகலிங்கம் சுவாமிகள்) வீதி, சாங்கானை, (66663)

## ENGLISH / SINHALA

சகல தரங்களுக்கும் ஏற்ற வகுப்புகள் வழமைபோல் நடைபெறுகின்றன. பிரத்தியேக வகுப்புகளும் ஒழுங்கு செய்து கொள்ளலாம். T.SAGATHEVAN B.A.(Lond.) 46, பிரப்பங்குளம் லேன், வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம். (66514)

## 6 - O/L வரை

கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம் துரிதமாக உயர்ந்த பெறுபேறடைய (Spoken English) கற்பிக்கப்படும். காலை 6 மணியிலிருந்து மாலை 6 மணி வரை. ஆசிரியர், 85,சிவன் கோயிலடி, சிவன்கோயில் மேற்கு வீதி, திருநெல்வேலி. (66574)

## மலிவு விற்பனை

வாருங்கள்! வந்து வாங்குங்கள்!!

STOCK CLEARENCE SALE

ஆடவர், மகளிர், குழந்தைகளுக்கானஆடை வகைகளும்
விசேடமாக இறக்குமதி செய்யப்பட்ட
❖ சேட் ❖ ரீசேட
மற்றும்
❖ றெடிமேட் வகைகள
❖ சூட்டிங் வகைகள்
❖ துணி வகைகள்
என்பனவற்றை மலிவு விலையில் பெற்றுக் கொள்ள

**மோகனம்**

**இல.41, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.**

(66685)

## சிவசக்தி ஜுவலறி

கிளிநொச்சியில் இயங்கி வந்த சிவசக்தி ஜுவலறி
என்ற ஸ்தாபனம் 10-06-1999 முதல்
**இல.222, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்**
என்ற முகவரியில் இயங்குகின்றது
என்பதை வாடிக்கையாளருக்கு அறியத்தருகின்றோம்.

**சிவசக்தி ஜுவலறி**

**222, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

உரிமையாளா
க.சோ.சிவகுமார்

(66644)

### *மனித உரிமைகளு...*

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

குடாநாட்டில் நெல் விளைவிக்கக் கூடிய மொத்த நிலப்பரப்பில் 10,000 ஹெக்ரேயரில் செய்கை மேற்கொள்ளப்படாதிருப்பதும், வன்னியில இருந்து நெல் கொண்டுவர முடியாது இருப்பது குறித்தும் ஆளுநருக்கு எடுத்துக் கூறப்பட்டது. ஆகையால் நெற்செய்கைக் காணிகளில் பயிரிட அனுமதி வழங்கவேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது.

குடாநாட்டில் உற்பத்தி செய்யப்படுமவிளைபொருள்களை கொழும்புக்கு எடுத்துச் செல்வதற்கு நிரந்தர சரக்குக் கப்பல் சேவை, நிரந்தர சரக்கு விமான சேவை ஆகியவற்றின அவசியம் குறித்தும் ஆளுநரிடம் தூதுக்குழுவினரால் வலியுறுத்தப்பட்டது.

இவ்வாறு பல பிரச்சின்னைகள் குடாநாட்டு மக்களுக்கு; எல்லாம் அன்றாடத் தேவைகள் சம்பந்தப்பட்டவையே. அவர்கள் மீளக் குடியமர்ந்து மூன்று வருடங்கள் ஆகிவிட்டன. பிரச்சினைகள், குறைபாடுகளின் பட்டியல் நீளுகிறதே அன்றி சுருங்குவதாக இல்லை. அன்றாடப் பிரச்சினைகள் தீர்க்கப்படுவதற்கே இந்த கதி என்றால் இயல்பு நிலை வருவதற்கும் சமூக வாழ்வு திரும்புவதற்கும் எத்தனை காலம் ஆகுமோ, என்பதே மக்களின் அங்கலாய்ப்பாக உள்ளது! என்று சுருங்கும் இந்த பிரச்சினைகளின் பட்டியல் என்று பாடுபடுவதைவிட அவர்களுக்கு வேறு மார்க்கமா உண்டு?

*

## 'மாதாவின்' 31 ஆம் நாள்
## நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

சிறுநண்டு மணல்மீது படமொன்று கீறும்
சிலவேளை கடல் வந்து அதைக் கொண்டு போகும் - மஹாகவி

அவதாரம்
18
-
08
-
1940



அமரத்துவம்
20
-
05
-
1999

# திருமதி பொன்னம்மா விஸ்வலிங்கம்

**(ஆசிரியை, யா/சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை)**

20.5.99ல் இறைவனடி சேர்ந்த எம்மில்லத்தரசியின் சபிண்டீகரணம் இன்று(19.06.99) சனிக்கிழமை எமது இல்லத்தில் நிகழவுள்ளதால் அன்று அன்னார் தம் ஆத்ம சாந்திக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்திடுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

**'எள்ளி நகை ஆடாமே எவருமெமை
கல்வியில் உயர் பண்பில் நல்வழி
தெள்ளிதே நடத்திய தெய்வமே
நாளும் பொழுதும் உம் நினைவால்
வெள்ளமாய்க் கண்ணீர் சிந்தியே
வாடிடும் பிள்ளைகள் மருமக்கள் பேரர்
கள்ளமில் கணவன் கலங்கிடும்
நிலைகள் மாறு மோ இனிமேல'**

**நன்றிகள்**

**'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு'**

எம்மில்லத்தரசியின் மறைவு கேள்விப்பட்டதும் ஓடோடி வந்து உற்றுழி உதவியஉற்றார், உறவினர், நண்பர்கள் இறுதிக்கிரியைகளை ஈடேற்றிய அந்தணப் பெரியோர்,கிரியைகளில் நேரில பங்கு கொண்ட அதிபர்கள், ஆசியாகள், மாணவாகள், வர்த்தகர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், மாணவர்கள் யாவருக்கும்துன்புற்ற எம்நிலைக்கு அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்கள் மலர் அஞ்சலி செலுத்தியோர், இரங்கலுரை நிகழ்த்தியவர்கள்,சாவகச்சேரி வைத்தயசாலையலும் யாழ். போதனா வைத்தயசாலையிலும் அதி தீவிர சகச்சைப் பாவலும் அனுமதித்து உயிருக்காகப் போராடிய வேளையில் உதவிய வைத்திய நிபுணர்கள், தாதிகள் மற்றும் யாவருக்கும் உளம் கனிந்த கோடானு கோடி நன்றிகள்.


**கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

**'பொன்மதி இல்லம்', மத்திய வீதி,
மீசாலை கிழக்கு, மீசாலை.**

(66705)

தலைமுடி
உதிர்தல்
பற்றிய
உங்கள்
கவலை
இனிமேல்
வேண்டாம்

HAIR-STABIL
TONIC & SHAMPOO
with herbal extracts



உங்களுக்கும் இந்த பிரச்சினை இருக்கிறதா?
தலைமயிர் ஏன் எமக்கு மட்டும் உதிரவேண்டும்
ஆம்! ஜேர்மன் தயாரிப்பான HAIR-STABIL டானிக், ஷம்பூ உங்கள்
மனக்கேள்விக்கு ஒரே பதில்
குறுகிய கால பாவனையில் அதிசயிக்கத்தக்க வெற்றியைத்தரும் இந்திய. ஜேர்மனிய விஞ்ஞானிகளின் கூட்டுறப்பத்தியால் தயாரிக்கப்பட்ட HAIR-STABIL இப்போது இலங்கையிலும் அனைத்து பாமஸ்ஸிகளிலும். சுப்பர்மார்க்கட்டுகளிலும் கிடைக்கிறது.
Shampoo - Rs.295/= Tonic Rs.595/=



Importers & Distributors
VAIGEEMEDICALS
155_1/6, B,Prince St. Colombo 11.,
Tel:320996 Fax: 599270

HAIR STABIL

3 மாதத்துக்குள் பலனை அறியலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# தியாகிகள் தினம்

## 19 ஜூன் 1999

1990 ஆம் ஆண்டு இதே நாளில் சக தோழர்கள் 12 பேருடன்
சென்னை நகரில் படுகொலை செய்யப்பட்ட
**ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம்**

# தோழர் பத்மநாபா

அவர்களின் நினைவு தினமான இன்று தமிழ் பேசும் மக்களின் அரசியல் உரிமைகளை வென்றெடுப்பதற்கும், ஜனநாயக உரிமைகளை நிலை நிறுத்துவதற்குமான போராட்டத்தில் உயிரை அர்ப்பணித்த அவருக்கும் மற்றும் தோழர்கள், சக இயக்கப் போராளிகள், பொதுமக்கள் அனைவருக்கும் எமது இதயபூர்வமான அஞ்சலியை உரித்தாக்குகின்றோம்.



சிறந்த அரசியல் தலைமைத்துவம் என்பது இராணுவ வெற்றிகளைக் கொண்டும் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கையைக் கொண்டும் கணிப்பிடப்படுவதில்லை. மாறாக, ஏற்றுக் கொண்ட கொள்கைக்காக உறுதியாகப் போராடுவதுடன் மக்களின் நலன்களின் அடிப்படையிலிருந்து முடிவுகளை எடுத்தல், இவை எல்லாவற்றுக்கும் மேலாக மனித உரிமைகளைப் பேணுதல், காத்தல் என்பவற்றிலும் தங்கியுள்ளது. அதேவேளை அரசியல் தலைமைத்துவம் ஒன்றை ஏற்றுக் கொள்ளுவதும், நிராகரிப்பதும் மக்களுக்குள்ள சுதந்திரமே தவிர ஆயுதம் தாங்கியவர்களும் இராணுவ ரீதியில் பலமானவர்களும் தீர்மானிப்பதல்ல.

**ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எவ்.)**

(66666)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிரடி அரங்கு

தேடுதல்கள், கைதுகள் போன்றவை மேற்கொள்ளப்படும் 'சீத்துவத்தை' அம்பலப்படுத்தும் தகவல்கள் இவை:-

கொழும்புத்துறைப் பகுதியில் இராணுவக் கப்டன் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டதையும் அதுதொடர்பாக ஓரிரு தினங்களின் பின்னர் அந்தக் கப்டனின் கீழ் பணிபுரிந்த லெப்டினன்ட் ஒருவரே கப்டனைச் சுட்டுக் கொன்றார் என்ற சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டதையும் இதேபத்தியில் கடந்த வாரம் குறிப்பிட்டிருந்தோம்.

இரவு 8.30 மணியளவில் கப்டன் சுட்டுக் கொல்லப்பட்டார். அடுத்த நாள் அதிகாலையே அந்தப் பிரதேசம் சுற்றிவளைக்கப்பட்டது. தேடுதல்கள் நடத்தப்பட்டன. தேடுதல்களை முன்னின்று நடத்தியவர் யார் தெரியுமா? சம்பந்தப்பட்ட லெப்டினன்ட்தான்.

சந்தேக நபர்கள் என்ற பெயரில் அந்தப் பகுதியைச் சேர்ந்த ஐந்து அப்பாவிப் பொதுமக்கள் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்ட சமயம் அவர்களில் சிலர் நையப்புடைக்கப்பட்டனர். தாக்கியவர் யார் தெரியுமா? அதே லெப்டினன்ட்தான்.

என்ன சொல்லித் தாக்கினாராம்? "சுட்டவரை உனக்குத் தெரியும்தானே" என்று சொல்லித்தான் அவர்களைத் தாக்கியிருக்கின்றார் ஒரிஜினல் கொலைச் சூத்திரதாரி!

அவராலும் அன்று தேடுதல் நடத்திய ஏனையோராலும் கைது செய்யப்பட்ட ஐந்து அப்பாவிப் பொதுமக்களும் உடனடியாகவே காங்கேசன் துறைக்கு அனுப்பப்பட்டு தடுப்புமுகாமில் தடுத்து வைக்கப்பட்டனர்.

அடுத்து வந்த தினங்களில் சுட்டவர் யார் என்ற உண்மை வெளியே தெரிய வந்து, சம்பந்தப்பட்ட லெப்டினன்ட் கைது செய்யப்பட்டார். ஆனால் அதே சம்பவத்துக்காக சந்தேகம் என்ற பெயரில் கைது செய்யப்பட்ட ஐந்து பொதுமக்களும் விடுவிக்கப்படவில்லை. அவர்கள் தொடர்ந்து சுமார் மூன்று வாரங்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

கைது செய்யப்பட்ட லெப்டினன்ட் விசாரணைகள் எல்லாம் முடிவடைந்த பின்னர் யாழ். நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார். அவரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.

உடனடியாக இராணுவத்தரப்பு நீதிமன்றத்தில் மனுஒன்றைத் தாக்கல் செய்தது - சம்பந்தப்பட்ட லெப்டினனுக்கு யாழ். சிறைச்சாலை விளக்கமறியலில் பாதுகாப்பு இல்லை என்பதால் அவரை பலாலி இராணுவத் தடுப்பு முகாமுக்கு மாற்றும்படி கோரி.

தனது மேலதிகாரியையே கொலைசெய்ததாகச் சந்தேகிக்கப்படும் லெப்டினனின் பாதுகாப்பில் அவ்வளவு சிரத்தை எடுத்தவர்கள் அந்த லெப்டினனால் வேண்டுமென்றே கைதுசெய்யப்பட்ட அப்பாவிப் பொதுமக்கள் குறித்து சிரத்தை ஏதும் எடுக்கவில்லை.

சந்தேகத்தின் பேரில் அப்பாவிகள் ஐவரைக் கைதுசெய்ததைத் தவறு என்று நாம் கூறவில்லை. ஆனால் 'ஒரிஜினல்' சூத்திரதாரியைக் கண்டு பிடித்த பின்னரும் அப்பாவிகளை மூன்று வாரங்கள் தடுத்து வைத்திருந்தார்களே. அது ஏன் என்றுதான் கேட்கிறோம்.

நீதிமன்றத்தில் சம்பந்தப்பட்ட லெப்டினன்ட் ஆஜர் செய்யப்பட்ட சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, இந்தவிடயம் குறித்து சட்டத்தரணி ஒருவர் நீதிமன்றத்தில் கேள்வி எழுப்பாமல் விட்டிருந்தால் அந்த அப்பாவிகள் இப்போதைக்கு வெளியே வருவதற்கு சந்தர்ப்பமே கிடைத்திருக்காது! தாங்கள் செய்யாத குற்றத்துக்காக அநுராதபுரம் நீதிமன்றம், களுத்துறைச் சிறைச்சாலை என்று அவர்கள் நீண்ட காலம் அலையவேண்டி இருந்திருக்கும்.

கைது செய்யப்படுவோர் விவகாரங்கள், அப்பாவிகள் அநாவசியமாகக் கைது செய்யப்படாமல் இருப்பதை இயன்றவரை உறுதிப்படுத்துதல் போன்ற அடிப்படை மனித உரிமைகளைப் பேணும் விடயத்தில் படைத்தரப்புக் காட்டும் சிரத்தை இவ்வளவுதான்!

சம்பந்தப்பட்ட விடயம் நீதிவானுக்கு சுட்டிக் காட்டப்பட்ட போது "தீவிரவாதிகளை அடக்குகின்றோம் என்ற பெயரில் நீங்கள் செய்யும் இத்தகைய வேலைகள் தீவிரவாதிகளை உருவாக்கவே வழி செய்கின்றன" என்று இராணுவ அதிகாரியைப் பார்த்து - பகிரங்க நீதிமன்றத்தில் - கூறியது உண்மையை அம்பலப்படுத்தப் போதுமானது.

* * * *

இது ஒரு புதுவகை 'பிளாக்மெயில்' விவகாரம். உரும்பிராய் பேய்ச்சி அம்மன் கோவிலை அண்டிய ஒழுங்கை சில காலமாக இளம் காதல் ஜோடிகளின் உல்லாசப் புரியாகத் திகழ்ந்து வருகிறது.

அப்பகுதி இளவட்டங்கள் சில இச்சோடிகளின் லீலைகளைக் கண்டு களிப்பதற்காக குறுக்கும் நெடுக்குமாக அடிக்கடி அந்த ஒழுங்கையைப் பயன்படுத்தி வருகின்றன. அது ஒரு புறமிருக்க, இக்காதல் ஜோடிகளில் ஒரு "பெண் புரசு" ஏற்கனவே பிறிதொரு காதல் விவகாரத்தில் ஈடுபட்டு மீண்டவர் என்பதைத் தெரிந்து கொண்ட 'பிழைக்கத் தெரிந்த' நபர் ஒருவர் அப் "பெண்புரசின்" பழைய காதல் கதைகளைத் தற்போதைய காதலனிடம் புட்டு வைத்து விடுவதாக மிரட்டி "அப்பெண் புரசிட"மிருந்து அவ்வப்போது பணம் பறித்து வருகிறாராம். மீண்டும் மீண்டும் அந்நபர் 'அப்பெண்புரசை' வலைவீசித் தேட அந்தக் குறித்த ஜோடி தம் சந்திப்பு இடத்தை இப்போது மாற்றிக் கொண்டுவிட்டது.

* * * *

வழமைபோல வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சு தனது மாகாண தமிழ்த்தினப் போட்டிகள், மாகாண மெய்வன்மை மற்றும் விளையாட்டுப்போட்டிகள் போன்றவற்றை இம்முறையும் நடத்துகின்றது. - வழமைபோல யாழ். குடாநாட்டையும் குடாநாட்டுமாணவர்களையும் விட்டுவிட்டு.

யாழ். குடாநாட்டை ஆயுதப்படைகள் கைப்பற்றி விட்டதாக அரசு மீண்டும் மீண்டும் கூறுகின்றது. ஆனால் மாகாணக்கல்வி அமைச்சு நடந்து கொள்ளும் முறையை - போக்கை - பார்த்தால் அக்கூற்று சந்தேகத்திற்குரியதாகி விடுகின்றது.

மாகாண மட்டப்போட்டிகளில் யாழ்ப்பாண மாணவர்கள் வழமைபோல்- மூன்றாவது முறையாக - இவ்வருடமும் பங்குபற்ற முடியாமல் இருக்கும் என்றால் -

வன்னியில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இருக்கும் கல்விப்பிரிவிற்கும் இங்கு யாழ்ப்பாணத்தில் இருக்கும் கல்விப்பிரிவுக்கும் என்ன வித்தியாசம்? - கல்வி அதிகாரிகள் மட்டும் அவ்வப்போது அலவன்ஸுகள், போக்குவரத்துபடிகள் மற்றும் அதிகப்படியான கொடுப்பனவுகளுடன் திருமலை - கொழும்பு - யாழ்ப்பாணம் என்று 'பிக்-அப்' மற்றும் விமானத்தில் இங்கு பறந்துவந்து போவதைத் (போகக்கூடியதாக இருப்பதைத்) தவிர.

திருகோணமலையில் உள்ள பாடசாலைகளிலும் மாகாணக் கல்வி அமைச்சு, கல்வித்திணைக்களம் ஆகியவற்றிலும் நடைபெறும் கட்டட வேலைகள், செலவுகள், வசதிகளையும் போரினால் நேரடியாகப் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாணத்தில் நடைபெறும் கட்டட வேலைகள், அளிக்கப்படும் வசதிகளையும் பார்க்கும் போது திருகோணமலை மட்டும்தான் அரசுப் படைகளின் கட்டுப்பாட்டில் இருப்பது போலவும், யாழ்ப்பாணம் இன்னமும் விடுதலைப் புலிகளின் முழுக்கட்டுப்பாட்டில் இருப்பது போலவும் அல்லவா தெரிகின்றது?

மாகாணப் போட்டிகளில் இரண்டுவருடங்களாக யாழ். மாணவர்களுக்கு இடமளிக்காததால் இங்கு ஏற்பட்டுள்ள கசப்புணர்வுகளை - இங்கிருந்து ஏணிஏறி மாகாணக் கதிரைகளை அலங்கரிப்பவர்கள் - புரிந்து கொண்டிருந்திருந்தால் இம்முறையாவது நேரத்துடன் எமது மாணவர்களை அங்கு போட்டிகளில் கலந்துகொள்ளவைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்திருப்பார்கள். பதவியுயர்ந்ததும் தம் பகுதியை மறந்துவிட்டவர்கள் ஆரவாரத்துடன் இங்கு வரும் போது தமது ஆட்சேபத்தை உரிய முறையில் தெரிவிப்பதற்கு யாழ். கல்வி உலகு தயாராக வேண்டும்.

* * * *

விழிப்புலன், செவிப்புலனற்றோரை மற்றும் அங்கவீனர்களை ஒதுக்கி விடாது அவர்களை சமூகத்தில் சமமாக மதித்து அவர்களுக்குத் தேவைப்படும் வசதிகளை செய்து கொடுக்க வேண்டியது வலது குறையாதவர்களின் கடமையும் பொறுப்பும் ஆகும்.

மேலை நாடுகளில் புலனற்றவர்கள் ஏனையோரைப் போல வசதிகளுடனும் உரிமைகளுடனும் வாழ அந்தந்த நாட்டு மக்களும் அரசாங்கங்களும் உதவுகின்றன.

ஆனால் இங்கு அந்த நிலைமை உருவாகவில்லை. அத்தகைய நிலைமையை தோற்றுவிப்பதில் சமூகத்தின் மேல் மட்டத்தில் நிற்பவர்கள் முன்வர வேண்டும்: முனைப்புடன் செயற்பட வேண்டும்.

இதற்குமாறாக -

விழிப்புலனற்றோர் சங்கத்தின் தொழிற்பயிற்சி நிலையத் திறப்பு விழா அண்மையில் கைதடியில் நிகழ்ந்த போது பெரும் பதவியாளர்கள் பலரும் நடந்து கொண்டவிதம் விழிப்புலனற்றோரை மிகவும் மனம்நோக வைத்துள்ளது. தங்களுக்கு உண்டான ஏமாற்றத்தையும் துயரத்தையும் அவர்களில் மூத்தவரான ஒருவர் மின்னலுடன் பகிர்ந்து கொண்டார்.

தொழிற்பயிற்சி நிலையக்கட்டடம் விழிப்புலனற்றோர் சங்கத்தின் 14 வருட கடும் முயற்சியின் பின்னர் கடந்த 14 ஆம் திகதி திங்கட்கிழமை திறக்கப்பட்டது. ஏனையோருக்கு இயல்பாக உள்ள விருப்பம் போலவே, சங்க நிர்வாகிகளும் தமது நிலைய கட்டடத் திறப்புவிழாவிலும் மேல்மட்டப் பதவியாளர்கள் கலந்து சிறப்பிக்க வேண்டும் என்று விரும்பினார்கள். நிர்வாகத்துறை, கல்வித்துறைகளில் உயர்ந்த கதிரைகளில் அமர்ந்திருப்போரிடம் சென்று அழைத்தார்கள்.

அவர்கள் எல்லோரும் நல்ல மனதுடன் இணங்கினார்கள். இத்தனையாம் திகதி, இத்தனை மணிக்கு, இன்ன இடத்தில் நடைபெறும் தொழிற்பயிற்சி நிலையத்தில் நடக்கும் திறப்புவிழா நிகழ்வில் கலந்துகொள்ளவேண்டும் என்று தமது நாள் குறிப்பில் எழுதிக்கொண்டார்கள்.

ஒரு பெரிய அதிகாரியும் கலந்து கொள்ள வேண்டும் என்ற பெரு விருப்பத்தினால் முதலில் உத்தேசிக்கப்பட்ட திகதியில் இருந்து ஒரு மாதத்திற்கும் பின்னர் அவருக்கு வசதியான நாளில் விழா நிர்ணயிக்கப்பட்டது.

அன்று - 14 ஆம் திகதி - முற்பகல் 9.30 மணிக்கும் 10மணிக்கும் இடையில் உள்ள சுபநேரத்தில் தொழிற்பயிற்சி நிலையத்தைத் திறக்க ஒழுங்காகியது. விழாவிற்கு அழைக்கப்பட்ட ஏனைய பலரும் உரிய நேரத்தில் கூடி விட்டனர். ஆனால் பிரதம விருந்தினர், கௌரவ விருந்தினர், சிறப்பு விருந்தினர் என அன்புடன் அழைக்கப்பட்ட உயர்ந்த கதிரைக் காரர்களைக் காணவில்லை. பல நிமிடங்கள் பொறுத்திருந்து பார்த்தும் பயனில்லை.

கடைசி நேரத்திலும் நினைப்பூட்டினால்தான் இவர்கள் வருவார்கள் போலும் என நினைத்து, விழிப்புலனற்றோர் சங்க நிர்வாகிகள் சிரமத்துடன் வெளியில் வந்து அவர்களுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டனர்.

பிரஸ்தாப கட்டடத் திறப்புவிழா நடைபெறுவது தெரியாதது போலவும் மறந்து விட்டாற் போலவும் பதில்கள் வந்தன.

மிகுந்த ஏமாற்றத்துடன், விழாவிற்கு சாதாரண அழைப்பாளராக வந்திருந்த இன்னொரு பெரிய அதிகாரியைக் கொண்டு கட்டத்தை திறப்பு விழாவை நடத்தினார்கள் சங்க நிர்வாகிகள்.

விழிப்புலனற்றோர் நிகழ்வுதானே என்று இவ்விழாவை (நாளேட்டில் குறித்து வைத்திருந்தும்) மறந்து போனார்களே இந்த பெரிய ஆள்கள் என்று கவலைப்படுகின்றனர் விழிப்புலனற்றோர். திடீரென வேறு அலுவல்கள் குறுக்கிட்டு இருந்தால் தகவல் அனுப்பியிருக்கலாம். மனம் உண்டானால் இடம் உண்டு என்று அவர்களைப்பற்றி கணித்துள்ளார்கள் இவர்கள்:

விழிப்புலனற்றோர், செவிப்புலனற்றோர், அங்கவீனர்களுக்கு சமூகத்தில் சம அந்தஸ்தும், சமவாய்ப்பும் கொடுக்க வேண்டும் என்று பேசுவதற்கும் எழுதுவதற்கும் இவர்களுக்கு அருகதை உண்டா....?

*- மின்னல் -*

## குஞ்சு பொரிக்கும் இயந்திரம்

வலி.கிழக்கு,ஜூன் 19

அச்சுவேலி கைத்தொழில்பேட்டைக் கோழிப்பண்ணையில் கோழிக் குஞ்சு பொரிக்கும் இயந்திரங்கள் கடந்தவாரம் பொருத்தப்பட்டன.

ஐ.நா.அபிவிருத்தித்திட்ட நிறுவனத்தினால் கனடாவிலிருந்து விமானமூலம் 1,235 கோழிக்குஞ்சுகள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன.

இந்த கோழிக்குஞ்சுகள் தற்போது இந்தப் பண்ணையில் பராமரிக்கப்பட்டுவருகின்றன. இவை முட்டையிட ஆரம்பிக்கும்போது இந்த இயந்திரங்கள் மூலம் குஞ்சு பொரிக்க வைக்கப்படும். (இ-180)

## கப்பல் சேவை ரத்து

யாழ்ப்பாணம்,ஜூன்19

எதிர்வரும் 30ஆம் திகதி நடைபெற இருந்த செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் நோயாளர் கப்பல் சேவை ரத்துச் செய்யப்பட்டுள்ளதாகவும் -

இனி அடுத்த சேவை ஜூலை 7ஆம் திகதியே நடைபெறும் என்றும் - அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-139)

## அவசரகாலச்சட்டம் மேலும் ஒரு மாதம் நீடிக்கப்பட்டது

கொழும்பு, ஜூன் 19

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதம் நீடிக்கும் பிரேரணை 96 அதிகப்படியான வாக்குகளால் கடந்த 15 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

101 உறுப்பினர்கள் பிரேரணையை ஆதரித்தும் 5 உறுப்பினர்கள் எதிர்த்தும் வாக்களித்தனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மூன்று உறுப்பினர்களும் ரொலோ அமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அடைக்கலநாதனும் ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் நிஹால் கலபதியும் பிரேரணையை எதிர்த்து வாக்களித்தனர்.

பொது மக்கள் ஐக்கிய முன்னணி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஈ.பி.டி.பி., முஸ்லிம் காஸ்கிரஸ் ஆகிய கட்சிகள் ஆதரவாக வாக்களித்தனர். ஐ.தே.கட்சியும் புளொட் அமைப்பின் உறுப்பினர்களும் நவ சமசமாஜக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்காராவும் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை. வீரவிதான அமைப்பின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் இ.தொ.கா. நாடாளுமன்ற உறுப்பினர் அவசரகாலச் சட்டத்தை எதிர்க்க வேண்டும் என்று ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் கோரிக்கை விடுத்திருந்தது குறிப்பிடத்தக்கது. (ஐ-6)


லிபேட்டி
தியேட்டர்
அச்சுவேலி
அருண்பாண்டியன்,
மௌலிசா
ரவுடி வம்சம்
காட்சிகள்10.30, 2.30
(பழைய நேரப்படி)
Fax No: 070-212223
Foreign T.P. No:
0094-70-212223
(66667)



ராஜா
யாழ்ப்பாணம்
4ஆவது வெற்றி வாரமாக
விஜய், ரம்பா,
தேவயாணி
மற்றும் பலர் நடித்த
நினைத்தேன்
வந்தாய்
10.30, 2.00, 5.00
(சி-7919)



வியாழ மாற்றம்
சிவராசாவின்
வியாழ மாற்றம்
என்று கேட்டு வாங்குங்கள்
(66724)


## மரண அறிவித்தல்கள்

### முருகேசு வல்லிபுரம் (வல்லிக்கோன)

உடுவில் கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், ஓய்வு பெற்ற முன்னாள் காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை நிர்வாக உத்தியோகத்தரும், உடுவில் ஸ்ரார்கிளப் கரப்பந்தாட்ட வீரருமான முருகேசு வல்லிபுரம் அவர்கள் 18-06-99 அன்று காலமானார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்
வ. இராசம்மா - (மனைவி)

உடுவில்.

(66718)

### வேலுப்பிள்ளை கனகசுந்தரம்

கருங்காலி முருகமூர்த்தி கோவிலடி காரைநகரைச் சேர்ந்த வேலுப்பிள்ளை கனகசுந்தரம் 17-06-99 அன்று காலமானார். அன்னார் காலஞ் சென்ற வேலுப்பிள்ளை வள்ளியம்மையின் அன்பு மகனும், காலஞ் சென்ற சுப்பிரமணியம், பரமேஸ்வரியின் அன்பு மருமகனும், நித்திய லக்சுமியின் அன்புக் கணவரும், நிர்மலானந்தன், சசிகரன், ராகினி, கேதீஸ்வரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், நித்தியானந்தனின்(பிரான்ஸ்) மைத்துனரும் மற்றும் கணபதிப்பிள்ளை, பரமேஸ்வரி, முருகையா ஆகியோரின் பாசமிகு தம்பியும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் வெள்ளிக்கிழமை 2 மணியளவில் காரைநகர் இந்துமயானத்தில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்
மனைவி, பிள்ளைகள்

காரைநகர்.

(66720)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

### திருமதி ரூத் ஏசாயா (பெரியன்ரா)

காரைநகரைப் பிறப்பிடமாகவும் இரணைஇலுப்பைக்குளம் அடம்பனை வதிவிடமாகவும் கொண்ட திருமதி ரூத் ஏசாயா 23-05-1999 இல் காலமானார். அன்னாரின் நல்லடக்கம் மடுத் திருப்பதியில் நடைபெற்றது. அவரின் 31 ஆம் நாள் ஜெபக்கூட்ட ஆராதனை 22-06-99 செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு (புதிய நேரம்) உடுவில் மல்வம் திருக்குடும்ப ஆலயம் முன்பாக உள்ள ஜெஸ்மின் இல்லத்தில் நடைபெறும்.

இந்த அழைப்பினை ஏற்று இந்த ஆராதனையில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம். தனிப்பட்ட அழைப்பு தரமுடியாமைக்கு வருந்துகின்றோம். உதவிக் கரம் நல்கிய அனைவருக்கும் நன்றிகள்.

அன்னார் காலஞ் சென்ற திரு.திருமதி மோசேஸ் - சூசானம் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்ற பேதுரு ஏசாயாவின் (CHURCH KEEPER) பிரிய துணைவியும், அருள்மலர் (ஓய்வுபெற்ற தாதி), தேவ அருள் தாசன் (அதிபர்), மரிய அருள் இரஞ்சினி (ஆசிரியை) ஆகியோரின் அன்புத் தாயாரும், கிறிஸ்தோப்பர்(T.O - K.C.W), ஜனதா(ஆசிரியை) ஆகியோரின் மாமியாரும் அஜந்த நாதா, அருள் நாதா, அனிஸ்ரா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும், திரு.திருமதி ஜேக்கப், திரு.திருமதி நேசராசா ஆகியோரின் சம்பந்தியுமாவார்.

தகவல்
திருமதி கி. அருள்மலர்.

மல்வம்
உடுவில்.

(66716)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

எமது சக நிறுவனமான லிங்கம் சில்க ஹவுஸில்
நீண்டகாலமாகப் பணியாற்றிய

## நாகேந்திரம் தில்லையம்பலம்

(குமாரையா)

அவர்களின் திடீர்மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

-ஊழியர்கள்
**ஞானம்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ்,**
18A, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-7946)

# மரண அறிவித்தல்கள்

## நல்லையா புஸ்பகாந்தன்

புங்குடுதீவு முதலாம் வட்டாரத்தை பிறப்பிடமாகக் கொண்ட நல்லையா புஸ்பகாந்தன் 17-06-99 வியாழக்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் நல்லையா - பிள்ளையம்மா ஆகியோரின் அன்பு மகனும், வாமதேவனின் அன்புச் சகோதரனும், குணதேவியின் மைத்துனரும், அனோஜ், அனுஷன், அஜித் அகியோரின் சிறிய தந்தையாரும், இராசையா, காலஞ்சென்ற கணேசு, திருமதி கணேசு நல்லம்மா (பிரான்ஸ்), கணபதிப்பிள்ளை (கனடா), காலஞ்சென்ற திருமதி கணபதிப்பிள்ளை கனகம்மா, திரு. திருமதி ஏகாம்பரம் சிலோன்மணி (கொழும்பு) ஆகியோரின் பெறாமகனும், கிருஷ்ணபிள்ளை, நீலாம்பிகை (யாழ்ப்பாணம்), துரையப்பா - பராசக்கி (தைதடி), நாகரெத்தினம் (வேலணை பிரதேச சபை), சுபத்திரை (கொழும்பு), துரைச்சாமி, தங்கமணி (டென்மார்க்), பாலசிங்கம் - காசுபதி ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மு.கிருஷ்ணபிள்ளை

11/8, பண்டாரக்குளம் மேற்கு ஒழுங்கை,
நல்லூர்.
யாழ்ப்பாணம்.

(66734)

## மாரிமுத்து சத்தியநாதன்

(ஓய்வுபெற்ற முன்னாள் எழுதுவினைஞர், பெருந்தெருக்கள் திணைக்களம்)

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும், ஊரெழுவை வசிப்பிடமாகவும் கொண்ட மாரிமுத்து சத்தியநாதன் காலமானார்.

இவர் மாரிமுத்து - இராசம்மா ஆகியோரின் சிரேஷ்ட புதல்வனும், லக்சுமி தேவியின் அன்புக் கணவரும், சற்குணம் (வவுனியா), இளமுருகன் (கொழும்பு), சியாமளா ஆகியோரின் அன்புத் தந்தையும் சத்தியதேவி (லண்டன), மகேஸ்வரி (கனடா), சோதிமலர் (கொழும்பு), யோகராசா (லண்டன்), காலஞ்சென்ற சற்குணம், நற்குணம், சிவானந்தம் (கனடா), நித்தியானந்தம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (19-06-1999) சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் உரும்பிராயில் உள்ள அவரது சகோதரியான திருநாவுக்கரசு மகேஸ்வரியின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இளங்காட்டு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மா.நற்குணம (சகோதரன்)

உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.

(66732)

## நாகேந்திரம் தில்லையம்பலம்

**(குமாரவேல்)**

நீராவியடியைப் பிறப்பிடமாகவும் கம்பஸ் லேன் (வளாக வீதி) திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட யாழ். லிங்கம் சில்க் ஹவுஸ் மூத்த ஊழியரான நாகேந்திரம் தில்லையம்பலம் 18-06-99 அன்று அதிகாலை காலமானார்.

அன்னார் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், ரஞ்சனாதேவி, மனோரஞ்சிதம், மகேந்திராசா (இத்தாலி), சிவனேஸ்வரன் (இத்தாலி), விக்கினேஸ்வரன் (இத்தாலி), புஸ்பராணி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், வேலானந்தராசா, மதியாபரணம், புவன்ராஜ் (கூட்டுறவுப் பரிசோதகர்), சித்திரா, கோமளா ஆகியோரின் அன்பு மாமனாரும், அனுரேகா, அனுதீபன், அனுசாந்தன், லக்சிதரன், நிரோஜன், விப்ஷணன், விதுர்ஷன், விதுஷா, வேணுஜன், கஜானி ஆகியோரின் அன்புப் பாட்டனாரும், நாகேஸ்வரியின் அன்பு மைத்துனரும், யசோதா (பிரதேசசபை, வேலணை), சுதர்சன ஆகியோரின் பெரிய தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள், இன்று (19-06-99) சனிக்கிழமை பி.ப. 3 மணிக்கு அவரது கம்பஸ் லேன் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்துக்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்தச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
புவன்ராஜ் (மருமகன்)

வளாக வீதி,
திருநெல்வேலி.

(66736)

## சண்முகம் இளையதம்பி

(இளைப்பாறிய மேற்பார்வையாளர், நீர்ப்பாசனத் திணைக்களம்.)

மீசாலையைப் பிறப்பிடமாவும், நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் இளையதம்பி 17-06-99 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகம் - சின்னப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும் பெரியதம்பி - அமுதம்மா ஆகியோரின் அன்பு மருமகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், பரமேஸ்வரி (கனடா), பத்மாவதி (இந்தியா), மகேந்திரராஜா (பிரான்ஸ்), ஆகியோரின் பாசமிகு தந்தையும், நற்குணராஜா (கனடா), கந்தையா (சுவிஸ்), சாரதா (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற குமாரசாமி, பொன்னையா, பரமகுரு, முத்தப்பிள்ளை (மீசாலை), அம்மா (மீசாலை) ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற நடராஜா, சிவகுரு ஆகியோரின் மைத்துனரும், ராதிகா, ரேணுகா, ரஜீவன், தனுஜா, விணோஜா, நிருஜா, ஜீவிதன், பிரவீணன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்திலிருந்து கனத்தை மயானத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்தச் செல்லப்பட்டு நண்பகல் 12 மணியளவில் தகனக்கிரியைகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மகேஸ்வரி [illegible]

36/4, பெரேரா லேன்,
வெள்ளவத்தை.
T.P. 556320

[illegible]

# கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கம் "உதயன்" நிறுவன ஆதரவுடன் நடத்தும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்று நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழக மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

இன்றைய ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

பிற்பகல் 4 மணி - இந்து இளைஞர் வி.க. அணி எதிர் விக்கினேஸ்வரா அணி.

பிற்பகல் 5 மணி - கோப்பாய் ஐ.வி.க. அணி எதிர் சிவசக்தி வி.க. அணி.

(ஐ-3)

# முன்னாள் அரச அதிபர் காலமானார்

யாழ்ப்பாணம், ஜூன்19

யாழ். மாவட்ட முன்னாள் அரச அதிபரும் இலங்கை இந்து சமயப் பேர்வையின் தலைவருமான யோகேந்திரா துரைசுவாமி தனது 75ஆவது வயதில் நேற்று முன்தினம் கொழும்பில் காலமானார்.

இலங்கை வெளிநாட்டுச் சேவையில் கடமையாற்றிய இவர் திறந்த பல்கலைக் கழகத்தின் கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய பிராந்திய நிலையங்களின் உறுப்பினராகவும் இருந்துள்ளார்.

இறுதிக்கிரியைகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் கொழும்பு கனத்தை மயானத்தில் நடைபெறும்.

அன்னாரின் மறைவையொட்டி யாழ். இந்து சமயப் பேரவை அனுதாபச் செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளது.

(ஐ-7)

# நீதிவான் உத்தரவு

யாழ்ப்பாணம், ஜூன்19

யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை ஆகிய நீதிமன்றங்களின் நியாயாதிக்க எல்லைக்குள் கைதுசெய்யப்படுபவர்களை யாழ்.நீதிவான் நீதிமன்றத்திலேயே ஆஜர் செய்யவேண்டும்.

யாழ்.நீதிவான் எஸ்.ஏ.ஈ.ஏகநாதன் மேற்கண்டவாறு யாழ்.பொலீஸ் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

அரியாலைப்பகுதியில் கைதுசெய்யப்பட்ட ஐந்து பொதுமக்களை யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு நீதிவான் எஸ்.ஏ.ஈ.ஏகநாதன் காங்கேசன்துறை பயங்கரவாதத் தடுப்புப்பிரிவுப் பொறுப்பாளருக்கு உத்தரவிட்டிருந்தார்.

இந்த விவகாரம் நேற்று யாழ். நீதிமன்றத்தில் எடுக்கப்பட்ட சமயம் பிரஸ்தாப ஐந்து நபர்களையும் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்ததாகப் பொலீஸார் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. அதையடுத்து நீதிவான் பொலீஸாருக்கு மேற்கண்ட உத்தரவை விடுத்தார்.

(ஐ-3-5)

# சிப்பாயின் மனைவி கைது

வவுனியா, ஜூன்19

வவுனியாவில் விமானப்படைச் சிப்பாயின் வீட்டில் பணி புரிந்த தமிழ்ச் சிறுமி ஒருத்தி கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக அந்தச் சிப்பாயின் மனைவியான வங்கி ஊழியர் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

இவரை எதிர்வரும் திங்கட்கிழமை வரை விளக்க மறியலில் வைக்கும்படி வவுனியா நீதிவான் எஸ். தியாகேந்திரன் உத்தரவிட்டார். (முன்னர் வந்த செய்தி 4ஆம் பக்கத்தில்) (ஐ-3-164)

**ராஜபக்ஷ......**

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

அறிக்கையை ஜூலை 15ஆம் திகதிக்கு முன்னர் தமக்கு அனுப்புமாறு நீதிவான் உத்தரவிட்டிருக்கிறார். மன்னார் மாவட்ட நீதிபதியும் நீதிவானுமாகிய எம்.இளஞ்செழியனுக்கு - மன்னாருக்கு நேரடியாக இந்த அறிக்கை அனுப்பப்படும். அதன் பின்னர் சம்பந்தப்பட்டோருக்கு அவர் அடுத்த கட்ட தோண்டுதல் பணிக்கான திகதியை அறிவிப்பார் எனக் கூறப்படுகிறது.

அந்தத் திகதியில் நிபுணர்கள் எல்லோரும் வருவார்களா? தோண்டுதல் பணி தொடருமா? நீதிபதி விடுத்துள்ள உத்தரவுப் பிரகாரம் மழைகாலத்துக்கு முன்னர் தோண்டுதல் பணி பூர்த்தியாகுமா? இக்கேள்விகளுக்கெல்லாம் விடை பெறுவதற்குப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். *


**நாகம்ஸ்**
**சுன்னாகம்**
முரளி, சூர்யா, ஜிவிதா, ராதிகா நடித்த
**காதலே நிம்மதி**
[illegible] (66729)


# கண்ணீர் அஞ்சலி

யாழ்.லிங்கம் சில்க்ஹவுஸ் ஸ்தாபனத்தில்
நீண்டகாலமாக விற்பனையாளராகக் கடமையாற்றியவரான
திருநெல்வேலி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த



## நாகேந்திரம் தில்லையம்பலம்

(குமாரையா)

அவர்களின் மறைவையிட்டு துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தித்துக் கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

-உரிமையாளரும் ஊழியர்களும்,
**லிங்கம் சில்க்ஹவுஸ்,**
**18, மின்சாரநிலைய வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(சி-7945)

*யாழ்ப்பாணப் பல்கலைக் கழக*

## புறநிலைப் படிப்புகள் அலகின்

ஏற்பாட்டில

### பல்கலைக்கழக சமூகத்தினரின்

### நூல்கள் / சஞ்சிகைகள

### கண்காட்சியும் விற்பனையும்

ஜூன **19, 20, 21**ஆம் திகதிகளில் புவியியற்றுறை மண்டபத்தில்
**மு.ப. 9 மணி முதல் பி.ப. 4 மணி வரை.**
துணைவேந்தர் பேராசிரியா **பொ.பாலசுந்தரம்பிள்ளை**
*அவர்கள்*
**ஜூன் 19 ஆம் திகதி சனிக்கிழமை மு.ப. 9-00 மணிக்கு**
**கண்காட்சியை ஆரம்பித்து வைப்பார்.**

ஆர்வலர்கள் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

இணைப்பாளர்,
புறநிலைப் படிப்புகள் அலகு.

(சி-7944)

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## வெள்ளிவிழா இன்றைய நிகழ்ச்சிகள

## இசை அரங்கு

**1999-06-19 சனிக்கிழமை காலை 9 மணி**
**நிகழ்ச்சி நிரல்**

தமிழ் வாழ்த்து

தொடக்கவுரை:
**எந்திரி திரு. ஆர். விஜயரட்ணம்**
விவசாயப் பீடாதிபதி

வாழ்த்துரை:
**பேராயர் கலாநிதி எஸ். ஜெபநேசன்**
பேரவை உறுப்பினர்

**இசை அரங்கு காலை 9.30 ~ 12.30**

அரங்கிசை:
**செல்வி பரமேஸ்வரி கணேசன்** (9.30-10.30)
பக்கவாத்தியம்
மிருதங்கம் - **திரு. எஸ். மகேந்திரன்**
வயலின் - **திரு. கே. குகபரன்**

சங்கீதபூஷணம் **எஸ்.பத்மலிங்கம** (10.30 - 12.30)
பக்கவாத்தியம்
மிருதங்கம் - **எம். சிதம்பரநாதன்**
வயலின் - **ஆர். ராதாகிருஷ்ணன்**
கஞ்சிரா - **எஸ். துரைராஜா**
கடம் - **வி. ரமணன்.**

பிரவேசம் இலவசம்
ஆர்வலர் அனைவரும் வருக. (சி-7936)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19-06-1999இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஞ்சிகை






நீங்கள் விரும்பும் புடைவைத் தினுசுகளை அழகுக்கு அழகு சேர்க்கும் வகையில் விதம் விதமாகத் தெரிவு செய்ய நாடவேண்டிய இடம்.

**வினாயகர் புடைவை அகம்**

இல: 62ஏ, நவீனசந்தை(உட்புறம்),
யாழ்ப்பாணம்.

(66613)

## கருத்துக் கலசம்

மேரூரா

### எங்கே போகிறது?

*கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை*

*- திருக்குறள் -*

மனித வாழ்க்கையில் செல்வங்கள் எனக் கருதப்படுவனவற்றில் முதன்மையானது கல்விச் செல்வம். மனிதனை மனிதனாக்குவதும் அவனது சிறப்புக்கும் செழிப்புக்கும் முதுகெலும்பாக விளங்குவதும் கல்வியே.

யாழ்ப்பாணத்தவர்கள் எந்தளவு ஏழ்மையிலும் கல்வியைத் தேடிப் பெறுபவர்கள்: கல்விச் செல்வத்தை கடின உழைப்பின் மூலம் தேடிச் சேர்ப்பவர்கள்; அந்தச் செல்வத்தைத் தமது அடுத்த சந்ததியினருக்கு சொத்தாக கை மாற்றுபவர்கள். கல்வியிலேயே கண்ணானவர்கள் அவர்கள்.

நீண்ட காலமாக யாழ்ப்பாணத்துக்கெனச் சிறப்பான கல்விப் பாரம்பரியம் இருந்து வந்துள்ளது. இலவசக் கல்வித் திட்டம் நடைமுறைக்கு வருமுன்னரே யாழ்ப்பாண மக்கள் கல்வி அறிவைத் தேடுவதில் முனைப்பாக இருந்து அதில் சிறந்தும், உயர்ந்தும் விளங்கினார்கள். பலதுறைகளிலும் பெரும் கல்விமான்களும் அறிஞர்களும் யாழ்ப்பாண மண்ணை அலங்கரித்து தாம் பிறந்த மண்ணுக்குப் புகழ் சேர்த்தனர்.

அத்தகைய ஓர் உன்னதமான நிலையை அடைவதற்கு அர்ப் பணிப்பும்,சமூக நலனும் நிறைந்த ஆசிரியர்கள் பரம்பரையே இங்கு அடித்தளமாக விளங்கியது. கல்விச்சாலைகள் ஓங்கி வளரவும், கல்விச் செல்வம் செறிந்து செழிக்கவும், அதனூடு எங்களது தனித்துவமான கலாசாரமும் பண்பாடும் பேணிக் கடைப்பிடிக்கப்படவும் ஊற்றுக் கண்களாக் விளங்கியவர்கள் அந்த ஆசிரியர் பரம்பரையினரே.

பாடசாலைகளை மட்டுமன்றி, மாணவர்களை மட்டுமன்றி ஆசிரியர்களையும் வழிநடத்திய அதிபர்களே குடாநாட்டின் கல்வி வளத்துக்கு உறுதுணையானவர்கள் எனலாம். அவர்களுடைய ஆற்றலும் ஆளுமையும் ஒப்புயர்வற்றன.

பாடசாலைகளை நிர்வகிப்பதிலும், மாணவர்களின் கல்வித்தரத்தை உயர்த்துவதிலும் வளர்ப்பதிலும், புத்தக கல்விக்கு மேலதிகமானபுறநிலைக் கற்கைகள் செயற்பாடுகளில் ஈடுபடுத்துவதிலும், பாடசாலைகளை சமூகத்துடன் நெருக்கமுறச் செய்து இரண்டு தரப்புக்களையும் முன்னேற்றுவதிலும் அவர்கள் செய்த பணிகள் ஈடிணையற்றவை.

அன்றைய பாடசாலையின் அதிபர் ஒருவரை அல்லது ஆசிரியர் ஒருவரை இன்று நினைக்கும் போதும் பசுமையான நினைவுகளை மாணவரிடமும், சமூகத்திலும் பதிக்கும் வகையில் அவர்கள் அடையாளம் இட்டு - காட்டிச் - சென்றுள்ளனர் என்பதனை உணரலாம்.

ஆனால் இன்று பாடசாலைகளில் பணிபுரியும் அனுபவமும் ஆற்றலும் ஆளுமையும் உள்ள ஆசிரியர்களும் அதிபர்களும் கல்வி நிர்வாக வேலைகளுக்கென உள்வாங்கப்பட்டு உத்தியோகத்தர்கள், அதிகாரிகள் ஆக்கப்படுகிறார்கள்.

போட்டிப் பரீட்சையில் தேறியதன் அடிப்படையில், சேவை மூப்பின் அடிப்படையில் என்று பல விதங்களிலும் அதிபர்கள், ஆசிரியர்கள் கல்வி நிர்வாக சேவை என்ற சட்டிக்குள் குழலில் இருந்து தள்ளப்படும் பிட்டுத் துண்டுகள் போலத் தள்ளப்படுகிறார்கள். கல்வி வலயங்கள் அதிகரிக்கப்பட்ட பின் பிட்டுத் தள்ளப்படும் வேகம் கூடிவிட்டது. பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களின் எண்ணிக்கை குறைவாகவும் அவர்களை நிர்வகிக்கும் அதிகாரிகளின் எண்ணிக்கை கூடுதலாகவும் இறங்கி ஏறியுள்ளது!

இப்படியே விகிதாசாரம் கூடிக் கொண்டு போனால் மாணவர்களின் கல்வி எங்கே போய் முடியும்?

# உங்கள் குழந்தைகளும் கூட 'ரென்ஷனுக்கு' உட்படுகின்றன

உங்கள் குழந்தை நகம் கடிக்கின்றதா?
அளவுக்கு அதிகம் கைசூப்புகிறதா?
தலை முடியைப் பிய்த்துக் கொள்கிறதா?
'ரென்ஷன்' தான் காரணம்!

"என்னது முளைச்சு ஒரு இலை விடுகிறதுக்குள்ளே ரென்ஷனா?" என்று திகைக்காதீர்கள். நாம் குழந்தையாக இருந்த போதும் டென்ஷனுக்கு ஆட்பட்டிருந்திருப்போம்.

என்ன, பெரியவர்களுக்கு காதல் தோல்வி என்றால் ஜுனியருக்கு ஒரு சாக்லெட் பறிபோவது பெரிய துக்கம்! அவ்வளவுதான் வித்தியாசம்.

பெரியவர்களின் சோகம் குடி, சிகரெட், தன்னைத் தானே வருத்திக் கொள்ளுதல் என்று அவரவர் மன வலிமைக்கேற்ப உருமாறுகிறது. குழந்தைகளின் ரென்ஷன் நகம் கடித்தல், விரல் சூப்புதல், மூக்கைக் குடைதல், முடியைப் பிய்த்துக் கொள்ளுதல் என்கிற பழக்கங்களாக மாறுகின்றது.

இது போன்ற விஷயங்கள் முதலில் குழந்தைகளின் ஓரளவு குறைப்பது உண்மைதான். ஆனால் அவை மெள்ள மெள்ளப் பழக்கங்களாக உருமாறி கெட்டியாகப் பிடித்துக் கொள்ளும்.

இதற்கு ரொம்பப் பயப்பட வேண்டியதில்லை. பெரும்பாலான குழந்தைகள் ஓரிரு வருடங்களில் தாமாகவே இந்தப் பழக்கத்திலிருந்து விடுபட்டு



விடும். கட்டை விரல் சூப்புவர்களில் பாதிப்பேர் பள்ளியில் சேர்ந்ததும் அந்தப் பழக்கத்தை விட்டு விடுவார்கள்.

குறிப்பிடத்தக்க வயதுக்குப் பிறகு இது போன்ற பழக்கங்கள் தொடர்வது சிக்கல்தான். நகம் கடித்தல், தலைமுடியைப் பிய்த்துக் கொள்ளுல் போன்றவை 'பையன் பதற்றமாக இருக்கிறான்' என்பதை எதிரிலிருப்பவர்களுக்குக் காட்டிவிடும். பிற குழந்தைகள் 'விரல் சூப்பி', நகம் கடிச்சான்' என்றெல்லாம் பட்டப் பெயர் சூட்டி கேலிசெய்ய ஆரம்பித்து விடுவார்கள். இதனால் குழந்தைகளுக்குத் தாழ்வு மனப்பான்மை உருவாகலாம்.

இது போன்ற கெட்ட பழக்கங்களுக்காகக் குழந்தையைத் திட்டுவதன் மூலம் திருத்தவே முடியாது . திட்டத்திட்ட குழந்தை மேலும் அதிகமாக அதைச் செய்ய ஆரம்பிக்கும். வேறு சில மனவியல் உத்திகளின் மூலம் இந்தப் பழக்கங்களை போக்க முயற்சிக்கலாம். பழக்கம் எதுவாக இருந்தாலும் அடிப்படை உத்திகள் ஒரே மாதிரியானவைதான்.

### உத்தி - 1

கெட்ட பழக்கத்தைப் பற்றிய கவனத்தை குழந்கைளுக்கு உருவாக்குங்கள். 'தான் கை சூப்புகின்றோம்' என்ற விஷயமே தெரியாமல் - தானறியாமல் - கை சூப்பும் குழந்தைகள்தான் அதிகம். இப்படிப்பட்ட குழந்தைகளுக்குத்தான் இது நீண்ட காலப் பழக்கமாக மாறும். தான் விரல் சூப்பும் போதும், மூக்கைக் குடையும் போதும், தான் பிறர் கண்ணில் எப்படித் தோன்றுகின்றோம் என்பதையும் குழந்தை அறியாது. இதைக் குழந்தையே அறியும் வரை அந்தப் பழக்கத்திலிருந்து வெளிவருதல் இயலாத காரியம். விரல் சூப்பும் போதும் நகம் கடிக்கும் போதும் குழந்தையைக் கண்ணாடி முன் கொண்டு நிறுத்துங்கள். தான் இப்படிப்பட்ட காரியங்களைச் செய்வதைத் தானே பார்க்கட்டும். "நீ விரல் சூப்பும் போது எப்படி இருக்கே...?" என்று குழந்தையிடமே கேளுங்கள்

"அய்யே..... ஆயிப்பாப்பா...." என்று கூட குழந்தை பதில் சொல்லக் கூடும்.

இது போன்ற பழக்கங்கள் உள்ள பிறகுழந்தைகளை உங்கள் குழந்தைகளுக்குக் காட்டுங்கள்.

நகம் கடிக்கும் குழந்தையிடம் பத்திரிகைகளில் வரும் படங்களில் இருப்பவர்களின் நகங்கள் எவ்வளவு அழகாக இருக்கின்றது என்று சுட்டிக்காட்டுங்கள்.

### உத்தி - 2

எப்போது - எங்கே இந்தப் பழக்கங்கள் இடம் பெறுகின்றன என்று அடையாளம் காட்டுங்கள்.

இது போன்ற கெட்ட பழக்கங்கள் குறிப்பிட்ட சூழ்நிலைகள் மற்றும் இடங்கள் தொடர்புடையவை. ரி.வியில் தனக்குப் பிடித்த சீரியல் பார்க்கும் போது மட்டும் ஒரு குழந்தை 'பச்சக், பச்சக்' என்று விரலை சூப்பும். இன்னொரு குழந்தை சாயங்காலங்களில் மட்டும்தான் தலைமுடியைப் பிய்த்துக் கொள்ளும்.

என்ன பழக்கம்....?
எந்த நேரத்தில்?
எந்த இடத்தில்?
என்ன செய்யும்போது?
எத்தனை தடவை?

என்று ஓர் அட்டவணை தயாரித்துக் கொண்டு அதில் எழுதி வந்தால், குறிபிட் சூழ்நிலை, இடம் போன்றவற்றைத் தவிர்ப்பதன் மூலம் பழக்கங்களைக் குறைத்துக்கொள்ள வாய்ப்பிருக்கிறது.

### உத்தி - 3

'ரிலாக்ஸ்' பண்ணிக் கொள்ள கற்றுக் கொள்ளுங்கள்.

ஒரு பழக்கத்தை மாற்றிக் கொள்வது என்பது பெருத்த மன அழுத்தத்தை உருவாக்கும். இந்த அழுத்தத்தைப் போக்க உடலையும் மனதையும் ரிலாக்ஸ்செய்து கொள்ளும் முறைகள் இருக்கின்றன.



ரிலாக்ஸ் என்றதும் பெரிய அளவில் எதையும் நினைத்துப் பயப்படத் தேவையில்லை. மெடிட்டேஷன், சவாசனம் போன்ற குட்டி யோகாசனங்கள் போன்றவற்றின் மூலம் முழு உடலையும் ரிலாக்ஸ் செய்து கொள்ளலாம். கெட்ட பழக்கத்தில் ஈடுபடும் கட்டைவிரல், வாய், மூக்கு போன்றவற்றையும் ரிலாக்ஸ் செய்து கொள்ள முடியும். குழந்தை இது போன்ற பயிற்சிகளைச் செய்யும்போது பெற்றோர் கூடவே இருந்து பார்த்துக் கொள்ள வேண்டும்.

நீங்களும் இதே பயிற்சிகளைச் செய்யுங்கள். குழந்தையின் முயற்சிகளை வாய்விட்டுப் பாராட்டுங்கள.

### உத்தி - 4

எதிர் நடவடிக்கைகளையும் மாற்று ஏற்பாடுகளையும் செய்யுங்கள்.

'நகம் கடிக்க வேண்டும் என்று தோன்றும் போது வேறு ஒரு காரியம் செய்யலாம். முஷ்டியை இறுக மடித்துக் கொண்டு அரை நிமிஷம் கழித்துத் தளர்த்தச் சொல்லங்கள். அதனால் இரண்டு பயன்கள்.


ஒன்று:- நகம் கடிக்கும் பழக்கத்தில் இது குறுக்கிடுகிறது.

இரண்டாவது:- ரிலாக்ஸ் ஆவதன் மூலம் நகம் கடிக்க வேண்டும் என்கிற உணர்வைத் தடுக்கிறது.

இறுதியாக பழக்கத்தை மாற்றிக் கொள்வது என்பது ரொம்ப பெரிய சமாசாரம். மாற்ற சிரமம் எடுத்துக் கொள்ள வேண்டும். நீண்ட காலம் ஆகும்.

குழந்தை பழக்கத்தை மாற்றிக் கொள்ளமாட்டேன் என்கிறதே என்ற பதற்றத்தில் நீங்களும் ஏதேனும் கெட்ட பழக்கத்தை உண்டாக்கிக் கொள்ளாது இருப்பது நல்லது. *

# மாம்பழக் கடகம்



அன்றைக்குப் பெரிய கோவிலிலே மாம்பழத்திருவிழா. முதலியார் முருகேசர் தனது எடுபிடி ஆள் பேரம்பலத்தைக் கூப்பிட்டார். சந்தைக்குப்போய் கடகம் நிறைய மாம்பழத்தை வாங்கிக்கொண்டு வரும்படி காசு கொடுத்து அனுப்பினார்.

எடுபிடியாள் பேரம்பலத்தின் சொந்தத் தேவைக்கு அன்று அவசரமாக் காசு தேவைப்பட்டது. முதலியார் கொடுத்த காசில் அரைவாசியைப் பேரம்பலம் எடுத்துக்கொண்டு, மிதிக்கு மாம்பழத்தை வாங்கினார். வாங்கின மாம்பழம் கடகத்தின் அரைவாசிக்கேனும் வரவில்லை.

அப்போது பேரம்பலத்துக்கு ஒரு யோசனை வந்தது. ஒரு 'கதை' வைக்கோலை வாங்கினார். அதைக் கடகத்தின் அடியிலே போட்டு நிரப்பினார்.அதன் மேல் மாம்பழங்களை அடுக்கினார். கடகம் நிறைந்து மாம்பழம் காட்சி தந்தது. நேரே முதலியார் வீட்டுக்குக் கொண்டு போய் அவருக்குக் காட்டிவிட்டுப் பெரிய கோவில் ஐயரிடம் கொண்டு போனார்.

ஐயரிடம் அவர் மாம்பழங்களைக் கொடுத்தார். ஐயர் இரண்டு தாம்பாளங்களைக் கொண்டு வந்து பழங்களை அடுக்கத் தொடங்கினார் என்ன ஆச்சரியம், கடகத்தின் அடிப்பகுதி முழுவதும் வைக்கோல் நிறைந்து இருக்கக கண்டார். "அடி வைக்கோல் - நுனிபழம்" என்று முதலியாருக்குச் சொல்லும்படி எடுபிடியாளிடம் ஐயர் சொன்னார். முதலியாரிடம் பிடிபடாமல் இருப்பதற்காக ஐயர் சொன்னதை மாற்றி, "அடிபழம் - நுனிவைக் கோல்" என்று எடுபிடியாள் சொன்னான்.

**யாழ்ப்பாணத்து நாட்டார் கதைகள்**

*தொகுப்பு: கலாநிதி சபா.ஜெயராசா.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்கள் எந்த உடையில் மிக அழகாக இருப்பர்?


**ஏழாலை. ம.நிரஞ்சன்.**
பனங்கள், தென்னங்கள் நாடுபவர்கள் சிலர் பெண்களையும் நாடுகின்றார்களே. ஏன்?
☺ **பெண்கள் (பெண்+கள்) இடமும் போதை தரும் 'கள்' இருக்கின்றதே!**

❁ ❁ ❁

**கொடிகாமம். க.சந்திரா.**
'அவனுக்கும் அவளுக்கும் இது' என்கின்றார்களே. அது எது?
☺ **அது தெரியாதா அது? அது, அதுதான் இது!**

❁ ❁ ❁

**வரணி. முந்தன்.**
ஆண்களை ஆடவர் என்பது ஏன்?




☺ **பெண்கள் தம்மைத் தொடரும் செம்மறி ஆடு என்று அவர்களைக் கருதி ஆடு அவர் = 'ஆடவர்' என்கிறார்கள்.**

❁ ❁ ❁

**நீர்வேலி. த.சாந்தன்.**
வாழ்க்கையில் மறக்க முடியாதது எதுவோ?
☺ **முதல் காதல், முதல் முத்தம், முதலிரவு.**

❁ ❁ ❁

**நவாலி. க.பிரதீபன்.**
பாவம் செய்து பிறந்தவர்கள் ஆண்களா? பெண்களா?
☺ **தாய், தந்தை இருவரும் செய்யும் பாவத்தில்தானே பிறப்பே நிகழ்கின்றது?**


❁ ❁ ❁

**மாதகல். ஆரணி.**
சில பெண்கள் காதலரிடம் நகை, புடைவை எல்லாம் வாங்கிக் கொண்டு ஏமாற்றி விடுகிறார்களே?
☺ **தூண்டிலில் போடுவதில் திறமையில்லாவிட்டால் மீன் தூண்டிலையும் தூண்டிலில் இருக்கும் இரையையும் கூட கௌவிக் கொண்டு போய்விடும்.**

# ஆண்கள் அதிகம் அஞ்சும் இடம் எது?

❁ ❁ ❁

**அராலி. க.வேலு.**
குறியீட்டு நாடகம் குறித்து உங்கள் அபிப்பிராயம் என்ன?



☺ **ஒரு கதையைக் கூறினால் என் பதில் நன்கு விளங்கும்.**

**வழக்கம் போல மாமியாருக்கும் மருமகளுக்கும் சண்டை. சுடுசொல்லைத் தாங்க முடியாத மருமகள் பக்கத்திலிருந்த உலக்கையால் மாமியாரின் கழுத்தில் அடித்து விட்டாள். மாமியார் நிலத்தில் விழுந்து கிடந்தாள். அவளால் கதைக்க முடியவில்லை. சாகக் கிடந்தாள்.**

**அந்த நேரம் மகன் வீட்டுக்கு வந்தான். நிலத்தில் விழுந்து கிடக்கும் தாயைப் பார்த்து 'அம்மா! என்ன?' என்று கேட்டான். கதைக்க முடியாத தாய் சாக முன்னர் சைகையில் பதிலளித்தாள்.**

**முதலில் தனது கழுத்தைக் காட்டினாள். பின்னர் தனது மருமகளைக் காட்டினாள். அதன் பின்னர் மூலையில் கிடந்த உலக்கையைச் சுட்டிக்காட்டினாள். மகன் முழித்தான்.**

**'ஒன்றும் விளங்கவில்லையே அம்மா!' என்று பதில் கூறினாள்.**

**மனைவி சந்தர்ப்பத்தை வசமாகப் பயன்படுத்தி கொண்டாள்.**

**'மாமி கூறுவது உங்களுக்கு விளங்கவில்லையா?' என்று கேட்டு விளக்கம் கொடுக்க ஆரம்பித்தாள்.**

**'மாமி என்னில் இருக்கும் அன்பு காரணமாக தான் கழுத்தில் அணிந்திருக்கும் பத்துப் பவுண் சங்கிலியை தான் சாக முன்னர் எனக்கு அணிவிக்க விரும்புகிறார். அதுதான் தனது கழுத்தையும் என்னையும் காட்டுகின்றார். அதனை விளங்காமல் நீங்கள் உலக்கை போல நிற்பதனால் உலக்கையையும் காட்டுகின்றார்' என்றாள்.**

**இந்தக் கதை மாதிரி குறியீட்டு நாடகத்தையும் விரும்பியவாறு பொருள் கொள்ளும் வசதி அதில் இருக்கும்.**

❁ ❁ ❁

**பளை. ஆ.குகன்.**
பெண்கள் எந்த உடையில் அழகாக இருப்பர்?
☺ **மோதகத்தில் இருந்தாலும், கொழுக்கட்டையில் இருந்தாலும் சர்க்கரை இனிக்கவே செய்யும். என்றாலும் தனிய சர்க்கரையைச் சுவைப்பதில் கிடைக்கும் ருசியோ அலாதி.**

❁ ❁ ❁

**காரைநகர். ஏ.பாலன்.**
ஆண்கள் மீசை வளர்க்க வேண்டுமா?




☺ **நீங்கள் ஒன்றும் வளர்க்க வேண்டாம். அதுதானாகவே வளரும். நவீன உடையலங்காரத்தில் மீசை வைக்காவிட்டால் நாங்கள் எப்படி ஆண்களையும் பெண்களையும் பிரித்தறிவதாம்?**

❁ ❁ ❁

**நீராவியடி. மு.வடிவு.**
எனது மாமியாரைக் கடித்த விசர் நாய் செத்து விட்டதே. என்ன செய்யலாம்?
☺ **உமக்குக் கடி விழ முன்னர் நீர் விசர் நாய்த் தடுப்பூசி போட்டுக் கொள்வது நல்லது.**

❁ ❁ ❁

**நல்லூர். ராஜா.**
காதலிக்கப் போகிறேன். சாதி பார்க்கவா? சீதனம் பார்க்கவா?
☺ **உமக்கும் காதலுக்கும் ஏணி வைத்துத்தான் பார்க்க வேண்டும்.**

❁ ❁ ❁

**யாழ். க.அனோஜன்.**
ஆண்கள் அதிகம் அஞ்சும் இடம் எதுவோ?
☺ **கட்டில்தான். நான் ஆஸ்பத்திரிக் கட்டிலைச் சொன்னேன்.**

❁ ❁ ❁

**நவாலி. இந்துஜா.**
காதல் பிரிவை யார் தாங்கமாட்டார்கள்? ஆண்களா? பெண்களா?
☺ **ஆண்கள் தாங்கமாட்டார்; பெண்கள் தூங்க மாட்டார்!**

❁ ❁ ❁

**சண்டிலிப்பாய். இ.நாதன்.**
முதலீடு இல்லாமற் செய்யக்கூடிய தயாரிப்புத் தொழில் இருக்கின்றதா?
☺ **இருக்கின்றதே! Love Making!**

❁ ❁ ❁

**சங்கானை. வேந்தன்.**
காரத்தே படித்த பெண்ணைத் திருமணம் செய்யலாமா?



☺ **'கும்! கும்!!' குத்து சூடாக இருக்கும். ஜமாயுங்கள்!**

❁ ❁ ❁

**கொக்குவில். ம.வாணி.**
எனது நெஞ்சை ஒருவரிடம் ஒப்படைத்து விட்டேன். பெற்றோர் வேறொருவரைத் திருமணம் செய்ய வற்புறுத்துகின்றார்கள். பெற்றோர் சொல் கேட்கலாமா?

**யாழ். வி.ஜூலி.**
Mr.வித்துவான்! நான் ஒருவரை Love பண்ணுகின்றேன். பெற்றோர் Brake போடுகின்றார்களே! என்ன செய்யலாம்?
☺ **My Dear Lady! வேகமாகச் செல்லும் வாகனத்துக்கு Brake அவசியம். இல்லாவிட்டால் (காதல்) பயணம் விபத்தில்தானே போய் முடியும்?**

❁ ❁ ❁

**ஊரெழு. ரி.செல்வன்.**
புத்திசாலி எப்படி இருப்பான்?
☺ **என்னைப் பற்றி என்னிடம் கேட்பதா? (வாசகர்கள் சிலரும் என் மனைவியும் 'மொக்கர்' என்று என்னைக் கருதுவதைத் தெரியாத மாதிரிவிட்டு விடுங்களேன் பிளீஸ்...!)**

❁ ❁ ❁

**நல்லூர். ராணி.**
நீங்கள் உள்வீட்டுச் சமாச்சாரங்களில் ஈடுபடுவதுண்டா?
☺ **அதில் மட்டும்தான் ஈடுபடுவதுண்டு. வெளியில் ஒத்துவருவதில்லை.**

❁ ❁ ❁

**கற்கோவளம். சுஜந்தினி.**
வீட்டில் நாயில்லாமலேயே "நாய் கடிக்கும் கவனம்" என்று எழுதிப் போடுபவர்கள் குறித்து?

# வித்துவான் பதில்கள்

☺ **'தந்தை சொல்மிக்க மந்திரமில்லை' என்று பழமொழி இருந்தாலும், நெஞ்சத்தை ஒருவரிடம் கொடுத்துவிட்டு மஞ்சத்தில் இன்னொருவருடன் வாழ்வது தமிழ்ப் பண்பாட்டுக்குப் பொருந்தாதே?**

❁ ❁ ❁

**சுதுமலை. எஸ். மயூரன்.**
கண்ணடித்தால் காதல் வருமா?
☺ **திரைப்படங்களில் கார் இடித்தாலே காதல் வருகின்றது. கண்ணடித்தால் ஏன் வராது?**

❁ ❁ ❁

**அரியாலை. தினேஷ்.**
பெண்டாட்டியை எதுவரைக்கும் கண்டிக்கலாம்?
**நம்மைத் துண்டிக்காத வரை!**

❁ ❁ ❁

**நல்லூர். ஜே.என்.ஆனந்த்.**
அரசியலில் நீர் எந்தப் பக்கம்?
☺ **மக்கள் பக்கம்.**

❁ ❁ ❁

**மிருசுவில். எம்.லோஜினி.**
என் கணவர் கடையில் சாப்பிடுகின்றாரே! என்ன செய்யலாம்?
☺ **நீங்கள் எந்தச் சாப்பாட்டைக் கூறுகின்றீர்கள் என்று தெரியவில்லை. ஆனால் எது என்றாலும் கடைச் சாப்பாடு சுவையாகத்தான் இருக்கும். ஆனால் உடலைக் கெடுத்து விடும்.**

❁ ❁ ❁

**அல்வாய். சுதன்.**
'ராக்கிங்'இன் போது மீசையைத் துறக்கச் சொல்வது ஏன்?
☺ **மீசை ஆண்களுக்குரியது. 'ராக்கிங்' கோமாளிகளுக்கு அஞ்சும் பேடிகளுக்கு மீசை எதுக்கு என்று நினைக்கின்றார்கள் போலும்.**

❁ ❁ ❁

**பண்ணாகம். நாரதன்.**
சென்றிகளில் இறங்கி சைக்கிள் உருட்டும் போது என்ன நினைப்பீர்கள் வித்துவான்....?



☺ **சாப்பாட்டில் உப்புச் சேர்க்காத இனமோ இதுவென்று (என்னையும் சேர்த்து) நினைப்பதுண்டு.**

❁ ❁ ❁

☺ **நாய்க்கு நாலு கால்தான் இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லையே!**

❁ ❁ ❁

**ஊரெழு. சுபாஷ்.**
காதலிக்கும் போது சுறுசுறுப்பாக இருக்கும் ஆண்கள் மணமான பின் சோம்பேறிகளாய் விடுவது ஏன்?
☺ **இதுக்குத்தானா இவ்வளவு அலைச்சலும் என்பதை உணரும் போது சுறு சுறுப்பு தானே போய் விடுகின்றது.**

❁ ❁ ❁

**மானிப்பாய். சாந்தி.**
பெண்ணுக்குச் சிறந்த வீடு எது? பிறந்த வீடா? புகுந்த வீடா?
☺ **அன்புக்கும் ஆற்றலுக்கும் அடித்தளமிடுவது பிறந்த வீடு. அதைப் பயன்படுத்தத் தளமாவது புகுந்த வீடு.**

❁ ❁ ❁

**சுதுமலை. சி.சுயந்தன்.**
உங்களுக்குப் பிடித்தது படையப்பாவா? மோனிஷாவா?
☺ **படையப்பா - ரசிக்கலாம்.**
**மோனிஷா - சகிக்கலாம்.**

**குருநகர். சந்தியா.**
இலங்கையின் எதிர்காலம்?
☺ **மூழ்குகின்றது - கடனில், யுத்தத்தில், குழப்பத்தில், பிழையான வழிகாட்டலில்.**

❁ ❁ ❁

**மத்தொனி. வீ.மணி.**
இலங்கை அணிக்கும் எமது ஊர் அணிக்கும் கிரிக்கெட் போட்டி ஒன்று ஒழுங்குபடுத்தித் தருவீர்களா?
☺ **அர்ஜுன ரணதுங்க அன்ட் கொம்பனியை கிண்டல் செய்யலாம். அதற்காக இப்படியா? விளையாட வேறு ஏதும் அணி இல்லாமல் - வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு அணிகளுடன் தோற்ற - யாழ்ப்பாண அணியுடன்தான் 'மாட்ச்' கொளுவ நீங்கள் கேட்பது ஆகப் பெரிய கிண்டல் பாருங்கோ....!**

❁ ❁ ❁

**மாதகல். ந.சந்தியா.**
உங்களுக்கே உங்களிடம் பிடிக்காத விஷயம் எது?
☺ **அதிகப் பிரசங்கித்தனம்.**

### இந்தவார ஜோக்

**வேலைக்குப் புறப்பட்டுக்கொண்டிருந்த கணவனுக்காக டிரவுசரில் 'பட்டன்' தைத்துக்கொண்டிருந்த மனைவி கேட்டாள்.**

**"நாங்கள் பிறந்திருக்காவிட்டால் 'பட்டன்' தைக்க நீங்கள் என்ன செய்திருப்பீர்கள்?"**

**கணவன் சாவகாசமாகப் பதிலளித்தான்.**

**"நீங்கள் இல்லாவிட்டால் நாங்கள் டிரவுசரே போடவேண்டிய அவசியமே இருந்திருக்காது. போட்டாலும் 'பட்டன்' தைக்கவேண்டிய தேவையே வந்திருக்காதே!"**

# கடையில் சாப்பிடும் கணவரை என்ன செய்வது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது ஈழத்துக் கவிதைப் படைப்புலகு வீழ்ச்சியடைந்து போயிருப்பது ஏன்?

**'ஈழநாடு' பத்திரிகை இப்போது வன்னியிலிருந்து மாத மலராக வெளிவருகிறது. அதன் 42 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி நடத்தப்பட்ட கவிதைப் போட்டி தொடர்பாக போட்டியின் நடுவர் சி.கருணாகரன் சமர்ப்பித்த அறிக்கைக் கடிதம் இது. ஈழநாடு மாத மலரின் ஏப்ரல் இதழில் இது பிரசுரமாகியிருந்தது. நடுவரின் பல கருத்துகள் இங்கு எமது நிலையையும் ஒத்துப்போவது போல படுவதால் அக்கருத்துகள் எமது வாசகர்கள் முன் வைக்கப்படுகின்றன.**

(ஆ-ர்)

இந்த இலக்கியப் போட்டிக்கு வந்து சேர்ந்த கவிதைகள் மொத்தம 54.

கடந்த வருடங்களில் ஈழநாடு நடத்திய போட்டிகளில் கலந்து கொண்ட படைப்பாளிகளின் எண்ணிக்கையை விட, இது மிகக் குறைவானது. தவிர, அந்தப் போட்டிக்கு வந்து சேர்ந்த படைப்புக்களைவிட இந்தத்தடவை போட்டிக்கு வந்த கவிதைகள் மிக மிகப் பரிதாபத்துக்குரியனவாகவே இருக்கின்றன. இவற்றுள் எவையும் கவிதைகளே அல்ல. கவிதைக்குரிய அடிப்படைப் பண்புகள் பற்றிய அறிதலோ, அறிமுகமோ, கவிஞனுக்கு இருக்கவேண்டிய பொறுப்புணர்வோ, தேடலோ இருப்பதாக இவற்றைப் படிக்கும்போது உணரமுடியவில்லை.

ஈழத்துக் கவிதை மரபு, நிகழ்ந்து கொண்டிருக்கும் இந்த 50 வருடங்களில் மிகச் செழுமையும் வளமும் பெற்றது. மகாகவி, நீலாவணன், முருகையன், சண்முகம், சிவலிங்கம், தா. இராமலிங்கம், நு:.மான், சு.வி.,மு.பொ., அ.யேசுராசா, புதுவை.இரத்தினதுரை, வ.ஐ.ச.ஜெயபாலன், சேரன், இளவாலை விஜேந்திரன், ஊர்வசி, மைதிலி, பா.அகிலன், சோலைக்கிளி, செ.பொ.சிவனேசு, நாமகள், மைத்திரேயி, மு.புஸ்பராஜன் என்று பல ஆற்றல் மிக்க படைப்பாளிகள் நமது கவிதையை வளப்படுத்தியிருக்கிறார்கள்.

ஈழத்துக் கவிதைகள்,தமிழின் நவீன கவிதைகளில் இன்னும் முதன்மை இடத்தையும் தனிக் கவனத்தையும் பெற்று வருகின்றன. அவை வடிவ ரீதியாகவும். பொருள் ரீதியாகவும் புதுமையும் நிறைவும் கொண்டவை; நமது வாழ்வின் முகத்தையும் அதன் அகத்தையும் புலப்படுத்தி வெற்றி கண்டவை: எங்களுடைய அரசியல் பிரச்சினையை கவிதைகளினூடு பிரதிபலித்தவை. தமிழ் மக்களின் ஆயுதம் தாங்கிய போராட்டத்துக்கு ஊக்கவிசையாக உலகெங்கும் பேசப்படும் அளவுக்கு வலுமிக்கவை.

இத்தகைய சுருக்கப் பின்னணியைக் கொண்ட நம் கவிதை மரபு இன்று சோர்வடைந்து தேங்கிவருவது துயரம் தருகிறது. 80களில் கவிதை கொண்டிருந்த தீவிரம் 90களில் குறையத் தொடங்கி இன்று அதன் உயிர்ப்பு வற்றிய நிலைக்கு வந்துவிட்டது. கவிதையின் மீதும், மொழியின்மீதும் நமது படைப்புலம் மீதும் அக்கறை கொண்ட எவரையும் கடுந்துயரத்திலாழ்த்தும் நிலை இது.

புதிய படைப்பாளிகளைச் சரியாக வழி நடத்தத் தவறிய நிலை, இலக்கியத்தை விரிவும் ஆழமும் தரமும் சிறப்பும் மிக்கதாக அறிமுகப்படுத்தாமை, படைப்புப் பற்றி விமர்சனங்களும் படைப்பு நிலையின் அடிப்படைகள் பற்றிய விழிப்புணர்வும் இல்லாத சூழல், நேர்மையும் தயக்கமுமில்லாத கருத்துப் பரிமாற்றங்கள் - விவாதங்கள் நடைபெறாமை என்று பல காரணங்களை நாம் இந்த நிலையில் யோசிக்கும் போது இனங்காணக் கூடியதாக இருக்கிறது.

ஏன் இந்த நிலை எமது சூழலில் ஏற்பட்டுள்ளது என்று சிந்திப்பது இலக்கியம் சார்ந்த ஒவ்வொருவருக்கும் இன்று அவசியமாகவுள்ளது. படைப்புலகையும் படைப்பாளிகளையும் செழுமைப்படுத்தி வளப்படுத்துவதில் ஊடகங்களின் பங்கு மிக முக்கியமானது. இவற்றுடன் இணைந்து இலக்கிய அமைப்புக்களும் இதைச் செய்திருக்க வேண்டும். இவை எப்படி எந்தளவுக்கு படைப்பின் சிறப்புக்கும் தரத்துக்கும் பாடுபட்டு இருக்கின்றன? திட்டமிட்டிருக்கின்றன?

இன்று, ஈழத்துக் கவிதை என்னும் போது சுதந்திரமாக, சுயாதீனமாக, சிறப்புடையதாக, வலுக்கொண்டதாக அமைய வேண்டிய கவிதைகள் இங்கே - வன்னியில் - போராடும் களப் பரப்பிலிருந்துதான் வரவேண்டும். ஆனால்நமது கவிதைகளைவிட தென்தமிழீழத்தின கவிதைகளும கொழும்பை மையமாகக் கொண்டவர்களின் கவிதைகளும் முன்னோக்கி நகர்வதை நாம் அவதானிக்கமுடிகிறது. அக்கவிதைகளுக்குள்ள உள்நோக்கங்கள், போக்குகள் பற்றிய அவதானிப்புக்கள், விமர்சனங்கள், கண்டனங்கள் இருக்கின்ற போதும் அவை முன்னகர்கின்றன என்பது உண்மையே.

வீச்சும், ஆற்றலும், உண்மையும் உள்ளவனாக மேற்கிளம்ப வேண்டிய நமது கவிதைப் படைப்புலகு வீழ்ச்சியடைந்து போயிருக்கிறது. உலகத்தின் செவிகளில், அதன் விழிகளில் நமது கவிதையை நாம் முன்வைக்க வேண்டிய அவசியம் நமக்கிருக்கிறது. இந்த அவசியம் இருந்தும் கூட நாம் இதில் பின்தங்குவது எவ்வளவு இழப்புக்குரியதாகிறது? நமது வளமான கவிதை மரபொன்றை நாம் முன்னே வைத்துக் கொண்டு அதன் தொடர்ச்சியாக இயங்க முடியாமல் திணறுவது! எத்தகைய கொடுமையானது? இவை பற்றி நாம் இந்தச் சந்தர்ப்பத்தில் ஆழமாகவும், அவசியமாகவும் சிந்திக்க வேண்டும்.

தேர்வுக்கு வந்த படைப்புக்களின் பரிசீலனையில் இப்படி ஒரு நீண்ட அறிக்கையை இத்தகைய பிரச்சினைகளை உள்ளடக்கி எழுதலாமா என்றொரு எண்ணம் மனதில் கிளம்பினாலும், இதை எழுதியே தீரவேண்டும் என்ற நியாயமான எண்ணம் வற்புறுத்துகின்றது.

இன்றைய புதியபடைப்பாளி தனக்கு முன்னே விரிந்து கிடக்கும் மூத்த தலைமுறைக் கவிஞர்களின் சாதனைகள் பற்றிச் சரியாக அறிந்திருக்கவில்லை. அந்தக் கவிஞர்களின் உழைப்புப் பற்றிய கனவுகளோ அவதானிப்போ இவனுக்கில்லை. அவற்றை அறிய வேண்டும் என்ற துடிப்பும், தாகமும் இல்லை. தன்னைப்பற்றிய அதீதக் கனவு, மிதப்புக்களும் நெஞ்சு நிமிர்த்தல்களும், சோம்பேறித்தனமும் இளைய படைப்பாளியைச் சூழ்ந்து விட்டன. உடனடிப்பிரபலத்தின் யோசனைகளில் அவன் ஆழ்ந்து போகின்றான்; தன்னை மையப்படுத்திய சிந்தனைகளில் உழல்கின்றான்; ஒரு பெரும் பள்ளத்தாக்கை - நோக்கித் தான் பயணிக்கிறேன் என்ற அவதானிப்போ உணர்வோ இல்லாமல் நடக்கிறான். இப்படிப் பலவற்றால் தன்னைத்தானே சிதைத்துக் கொள்ளும் படைப்புக்களின் தரமே இப்படியான கதியாக இருக்கும் போது, பிற சந்தர்ப்பங்களில் எழுதப்படும் அநேக படைப்புக்கள் பற்றிப் பேசத்தேவையில்லை.

இந்தப் போட்டியில் ஏற்கனவே இலக்கிய ரீதியாகச் செயற்படுவோரும், இத்துறையில் அடையாளம் காட்டியவர்களும் கலந்த கொண்டுள்ளார்கள். புதியவர்களும் கலந்துள்ளார்கள். புதியவர்களைவிட்டு ஏற்கனவே இலக்கியப் பரிச்சியம் உடையவர்களின் படைப்பைப் பார்க்கும் போது சகிக்க முடியாமலும் வேதனையாகவும் இருக்கிறது. இது ஏன் நிகழ்ந்திருக்கிறது என்ற கேள்வியே திரும்பத் திரும்பத் திரையிடுகிறது.

இதுபற்றி நிறைய எழுதலாம். ஆனால் இங்கு அதுபொருத்தமற்றது.

இங்கே, இந்தப் போட்டிக்கான தேர்வில் பரிசுக்குரியதாக எந்தக் கவிதையுமே - எதுவுமே இல்லை. 'பாராட்டுப் பெறுகின்றன' என்று சம்பிரதாயரீதியாக போட்டியில் ஈடுபட்டவற்றில் மிகச் சிரமப்பட்டுத் தேர்ந்தவற்றை கீழே பட்டியலிட்டுள்ளேன். இந்தச் சம்பிரதாயம் கூட அவசியமற்றது என்றே தோன்றுகின்றது.

பரிசு பெறும் கவிதை - படைப்பு - என்று நாம் குறிப்பிட்டு, பரிசையும் கொடுத்து - ஒரு படைப்புக் கவிதையை - வெளியிடும்போது அது தரமானதாக இருக்க வேண்டும். இல்லாதபோது பிரசுரமாகும் படைப்பை

## வன்னியில் இருந்து விசனக் குரல்

நமது இளைய படைப்பாளிகளை, கவிஞர்களை, நாம் வழிப்படுத்தமுயல வேண்டும். இவையெல்லாம் புதிய படைப்பாளிகள் மீது நான் சுமத்தும் குற்றச்சாட்டுக்களல்ல. அல்லது அவர்களை அவமானப்படுத்தும் நோக்கிலான காரணங்களும் அல்ல. நமது படைப்புலகைச் செழுமைப்படுத்த ஆவலுறும் தவிப்பால் எழுதுகிறேன். என் சக படைப்பாளியை மேம்படுத்த வேண்டும். அவர்களுடைய முன்னகர்வில் - உயர்ச்சியில் - என் மகிழ்வு பூக்கும் என்ற ஆர்வத்துடிப்பில் எழுதுகின்றேன்.

வாழ்வும் மனமும் நெருக்கடியிலும் சவால்களிலும் சூழும் போது வீச்சுக் கொண்ட படைப்புக்கள் வெளிப்படும். இன்றைய நமது காலம் இத்தகைய நிலையையும், இந்தச்சவால்களையும், நெருக்கடிகளையும் எதிர்கொண்டு போராடுதலையும் கொண்டது. எனவே இரட்டிப்பாக எமது படைப்பும் படைப்புலகும் வளம் பெற்றிருக்க வேண்டுமல்லவா?

நல்ல வளர்ச்சியுடைய ஒருசூழலை இலக்கியத்தில் உருவாக்க வேண்டிய அவசியமும் பொறுப்பும் இன்று சகலருக்கும் உள்ளது. போட்டிக்கு வந்த வாசிக்கும் புதிய படைப்பாளி அல்லது வாசகன் 'தரமான படைப்பு இது தான்' என்று ஒரு தரமற்ற படைப்பை தவறாக ஏற்றுக் கொண்டு விடுகிறான். இத்தகைய தவறை நாமே - பரிசளித்துப் பிரசுரிப்போர் - செய்தவர்களாகி விடுவோம்.

போட்டி வைப்பது என்பதைவிட, போட்டி வைப்பதற்கான சூழலை நாம் உருவாக்க வேண்டும். அத்தகைய சூழலை நாம் உருவாக்காது போட்டி பற்றிய அறிவிப்புகளிலும், பிரகடனங்களிலும் நாம் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றோம், இது பொறுப்பற்றது; வீணானது. இதுவே உண்மை.

நாள்தோறும் தரமான படைப்புக்களுடன் உறவாடும் ஒரு நிலையை நாம் உருவாக்க வேண்டும். முடிந்த வரையில் கவனமெடுத்து, முயன்று நமது வெளியீடுகளில் தரமான படைப்புக்களை வெளியிட்டும் அறிமுகப்படுத்தினாலுமே நமது படைப்புச் சூழல் ஓரளவுக்காவது வளம் பெறும்.

படைப்பாளிகளையும், படைப்புலகையும் வளப்படுத்துவதே நமக்குள்ள சவாலும் பொறுப்பும். படைப்பாளியைத் திருப்திப்படுத்துவதல்ல. அது அவனைப் பலவீனப்படுத்தி, படைப்புலகை வீழ்ச்சியடையச்செய்துவிடும். இத்தகைய நிலைதான் தமிழீழப் படைப்புலகுக்கும், படைப்பாளிக்கும் இன்று நேர்ந்துள்ளது.

ஒரு வகையில் நோக்கினால், அதுவும் இந்தப் போட்டிக் கவிதைகளை முன்வைத்துப் பார்த்தால் நமது மூத்த படைப்பாளிகளையும், நம் வளமான படைப்புலகையும் அவமானப்படுத்தும் வகையாகவே இந்த 'எழுத்துக்கள்' அமைந்திருக்கின்றன. இதை எப்படி ஏற்றுக்கொள்வது?

தமிழில் - நவீன தமிழில் - கவிதையின் சாதனைகள் பெருமளவுக்கு நிகழ்ந்துவிட்ட நிலையில் பேதைத்தனமாகவும், கோமாளித்தனமாகவும் இன்றும் அறியாமையுடனும் எழுதப்படும் கவிதைகள் என்ற புனைவுகள் உண்மையில் அந்தச் சாதனைகளை அவமானப்படுத்துவதன்றி வேறென்ன?

ஈழத்தின் படைப்புலகச் செழுமைக்குப் பல ஊடகங்களும், தனிநபர்களும், அமைப்புகளும் உழைப்பை வழங்கியுள்ளன. இந்த உழைப்பின் பெறுமதியையும் மதிப்பையும் நாம் புறக்கணிப்பது நாகரிகமல்ல.

தமிழ்ப்படைப்புலகம் இன்று விரிந்து, பரந்து பல புதுமைகளைக் கொண்டு வளர்ச்சியடைந்துள்ளது. தினமும் புதிய படைப்புகள் வியப்பூட்டிக் கொண்டே வந்துகொண்டிருக்கின்றன. நாம் ஆரம்பகால நிலைமையில்கூட இல்லாமலாகிக் கொண்டிருக்கிறோமோ என்ற அச்சத்தில் துவள வேண்டியிருக்கிறது.

குறிப்பாக 95இன் பிறகு சிறுகதை, கவிதை இரண்டும் முற்றாகத தளர்ந்து வீரியமற்றே கிடக்கின்றன.

இவற்றை மீள்நிலைப்படுத்த எல்லோருமாக முயல்வோம். முயலவேண்டும். இது தவிர்க்க முடியாத அவசியமும் கூட.

'மரணத்துள் வாழவோம்' கவிதைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது அந்தத் தரத்துக்குக் கூட பின்னர் எழுதப்படும் பொதுவான பெரும்பாலான கவிதைகள் இல்லை. இதே வேளை 'மரணத்துள் வாழ்வோம்' ஒரு வெற்றிகரமான கவிதைகளைக் கொண்ட தொகுதி அல்ல. ஆனால் அந்தளவுக்கோ, அதை விடவோ நல்ல கவிதைகளின் வரவு இல்லாதபடியால் அது நிரந்தரமாக சிறப்பானது என்ற இடத்தைத் தக்கவைத்துக் கொண்டிருக்கிறது.

இந்தத் தேர்வில் உள்ள கவிதைகள் போர்க்கால வாழ்வை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டாலும் 'மரணத்துள் வாழ்வோம்' கவிதைகளுக்கு வெகு கீழேயே வீழ்ந்து கிடக்கின்றன. இந்தப் பரிதாபத்துக்குரிய தீர்மீகப் பொறுப்பை மனப்பொறுமையுடன் மனம் விரித்து ஏற்றுக் கொள்ளத் தயாரா?

*

# 20ஆம் நூற்றாண்டில் உலக இலக்கியம்

## சில குறிப்புகள்



லூகி பிராண்டெல்லோ

6 விளதீமிர் நபொக்கோவ் பற்றிப் பேசும் போது உடனேநினைவுக்கு வருகின்ற இன்னொருவர் ஜோசப் கொன்ராட். உக்ரேனில் பிறந்த கொன்ராட் போலிஷ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்டவர். எனினும், பின்னர் ஆங்கிலத்தில் நிறைய எழுதியதுடன் முன்னணி நாவலாசிரியராகவும் திகழ்ந்தார். நபொக்கொவ் அமெரிக்காவில் குடியேறினாரென்றால், கொன்ராட் பிரிட்டஷ் பிரஜையானார். கொன்ராடின் பெரும்பாலான படைப்புக்கள் இந்த நூற்றாண்டில் வெளிவந்தவை. அவருடைய கடலோடி வாழ்வின் அனுபவங்கள் அவற்றில் பிரதிபலித்தன.

முதலாம் உலகப்போர்க் காலத்தில் கொன்ராட் எழுதிய 'நிழற்கோடு' அவரது உன்னதப் படைப்பாகவும், போரென்றால் என்ன என்பதைக் காட்டுவதாகவும் விளங்கிற்று. கப்பல் தலைவனான ஓர் இளைஞன் எதிர்கொள்ளும் புற - அகப் போராட்டங்களையும் அவற்றினூடு அவன் எவ்வாறு இளமைக்கும் முதிர்ச்சிக்குமிடையிலான நிழற்கோட்டை தாண்டுகிறான என்பதையும் இக்கதை கூறுகிறது. ஒரு விதத்தில் குறியீட்டு நாவலாகவும் கொள்ளப்படத்தக்கது. 'நிழற்கோடு' கப்பலில் உருவாகும் நெருக்கடியை எதிர்கொள்ளக் கூட்டாகவும் தனியாகவும் ஒவ்வொருவருக்கும் தேவைப்படுகிற தன்மைகள்தாம், ஒட்டுமொத்தமாக மனிதவாழ்விலும் - அக்கிரமங்களையும் அழிவுகளையும் எதிர்கொண்டு முகங்கொடுக்க - அவசியமானவை.

1914 - 1918இல் இடம்பெற்ற முதலாவது உலகப்பெரும் போரினைத் தொடர்ந்து - அந்த அனுபவங்களினூடாக - போரின் கொடுமையை விளக்கும் வேறு பல குறிப்பிடத்தக்க புனைகதை இலக்கியங்களும் பிறந்தன. அவற்றுள் முதலில் குறிப்பிடப்பட வேண்டியது, எறிக் மாறியா றிமார்க் எழுதிய, 'மேற்கு முனையில் எல்லாம் அமைதியாக இருக்கிறது' என்ற ஜேர்மன் நாவலாகும். கொன்ராடின் 'நிழற்கோடு' போலவே இதுவும் நூற்றைம்பது பக்கங்களுள் அடங்குகிற சிறிய படைப்பு. எனினும், முதலாம் உலகப் போர்பற்றி எழுந்த உலகின் மிகச் சிறந்த படைப்பாக ஒப்புக்கொள்ளப்பட்டது.

றிமார்க்கை ஓர் உன்னதப் படைப்பாளியாக நிறுவியது மட்டுமன்றி, இரண்டு உலகப் பெரும் போர்களிலுமே அசுரகணங்களாக உலகால் கணிக்கப்பட்ட ஜேர்மன் படையினரில் ஒருவனை மனிதனாகக் காட்டியதிலும் 'மேற்குமுனை' வெற்றி பெற்றது. நாவலின் நாயகனான போல் என்கிற பத்தொன்பது வயதே நிரம்பிய இளைஞனின் பார்வையில் நகர்கிறது கதை. ஜேர்மனியரின் நோக்கில் கூறப்பட்டாலும், உலகளாவிய மனிதப்பண்பு கொண்ட காரணத்தால் இந்நாவல் சாகாவரம் பெற்று மிளிர்கிறது.

'இந்நூல், ஒப்புதல் வாக்குமூலமோ, குற்றச்சாட்டோ அல்ல. சாகசம் என்பதும் எள்ளளவும் ஏற்றதன்று: ஏனெனில் சாவுடன் முகத்தோடு முகம் நோக்கி நிற்போர்க்கு, சாவென்பது சாகசமன்று. போரின் எறிகணைகளுக்குத் தப்ப முடிந்திருந்தாலும் கூட, போரால் அழிபட நேர்ந்த ஒரு தலைமுறை பற்றிக் கூறமட்டுமே இது முயல்கிறது' - என்று நாவலின் முன்னே குறிப்பிடப்படுவது மனதைத் தொடுவது மட்டுமன்றி, போருக்கெதிரான பிரகடனமாகவும் ஒலிக்கிறது.

இப்படைப்பின் போர் எதிர்ப்பு நிலைப்பாட்டின் காரணமாக இது எரிக்கப்படவேண்டுமென, பின்னர், சர்வாதிகாரி ஹிட்லர் கட்டளையிட்டான். இதே காரணத்திற்காக, ஸ்தாலினின் ஆட்சியின் கீழிருந்த சோவியத் நாட்டிலும் இந்நூல் தடைசெய்யப்பட்டதாக அறிய முடிகிறது. 'மேற்குமுனை' பின்னர் திரைப்படமாகவும் வந்தது. இந் நூற்றாண்டின் இரண்டாம் தசாப்தத்தில் எழுதப்பட்ட இந்நாவலின் மூலக் கையெழுத்துப்பிரதி, எழுபத்தைந்து ஆண்டுகள் கழித்து, ஏறத்தாழ நாலே கால லட்சம் டொலருக்கு விற்பனையானது.

பிரெஞ்சுப்புரட்சியுடன் பிரான்ஸை விட்டு வெளியேறி, ஜேர்மனியில் குடியேறிய குடும்பமொன்றின் வழித்தோன்றல் றிமார்க். அவர் முற்று முழுதான ஜேர்மனியர் என்றாலும், ஜேர்மன் ஆட்சியின் நாஸிக் கொள்கைகளின் கொடுமையினால் யூதமக்கள் பட்ட சொல்லொணாத் துயரங்களையும் தமது படைப்புகளில் அவர் வெளிக் கொணர்ந்திருக்கிறார். ஓர் உண்மையான இலக்கியவாதி என்பவன், மெய்யான மனிதாயதவாதி என்பதை அவர் நிருபித்தார்.

**சாந்தன்**

இதற்கு ஒரு நல்ல உதாரணமாக அமைவது, றிமார்க்கின் 'அகதி' என்ற நாவல். இற்றைக்கு முப்பது ஆண்டுகளுக்கு முன்னே இந்த அற்புதப் படைப்பு தமிழில் பெயர்க்கப்பட்டு வெளியாகியது என்பதும் ஓர் அற்புதமான செய்திதான். நாடும் வீடுமின்றி நாஸிகளால் துரத்தப்பட்டு வேட்டையாடப்பட்ட யூதர்கள் நாடு நாடாக அலையும் அவலத்தைக் கூறும் கதை, 'அகதி'. புலம் பெயர்ந்து, போக்கிடந் தேடி மேற்குலகெங்கும் அலையும் இன்றைய எம்மவரின் நிலையிலும் எவ்வளவோ மோசமான நிலைகளை இந்த நாவல் எமக்குக் காட்டுகிறது.


போரின் பயங்கரத்தை விளக்கும், இலக்கியத் தரம் மிக்க சிறுகதைகளுள் ஒன்று, நோபல்பரிசு பெற்ற இத்தாலிய நாடகாசிரியரும், எழுத்தாளருமான லூஜி பிராண்டெல்லோ எழுதிய 'போர்'. இந்த நூற்றாண்டின் இத்தாலிய மொழி எழுத்தாளர்களுள் மிக முக்கிய இடம் பெறுபவரான பிராண்டெல்லோவின் இச்சிறுகதை மிகச்சிறியது. நாடகப்பாங்கான வசனங்களுடன் நகரும் கதை தவிர்க்க முடியாத துன்பியல் யதார்த்தங்களைச் சகித்துச் சமாளிக்கும் சனங்களைப் பற்றியது. பிள்ளைகளைப் போருக்கனுப்பிவிட்டுப் பதகளிக்கும் பெற்றோரின் வேதனையைக் கூறுவது. பிராண்டெல்லோவின் மகனும் அப்பெரும் போரில் பங்குகொண்டிருந்ததால் அந்த வேதனைகளை அவரால் உயிர்த்துடிப்புடன் சித்திரிக்க முடிந்தது.

மூன்று பக்கங்களுள் முடிகிற இக்கதை, உலகளாவிய உண்மைகளைக் கூறியது. கதையில் வருகிற முக்கிய பாத்திரமான பருத்த மனிதர் கேட்கிறார்: "நாடும், சாப்பாடு போலை; அதில்லாமல் சீவிக்க முடியாது. அது வேணுமெண்டா: அதை ஆராவது காக்கத்தானே வேணும்?" உள்ளத்தை நெருடும், உச்சக்கலை நேர்த்தி கொண்ட இச்சிறுகதை, தமிழில் பெயர்க்கப்பட்டு, பத்தாண்டுகளுக்கு முன், யாழ். பத்திரிகையொன்றிலும் வெளியாயிற்று.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூநகரி: புதிய போர்முனையாகும்?




## 'சுழல் காற்று': பெரும் படை நடவடிக்கைக்கான ஒத்திகையா?

வன்னியில் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள மேற்கு நிலப்பரப்பினுள் முன்னேறுவதற்காக படையினர் ஆரம்பித்த 'போர்க் கோஷம்' நடவடிக்கை நான்காவது கட்டமாகத் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகிறது.

வன்னிப் படைகளின் தளபதியாக மேஜர் ஜெனரல் லயனல் பலகல்ல நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவர் தலைமையில் இந்தப் படை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கண்டி வீதிக்கு மேற்கே உள்ள இரணை இலுப்பைக்குளம் பகுதியை இந்நடவடிக்கை மூலம் படையினர் முதலில் கைப்பற்றினர். (மார்ச்4) தொடர்ந்து 'போர்க் கோஷம்-II' மூலம்(மார்ச்19) மடுதேவாலயத்துக்கும் அதனை அண்டிய பகுதிகளுக்கும் படையினர் நகர்ந்தனர். இந்நடவடிக்கையின் மூன்றாவது கட்டம் கடந்த மே 8 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டது.

'போர்க் கோஷம்' நடவடிக்கையின் இந்த மூன்று கட்டங்களின் போதும் புலிகள் பெரும் எதிர்த்தாக்குதல்களில் ஈடுபடவில்லை. மூன்றாவது கட்டத்தின் போது கடந்த மே 14 ஆம் திகதி சிராட்டிக்குளம் பகுதியில் வைத்து முன்னேறிய படையினர் மீது புலிகள் எதிர்ச்சமர் ஒன்றை நடத்தினர். இதைவிட குறிப்பிடக்கூடிய வேறு சண்டைகளில் புலிகள் இறங்கவில்லை.

இந்நிலையில் இந்நடவடிக்கையின் நான்காவது கட்டம் தென்மாகாணசபைத் தேர்தலுக்கு முன்னர் இடம்பெறலாம் என எதிர்பார்க்கப் பட்டது.

ஆனால் வாக்களிப்பு தினத்தன்றே - கடந்த 10 ஆம் திகதி - காலை இந்நடவடிக்கையை படையினர் ஆரம்பித்தனர். அன்று காலை சுப நேரமான எழு மணி 46 நிமிடத்துக்கு படையினர் தமது நிலைகளில் இருந்து நகரத் தொடங்கினர்.

53ஆவது 55ஆவது படையணிகளும் இராணுவத்தின் விசேட படைப்பிரிவின் (Special Forces) முதலாவது அணியும் மூன்று முனைகளில் முன்னேறின. பாலம்பிட்டியில் இருந்து 53ஆவது படையணி நகரத் தொடங்கியது. மடு - பரப்புக்கடந்தான் வீதி வழியாக 55ஆவது படையணி முன்னேறியது.

இந்த படை நடவடிக்கையின் முதலாவது கட்டம் அன்றைய தினமே (ஜூன் 10) பூர்த்தி செய்யப்பட்டது. இரண்டாவது கட்டம் மறுநாள் (ஜூன் 11) வெள்ளிக்கிழமை இரவு ஆரம்பிக்கப் பட்டது. அன்றிரவு துருப்புக்கள் மேற்கே மேலும் நகர்ந்து இலுப்பைக்கடவைப் பகுதிக்குச் சமீபமான தூரம்வரை சென்றடைந்ததாகத் தெரிய வருகிறது. 'போர்க்கோஷம்' நடவடிக்கையில் படையினர் இரவுநேர நகர்வு முயற்சியில் ஈடுபட்டது இதுவே முதல் முறை என்று தெரிவிக் கப்படுகிறது.

சனிக்கிழமை (ஜூன் 12) அதிகாலை 1.20 மணிக்கு இப்படைநடவடிக்கை பூர்த்தியானதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

சுமார் 20 ஆயிரம் குடியிருப்புக்களை உள்ளடக்கிய 358 சதுரகிலோமீற்றர் பிரதேசம் இந்நடவடிக்கை மூலம் விடுவிக்கப்பட்டிருப்பதாக பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் விடுத்த அறிக்கை தெரிவித்தது. விடுதலைப் புலிகள் பலமாக நிலைகொண்டுள்ளதாகக் கூறப்படும் விடத்தல்தீவு பகுதிவரை படையினர் முன்னேறியதாக அந்த அறிக்கை கூறியது. ஆனால் வன்னியில் இருந்து கிடைக்கும் தகவல்களின்படி விடத்தல்தீவு பகுதிக்கு இன்னமும் இராணுவம் முழுமையாகச் சென்றடையவில்லை எனத் தெரியவருகிறது. ஆனால் இந்த நடவடிக்கை மூலம் படையினர் முதல் முறையாக மன்னார் - பூநகரி வீதியை தொட்டுள்ளனர். மன்னார் மாந்தைச் சந்தியில் இருந்து பூநகரி சங்குப்பிட்டி வரை நீண்ட இந்த வீதியில் விடத்தல்தீவுக்கு சமீபமாக படையினர் சென்று நிலைகொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது. மன்னார் - பூநகரி வீதியில் விடத்தல்தீவு சந்தியில் இருந்து மேற்கே சுமார் மூன்று கிலோமீற்றர் கரையை நோக்கிச் சென்றால் விடத்தல்தீவை அடையலாம். கடற்கரையோர மீன்பிடிக் கிராமம் அது. விடத்தல்தீவில் கடற்புலிகளின் பிரதான தளம் இயங்குவதாக படையினர் சந்தேகிக்கின்றனர். அண்மையில் தள்ளாடி இராணுவத் தளம் மீது புலிகள் பல்குழல் றொக்கெற் லோஞ்சர்கள் மூலம் தாக்குதல் நடத்தி இருந்தனர். விடத்தல்தீவு பகுதியில் இருந்தே இத்தாக்குதலை புலிகள் நடத்தியதாகப் படைத்தரப்பில் கூறப்பட்டது.

விடத்தல்தீவை கைப்பற்றுவதன் மூலம் மன்னார்த்தீவின் பாதுகாப்பை உறுதி செய்ய முடியும். ('மல்லாவியா விடத்தல்தீவா படையின் அடுத்த இலக்கு எது?' என்ற தலைப்பில் கடந்த பெப்ரவரி 15 ஆம் திகதி வெளியான வாரவிமர்சனத்தில் இது குறித்து பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது.)

தற்போதைய படைநடவடிக்கையின் இலக்கு விடத்தல்தீவாக இருப்பினும் அப்பகுதியை முற்றாகக் கைப்பற்ற மேலும் சில கிலோமீற்றர் தூரம் படையினர் முன்னேற வேண்டியிருக்கும்.

'போர்க்கோஷம்' படையினர் முதல்முறையாக மன்னார் - பூநகரி வீதியை நெருங்கி இருப்பதால் புலிகளின் பெரும் தாக்குதலை எதிர்கொள்ளும் ஆபத்து இருப்பதாக இராணுவ ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.


இதனை எதிர்பார்த்து படையினரும் தமது நிலைகளைப் பலப்படுத்தி வருகின்றனர். படையினர் நிலை கொண்டிருக்கும் பகுதிகள் மீது புலிகள் பலத்த ஆட்டிலறி தாக்குதல்களை நடத்தலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

'போர்க்கோஷம்' படையினர் - மன்னார் பூநகரி வீதியைத் தாண்டி மேற்கே கரையோரக் கிராமங்களை நோக்கியோ அல்லது வடக்கே பூநகரி நோக்கியோ நகர்வதை தடுக்க புலிகள் தீவிரமாக முயலலாம். எனவே இப்பகுதிகளில் கடும் சண்டை மூளும் ஆபத்து இருப்பதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

கண்டிவீதி வழியாகக் குடாநாட்டுக்குத் தரைப் பாதையைத் திறக்கும் நோக்கில் நடத்தப்பட்ட 'வெற்றி உறுதி' நடவடிக்கை கைவிடப்பட்ட பின்னர் கண்டி வீதிக்கு மேற்கே உள்ள நிலப்பரப்பில் படையினர் வெற்றிகரமாக முன்னேறி வருவதால் மன்னார் - பூநகரி பிரதான வீதியின் கேந்திர முக்கியத்துவம் அதிகரித்து வருகிறது. கிளிநொச்சி, மன்னார் மாவட்டங்களை குடாநாட்டுடன் இணைக்கும் மற்றொரு தரைப்பாதை இது. சங்குப்பிட்டிக்கும் கேரதீவுக்கும் இடையே இப்பாதையை குடாக்கடல் பிரிக்கின்ற போதிலும் படகுகள் மற்றும் இழுவைப் படகுகள் மூலம் அந்த ஒடுங்கிய கடற்பகுதியை இலகுவாகக் கடந்து விடலாம்.

வன்னியில் 'போர்கோஷம் - 4' நடவடிக்கையைப் படையினர் ஆரம்பித்த சமயம் - கடந்த வியாழனன்று காலை - குடாநாட்டில் இருந்து பூநகரிப் பகுதிமீது அதிரடியான நடவடிக்கை ஒன்றை யாழ். படைத்தரப்பு மேற்கொண்டது.

'சுழல் காற்று' (ஒப்பரேஷன் வேர்ள்விண்ட்: OPERATION WHIRL WIND) எனப் பெயரிடப்பட்ட அந்நடவடிக்கை நீண்ட காலத்தின் பின் குடாநாட்டு மக்களிடையே முந்திய போர்ச் சூழ்நிலையை உணர வைத்தது.




## போர்க் கோஷம் IV

பலாலியில் உள்ள படைத் தலைமையகத்தின் கட்டளைப்படி நடத்தப்பட்ட இந்நடவடிக்கை அண்மைக்காலத்தில் ஸ்ரீலங்கா படையினர் மேற்கொண்ட புதிய பாணியிலான தாக்குதலாக அமைந்தது.

'போர்க்கோஷம் - 4' படைநகர்வு இடம்பெற்ற பகுதியில் இருந்து புலிகளின் கவனத்தை திசைதிருப்பி அவர்களை அணிபிரியச் செய்யும் நோக்குடனேயே 'சுழல்காற்று' நடவடிக்கை திட்டமிடப்பட்டிருப்பதாக தெற்கு இராணுவ விமர்சகர்கள் கூறியுள்ளனர்.

வன்னிப் பகுதிக்குள் புதிய போர்முனை ஒன்றைத் திறப்பது போன்று பாசாங்கு காட்டியதன் மூலம் புலிகளுக்கு குழப்பத்தை ஏற்படுத்தி அவர்களின் பெரும் தாக்குதல் திட்டத்தை முறியடிக்க படைத்தரப்பு முயன்றுள்ளதாக அவர்கள் கூறுகின்றனர்.

'போர்க் கோஷம்-IV' நடவடிக்கையும், 'சுழல் காற்று' நடவடிக்கையும் சமகாலத்தில் மேற்கொள்ளப்பட்டிருப்பதால் இது புலிகளின் கவனத்தை திசைதிருப்பும் முயற்சியே எனக் கருதப்பட முடியும். ஆனால் புலிகளின் கவனத்தை திசைதிருப்புவது மட்டும் இந்நடவடிக்கையின் நோக்கமாக இருந்திருக்க முடியாது.

படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள குடாநாட்டுக்கு மிக நெருக்கமாக - குடாக்கடலுக்கு அப்பால் - அமைந்துள்ள நிலப்பகுதி பூநகரி. இங்கிருந்துதான் புலிகள் குடாக்கடல் வழியாக குடாநாட்டுக்குள் ஊடுருவுகின்றனர் என்பதை விட இப்பகுதியில் புலிகள் தங்கள் பலமான நிலைகளை அமைத்து வருவதாகவும் படையினருக்கு தகவல்கள் கிடைத்திருந்தன. (இது குறித்து இப்பத்தியில் முன்னரும் குறிப்பிடப்பட்டிருந்தது.)

தென்மராட்சிப் பகுதியில் உள்ள படை முகாம்களை இலக்கு வைத்து இப்பகுதியில் இருந்து ஷெல் தாக்குதல்களை நடத்த புலிகள் திட்டமிட்டு வருவதாகவும் படையினருக்குத் தகவல் கிடைத்திருந்தது.

எனவே பூநகரிப் பகுதியில் புலிகளின் பிரசன்னம் குடாநாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலானதாகும். ஆகவே அப்பகுதியில் உள்ள புலிகளின் நிலைகளை இயன்றவரை தாக்கி அழிப்பது 'சுழல்காற்று' நடவடிக்கையின் ஒரு நோக்கம்.

அடுத்தது குடாநாட்டுக்கான தரைவழிப் பாதை சம்பந்தமானது.

வன்னியின் மேற்கு நிலப்பரப்புக்குள் இராணுவம் மேற்கொண்டுவரும் நகர்வுகள் இராணுவ ரீதியில் பெருமளவு சாதகமாகி வருவதால் மன்னார் - பூநகரி வீதியின் கேந்திர முக்கியத்துவம் அதிகரித்துள்ளது. குடாநாட்டின் அபிவிருத்திப் பணிகள் மந்தமடைவதற்கு தரைப்பாதை வசதி இல்லாமையே காரணம் என்று மேற்குலக நாடுகள் கூறியுள்ளன.

யாழ். குடாநாட்டைப் புனரமைக்க ஐரோப்பிய ஒன்றிய நாடுகளால் வழங்கப்பட்ட நிதி உதவியை இலங்கை அரசு சரிவரப் பயன்படுத்தவில்லை என்று ஐரோப்பிய ஒன்றியம் அண்மையில் தெரிவித்திருந்தது. குடாநாட்டு நிலைமை சீராகாததற்கு பாதுகாப்பான போக்குவரத்து வசதி செய்யப்படாமையும் ஒரு காரணம் என்று ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது. மேற்குலக நாடுகளின் இந்தக் கருத்து குடாநாட்டுக்கான தரைவழிப்பாதை ஒன்றைத் திறக்கும் விடயத்தில் அரசுக்கு அழுத்தம் கொடுப்பதாக அமைந்துள்ளது. எனவே விரைவிலேயே தரைப்பாதை ஒன்றைத் திறந்து சுமுகமான போக்குவரத்து வசதியை ஏற்படுத்தியாக வேண்டும். இந்த வகையில் தற்போதைய கள நிலைவரங்களின் படி மன்னார் மாவட்டத்துடன் குடாநாட்டை இணைக்கும் பூநகரி - மன்னார் வீதியை முழுவதுமாகக் கைப்பற்றி அதனையே குடாநாட்டின் போக்குவரத்து பாதையாக மாற்ற படைத்தரப்பு முடிவு செய்துள்ளதாகத் தெரியவருகிறது.

தற்சமயம் இந்த வீதியில் 18 கிலோமீற்றர் தூரத்தை கைப்பற்றி உள்ளதாக இராணுவம் கூறியுள்ளது. ஆனால் சுயாதீன வட்டாரங்களால் அது இன்னமும் ஊர்ஜிதம் செய்யப்படவில்லை.

பூநகரி - மன்னார் பாதைத்திறப்பை விரைவுபடுத்த வேண்டுமானால் மன்னாரில் இருந்து வடக்கே நகர்வு முயற்சிகளைத் தீவிரமாக்கும் அதேவேளை பூநகரிப்பக்கம் புதிய போர் முனையைத்திறந்து அங்கிருந்து மன்னார் வீதி வழியே தெற்கு நோக்கியும் நகர்வை ஆரம்பிக்க வேண்டியது அவசியம். வீதியின் இரு முனைகளில் இருந்தும் எதிர் எதிராக முன்னேறுவதன் மூலம் மட்டுமே குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் வீதியை முழுமையாகக் கைப்பற்ற முடியும் என்று இராணுவ நிபுணர்கள் ஆலோசனை வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வகையில் பூநகரியில் புதிய போர் முனையைத் திறப்பதற்கான பரீட்சார்த்தமான முன் முயற்சியே கடந்த 10ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட 'சுழல்காற்று' நடவடிக்கை ஆகும்.

குடாநாட்டில் உள்ள தரைப்படைப்பலத்தை பின்புலமாகக் கொண்டு கடல் மற்றும் வான் வழியான தாக்குதல்களின் ஒத்துழைப்புடன் பூநகரிப் பிரதேசத்தை கைப்பற்ற படையினர் தீட்டியுள்ள பெரும் தாக்குதல் திட்டத்தின் ஒத்திகையே 'சுழல் காற்று' என நம்பலாம். இந்த நடவடிக்கையை மேற்கொள்வதில் படையினருக்கு சாதகமான பல நிலமைகள் உள்ளன. ஆனால் குடாநாட்டில் இருந்து படையினரை தரைவழியாக பூநகரிப்பகுதிக்கு நகர்த்த முடியாது. 'சுழல் காற்று' நடவடிக்கை ஆரம்பமான வேளை அரியாலை, நாவற்குழி, கைதடி, கேரதீவு, தனங்கிளப்பு பகுதிகளில் துருப்பினர் பெரும் எண்ணிக்கையில் குவிக்கப்பட்டிருந்தனர். அத்துடன் ஆட்லறிகளும் இப்பகுதிகளுக்கு நகர்த்தப்பட்டிருந்தன. ஆனால் ஹெலிக்கொப்ரர்கள் மூலம் பலாலியில் இருந்து கொண்டு செல்லப்பட்ட நூற்றுக்கும் குறைவான படையினரையே பூநகரிக்கு வடகிழக்கே காட்டு நல்லூர் என்ற பகுதியில் தரையிறக்க முயற்சிக்கப்பட்டது. உண்மையில் துருப்புக்கள் தரையிறக்கப்பட்டனவா அல்லது தரையில் இருந்து புலிகள் நடத்திய தாக்குதல்களின் தீவிரம் காரணமாக அது கைகூடாமல் போனதா என்பது இன்னமும் தெளிவாகவில்லை. எந்த இடத்தில் எவ்வளவு துருப்புக்கள் தரையிறக்கப்பட்டன என்ற விவரத்தை பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் வெளியிடவில்லை. தாக்குதலில் ஈடுபட்டிருந்த எம்.ஐ.17 ரக ஹெலி ஒன்றும் எம்.ஐ.24 ரக ஹெலீ ஒன்றும் சிறுசேதங்களுக்கு உள்ளானதாகத் தெரிவிக்கப்பட்டது.

பரந்தன் மேற்குப் பகுதியில் இருந்து முன்னேறிய படையினர் அப்பகுதியில் புலிகளுடன் கடுமையாக மோதி உள்ளனர்.

கிபிர் மற்றும் புக்காரா விமானங்கள் அடையாளம் காணப்பட்ட புலிகளின் நிலைகள் மீது குண்டுத்தாக்குதல் நடத்தியதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

பரந்தன் மேற்குப் பகுதியில் அமைந்திருந்த புலிகளின் 'ராகுலன்' முகாம் மீதே 'சுழல்காற்று' நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகவும் -

இந்நடவடிக்கையில் 60க்கு மேற்பட்ட புலிகள் கொல்லப்பட்டிருப்பதாகவும் –

பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்தது.

ஆனால் அங்கு நடைபெற்ற சண்டையில் தமது தரப்பிற்கு ஏற்பட்ட இழப்புகள் தொடர்பான விவரங்களைப் புலிகள் வெளியிடவில்லை.

இந்நடவடிக்கையில் ஓர் அதிகாரி உட்பட 17 படையினர் கொல்லப்பட்டதாகவும் 58 பேர் வரை காயமடைந்ததாகவும் படைத்தரப்பு உறுதிப்படுத்தி உள்ளது. பூநகரி - பரந்தன் பகுதிகளில் புலிகள் பலமாக நிலை கொண்டு உள்ளனர் என்பதை படையினருக்கு ஏற்பட்ட இழப்புக்கள் எடுத்துக்காட்டுகின்றன.

பூநகரியில் புதிதாக போர்முனை ஒன்றைத் திறப்பதாயின் இதைவிடப் பலமடங்கு அதிகமான இழப்புக்களைப் படையினர் சந்திக்க வேண்டியிருக்கும் என்பதும் நிச்சயம்

'சுழல் காற்று' நடவடிக்கை ஓர் ஒத்திகையாக இருந்தால் அதன் மூலம் படையினருக்கு பல அனுபவங்கள் கிடைத்திருக்கும். அதேவேளை புலிகளும் தமது கட்டுப்பாட்டில் உள்ள நிலப்பரப்பினுள் புதிய அச்சுறுத்தலை எதிர்கொள்ளும் நிலையை இத்தாக்குதல் உணர்த்தி இருக்கும்.

மன்னாரில் இருந்து படையினர் வடக்கே முன்னேறுவதைத் தீவிரமாக்கும் போது இது போன்ற திடீர் நடவடிக்கைகள் மிக அண்மையில் கூட மீண்டும் இடம்பெறலாம்.

அண்மைக்காலமாக அமைதியாக இருந்து வந்த பூநகரிப் பிரதேசம் புதிய போர்முனையாக மாறுவது தற்போதைய போர் உத்திகளின் படி தவிர்க்க முடியாததாகவே தெரிகிறது. *

மறுபக்கம் வார விமர்சனம்
நல்லூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 11 தூண்டில்மீன்

சுடலையடி மீன் சந்தை வெகு காலமாகக் களையிழந்து விட்டது. கடற்றொழில் பாதிக்கப்பட்டதால் போதியளவு மீன் சந்தைக்கு வருவதில்லை. காலைவேளையில் மட்டும் மீன் பிடிக்க முடியும் என்பதால் பதினொருமணிக்குப் பின்னர்தான் சந்தைக்கு மீன் வரும். மாலை நேரங்களில் வரும் மீன் கரையோர வீச்சு வலைகளில் அகப்பட்டவையாகவும் சில வேளைகளில் பருத்தித்துறையிலிருந்து மோட்டார் சைக்கிளில் வந்து சேரும் மீன்களாகவும் இருக்கும்.

பின்னேர மீன் சந்தைக்கு இப்பொழுது வருகின்றவர்களின் எண்ணிக்கையும் குறைந்து விட்டது. சந்தைக்கு வருகின்ற சொற்ப மீன்களின் விலையும் அதிகரித்திருப்பதால் வாங்கும் திறன் மக்களிடம் இல்லை.

மரியாத்தை வெறும் கடகத்தின் மீது இட்ட தட்டில் செபஸ்தியான் பிடித்து வந்து பறிக்கூட்டு மீன்களைக் கொட்டிவிட்டு சுருட்டொன்றை வாயில் வைத்துப் பற்ற வைத்துக் கொண்டாள். செபஸ்தியான் அவள் அருகில் அமர்ந்து அவசரப்பட்டான்.

"எனை எனக்கு ஏதாவது தந்து முதலில் அனுப்பனை. தவறணை மூடப் போறான். அந்தா பார்.." எதிரில் சற்றுத் தள்ளியிருந்த கள்ளுத் தவறணையைச் சுட்டிக் காட்டினான். கும்பலுக்கு அங்கு குறைவில்லை. தவறணைக்கு வந்த கள் முடிந்து விடும் என்ற பயம் செபஸ்தியானின் அவசரத்தில் தெரிந்தது.

"உன்னோடு கொஞ்சம் கதைக்க வேணும். இரு செபஸ்தி..."

"கதைக்க வாறன். அங்க முடிஞ்சிடும். முதலில் இருபது முப்பது ரூபா தா.."

"ஏன்ரா இப்படிக் கஷ்டப்பட்டு உழைக்கிறதை குடிச்சுத் தொலைக்கிறாய்?" என்றபடி முப்பது ரூபாவை எடுத்து அவனிடம் நீட்டினாள். அதனை வாங்கிக் கொண்ட அவன் அவளை ஏறிட்டுப் பார்த்தான். அவன் பார்வையில் அர்த்தம் அவளுக்கு புரிந்தது. அவனுக்கு முப்பத்தைந்து வயது என்பது அவளுக்கு நன்றாகத் தெரியும். நாற்பத்தைந்து வயதுக் கோலத்தில் அவனிருந்தான். சவரம் செய்யாத தலையும் தாடி வளர்த்த முகமும் அவனை உருமாற்றி யிருந்தன. எல்லாரையும் போல அவனும் ஒழுங்கான மனிதனாகத்தான் இருந்தான். தாளையடி அந்தோனியார் திருவிழாவிற்கு மனைவியுடனும் ஒரே குழந்தையுடனும் உல்லாசமாகப் பயணப்பட்டு திரும்பி வரும்போது தனியனாக வந்தான். தாளையடி விமானக் குண்டு வீச்சில் கண்முன்னால் மனைவியையும் பிள்ளையையும் பறிகொடுத்துவிட்டு நடைப்பிணமாகத் திரும்பி வந்தான்.

"எனக்கு இங்க என்ன இருக்கிறது? எல்லாம் போச்சுது."என்பான். கிராமத்தில் வீடு இருக்கிறது. அவன் தனிக்கட்டை. கரையில் வீச்சுவலையில் அகப்பட்டவற்றை விற்று கிடைப்பதை குடிப்பதற்கும் உயிர் எஞ்சுவதற்குச் சாப்படுவதற்கும் பாவித்தான். சொந்தமாக இருந்த வள்ளத்தையும் வலைகளையும் விற்றுவிட்டான். காசு தேவைப்படும் போது கடலில் இறங்குவான்.

**செங்கை ஆழியான்**

செபஸ்தியான் மீண்டும் வந்து மரியாத்தையின் பின்னால் இடப்பட்டிருந்த கல்லில் அமர்ந்து கொண்டான். பனங்கள்ளின் நாற்றம் அவனில் இருந்தது. காறித் தூர ஒருதடவை துப்பிவிட்டு ஒரு பீடியை வாயில் செருகிக்கொண்டு நெருப்புப் பெட்டிக்காக அவளிடம் கரம் நீட்டினான்.

மரியாத்தை நெருப்புப் பெட்டியை அவன் கரத்தில் கொடுக்கும் போது அவன் கேட்டான்: "உவள் ஏன் அரளிவிதை சாப்பிடப் பார்த்தவள்?"

"அழகம்மாவோ?.."

"ஓமோம்... அவளும் என்னைப் போல ஒரு அனாதை. அதுக்காச் சாகத் துணியுறதோ?..நான் இவ்வளவு காலமும் இருக்கவில்லை..என்ர கண் முன்னாலே என்ர ஆசை மனிசியையும் என்ர ஒரே புள்ளையையும் பறிகொடுத்திட்டு இருக்கல்ல.." அவன் அழுதான்.

"நானும் அப்பவே செத்திருக்கலாம். எனக்கு துணிச்சல் வரவில்லை. அழகம்மா துணிச்சல்காரி.."

"விசர்க்கதை, செபஸ்தி. அப்படி எல்லாரும் முடிவெடுத்தால் இந்த உலகத்தில, அதுவும் யாழ்ப்பாணத்தில ஆக்களிராது. சாகிறதுதான்.. அதுக்காகத் துயரங்களைக் கண்டு பயந்து ஒளிஞ்சு சாகக் கூடாது. எனக்கு இப்ப எத்தனை வயசு? வாழத்தான் இப்பவும் விரும்புறன்.. வாழ வேணும். இஞ்ச பார் செபஸ்தி, கடந்தவையை மறந்துவிட்டு வாழப்பார்.."

"இனியோ? என்னைப் பாரனை.. எனக்கு இனி ஒரு வாழ்க்கையோ? எத்தனை பேர் எனக்கு கலியாணம் பேசி வந்தினம். என்னால சம்மதிக்க முடியவில்லை. அவளை என்னால மறக்க முடியவில்லை. அந்தோனியார் கோயிலடியில எவ்வளவு ஆர்வமாகச் சுற்றித்திரிந்தாள். அவளும் பிள்ளையும் கேட்ட அத்தனையையும் ஆசையாக வாங்கிக் கொடுத்தன். அண்டைக்கு மட்டும் குறைஞ்சது அஞ்சு ஐஸ்கிரீம் குடிச்சிருப்பாள் சின்னப்பிள்ளை போல.. கணப்பொழுதில் போயிட்டாள் பிள்ளையோட-"

செபஸ்தியான் விம்மி விம்மி அழுதான்.

"அழாதையடா.. ஆக்கள்..".

வாடிக்கையாளர் ஒருவர் மரியாத்தையிடம் மீன் வாங்கிக் கொண்டார். அவர் நகர்ந்ததும் செபஸ்தியானை அவள் திரும்பிப் பார்த்தாள்.

"அழகம்மாவைப்பற்றி நீ என்ன நினைக்கிறாய்?"

அவன் மரியாத்தையைக் கேள்விக்குறியுடன் பார்த்தான்.

"ஏன் கேக்கிறாயனை?"

"சும்மா சொல்லு.."

"நல்ல ஒழுங்கான பெட்டை. வேறை ஆக்கள் என்றால் அவளுக்கிருக்கிற அழகுக்கு எத்தனையோ பேருக்குப் பாய்விரிச்சிருப்பினம். அவள் அடக்கமாக நெருப்புப்போல இருக்கிறாள். இவ்வளவு உதவிகள் செய்தும் கூட லூசியனால் அவளை நெருங்க முடியவில்லை..."

மரியாத்தை அவசரமாகக் குறுக்கிட்டாள்.

"லூசியனை அப்படிச் சொல்லாதை. அவனுக்கு அப்படியொரு எண்ணமில்லை. அவனை எனக்குத் தெரியும். அவன் அந்தக் குடும்பத்திற்குச் செய்யிற உதவிகளுக்கு அவன் ஒருபோதும் பிரதியுபகாரம் எதிர்பார்க்கிறவனல்லன். உதவுறது தன்ர கடமை எண்டு நினைக்கிறவன்.."

"ஓமோம் ஆத்தை. எனக்கு அது தெரியும்.. தரகியர்தான் வாங்கிக் கட்டிக் கொண்டார். அழகம்மா இப்படியே இருக்கப் போறாளாமோ? யாரையாவது பார்த்துக் கட்டிக் கொண்டால் என்ன?"

மரியாத்தை போட்ட தூண்டிலில் சரியாக இரை கவ்வப்படுகிறது.



"அழகம்மாவிற்கு யார் இருக்கினம்.. என்னைத் தவிர. அவள் இப்பவும் லூசியனைத் தன் அண்ணாகத்தான் நினைக்கிறாள். அவளுக்கு அப்படியொரு தப்பான எண்ணமில்லை. தன்னால அவனுக்கு அவப்பெயர் வந்திட்டுது என்றதாலதான் மருந்து குடிக்கப் பார்த்தாள். விசர்ப்பெட்டை. அவள் கௌரவமாக வாழத்தான் விரும்புகிறாள். கொஞ்ச வயதுதானே?. யார் அவளைக் கட்டுவினம்? எல்லாருக்கும் அவளில கண்தான். ஆனால் அவளையும் இரண்டு பிள்ளைகளையும் முறைப்படி ஏற்க இந்தக் கிராமத்தில எவன் இருக்கிறான்? அப்படியொரு இரக்க சிந்தனையுள்ளவன் யார் இருக்கிறான்? லூசியன் கலியாணம் செய்யாதவனாக இருந்தால் நிச்சயம் ஏற்றிருப்பான்..."

மரியாத்தை செபஸ்தியானை ஏறிட்டாள். செபஸ்தியான் திக்கித்துச் சிந்தனையில் ஆழ்ந்திருப்பது தெரிந்தது.

சோகத்தோடு சடலத்தைக் காவிக் கொண்டு கோம்பயன்மணல் சுடலைக்குச் சென்றவர்கள் தகனம் செய்துவிட்டுச் சிரித்துப் பேசிக் கொண்டு திரும்பி வந்தார்கள். அவர்களில் சிலர் கள்ளுத்தவறணைக்குள் நுழைந்து கொண்டனர்.

"வாழ்க்கையடா செபஸ்தி, ஒருவரின் மரணத்துடன் முடிந்து விடுவதில்லை."

அவன் எதுவும் பேசவில்லை. தலையை தன்னிரு கரங்களிலும் ஏந்திக் கொண்டான். தலை விண் விண்னென்று கனத்தது. பேசாதிருந்தான். மரியாத்தை அவனை அப்படியே யோசனையுடன் இருக்க விட்டு விட்டு மீனை விற்றுமுடித்தாள். அது வரை அவன் எதுவும் பேசவில்லை.தனிமை அவனை மிக வருத்திவிட்டது உண்மைதான். வாய் இனிக்கச் சாப்பிட்டுப் பல வருடங்களாகி விட்டன. இப்படியே நடைப்பிணமாக உலாவி அழிந்து போகத்தான் வேணுமா?

கடகத்தை தூக்கித் தலையில் வைத்தபடி மரியாத்தை கிராமத்தை நோக்கி நடக்க அவன் அவளைப் பின் தொடர்ந்தான். வெகுநேரம் இருவரும் பேசிக் கொள்ளவில்லை.

மேற்கில் சூரியன் மறைந்து கொண்டிருந்தான். வானம் செக்கராகத் தெரிந்தது. கடல் அமைதியாகக் கிடந்தது, ஊரின் துயர நெஞ்சம் போல.

கடற்கரை வீதியில் திரும்பிய போது செபஸ்தியான் கேட்டான்.

"நீ இப்ப என்ன ஆத்தை செய்யச் சொல்கிறாய்?"

"அழகம்மாவைக் கட்டிக் கொள் என்கிறன்.."

அவன் அப்படியே வீதியில் நின்று விட்டான். மனதில் இனந்தெரியாத உணர்வுக் கொந்தளிப்பு.

"அவள் சம்மதிப்பாளா?.."

மரியாத்தையின் முகம் மலர்ந்தது.

"செபஸ்தி.. அவள் சம்மதிப்பாளடா. அவளை எனக்குத் தெரியும். நீ ஓமெண்டால் மற்றதை நான் பார்க்கிறன்.."

"சரி ஆத்தை.." என்றான் அவன்.

"நான் இனிக்குடிக்க மாட்டேன் எண்டு அவளிடம் சொல்லு.."

மரியாத்தை அழகம்மாவின் குடிசைக்குள் ஆவலுடன் நுழைய அவன் அப்படியே நடந்து சந்திக்கு வந்தான். சலூனைப் பூட்டிக்கொண்டு சிவ்லிங்கம் புறப்பட ஆயத்தமாகிறான்.

"தம்பி, சிவலிங்கம் எனக்கொருக்காத் தலைமயிர் வெட்டி.. சேவ் எடுத்து விடு.."

சிவ்லிங்கம் அவனை வியப்புடன் பாாத்தான்.

"மெய்யாத்தானோ?"

"ஓமடா.." என்றான் செபஸ்தியான் வெட்கத்துடன்.

"நேரமபோனாலும் பரவாயில்லை. உங்களுக்கு வெட்டிப் போட்டுத்தான் கடையைப் பூட்டப் போறன். என்ன அண்ணை, ஏதாவது விசேஷமோ?"

செபஸ்தியான் மகிழ்ச்சியுடன் சிரித்தான். அவன் அப்படி மலர்ந்து சிரித்ததை சிவலிங்கம் எப்பொழுதும் கண்டதில்லை. வீதியில் போகும் போது விசரன் போல தன்பாட்டுக்குச் செல்லும் செபஸ்தியான், நினைத்த போது வீச்சுவலையுடன் கடலில் இறங்கும் செபஸ்தியான், குடிவெறியுடன் தன்பாட்டிற்கு அலையும் செபஸ்தியான் இன்று முகம் மலர்ந்து சிரிப்பது வியப்பாக இருந்தது.

செபஸ்தியானுக்கு தன்னையே நம்ப முடியவில்லை. சடை பற்றிக் கிடந்த தலைமயிர் சீராக வெட்டப்பட்டு அரும்பு மீசையுடன் முகம் களைகட்டியிருந்தது. அவனால் நம்ப முடியவில்லை. 'தான்தானா?' என்ற சந்தேகம் வந்தது. கண்ணாடியில் தன்னை ஆழமாகப் பார்த்துக் கொண்டான்.

"என்ன விசயம் அண்ணை...?"

"தெரியவரும்தானே? இந்தா பிடி காசை.."

"அண்ணை மெய்யாத்தான் எனக்கு வேண்டாம். உங்களை இந்தக் கோலத்தில பார்க்கிறது எனக்குச் சந்தோசமாகவிருக்குது.."

சிவலிங்கம் காசை வாங்கிக் கொள்ளவில்லை. அவன் எவ்வளவு வற்புறுத்தியும் மறுத்துவிட்டான்.

"சரியடா.."

செபஸ்தியானின் கோலம் எதிரில் வந்தவர்களுக்கு வியப்பைக் கொடுத்தது. அவனை அர்த்தத்துடன் பார்த்தனர். அவன் தன் வீட்டிற்கு வந்து கதவைத் திறந்து பக்கத்து வீட்டு ஆசீர்வாதத்தையும் அவன் மனைவியையும் உரிமையுடன் கூப்பிட்டு, "ஒருக்கா என்ரை வீட்டைத் துப்பரவாக்கி விடு, தங்கச்சி.."என்று கூறியதும் அவர்களின் வியப்பு பன்மடங்காகி விட்டது.

"என்ன அண்ணை விஷேசம்?"

அவன் எதுவும் சொல்லவில்லை. சிரித்து மழுப்பிவிட்டுக் குளிப்பதற்காகக் கிணற்றடிக்குச் சென்றான். ஆசீர்வாதமும் அவன் மனைவியும் வீட்டைக் கூட்டித் துப்பரவாக்குவதில் ஈடுபட்டனர். அயலட்டை இந்தப் புதினத்தைப் பார்க்கக் கூடிவிட்டது.

அப்பொழுது மரியாத்தை அங்கு வந்தாள்.

விசயம் அம்பலமானது.

"செபஸ்தி அண்ணைக்கு கலியாணம்... கலியாணம்..." என்ற செய்தி படுவேகமாகக் கிராமமெங்கும் பரவியது.

செபஸ்தியான் ஆவலோடு மரியாத்தையின் முகத்தைப் பார்த்தான்.

"ஓமெண்டிட்டாள். கரும்பு திண்ணக் கூலியாடா? அழகம்மா கொடுத்து வைத்தவள்.. உண்மையாகத்தான் செபஸ்தி, உன்னைக் கணவனாக அடைய அவள் கொடுத்து வைத்தவள்.."

(தொடரும்)

## குறள் வெள்ளம்

வாய்ப்பேச்சில் நேர்மை தொனிக்கும். சொல்லிலே தேன் சொரியும். நீதி தேவன் மறு அவதாரம் எடுத்து வந்தது போலப் பேசுபவர்கள் இருக்கிறார்களே.

இவர்களின் உதட்டுப் பேச்சிலே குற்றம் காண முடிவதில்லை. சொல்லிலே கோணுதல் இல்லாமைதான் செப்பம் - நேர்மை - நீதி என்று முடிவு கட்டிவிடக்கூடாது.

சொற் கோட்டம் (கோணுதல்) இல்லாதது தான் செப்பம் என்றார் வள்ளுவர். ஆனால் அதற்கும் நிபந்தனை போடுகிறார்.

உளக் கோட்டம் இன்மை பெற்றுவிட்டால் உள்ளே - மனதிலே கோணுதல் - வளைதல் - ஒரு பக்கம் சார்தல் இல்லாமை பிறந்து விட்டால் அதன் பின்பு சொற்கோட்டம் இல்லாததுதான் செப்பம் என்கிறார்.

மனதை அடுத்தவர் புகுந்து பார்க்க முடியாது என்று நினைத்து உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசித் திரிபவர்களின் வேடம் நிரந்தரமாய் நிலைப்பதில்லை.

அது கலையும் போது மனமும் உடலும் கோணி உலகின் முன் தலைகுனிந்து நிற்கத்தான் வேண்டிவரும்.

***சொற்கோட்டம் இல்லது செப்பம் ஒருதலையா***
***உட்கோட்டம் இன்மை பெறின்.*** - 0119


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தம் எதுவரைக்கும்?

3

எடி என்ற அமெரிக்கன் (Eddie Ricken Backer) பிரான்ஸில் யுத்தத்தைச் சாதகமாக்கி விமானியாகி விட்டான். 1918 இன் மார்ச் மாதத்திலிருந்து இவனது விமானம் யுத்த களத்தின் மேலாக வட்டமடிக்கத் தொடங்கியிருந்தது. இவனது விமானப்படை அணியில் பதினேழு விமானங்களே இருந்தன.

பறப்புப் பயிற்சியும் அப்போது தான். பெரிதாக முன் அனுபவம் இல்




லாத நிலைமை அவனுக்கு. எதிரி விமானங்கள் தென்படுகின்றனவா என வானத்தை கண்களால் துளாவியபடி பறக்க வேண்டும்.

1918இன் ஏப்ரல் 14 அன்று தானும் ஓர் ஆகாயச் சண்டையில ஈடுபட்ட - முதல் - அனுபவம் பற்றி அவன் விவரித்தான். எவருக்கும் இழப்புக்கள் ஏற்படவில்லை. தனது அணி இரண்டு ஜேர்மனிய விமானங்களை துரத்தித் தரையிறக்கிவிட்ட அனுபவம் அன்று ஏற்பட்டதாம்.

திசை காட்டியை (compass) நம்பாமல் திசை தப்பிப்போன அனுபவம் அவனுக்கு ஏற்பட்டிருக்கிறது. பிரெஞ்சு விமானத்தையே தான் தாக்க முயன்று - அதன் தாக்குதலிலிருந்து தப்பிப் பிழைத்த அனுபவம் - பின்பு எதிரி விமானங்களோடு போராட உதவியதாகக் கூறியிருக்கிறான்.

களத்திலேதான் விமானமோட்டப் பயிற்சியும் பெற வேண்டி இருந்ததால் ஆசைப்பட்டுச் சேவைக்கு வந்த பல பைலட்டுக்கள் களப்பலியாகிவிட்டார்கள். மழையைக் கண்டே விமானங்கள் தரையிறங்கி விடும் காலம் அது.

இரண்டு பிரெஞ்சு விமானங்கள் ஒன்றன் பின் ஒன்றாகப் பறக்கின்றன. இரண்டாவதன் விமானியாக எடி. இவர்கள் மேலே கிளம்பிக் கொண்டேயிருக்கும் போது ஜேர்மன் எல்



லைப் புறமிருந்து விமானமொன்று ஆசுவாசமாக வந்துகொண்டிருந்தது. அதற்கு ஆயிரம் அடிகள் மேலே இவர்கள் பறந்து கொண்டிருந்தனர்.

இவர்களைக் கண்டதும் விமானம் திசை திரும்பித் தப்பி ஓடி மறைந்து விடும் என்றுதான் எதிர்பார்த்தார்கள். ஆனால் அது இவர்ளைக் காணாதது போல வந்துகொண்டிருந்தது.

பிரெஞ்சு விமானங்கள் தாக்குதலுக்குத் தயாராகிக் கொண்டிருக்கும் போது ஜேர்மன் விமானமோ இவர்களை நோக்கி உயரக் கிளம்பியது. யாரிடம் என்ன உத்திகள் இருக்கலாம்? எத்தகைய ஆயுதங்கள் இருக்கலாம் என அடுத்தவருக்கு அதிகம் அனுபவம் இல்லாத காலம் அல்லவா அது?

முன்னே சென்ற பிரெஞ்சு விமானம் சரமாரியாக வேட்டுக்களைத் தீர்க்கவும் ஜேர்மன் விமானம் கீழே இறங்கத் தொடங்கியது. பின்னே வந்த எடி தன் பீரங்கிகளை இயக்கியதுதான் தாமதம் தொடராக ஷெல்கள் புறப்பட்டன.

விமானத்தின் வால்பகுதியை குறிவைத்து எடி தன் பீரங்கிகளை இயக்கவும் - ஜேர்மனிய விமானத்தின் வாற் பகுதியிலிருந்து தீச்சு வாலைகள் கிளம்பின.

தண்ணீர்க் குழாயைச் சுழற்றித் தண்ணீரைப் பீச்சுவதைப் போல தனது விமானத்தையும் பீரங்கியையும் சுழற்றி ஜேர்மனிய விமானத்தைச் சல்லடை போட்டான் எடி. அவனது கன்னி விமானக் கொலை அது.

எதிரி விமானத்தின் எரிபொருள் தாங்கி, விமானி அறை என்பனவும் தப்பவில்லை. வாலறுந்த பட்டம் போன்று ஆடித் தளர்ந்து தரையை முத்தமிட்ட ஜேர்மன் விமானத்தைக் கண்களால் ரசித்துப் பருகினான் எடி. அந்த நாள் ஏப்ரல் 29, 1918.

மே மாதத்தில் மேலும் நான்கு ஜேர்மன் விமானங்களைச் சுட்டு வீழ்த்தினான் எடி. பிரான்ஸின் Croix de guerre விருது அவனுக்குக் கிடைத்தது.

செப்ரெம்பர் மாதத்தில் மேலும் ஏழு விமானங்களின் கதையை அவன் முடித்திருந்தான். அத்தோடு அவன் வீழ்த்திய விமானங்களின் எண்ணிக்கை 12 ஆகிவிட்டது. தரைத் துருப்புகள் மீது இவன் நடத்திய தாக்குதல்கள் ஜேர்மனியைப் பின் வாங்க வைத்தன.

இவனது அணியிலும் விமானங்கள் சேதத்தைச் சந்திக்கத் தவறவில்லை. விமானிகள் சுடப்பட்டார்கள். இவனுக்கு வழிகாட்டிய குரு - ஹோல் (Hall) கூட - விமானத்தோடு ஜேர்மன் எல்லைக்குள் தரை தட்டியதால் கைதியாகப் பிடிபட்டுப போனான்.

தரையிறங்கிக் கோப்பியைப் பருகுவதும் எரிபொருளை நிரப்பிக் கொண்டு உடனே கிளம்புவதும் - சூடுபட்டதும் மீண்டும் தரையிறங்கித் துளைகளை அடைத்துக்கொண்டு மீண்டும் கிளம்புவதும் ஆக பிஸியாக இருந்த நாள்கள் யுத்தத்தின் இறுதிக் காலகட்டம் என்கிறான் அவன்.

ஒக்ரோபர் மாதம் சோதனைகளுக்கும் சாதனைகளுக்கும் குறைவில்லையாம். எதிரி விமானமொன்றோடு நேரடித் துப்பாக்கிச் சமர். அந்த விமானத்தை விழுத்திவிட்டாலும் தனது விமானத்தின் காற்றாடி, கண்ணாடி எல்லாம் சல்லடை போடப்பட்டு விட்டதாம். தப்பிவந்து அதைத் தரையிறக்கப் பட்டபாடு போதுமென்றாயிற்று.

இறங்கிவந்து ஹெல்மெட்டை கழற்றியபோதுதான் அதில் துளைத்திருந்த ரவைகள் பற்றித் தெரிய வந்ததாம். தலைக்கு வந்தது தலைக் கவசத்தோடு போய்விட்ட வேகத்தில் மேலும் 14 விமானங்களுக்கு ஒக்டோபரில் வேட்டு வைத்து விட்டான் அவன். அவனது விமானப்படை அணி வீழ்த்திய 69 விமானங்களில் 26 இவனாலேயே விழுத்தப்பட்டன.


இரு மருங்கும் முன்னணி அரண்கள் அமைந்திருக்க நடுவே சூனியப் பிரதேசம் (no man's land) வெறிச்சோடிக்கிடப்பதை அவன் விமானத்திலிருந்து பார்ப்பான்.

நொவம்பர் 10 ஆம் திகதி அடுத்த நாளுக்குரிய திட்டங்கள் பற்றி தனது அணியுடன் இரவு பேசிக்கொண்டிருந்தான் எடி. தொலைபேசி அழைப்பு வந்தது. மறுநாள் அதாவது நவம்பர் 11, 1918 அன்று யுத்தம் முடிவுக்கு வருகிறது என்ற அறிவிப்பே அது.

இவன் விமானத்தை கிளப்பி சுமார் 500 அடி உயரத்தில் எல்லைப் பிரதேசத்தை வட்டமடித்தான். யுத்தம் முடிவடையும் காட்சி எப்படி இருக்கும் எனக் காண ஆசைப்பட்டான்.

அந்த அதிசயம் நிகழ்ந்த வேளையோ 11மணி, 11 ஆம் திகதி, 11ஆம் மாதம், 1918. இரு மருங்கும் பதுங்கு குழிகளில் இருந்து தயங்கித் தயங்கி வெளிப்பட்ட மனிதர்கள், தலைக் கவசங்களையும் துப்பாக்கிகளையும் வீசிவிட்டு வெறுங்கையோடு வெளியே வந்தனர்; ஆடிப்பாடினர்; கைகளை உயர்த்தி ஆரவாரம் போட்டனர்!

இரண்டொரு பிறவுண் சீருடையினர் சாம்பல்நிற சீருடையினருடன் பேசியும் தழுவியும் முத்தமிட்டும் இணைந்து கொண்டனர். இதைக் கண்ட சில கணங்களில் எதிரி அணிகள் இரண்டுமே இரண்டறக் கலந்து



ஆடிப்பாடத் தொடங்கிவிட்டார்கள். மனிதர்கள் எல்லோரும் ஒரே இனம் என அவர்கள் உணர்த்தியவேளை அது. அப்படியானால் கடந்த 4 ஆண்டுகளுக்கு மேலாக ஆளை ஆள் கொன்று குவித்தமை எவ்வளவு மடைமை? நேற்றுவரை அதைச் செய்தவர்கள்தான் இன்று இப்படிக் குதூகலிக்கிறார்கள் என்று நினைத்தான் அவன்.

யுத்தம் முடிவடைந்ததை அதில் ஈடுபட்டவர்களே வரவேற்றுக் குதூகலமாய் கொண்டாடிய நிகழ்வு அது. மீண்டும் இவர்களை யுத்தத்துக்கு இழுக்கப் பல பின்னணிச் சக்திகள் செயற்படுமா?

1918 இல் யுத்தம் முடிவுக்கு வந்தபோது பல அழிவுகளைச் சந்தித்துச் சிந்தித்தது உலகம். இப்படி இனியொரு யுத்தம் வரவே வேண்டாம் - வரவே வராது - இந்த அனுபவம் போதும் - என்றெல்லாம் பலரும் கூச்சலிட்டார்கள். பல நாடுகள் ஒப்பந்தங்களைச் செய்து கொண்டன.

எனினும் சில நாடுகள் ஒப்பந்தங்களுடன் ஒத்துப் போகவில்லை. மனதில் பகை மூண்டே இருந்தது. அமெரிக்கா, சோவியத் போன்ற பெரிய நாடுகள் சமாதான நிப்ந்தனைகளை ஏற்க மறுத்தன.

எனவே 1918 நவம்பரில் ஏற்பட்ட அமைதி இருபத்தொரு ஆண்டுகளுக்குச் சில மாதங்கள் குறைவாகவே நிலைத்தது. ஆம். 1939 செப்ரெம்பர் 1, மீண்டும் வரலாற்றில் கறைபடிந்ததொரு நாள் ஆகிவிட்டதே.

முதலாம் உலகப் போரின் கொடுரங்கள் மக்களின் மனதிலிருந்து இன்னமும் மறையவில்லை; துயரங்கள் துடைக்கப்படவில்லை; அவர்கள இனியொரு யுத்தத்தை சந்திக்கத் தயாரில்லை. ஆனால்....!

* * *

அன்று (1939 செப்ரெம்பர் 1) ஹிட்லரின் யுத்தடாங்கிகள், துருப்புக்கள் சகிதம் போலந்துக்குள் நுழைய.... ஜேர்மனிய குண்டுவீச்சு விமானங்கள் போலந்தின் மீது குத்தி எழும்ப... மீண்டும் போர் மூண்டது.

இடைப்பட்ட காலத்தில் நாடுகளுக்கிடையே மோதல்கள் எழாமல் இல்லை. எனினும் இந்த மோதல் தான் மீண்டும் ஓர் உலக யுத்தத்திற்கு தூபமிட்டது.

முதலாம் உலகப் போரில் ஜேர்மனிய நாடு பெரிதாக அழிக்கப்படவில்லை. அழிவைச் சந்திக்கவில்லை. யுத்தம் வேறு பிரதேசங்களில் நடந்தமையால் வளங்கள் தப்பிக் கொண்டன. எனினும் ஜேர்மன் துருப்புக்கள் பலத்த அடி வாங்கியிருந்தன.

**மு.சிவநேசன்**

Adolf Hitler ஜேர்மன் நாஸிகளின் தலைவனாக 1921 இல் இடம் பிடித்துக் கொண்டான். அப்போது அவனுக்கு வயது முப்பத்திரண்டு இருக்கும். 1889இல் பிறந்தவன் ஹிட்லர்.

அவன் ஒரு திறமைசாலி. சிறந்த பேச்சாளன். தனது பேச்சுக்களினால் பலரையும் கவர்ந்தான். முதலாம் உலகப் போரில் அடிவாங்கிய ஜேர்மனியின் அவமானத்தைப் போக்க வேண்டும் என்று அவன் துடித்தான். ஐரோப்பா முழுவதையும் ஜேர்மனி ஆள வேண்டும் என நினைத்தான்.

1932 இல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் ஒஸ்றியாவின் சிப்பாயான ஹிட்லரின் பேச்சுக்கள் ஜேர்மனியில் அதிக வரவேற்பைப் பெற்றுவிட்டன. அவனது கட்சி குறிப்பிடத்தக்க வெற்றி பெற்றிருந்தது.

அப்போது ஜேர்மனியில் உள்நாட்டு நிலவரமோ மிகவும் பரிதாபம். பணவீக்கம், உணவுப் பற்றாக்குறை, வேலைவாய்ப்பின்மை எல்லாம் தாண்டவமாடின.

1933இல் ஹிட்லர் அரசசைக் கையிலெடுத்தான். தனது செல்வாக்குடன் ஒஸ்றியாவை 1938இல் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தான். அடுத்திருந்த பல நாடுகளை ஆளவும் துடித்தான். செக்கோஸ்லோவாக்கியாவுக்குள் புகுந்தான்.

1939இல் போலந்துள் புக முனைந்த போது எதிர்ப்புக்கள் கிளம்பின; யுத்தம் வெடித்தது. பிரிட்டனும் பிரான்ஸும் தடுக்க முனைந்தாலும் அவற்றால் தொலைவில் இருந்து பெரிதாக எதையும் சாதிக்க இயலவில்லை.

போலந்தை காக்க ரஷ்யா போராட....

ஒருபுறம் ஜேர்மனிய துருப்புக்கள் மறுபுறம் ரஷ்ய துருப்புக்கள், எனப் போலந்து முழுவதும் கூறுபோடப் பட்டது. ஜேர்மனிய - ரஷ்யப் போர் எல்லை போலந்துக்குள் நின்றது.

1940 ஏப்ரலில் நோர்வே, டென்மார்க் நாடுகளையும் பிரான்ஸையும் ஹிட்லர் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தான். அவன் கனவு கண்ட பரந்த ஐரோப்பா ஜேர்மனியின் கீழ் உருவாகத் தொடங்கியது.

ஐரோப்பாவின் அத்திலாந்திக் மற்றும் ஸ்கன்டிநேவியன் துறைமுகங்களெல்லாம் ஹிட்லரின் வசம் வந்து விட்டன. பிரான்ஸ் ஹிட்லரிடம் போய் விட்டதைக் கண்ட பிரிட்டன் கடலில் நின்ற பிரான்ஸின் கப்பல்களையெல்லாம் சுவீகரித்துக் கொண்டது. இதனால் பிரான்ஸ் பிரிட்டனுடன் விரோதம் பூண்டது.

1940 ஓகஸ்டில் ஹிட்லர் பிரிட்டனைத் தாக்கத் துவங்கினான். இங்கிலாந்தைக் காக்க வின்சன்ட் சேர்ச்சில் விமானப் படையை நம்ப வேண்டியதாயிற்று.

1941இல் ஜேர்மனி ரஷ்யாவில் நுழைய முற்பட... அமெரிக்கா பிரிட்டனுக்கு உதவிக்கு வர,... ஜப்பான் அமெரிக்கக் கடற்படையைத் தாக்க... விவகாரம் விரிந்து கொண்டே போனது. பசுபிக் சமுத்திரமும் அத்திலாந்திக் சமுத்திரமும் கூட யுத்தகளமாயின.

யுத்தத்தின் இழப்புகளுக்கு கணக்கு கிடையாது. ஆயுதம் ஏந்தியவர்களின் எண்ணிக்கை நூறு மில்லியனுக்கும் (ஆயிரம் லட்சம்) மேல் இருக்கும். மரணங்கள் முப்பது மில்லியன் (300 லட்சம்) வரை இருக்கும்.


பங்குபற்றியவையோ நாலாயிரம் கப்பல்கள், பத்தாயிரம் விமானங்கள். சுமார் எண்பது லட்சம் மெற்றிக் தொன் எடை கொண்ட கடற்சாதனங்கள் நீருக்குள் அமிழ்ந்து விட்டன.

1944 ஜூன் 6ஆம் திகதி பிரிட்டிஷ் துருப்புக்கள் பிரான்ஸ் கடற்கரையில் தரையிறங்கின. அங்கிருந்து ஜேர்மன் துருப்புக்கள் விரட்டப்பட்டன. 1945இல் ஜேர்மனிக்குள்ளும் அவர்கள் புகுந்து கொண்டனர்.

ஜேர்மன் அணி ஐரோப்பிய நாடுகளில் தனது பிடியை விட்டுக்கொடுத்துவிட வேண்டியதாயிற்று. எனினும் ஜப்பான் அமெரிக்காவோடு முரண்டு பிடித்து நின்றது.

யுத்தம் முடிவுக்கு வராவிட்டால் அழிவுகள் இன்னும் பன்மடங்கு தொடர்ந்தே தீரும். எனவேதான் ஜப்பான் மீது அமெரிக்கா வீசிய அணுக்குண்டுகள் இன்றும் ஒரு சாராரால் நியாயப்படுத்தப்படுகின்றன. ஹிரோஷிமா, நாகசாகி ஆகிய ஜப்பானிய நகரங்கள் மீது வீசப்பட்ட இரு அணுக்குண்டுகளுடன்தான் ஜப்பான் அடிபணிந்தது. யுத்தம் முடிவுக்கு வந்தது. மேலும் பல அழிவுகள் தடுக்கப்பட்டன.

இதுதான் இரண்டாம் உலகமகா யுத்தத்தின் சுருக்கமான வரலாறு எனலாம். இனி மேல் அதன் அவலங்கள் சிலவற்றையும் தாக்கங்களையும் பார்க்கலாம். (தொடரும்)



ஹிட்லருக்கு மிகப் பிடித்தமான விமானி ஹின்ஸ் - உல்றிச் ரூடேல். யுத்த விமானிகளுக்கான உச்ச விருது பெற்ற இந்த வீரன் ஐந்நூறுக்கு அதிகமான சோவியத் டாங்கிகளை அழித்ததுக்கான பாராட்டுக்களைப் பெற்றவன். இவன் தாக்குதல் நடத்துவதற்காகப் பறந்த விமானங்கள் முப்பது தடவைகள் சுட்டு வீழ்த்தப்பட்டன. ஆனால் ஒவ்வொரு முறையும் எப்படியோ தப்பிப் பிழைத்து விடுவது இவன் வரலாறு.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அழித்துக் களிக்கின்ற காதல்

விண்ணுக்கு மண்மீது காதல்
விளைகின்ற பயிருக்கு மழை
கொட்டி மகிழ்கின்ற காதல்!

மண்ணுக்கு மரம் மீது காதல்
மரம் கிளைவிட்டு இலைதந்து
மருவி நிழலீயும் காதல்!

வண்டுக்கு மலர் மீது காதல்
வந்து வந்து தேனருந்தி
மயங்கி வீழ்கின்ற காதல்!

கண்ணுக்கு விழிமீது காதல்
காக்கின்ற கடமையினை கவனமாய்
காத்துநிதம் இருக்கின்ற காதல்!

பெண்ணுக்கு நகை மீது காதல்
பார்ப்பவர் தனைப் பார்த்து
பொறாமை யுறக் காதல்!

தொண்டர்க்கு சேவைமீது காதல்
தொண்டுகள் பல புரிந்து
திருப்தி கொள்ளும் காதல்!

குண்டுக்கு உயிர் மீது காதல்
குவலயத்து வாழ்கின்ற உயிர்களை
அழித்துக் களிக்கின்ற காதல!

- அரியாலையூர் **சி.சிவதாசன்**

# ஆபரணம் அணிந்த தமிழன்னை....

மணியொன்றை முடியினிலே கண்டேன் – சூடா
மணியென்றே முடிவினிலே கொண்டேன்
அணியிங்கே ஈடுஅதற் கில்லை
அம்மணியே பேரழகின் எல்லை

கூந்தலிலே உண்டுநீல கேசி
கூறிடுவார் யாருவிலை பேசி?
காந்தமென ஈர்க்குமதன் மாட்சி
கன்னியவள் கட்டழகின் ஆட்சி

காதினிற்குண் டலகேசி மின்னும்
கண்ணொளியைக் கொண்டுசெல எண்ணும்
மேதினியிற் துய்யதிந்தப் பொன்னும்
மேன்மையெனக் கொண்டு தமிழ் மன்னும்

இதழினிலே புன்னகையும் உண்டு
இயம்பிடுவேன் ராமகதை என்று
அதனழகில் ஆசைமிகக் கொண்டு
ஆரணங்கு தானணிவாள இன்று

சிந்தனையில் நல்லறிவைத் தேக்கி
சிந்தா(த) மணியழகைக் காட்டி
சிந்தையிலே தன்னிறைவை ஊட்டி
சிந்துதமிழ் நல்கிடுவாள் காட்சி

வள்ளுவரின் தெய்வமணி மாலை
வண்ணமுறச் செய்குமவள் மார்பை
தெள்ளுதமிழ் தெம்புமிகக் கொள்ளும்
தென்றலென நம்மனதை அள்ளும்

மனமணியைக் காட்டிவிடு என்றேன்
மனோ(ன்)மணிய நூல் மகிமை கண்டேன்
தனமணியே என்று அதைச் சொன்னாள்
தங்கமணி எங்கள் தமிழ் அன்னாள்

கரங்களிலே உண்டுவளை யாபதி
கண்டுமனம் கொள்ளைகொளு மாமடி
விரல்களிலே சகுந்தலையின் காவியம்
விஞ்சுஒளி கொண்டதந்த ஆழியும்

மெல்லிடையி லேதரிக்கும் மேகலை
மேனியழ கூட்டுமணி மேகலை
செல்வமக ளேயவளின் சாயலை
செப்பிவிட வேயெனக்கு வாயிலை

இளங்கோவின் சிலம்பினதி காரமே
இன்தமிழின் காலில்நடம் ஆடுமே.
பழந்தமிழின் (இ)லக்கணந்தொல் காப்பியம்
பாங்குறுமெம் அன்னையவள் பாதமே.

இத்தனையும் கொண்டவள் நம் அன்னையே,
இங்கிலிசைத் தோற்கடிப்பாள் உண்மையே
இத்தரையி லேயவளும் என்னையே
வித்தகனும் ஆக்கிடுவாள் திண்மையே

**த.தர்மேந்திரா**

# இந்த மழை ஓயாதோ?

*துப்பாக்கிச் சத்தங்கள் இடிமுழக்க*
*துன்பத்தில் மக்கள் பதைபதைக்க*
*சப்பாத்துக் காலெங்கள் தலைநெரிக்க*
*சன்னங்கள் மழையாய் உயிர்பறிக்கும்!*

*ஷெல லொன்றுசெல் என்றசொல கேட்கும்*
*செல் கின்ற பாதையில் இடிவீழும்*
*புள் ளொன்று வானத்தில் படம்போடும்*
*பந்தென்று ஆடியே பசிதீர்க்கும்!*

*முன்னுக்குப் பின்னொன்று முரணாக*
*மோதலின் செய்திகள் முரசாகும்*
*மண்ணுக்குள் மானுடம் மடிகின்ற*
*மாட்சிமை பேசியே மழை பெய்யும்!*

*இன்றல்ல நாளையிம் மண்ணுக்கு*
*ஈடேற்றம் வருமென்று தினம்வாடி*
*அன்றுண்ணச் சோறின்றி அல்லாடும்*
*ஏழையின் வயிறுக்கு மழையெங்கே?*

*நன்றல்ல நாட்டிலிவ் வாழ்வென்று*
*நீள்கடல் தாண்டிய மாந்தரின்*
*துன்பங்கள் தீர்த்திட வேண்டியே*
*தீமழை இன்றேனும் ஓயாதோ?*

*ஆண்டுகள் பலவாகிப் புரையோடி*
*ஆணிவேர் அழுகும் நிலைக்கான*
*நீண்டபோர் இனியும் ஓயாதோ*
*நாட்டினில் தமிழர் வாழாரோ?!*

*மாற்றம் மாற்றம் ஏமாற்றம்*
*மாற்றும் வழியும் ஏமாற்றம்!*
*நேற்றும் இன்றும் நேர்மாற்றம்*
*நாளும் அழிவின் தீர்மானம்!*

*பல்லினம் பல்மாந்தர் வாழ்வென்ற*
*பான்மையில் நெஞ்சத்தை மாற்றாது*
*நல்லிணக்கம் என்றும் வாராது!*
*நாட்டிலிம் மழையும் ஓயாது......*

- **மாவை. வரோதயன்** -

# நிழலாய்ப் போன நிஜங்கள்

நிலவு எட்டிப்பார்க்கையில்,
கருமேகம் திரைபோட்டது!
ஆதவன் புன்னகைக்கையில்,
மதிமுகம் மறைந்து போயிற்று!

நிழல் தேடிய என்னைப்பார்த்து
பாலைவனங்கள் பரிகசித்தன!
நிஜமாக நான் நீருக்காய் அலைகையில்,
ஒட்டகங்கள் எனைக் கேலி செய்தன!

நான் பறக்க நினைக்கையில்
தலையில் மோதிய வானம் ~ யான்
சிறகுதிர்த்து தவிக்கையில் ~ எட்டாத்
தூரத்தில் பரந்து விரிந்தது!

நான் நீச்சலடிக்க முயல்கையில்,
அலை வெகுண்டெழுந்தது! ~ நான்
இளைத்துக் களைக்கையில் ~ ஏனோ
கடல் புன்னகையால் பொங்கிற்று!

நான் நிமிர்கையில் ~ கூரை
தலையை இடித்து கொண்டது~ இன்று
கூரைகள் மாளிகையாய் உயர்ந்திருக்க,
யான் மட்டும் இன்னமும்
குள்ளமாய்............
வானை அண்ணார்ந்து பார்த்தபடி.......

- **ஜகந்தியா** -




# தீ மூட்டும் ஞாபகங்கள்

அன்பு என்கிற படிநிலையை - சிறு
ஆசை எழுப்பும் மனநிலையை
இன்பம் கொடுத்த இளமையினை - வீதி
இழுபட வைத்த இளசுகளை
என்றும் மறக்கவே முடியாதே - வய
தேறிய பொழுதிலும் அழியாதே!

(காற்)சட்டையை கிழித்த வாங்குகளை-கால்
சறுக்க வைத்த வெள்ளங்களை-கிடுகுத்
தட்டியைப் பிய்த்து ஓட்டை வைத்து - கண்
தாவியே செய்த குறும்புகளை
என்றும் மறக்கவே முடியாதே - வயது
ஏறிய பொழுதிலும் அழியாதே!

'காட்'டைக் கேட்கும் 'செக்கி'யினை - பேய்க்
காட்டி நுழைகிற வித்தையினை
பாட்டுப் பாடெனத் துண்டெழுதி - நன்கு
பம்பலடித்துக் கத்தியதை
என்றும் மறக்கவே முடியாதே - வய
தேறிய பொழுதிலும் அழியாதே!

வீதி முழுக்கச் சுற்றியதை - சுணங்கி
வீடு நுழையக் கத்தியதை
பாதி அழிந்து கெட்டவுடன் - மனம்
பாடு பட்டு முட்டியதை - நல்ல
சேதி என்று நம்பியதும் - வெறும்
சேறு என்று கண்டதனை
என்றும் மறக்கவே முடியாதே - வய
தேறிய பொழுதும் அழியாதே!

- **கி. வாயுபுத்திரன்**

# பள்ளிப் பருவப் பாங்குறு நாட்கள்

அப்பாவும் அம்மாவும் தங்கள் ~ அன்பின்
அருந்தவப் பிள்ளை பள்ளிக்குச் சென்று
தப்பாது தகுந்தநற் கல்வி ~ நல்ல
தகவாய்ப் பெற்றிடத் தாம்முந்திச் செய்வர்

சட்டம்பி யார்தன்னை நாடி(த்) ~ தக்க
சம்பிர தாயங்கள் தயவாகச் செய்து
இட்டமாய் ஏடொன்றைக் கொடுத்து ~ எண்ணும்
எழுத்தும் அறிவியு(ம்) என்றிட்டு(ப்) பணிவார்

எழுத்தறி விக்குமவ் விறைவன் ~ ஏற்று
இன்புற்றுப் பிள்ளையின் கல்விக்கு வித்தாய்(ப்)
பழுத்த மனத்துடன் பாடம் ~ தேர்ந்து
பக்குவம் பண்ணியே பள்ளிக்கு வைப்பார்

முனங்கியும் சிணுங்கியும் பிள்ளை ~ துன்ப
மூட்டமாய்(ச்) சென்றுபின், தோழரோ(டு) அன்பாய்
இணங்கிடும் மகிழ்ச்சியில் ஒன்றி ~ இன்பம்
எய்தியே கல்வியில் ஈர்ப்புடன் செல்லும்

குழந்தைத் தன்மையின் குறும்பும் ~ அங்கு
கூடிடும் தோழரின் கொட்டமும் ஆசார்
வழங்கிடும் கல்வியின் ஈர்ப்பும் ~ அவர்க்கு
வலுவையும் அறிவையும் வனப்பையும் வழங்கும்

பத்துப் பன்னிரு வயது ~ வரையும்
பலதும் பத்துமாய்(ப்) பட்டறி வோடு
மெத்தவே கூத்துக் கும்மாளம் ~ மிடுக்கு
மேவிடக் குழப்படி பலவும் புரிவர்

'இளமை பயமறி யாது' ~ என்ற
எண்ணக் கருதரு புரட்டுகள் அன்றி
வளமைக்கு மாறான செயல்கள் ~ அதனால்
வந்திடும் வேதனை சோதனை அதிகம்

விடலைப் பருவத்தில் வந்து ~ பெற்ற
விளைவினைச் சிறிது பெரிதாக நினைந்தும்
உடலைப் பற்றிடும் ஆசையைப் ~ புரிந்தும்
உழட்டியும் சுழற்றியும் காதலைப் பற்றும்

விளையாட்டு ஆர்வங்கள் உந்தும் ~ வேறு
வினைகளும் வம்புகள் வந்துமே தீரும்
பிழைபட்டுப் பெற்றோரின் ஏச்சும் ~ ஊரர்
பேச்சும் அடிக்கடி வந்துமே விஞ்சும்

நண்பர்கள் தோழிகள் நாட்டம் ~ குழுவாய்
நாளும் அலைந்திடும் பலவகைத் தேட்டம்
உண்பதில் உறங்கலில் ஊட்டம் ~ உடலின்
உணர்ச்சிகள் வசப்பட்டு உடலுளம் வாட்டம்

இத்தனை சிக்கல்கள் எனினும் ~ கல்வி
ஏற்றமாய் மாற்றமாய் இதந்தந்து நிற்கும்
அத்தனை அனுபவம் எல்லாம் ~ போற்றும்
ஆளுமை தந்துநல் மனிதனாய் மாற்றும்

பள்ளியை விட்டபின் வளர்ந்து, ~ வாழ்வில்
பட்டிடும் அனுபவப் பாடங்கள் எண்ணில்
வெள்ளிடை மலைபோலப் பள்ளியின் ~ நாட்களே
வியத்தகு வாழ்வென் விளம்புதல் சாலும்.

- **நயினைக் கவிஞர் - நாக. சண்முகநாதபிள்ளை**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


# இப்பொழுது காகக் குமரிகளுக்கு கலியாணசீச

"கா.....கா...."

"சீ.... காலங்காத்தால மூதேவி" என்று கலைத்தாள் வீட்டுக்காரி. சிலர் எச்சிற் கையால் காகம் கலைப்பதில்லை என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அவளைப் பொறுத்தமட்டில் எந்தக் கையால் கலைத்தாளோ எனக்குத் தெரியாது! ஆனால் காகத்தைப் பற்றிய சிறிது அறிவு இருந்தால், அதன் புத்திக் கூர்மையை, பழக்க வழக்க விசேடங்களை அறிந்திருந்தால், அந்த வீட்டுக்காரி விரட்டுவதற்குப் பதிலாக காகத்தைப் பார்த்து வியந்திருப்பாள்.

## காகங்களின் வகைகள்

நமது நாட்டில் காகங்களின் இனங்கள் இரண்டு உண்டு. ஒன்று ஊர்க்காகம் (வீட்டுக்



மேலைநாட்டிற்குரிய முக்காடுடைய காகம்.

காகம் அல்லது சாம்பற் காகம் - House Crow / Ash Crow) மற்றது அண்டங் காகம் (காட்டுக்காகம் - Jungle Crow)

ஊர்க் காகம் மனிதர்கள் வாழும் இடங்களில் அவர்தம் குடிமனையை அண்டி வாழும். இது சிறியது. கழுத்துப் பகுதி சாம்பல் நிறமானது. ஏனைய பகுதிகள் கறுப்பு.

அண்டங்காகம் வயற்புறங்களிலும் காடுகளிலும் வாழும். இது பெரியது; முழுவதும் கறுப்பு நிறம். இப்பொழுது ஊர் மனைகளுக்கும் இவை பரவிவிட்டன.

இரு இனங்களும் ஒன்றாகக் கூடியிருப்பதைக் காணலாம். இவற்றுக்கிடையே இனக்கலப்புக்கள் ஏற்பட்டுள்ளதோ தெரியாது. யாராவது கண்டுபிடித்து விஞ்ஞான உலகிற்கு அறிவித்தால் பெயரும் புகழும் கிடைக்கும். இத்தகைய இனக்கலப்புக்கள் இயற்கையாக நிகழ்வது மிக அபூர்வம். ஆனாலும் நிகழ்ந்துள்ளன. சாதிகள், இனங்களுக்கிடையே மனிதன் பல இனக்கலப்புக்களை ஏற்படுத்தியுள்ளான். கோவேறு கழுதை ஓர் உதாரணம். விவரமாக பிறிதொரு சமயம் பார்ப்போம்.

ஐரோப்பிய காகங்களில் நாலு வகைகள் உண்டு. முக்காடுள்ள காகம் (Hooded Crow) கறுப்புத் தலையும் நரைநிற (சாம்பல் நிற) உடலும் கறுப்புச் செட்டைகளையும் வாலையும் கொண்டது. சாதாரண காகம் (Crow) முழுவதும் கறுப்பு, சிறியது. றூக் (Rook) காகமும், றேவன் (Raven) காகமும் முழுவதும் கறுப்பு நிறமுடையவை; அளவில் பெரியவை.

காகங்கள் அழுக்ககற்றிகள் (Scavenger). அழுக்குகளை உணவாகக் கொள்ளும். பூச்சிகள், புழுக்கள் மற்றும் பறவைகளின் முட்டைகள், குஞ்சுகளையும் உணவாகக் கொள்ளும். காகங்கள் கோழிக் குஞ்சுகளைக் கொத்திக் கொண்டு போவதை நீங்கள் கண்டிருக்கலாம். அல்லது கேள்விப்பட்டிருக்கலாம். வீட்டு எஜமானி குசினியில் இருக்கும்போது காகம எங்கோ இருந்து அவதானித்துக் கொண்டிருக்கும். அவள் பராக்காக இருக்கும்போது அது பறந்து வந்து அலகு கொள்ளுமளவு உணவை அள்ளிக்கொண்டு போய்விடும்.

## 'குமரிக்' காகங்களுக்கு 'கலியாணக்' காலம்

ஆண்டு தோறும் ஆனி மாதம் இளங் காகங்கள் சோடி சேரும் காலம். இதன் காரணமாக இக்காலங்களில் (அதாவது இப்பொழுது) காகங்கள் ஆரவாரப்படுவதை நீங்கள் அவதானித்திருக்கலாம். காகங்களுக்கிடையே "பையிற்" (Fight) நிகழ்வதை நீங்கள் காணலாம். போரிடுபவை சோடி சேராத இளம் ஆண்கள். (இளந்தாரிகள்). போர் உக்கிரமாக நிகழும். சில சமயம் ஒன்றின் இறப்பிலும் முடிவடைவதுண்டு. தக்கனப் பிழைப்பதற்கும் அவற்றின் சந்ததி விருத்தியாவதற்கும், தகாதன மறைவதற்கும் அவற்றின் சந்ததி தோன்றாதிருப்பதற்கும் இயற்கையின் ஏற்பாடு இது. (இயற்கைத் தேர்வு). சண்டை நடக்கும் போது ஏனைய காகங்கள் சூழவிருந்து பெரும் ஆரவாரத்துடன் அவதானிக்கும். போரில் வெற்றி கண்ட ஆண்கள் "குமரிப் பெண்களின்" கைபிடிக்கும். காகங்கள் சோடி சேர்ந்தபின் வாழ்க்கைக் காலம் முழுவதும் ஒன்றாக இருக்கும். ஏதாவது விபத்தில் சோடியில் ஒன்று இறந்தால் மற்றதும் அதிர்ச்சியில் இறந்துவிடும். அல்லது உணவு உட்கொள்ளாது இறந்துவிடும். மறுமணம் என்ற பேச்சுக்கே இடமில்லை.

சோடி சேர்ந்த காகங்கள் ஆடி மாதத்தில் கூடு கட்டும் (இக்காலத்தில் தும்புத்தடிகள் வெளியில் இருந்தால் தும்புகள் களவு போய்விடும். கவனம்.) கூடு கட்டுவதில் ஆண், பெண் இரண்டும் பங்கு கொள்ளும். பனை, தென்னை மற்றும் உயரமான மரங்களில் கூடு கட்டும். பின் முட்டைகளை இட்டு இரண்டும் அடைகாக்கும். குஞ்சுகள் இரண்டு, மூன்று மாதங்கள் கூட்டில் வளரும். இரு பெற்றோர்களும் உணவூட்டும். பின் சிலகாலம் பெற்றோர்களுடன் திரியும். தாமாகவும் உணவு உட்கொள்ளும். பெற்றோர்களும் உணவூட்டும். பின் சுயாதீனமாகப் பறந்து போய்விடும்.

## நாடு சுத்தித் தொழிலாளர்

நகரசுத்தித் தொழிலாளர்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறோம். அதே போல் காகங்கள் நாடு சுத்தித் தொழிலாளர்கள். பூமியைச் சுத்தமாக வைத்திருப்பதற்கு இயற்கை அன்னை பல படைப்புக்களைப் படைத்திருக்கிறாள். அவற்றுள் காகமும் ஒன்று.


காகம் இன்னதென்று பாராது எதையும் உண்ணும். சில விலங்குள் உணவு விடயத்தில் மிகுந்த கட்டுப்பாடு உடையவை. எல்லாவற்றையும் உண்ணமாட்டா. காகம் எதையும் உண்ணும். இருந்தும் பல ஆண்டுகள் வாழ்ந்து விடுகின்றது. காகத்தின் வயது 100 வருடங்கள் என்று கணக்கிட்டு இருக்கிறார்கள்.

## விவேகம்

வேகம் இல்லாவிட்டாலும் அதிவிவேகம் உள்ளவை காகங்கள். சிறப்பாக ஊர்க்காகங்கள். பறவைகளுக்குள்ளேயே அதிக விவேகம் உள்ளவை இவை. காகம் தனது புத்திசாதுரியத்தால் மனிதனையே ஏமாற்றிவிடுகிறதே.

-குகன்-

மற்ற விலங்குகள் அதற்கு எம்மாத்திரம்? நாயை ஏமாற்றி அதற்கு வைத்த உணவைக் காகங்கள் உண்டு மகிழ்வது பார்ப்பதற்கு வேடிக்கையாக இருக்கும். முன்புறமாக உண



மேலைநாட்டிற்குரிய றேவன் காகம்.

வுத் தட்டை நோக்கி ஒருகாகம் வரும். அதைக் கலைப்பதற்கு நாய் ஓடும் போது பின்புறமாக வந்து தட்டைத் தாக்கும் வேறு சில காகங்கள். இவற்றை நாய் கலைக்கும் போது முன் புறத் தட்டு தாக்கப்படும்; தட்டு காலியாகும் வரைக்கும் அல்லது காகங்களின் வயிறு நிறையும் வரைக்கும் இது நடைபெறும். அதில் கவனிக்க வேண்டியது காகங்கள் நாயை ஏமாற்றும் போது ஒரேயடியாகப் பறந்து போகாது கொஞ்சம் கொஞ்சமாகப் பாய்ச்சல் காட்டி நாயை அலைக்கழிக்கும். நாய் கட்டுக்கொடியில் இருந்தால், நாய்க்குப் போக்குக்காட்டி தட்டை அலகினால் இழுத்தெடுத்து நாய் குரைத்துமாய நாய்க்கு முன்னால் இருந்து கொண்டே சாவகாசமாக உணவு கொள்ளும். நாய் சீறும்; பாயும்; ஏதோவெல்லாம் செய்யும். ஆனால் காகமோ அலட்டிக் கொள்ளாமல் தன்கருமமே கண்ணாயிருக்கும்.

## உண்மைக் கதை

இப்போதெல்லாம் காகங்கள் தண்ணீர் பைப்பிலிருந்து தண்ணீர் குடிப்பதற்குக் கற்றுக் கொண்டுவிட்டன. நீர் சிந்தாத நேரத்தில் அலகால் குழாயின் திருகாணியைக் கொத்துவதை நான் கண்டிருக்கிறேன். சிலசமயங்களில் திருகாணி இளக நீர் சிந்த ஆரம்பிக்கும். இதைப் பார்க்கும் போது காகம் கூசாவுக்குள் கற்களைப் போட்டுத் தண்ணீர் குடித்ததெனச் சொல்லும் பழங்கதை ஏன உண்மையாக இருக்கக் கூடாது?

எமக்கும் [illegible] இடையே உள்ள வித்தியாசம் காகங்களுக்கும் தெரிகின்றது போலும். (காகங்களுக்கு ஆள்களை வேறுபடுத்தி அடையாளம் காணமுடியும் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். வீட்டுக்காரரையும் விருந்தினர்களையும் வேறுபடுத்தி அறிய அதனால் முடியும்) குழந்தையின் அல்லது சிறுவனின் கையிலுள்ள உணவுப் பண்டம் அவன் வாய்க்குள் போவதற்கு முன் அவன் கைக்கெட்டிய பண்டம் அவன் வாய்க்கெட்டாது காகத்தின் வாய்க்கு எட்டுவதை நீங்கள் கவனித்திருக்கக் கூடும். தாக்குதல் நிகழுமுன் காகம் இருப்பதே தெரியாது. எங்கிருந்தோ வரும்; திடீரென்று தாக்கும்; எங்கோ போய்விடும்.

பாடசாலை மாணவர்கள் உணவுப் பெட்டிகளில் உணவு கொண்டு வருவதுண்டு. பெட்டி மூடப்பட்டு, கொழுக்கிமாட்டப்பட்டு சட்டை ஊசியால் காக்கப்பட்டிருக்கும். காகமோ சட்டை ஊசியைக் கழற்றி கொழுக்கியை விலக்கி உணவைப் பெற்றுவிடும். மாணவர்கள் வகுப்பில் இல்லாத நேரம் இது நிகழும்.

சில தினங்களுக்குமுன் நான் எனது வீட்டு வாசலில் இருந்து கொண்டு சுருட்டுப் பொதியைப் பக்கத்தில் வைத்து விட்டு ஒரு சுருட்டை ஊதிக்கொண்டிருந்தேன். எங்கிருந்தோ ஒரு காகம் திடீரென வந்து லபக்கென்று சுருட்டுப்

**அங்கிகள் பலவிதம்**
**ஒவ்வொன்றும் ஒருவிதம்**

பொதியைக் கொத்திக் கொண்டுபோய் முன்னால் இருந்த மரத்தில் ஹாயாக இருந்து கொண்டு பொட்டலத்தைக் கொத்திப் பார்த்து விட்டு, போட்டுவிட்டுப் பறந்துவிட்டது. சுருட்டின் அருமை அதற்குத் தெரியவில்லைப் போலும்.

## வெறுங்கை வீச்சு


காகத்தின் விவேகத்துக்கு மேலுமொரு எடுத்தக் காட்டு. நீங்கள் இருந்து கொண்டு வெறுங்கையை வீசி, வலிக்க வலிக்க வீசி, காகத்தை விரட்டிப் பாருங்கள். அது அசையாது. குனிந்து ஒரு கல்லை எடுங்கள். நிமிர்ந்து குறி வையுங்கள். அதுவரைக்கும் காகம் அங்கு நில்லாது.

விவேகமான பறவையானபடியால் காகத்தைப் பழக்குவது சுலபம். காகத்தைப் பழக்கி ஆங்கிலப்படங்களில் நன்றாக நடிக்கவும் வைத்திருக்கிறார்கள். ஹிச்ஹொக்கின் "பறவைகள்" என்ற படத்தில் நடிப்பதற்காககாக இனத்தைச் சேர்ந்த ரேவன் (Raven) என்ற வகையைச் சுலபமாகப் பழக்கிவிட்டார்களாம். நடிக்க வைக்கும்போது ஒருமுறைக்குமேல் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்படவில்லையாம். ஆனால் அல்பாற்றோஸ் (Albatros) என்ற கடற் பறவையையும் கடற்பேட்டையும் (Sea Gull) பழக்கி எடுப்பதற்கு மிகவும் கஷ்டப்பட்டார்களாம். பின் பழக்கியதைச் செயற்படுத்த வைப்பதற்கு ஒரு தரத்துக்கு ஒன்பதுதரம் சொல்லவேண்டி இருந்ததாம். அத்தனை மட்டமான மூளை அவற்றுக்கு. நமது வீட்டுக்கோழி இருக்கிறதே, ஏதோ வேளாவேளைக்குக் கூவுகின்றது - நல்லகாரியம். ஆனால் விவேகத்தைப் பொறுத்தவரை தற்குறிதான்.


ஐம்பதுகளில் வெளிவந்த "பில்லும் கூவும்" (Bill and Coo) என்ற கிளிகள் மாத்திரம் நடித்த புகழ்பெற்ற படத்தில் காகம் வில்லனாக சிறப்பாக நடித்துப் புகழைத் தேடிக்கொண்டது.

## கணித மேதை

காகம் ஒரு கணித மேதையும்கூட; அதற்கு மூன்று வரைக்கும் எண்ணத் தெரியும் என்று கூறுகின்றார்கள் ஆராய்ச்சியாளர்கள். உங்கள் வீட்டில் ஒரு விருந்து நடைபெறுவதாக வைத்துக் கொள்வோம். (இதற்காக விருந்து வைத்துப் பார்த்து விடாதீர்கள்) வெளியே எங்காவது ஒரு மரத்தில் இருந்து கொண்டு போவோர் வருவோரைக் கவனித்திருக்கும் ஒரு காகம். ஒருவர் வெளியே போகின்றாரா? "ஒன்று" என்று காகம் எண்ணிக்கொள்ளும். மீண்டும் ஒருவர் வர "இரண்டு", மற்றுமொருவர்வர... "மூன்று"



மேலைநாட்டிற்குரிய காகம்.



மேலைநாட்டிற்குரிய றூக்

என்று எண்ணிக் கொண்டே சாப்
குள்ளே பறந்துவரும். எல்லோ
டார்கள் என்பது அதன் எண்
மூன்றுக்கு மேல் எண்ணத்தெரிய
மூன்றுபேர் போனதும் எல்லோ
டார்கள் என்று எண்ணி கோட்
கிறது.

## விளையாட்

வீட்டில் ஊற்றுப் பேனாமூடி,
ணாடி, சீப்பு, குழந்தைகளின்
போன்ற பொருள்கள் காணாமற்
னடியாக வேலைக்காரனைச்
வேண்டாம். பளபளப்பான
காகத்திற்கும் நாட்டம், ஆகைய
தன்கூட்டை அலங்கரிக்க எடு
விடும். காகக் கூட்டிலும், கூட்டின்
மாதிரியான பொருள்கள் இருப்
லாம். வேறு இனப்பறவைகளின்
இறகுகளையும் அங்கு காணல

ஓட்டு வீட்டில் சிறுகற்களைப்
உருண்டோடும் வேடிக்கையை
காகங்களுக்குத் தனிவிருப்பம்,
வரை மீண்டும் மீண்டும் கல் போ
இருந்து வேடிக்கை பார்த்துக் செ

## கூடு கட்டுவது; குஞ்ச பராமரிப்பது

காகம் சிறுசுள்ளிகளைக் கொ
களைக்கொண்டும் வட்டவடிவமா
கட்டும். கூட்டின் உட்புறம் மெத்
பதற்காக தும்புகளின்மேல் தனது
கைகளைப் பிடுங்கி அடுக்கும். கூ
புருவத்துக்குப் புருவம், உட்புற
எட்டு அங்குலமும், வெளிப்புற
தொடக்கம் ஒன்றரை அடிகள் வ
கும். விவேகம் இருந்தும், கூடுக
தில் காகம் கற்றுக்குட்டிதான். கூ
முட்டைகளை இட்டு, ஆணும் பெ
மாறி அடைகாக்கும், வித்தியாச
கள் கூட்டில் இருந்தால் அலக
வெளியே தள்ளிவிடும். கோ
எல்லா முட்டைகளையும் வெள்
ளையும்காகம் அடைகாக்க
பொரித்த பின் ஆணும் பெண்
இரைதேடி ஊட்டி குஞ்சுகளை
குஞ்சுகள் கூட்டில் உள்ள காலத்
அறியாது கூடுள்ள மரத்தின் கீ
களின்பாடு ஆபத்துத்தான். யாரி
படாத பெரிய பண்டிதர்களும்கூ
டம் குட்டுப்பட நேரிடும்.

## ஆகாயத் தாக்கு

அலங்காரமாக, சிறப்பாக வெ
புக்கள் அணிந்து சென்றால்
பெருமை போலும். மரத்திலிருந்
பறந்து கொண்டோ குறிதவற
போட்டு பலரின் எரிச்சலை வா
கொள்ளும்.

## மூடநம்பிக்கைக

காகத்திற்கு ஒரு கண்ணி
யுண்டு; அதனால்தான் பார்க்க மு
ஒரு மூடநம்பிக்கை. காகத்தி
இருபக்கமும் கண் இருக்கின்ற
னால் இரு கண்களாலும் ஒரே
ஒரே பொருளைப் பார்க்க முடி
யைத் திருப்பி ஒருகண்ணால் ஒ
பார்க்கும் போது, மறுகண் மற்ற
பார்க்கும் (சகல பறவைகளுக்
தான், ஆந்தைகளைத் தவிர. ந
நேர்நோக்கியிருக்கின்றபடியால்
முறைவேறு. எம்மால் பொருள்கள
யும் அறிய முடியும் (Three Dimen
எம்மைப்போலக் காகங்களாலும் (
களினாலும்) நிறங்களைப் பார்த்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீசன்!



ற்குரிய றூக்காகம்.

ாண்டே சாப்பாட்டு அறைக்
ம். எல்லோரும் போய்விட்
அதன் எண்ணம். அதற்கு
ன்ணத்தெரியாது. அதனால்
ம் எல்லோரும் போய்விட்
ாணி கோட்டைவிட்டு விடு

## ளயாட்டு

பேனாமூடி, மூக்குக் கண்
ந்தைகளின் வளையல்
காணாமற் போனால் உட
க்காரனைச் சந்தேகிக்க
ளப்பான பொருள்களில்
ம், ஆகையால் அவற்றை
கரிக்க எடுத்துச் சென்று
லும், கூட்டின் கீழும் இந்த
ர்கள் இருப்பதைக் காண
வைகளின் அலங்காரமான
கு காணலாம்.
ுகற்களைப்போட்டு, அது
டிக்கையைப் பார்ப்பதில்
விருப்பம், அலுப்பேற்படும்
ும் கல் போட்டு முகட்டில்
பார்த்துக் கொண்டிருக்கும்.

## ; குஞ்சுகளைப்
## ரிப்பது

களைக் கொண்டும், தும்பு
ட்டவடிவமான கூடுகளைக்
புறம் மெத்தென்று இருப்
மேல் தனது தூவி இறக்
அடுக்கும். கூட்டின் விட்டம்,
ம், உட்புறமாக ஏறத்தாழ
வெளிப்புறமாக ஓர் அடி
அடிகள் வரையும் இருக்
தும், கூடுகட்டும் விடயத்
ட்டிதான். கூடு கட்டியபின்
ஆணும் பெண்ணும் மாறி
வித்தியாசமான முட்டை
தால் அலகால் உருட்டி
டும். கோழியைப்போல
யும் வெள்ளைக் கட்டிக
டைகாக்காது, குஞ்சு
ும் பெண்ணும் மாறிமாறி
தஞ்சுகளை வளர்க்கும்.
ள்ள காலத்தில் விஷயம்
ரத்தின் கீழே செல்பவர்
தான். யாரிடமும் குட்டுப்
தர்களும்கூட காகத்தினி
டும்.

## தாக்குதல்

றப்பாக வெள்ளை உடுப்
சென்றால் காகத்திற்குப்
ரத்திலிருந்தோ அல்லது
குறிதவறாமல் எச்சம்
சலை வாங்கிக் கட்டிக்

## க்கைகள்

கண்ணில்தான் மணி
பார்க்க முடியும், என்பது
காகத்தின் தலையில்
இருக்கின்றபடியால் அத
ாலும் ஒரே சமயத்தில்
ர்க்க முடியாது. தலை
ன்ணால் ஒரு பக்கத்தைப்
கண் மற்றப்பக்கத்தைப்
வைகளுக்கும் இதேகதி
த் தவிர. நமது கண்கள்
றபடியால் நமது பார்வை
பொருள்களின் ஆழத்தை
hree Dimensional View)
களாலும் (சகல பறவை
ளப் பார்த்தறிய முடியும்.

ஆனால் எமக்குத் தெரியும் எல்லா நிறங்களும் அதற்குத் தெரிவதில்லை (நிறப்பார்வை - Colour Vision - பாலூட்டிகளில் குரங்குகளுக்கும் மனிதனுக்கும் மாத்திரமுண்டு. மேயும் விலங்குகளுக்கு புல்பூண்டுகள் பச்சையாகத் தெரிவதில்லை, நரைநிறமாகத்தான் -Grey - தெரியும். சிவப்பு நிறத்துக்கு மாடு வெருளும் என்பது வெறும் கட்டுக்கதை).

## விருந்தோம்பும் பண்பு பயத்தினால் ஏற்படுவது

காகங்கள் கரைந்து தமது இனத்தை அழைப்பதை விருந்தோம்பலுக்கு உதாரணமாக நாமெல்லோரும் எடுத்தாள்வது வழக்கம். காகங்கள் ஒன்று கூடியபின் உணவைப்பங்கு போடும் விடயத்தில் சண்டை, சச்சரவு, பூசல்கள் ஏற்படுவது ஏனோ? அப்பொழுதெல்லாம் ஐம்பது மனிதர்கள் போடக்கூடிய சத்தத்தை ஐந்து காகங்கள் போடுகின்றனவே! விருந்தோம்பும் பண்பு எங்கே போய்விட்டது என்றா கேட்கின்றீர்கள்? இருந்தாற்றானே போவதற்கு! பின் இனத்தை அழைப்பதன் காரணம் என்ன? பயம்...! பயம் காரணமாகத்தான் படை திரள்கின்றது. அதை விஷயம் தெரியாது நாம் விருந்தோம்பலுக்கும் ஒற்றுமைக்கும் உதாரணமாக எடுத்தாள்கின்றோம்!

## கலகம்


காலையில் வீட்டுவளவில் காகம் கரைவது கலகத்துக்கு அறிகுறி என்றதொரு நம்பிக்கை உண்டு. காகமும் ஒரு பறவை (சனீஸ்வரனின் வாகனம் என்ற விளக்கம் இங்கு வேண்டாம்). எந்தப்பறவை கத்துவதனாலும் நமக்கு ஏதும் நிகழப்போவதில்லை. அந்தப் பறவைகளுக்கு ஏதாவது நிகழலாம். இனங்கள் கூடலாம்; அல்லது பதுங்கியிருந்து எதிரி தாக்கலாம், அது வேறு விடயம். 'காகமிருக்கப் பனம் பழம் விழும்' என்பதில் நம்பிக்கையுள்ளவர்கள், 'காகம் கரைவதால் கலகம் ஏற்படும்' என்பதிலும் நம்பிக்கை வைக்கலாம். (பல்லி சொன்னதும் பஞ்சாங்கத்தைப் புரட்டுபவர்கள், காகம் கரைந்ததும் பலனைத் தேடட்டும்).

## சண்டை

காகங்கள் சோடி சேருகின்ற காலத்தில் காகங்களுக்கிடையே போர் மூளும். வெற்றி பெற்றவர்களுக்கு பேடைகள் பரிசாகக் கிடைக்கும். இது ஆண்களுக்கு (வாலிபர்களுக்கு) இடையே மாத்திரம் ஏற்படும் சண்டை. ஆனால் காகங்களுக்கிடையே ஆண், பெண் வேறுபாடு இன்றி சண்டை ஏற்படுவதுண்டு. இரு காகங்களுக்கிடையே சண்டை ஏற்பட்டால், ஒன்று பின்வாங்கி ஓடும் வரைக்கும் அல்லது இறக்கும் வரைக்கும் சண்டை நடக்கும். அப்பொழுது மற்றக்காகங்கள் எல்லாம் பெரிய ஆரவாரத்தோடு சுற்றி வளைத்திருந்து சண்டையைப் பார்க்கும்; நாம் மல்யுத்தம் அல்லது குத்துச் சண்டையைச் சுற்றி வர இருந்து இரசித்துப் பார்ப்பதைப் போல. ஒரு காகம் இறந்து விடடால் ஓலமிட்டு "ஒப்பாரி" வைத்து "செத்த வீடு" கொண்டாடும். சாதாரணமாகக் காகங்கள் இறந்தாலும் "செத்தவீட்டுக் கொண்டாட்டம்" நடைபெறும்.

## ஆஸ்திரேலியாவில் புதிய தொல்லை


கொழும்பிலிருந்து செல்லும் கப்பல்களில் கட்டணம் இன்றிப்பிரயாணம் செய்து கப்பல் கரையை அடையுமுன் தாம் பறந்து சென்று கரையை அடைந்து, அதனால் துறைமுகத்தில் "வரட்டும் ஒரு கை பார்க்கிறோம்" என்றிருந்தவர்களுக்கு முகத்தில்(காகக்)கரியைப் பூசி - சகல சௌகரியங்களும் நிறைந்த ஆஸ்திரேலியாவில் - சௌகரியமாக இனப்பெருக்கம் செய்து அவர்களுக்கும் (எமக்குத் தருவதைப் போல) தொல்லை கொடுக்கின்றனவாம்.



இதில் வேடிக்கை என்னவென்றால் கறுப்பினமக்களின் குடியேற்றத்தை விரும்பாத ஆஸ்திரேலிய அரசாங்கம் காகங்களை அனுமதிக்க வேண்டியிருக்கிறது. ஆஸ்திரேலியா கறுப்பர்களுக்கு (மயோரிகளுக்கு - ஆதித் தமிழர்களுக்கு) சொந்தமான நாடு என்பது காகங்களின் எண்ணம்போலும்.

இத்தனை இருந்தென்ன? இவ்வளவு விவேகம் இருந்தென்ன? காகங்களைக் குயில்கள் ஏமாற்றி விடுகின்றனவே. அது ஒரு தனிக் கதை பிறிதொரு சமயம் பார்ப்போம்.


# கண்டு பிடியுங்கள்




மேலே A,B,C,D,E,F என ஆறு உடைந்த சாடிகள் காணப்படுகின்றன. அவற்றின் உடைந்த ஆறு துண்டுகள் 1,2,3,4,5,6 என மாறிக்கிடக்கின்றன. எந்தத் துண்டு எந்த ஜாடிக்குரியது என்பதைக் கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்.

(விடை XV ஆம்பக்கத்தில்)

# மறைந்துள்ள உருவம்!



மேலேயுள்ள படத்தில் ஓர் உருவம் மறைந்துள்ளது. இப்படத்தில் உள்ள முக்கோண வடிங்களை மட்டும் நிறந்தீட்டிப் பாருங்கள். மறைந்திருந்த உருவம் தெரியவரும்.

# ஜாடித் தேன்

ஜாடித் தேனும் தரையிலே
தவறிக் கொட்டிக் கிடந்தது.
நாடி அதனை ஈக்களும்
கூடி வந்து மொய்த்தன.

தேனின் மீது அமர்ந்தன;
திருப்தி யாகக் குடித்தன.
தேனைக் குடிக்கும் ஆவலில்
சிந்தை மறந்து போயின.

அதிக நேரம் அப்படி
அமர்ந்த தாலே தேனுமே,
பதிய வைத்த கால்களைப்
பசைபோல் பற்றிக் கொண்டது.

எழுந்து பறக்க முயன்றன;
இறக்கை அடித்தப் பார்த்தன.
முழுதும் தோல்வி! ஆதலால்,
மூச்சுத் திணற லானது.

உடம்பு முழுதும் தேனுமே
ஒட்டிக் கொண்டு ஈக்களை
உடும்புப் பிடியாய்ப் பிடித்தது
உயிரை வாட்டி வதைத்தது.

சிக்கிக் கொண்டு ஈக்களும்
செய்வ தேதும் இன்றியே
மிக்க சிரமப்பட்டன
மூச்சு நிற்கும் வேளையில்,

'ஆசை அதிகம் கொண்டதால்
ஐயோ! இன்று நாமெல்லாம்
மோசம் போனோம்!' என்றன்
மிகவும் வருந்தி இறந்தன!

# சிங்கத்தின் மோசம் அறிந்த நரி



ஒரு நாள் ஒரு சிங்கம் இரை தேடிக் கொண்டிருந்தது. ஒன்றும் அகப்படவில்லை. கடைசியில் ஒரு குகையைக் கண்டது. 'இந்தக் குகை எதாவது ஒரு மிருகம் தங்குமிடமாக இருக்கக்கூடும். அந்த மிருகம் தங்குவதற்கு வரும் வரை காத்திருப்பேன். வந்தவுடன அடித்துக் கொன்று தின்பேன்' என்று சிங்கம் அதனுள்ளே ஒளிந்திருந்தது.

நெடுநேரம் சென்று அந்தக் குகையில் தங்குகின்ற ஒரு நரி திரும்பிவந்தது. குகை வாசலில் சிங்கத்தின் காலடிச் சுவடுகளைக் கண்ட நரி விழித்துக் கொண்டது. உள்ளே சிங்கம் இருக்கிறதா இல்லையா என்று தெரிந்து கொண்டுதான் நுழைய வேண்டும் என்று முடிவு செய்துகொண்டது.

நரி, 'ஏ குகையே! ஏ குகையே!' என்று கூப்பிட்டது.

பதில் இல்லை.

'ஏ குகையே! ஏ குகையே!, இன்று ஏன் பேசவில்லை?' என்று நரி இரண்டாவது முறை கூப்பிட்டது.

அப்போதும் பதில் இல்லை.

எப்போதும் இந்தக் குகை பேசும் போலிருக்கிறது. 'நான் இருப்பதால் பயந்து பேச வில்லைப் போலும். குகை பேசாவிட்டால் நரி கோபித்துக் கொண்டு திரும்பிப் போய் விடும். நான் என்ன செய்வது என்று எண்ணிய சிங்கம், குரலை மாற்றிக் கொண்டு 'ஏன்' என்று கேட்டது.

இந்தப் பதிலைக் கேட்டதும் நரி தப்பித்தோம். பிழைத்தோம் என்று அங்கிருந்து ஓடி விட்டது.

எதையும் ஆராய்ந்து செய்வது நல்லது.

~ பஞ்சதந்திரக் கதை~




# அன்று போரிலே இன்று ஊரிலே

அன்று போர்களிலே 'வில்' பயன்படுத்தப்பட்டது. ஆனால் இன்று ஊர்களிலே 'வில்' இருக்கின்றது. வில்கொண்ட ஊர்கள் வருமாறு:~

1. மட்டுவில்.
2. மந்துவில்.
3. கெருடாவில்.
4. நுணாவில்.
5. கண்டுவில்.
6. சுருவில்.
7. பனுவில்.
8. மிருசுவில்.
9. இத்தாவில்.
10. உப்புவில்.
11. உடுவில்.
12. இணுவில்.
13. நுகவில்.
14. வேவில்.
15. கொக்காவில்.
16. கோண்டாவில்.
17. கோணாவில்.
18. நீவில்.
19. முழங்காவில்.
20. பொத்துவில்.
21. நந்தாவில்.
22. கிராம்புவில்.
23. கொக்குவில்.
24. மண்டுவில்.
25. இராமாவில்.

ந.கரன்
(மட்டுவில் ம.வி.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| | வி சனி | சூ | |
| | இராசிச்சக்கரம் | | ராகு வெ புத |
| கே | | | சந் |
| | | | செவ் |

*மாற்றம் 19.6.99இல் மகம் - சிங்கம் இராசியில் சந்திரன் நிற்கும். 23.6.99இல் புதன் கடகம் - இராசியில் மாறும்.*

*அரசாங்கம் புதிய பாதுகாப்பு அலுவல்களை விரிவுபடுத்தலாம். தென்பகுதியில் தொழிலாளர்கள், மாணவர்கள், தீவிரப் போக்குடையவர்கள் உடன் சேர்ந்து தலை தூக்குவர்.பல பிரச்சினைகள் முளைவிட்டுக் கிளம்பும். அரசியல்வாதிகளுக்கு சோதனையான காலமாகும். தொடர்ந்து யுத்தபயம் நாட்டில் அதிகரித்தபடி இருக்கும். சமாதானப் பேச்சுக்களும் அங்கொன்றும், இங்கொன்றுமாக இருக்கும். இந்தியாவில் புதிய அணுகுமுறைகளால் வடக்கு யுத்தம் - தேர்தல்கள் 'ஸ்ரண்ட்' ஆக்கும். அரசு செல்வாக்குப்பெறும். எதிர்க்கட்சிகளுக்காக மக்கள் பிரிந்து நின்று செயற்படுவார்கள். மீண்டும் கூட்டாட்சியே ஏற்படும். தெற்கில் ஜெயலலிதாவிற்குச் செல்வாக்கு அதிகரிக்கும். அமெரிக்கா தனது செல்வாக்கை வடக்கு - மத்தியகிழக்கு நாடுகளில் தொடர்ந்து பிரயோகித்தபடி இருக்கும் எனக் கிரகநிலைகள் காட்டுகின்றன.*

# இந்த வார இராசி பலன்

**19-06-1999 இலிருந்து 25-06-1999 வரை**

## மேடம்

அளவுக்கதிகமாக கோபப்படுவதும், ஆசைப்படுவதும் எவருக்கும் நல்லதல்ல. தொழில் ஸ்தானத்தில் இந்நிலையில் செயற்படாமல் தவிர்த்துக் கொள்ளுங்கள் மேலதிகாரிகள் உதவிகள் செய்வார்கள். வாகனம், காணி, வீடு சம்பந்தமான செலவுகள் அதிகரிக்கும். அரச உதவிகள் சிலருக்குக் கிடைக்கலாம். புத்திரர்களால் மகிழ்ச்சி அடைவீர்கள். வயிற்றுப் பீடை, நெஞ்சுப்படபடப்பு, கண்மங்கல், சளித்தொல்லை என்பன சில்ரை வருத்தலாம். போக்குவரத்து, வியாபாரம், பத்திரிகை, புடைவை, கடல் தொழில், விவசாயம், குருத்தொழில் போன்ற துறையினருக்கு விட்டுவிட்டு மாற்றங்கள் ஏற்பட இடமுண்டு. முயற்சியால்தான் எவரும் முன்னுக்கு வரலாம். நாலு காசு உழைக்கலாம். அளவுக்கதிகமாக நித்திரையை விட்டுவிட்டு கருமத்தில் கண்ணாக இருங்கள். எதிலும் நற்பலன்கள் வரும்.

*அதிர்ஷ்டநாள் :- புதன், வெள்ளி.*

## இடபம்

சக்திக்கு அதிபதி - அறிவுக்குத் தலைவன் - சூரியன் உதயத்தில் இருக்கின்றான். அக்கறையுடன் அமைதியாக இருந்து உறுதியான செயல்களைச் செய்வீர்கள். எந்தவிஷயத்திலும் ஒளிவு மறைவின்றி நடந்து கொள்வீர்கள். தொழில்ஸ்தானத்தில் பல புதிய திட்டங்களை தடையின்றி செயற்படுத்துவீர்கள். எதிலும் ஒரு சோம்பேறித்தனம் இருக்கத்தான் செய்யும். உலகத்தில் நாம் செய்யாததையா பிறர் செய்யப் போகின்றார்கள் என அடிக்கடி எண்ணுவீர்கள். கைகால்நோ, நாரிநோ, களைப்பு, உஷ்ணபீடைகள் என்பன வருத்தலாம். அயலவர்களுடன் வீண் பகை ஏற்படலாம். பொறுமையாக இருக்கவும். அமைதி கலகநாஸ்தி அல்லவா?

*அதிர்ஷ்டநாள்:- புதன், வெள்ளி.*

## மிதுனம்

சிலர் தமது தவறுகளை நியாயப்படுத்துவதற்காக அதிகம் கதைத்து, கதைத்து தமக்குச் சாதகமான கருத்துக்களைச் சொல்லியபடி இருப்பார்கள். இவையெல்லாம் உங்களுக்கு விளங்காததல்ல. நாலுவிஷயம் நாலு இடத்திலும் ஓடிஓடி அறிந்து வரும் உங்களுக்கு இவை புதியவையல்ல. தொழில் ஸ்தானத்தில் கலகலப்பாக இருப்பீர்கள். நண்பர்களுடன் கருத்து வேற்றுமை ஏற்பட்டு அடிக்கடி யோசிப்பீர்கள். அதிகமாக உழைக்கப் பாடுபடுவீர்கள். கைகால்பிடிப்பு, தலையிடி, கண்நோ, உடல்களைப்பு, நரம்புச் சோர்வு, விட்டுவிட்டுக் கோபம் என்பன அடிக்கடி வரச்செய்யும். வீட்டில் யாரிடம் இரகசியங்களைச் சொல்லி, ஆலோசிப்பீர்களோ அவர்கள் உங்களுக்கு அமைதி வர வழிசமைப்பார்கள். செய்தித்தொடர்பு, ரி.வி, மருந்து, பத்திரிகை, நிர்வாகம், விவசாயம், இராசாயனம் ஆகிய துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு நல்ல மாற்றங்கள் ஏற்படும்.

*அதிர்ஷ்டநாள்:- புதன்.*

## கடகம்

மயக்குவிழியாள் வெள்ளியும், போகராஜன் ராகுவும், புத்திநாதன் புதனும் உதயத்தில் சேர்ந்திருக்கும் காலம். எதிர்பாலாருடன் நிதானமாக இருக்க வேண்டும். அல்லது நாலுபேர் நாலு விதமாகக் கதைக்காமல் விடமாட்டார்கள். தொழில்ஸ்தானத்தில் படபடப்புடன் பேசாதீர்கள். ஊருக்கு நன்மைசெய்யப் போய் உபத்திரவப்பட இடமுண்டு. போதைப் பொருள் - வாசனைப்பொருள்களை அதிக

# சோதிட சஞ்சீவி

பாவனைப்படுத்த எண்ணாதீர்கள். சொந்தபந்தம் வேதனை தரலாம். நாரி விறைப்பு, கைகால் வீக்கம், படபடப்பு, சளித்தன்மை என்பன சிலருக்கு கொடுக்கலாம். சச்சரவு, வியாக்கியானங்களால் நல்லவர்களை ஏன் பகைக்கின்றீர்கள்? வீடு, வாகனச் செலவுகள் அதிகரிக்கும். உணவுத்துறை, ரி.வி, நகை, போக்குவரத்துத் துறை என்பவற்றால் அதிக இலாபங்கள் வரலாம்.

*அதிர்ஷ்டநாள்:- சனி,புதன், வியாழன்.*

## சிங்கம்

தூங்குபவர் போலச் சிலர் நடிப்பார்கள். இவர்களை நம்பலாமா? பிச்சை போடத்தான் வேண்டும். ஆனால் பிச்சை எடுப்பதே தொழிலாகவோ, நடிப்பாகவோ கொள்ளும் பலர் எமது சமுதாயத்தில் இருக்கின்றார்கள். இவர்களால் எத்தனை பேருக்கு துன்பங்கள் என யோசிப்பீர்கள். ஒவ்வொருவரும் தனிமனித முயற்சியால் முன்னுக்குவர வேண்டும். நீங்கள் உங்கள் தொழில்ஸ்தானத்தில் சில புதிய திட்டங்களை வைத்து மேற்சொன்னவர்களை கண்டுபிடிப்பீர்கள். உண்மைக்கும் செயலூக்கத்திற்கும் எப்பொழுதும் உதவி செய்து வருவீர்கள். அதிக களைபப்பு. அலைச்சல், இருதயப் படபடப்பு, வியாபாரம், சமயத்துறை, குருத்துறை, நிர்வாகத் துறை தொடர்பானவர்களுக்கு மாற்றங்கள் ஏற்படும். இடமாற்றங்களைத் தவிர்த்துக் கொள்வீர்கள்.

*அதிர்ஷ்டநாள்:- சனி, புதன், வியாழன்.*

## கன்னி

தேடிவந்த துன்பத்தை - நாடிவந்த காரணத்தை அறிய வாய்ப்பு வரும். தொழில்ஸ்தானத்தில் புதிய செய்தி ஒன்று வந்து மகிழ்வைத் தரும் காலமாகும். விடாமுயற்சி வெற்றி தரும். உண்மைப் பிரார்த்தனையும் - தெய்வ நம்பிக்கையும் உயர்வை எப்பொழுதும் தரும். சத்துருக்கள் உங்களைக் கண்டு பயப்படும் காலமாகும். நரம்புத் தளர்ச்சி, சளித்தொல்லை, வாய்வுக் காய்ச்சல், காய்ச்சல் என்பன சிலரை வருத்தலாம். பிரயாணத்துறை, நகைத்துறை, ரி.வி, செய்திப் பத்திரிகைத் துறை,குருத்தொழில், வாசனைவியாபாரம், புகையிலை வியாபாரம், விவசாயத்துறையினருக்கு மாற்றங்களும் நன்மைகளும் கொடுக்கும் காலமாகும். உங்களைச் சிலர் கவனித்தபடி இருப்பதனால் அவதானமாக நடந்து கொள்ளுங்கள்.

*அதிர்ஷ்டநாள்:- சனி, புதன், வியாழன், வெள்ளி.*

# மகாதேவா ஜோதிடம்

## துலாம்

பொய்மைகள் அதிக காலங்கள் நீடிப்பதில்லை. தமது சுய நலத்திற்காகச் சிலர் நல்லவர்க்ளை குற்றவாளி ஆக்குகிறார்கள். நீங்கள் பொறுமையாக இருக்கவேண்டிய காலமாகும். தொழில்ஸ்தானத்தில் மேலதிகாரிகளின் புகைச்சலுக்கு ஆளாகி - சாந்தியாகும் சனி - வியாழனின் ஏழாம் பார்வையால் விட்டுவிட்டு நல்லது கெட்டது நடக்கும். பொறுமையாக இருக்கவும். குடும்ப நலனுக்காக ஓடியாடித்திரிவீர்கள். எதிர்ப்பாலாருடன் வாக்குவாதப்படஇடமுண்டு. தலைவலி, வயிற்றுக்கோளாறு, அடிக்கடி களைப்பு, குடல் வருத்தங்கள் என்பன இருக்கும். நகைத்துறை, சுடல் துறை, பத்திரிகைத்துறை, சட்டத் துறை, குருத்துறை, நிர்வாகத்துறையினருக்கு நன்மைகள் ஏற்படும். பந்தபாசம் ஒன்று கேள்வி கேட்கும். சமாளித்துக்கொள்ளுங்கள்

*அதிர்ஷ்டநாள்:- சனி, புதன், வியாழன்,வெள்ளி.*

## விருச்சிகம்

உங்களுக்குப் போராட்டச் சூழ்நிலை ஏற்பட்டாலும் புத்திசாலித்தனமாக நடந்துகொள்ளுங்கள். தொழில் ஸ்தானத்தில் ஏட்டிக்குப் போட்டிகள் ஏற்படும். நீங்ள் செய்யாததைச் செய்த்தாகச் சொல்லி வேதனை தருவார்கள். காணி, வீடு, வாகனம், தொழில் சம்பந்தமான மாற்ற யோசனைகள் கொடுக்கும். குடும்பத்தில் கருத்து வேற்றுமைகள் ஏற்படும். நெஞ்சுவலி, வயிற்றுநோ, மலசல வருத்தம், வாய்வுத்தொல்லை, தோல்வருத்தங்கள் வரலாம். கடல் துறை, மருத்துவத் துறை, விவசாயம், பத்திரிகைத்துறை, செய்தித்துறையினருக்கு மாற்றங்கள் கொடுக்கும். இறை பக்தி கொண்டுதான் எதையும் சாந்தப்படுத்தலாம். மனித எண்ணங்கள் அடிக்கடி மாற்ற உணர்வுகளைத்தந்து யோசனைகளை அதிகரிக்கும்.

*அதிர்ஷ்டநாள்:- சனி, புதன், வியாழன், வெள்ளி.*

## தனுசு

நன்மைக்காகப் போராடுவதில் குற்றமில்லை உலகில் நாம் போராடாமல் எதைத்தான் பெறமுடிகிறது? வெளிப்படையான எண்ணக் கருத்துக்களை தொழில் ஸ்தானத்தில் நீங்கள் சொன்னாலும் அதை மதிப்பாக எடுக்கமாட்டார்கள். உலகம் நயத்தைக் கருதித்தான் செயல்படுகிறது. வீட்டில் கருத்து வேற்றுமை ஏற்படும். அதை இதைச் சொல்லி சமாளியுங்கள். வயிற்றில் நோ, வாய்வுத்தொல்ல, இடுப்புவலி, காயங்கள் கைகால்வலி என்பனவரலாம். நகைத்துறை, ரி.வி.துறை, செய்தித்துறை, போக்குவரத்துத்துறை, மருந்துத் துறையினருக்கு நன்மைகள் ஏற்படும். பொதுத்தொண்டு, தூரதேசப் பிரயாணங்களை தவிர்த்துக்கொள்ளுங்கள். அல்லது நஷ்டங்கள் ஏற்படலாம்.

*அதிர்ஷ்டநாள்:- சனி, புதன், வியாழன், வெள்ளி.*

## மகரம்

நீங்கள் எதைச்செய்தாலும் நாலு பேருக்குக் கட்டாயம் தெரியவரும். தொழில்ஸ்தானத்தில் உங்களைப் பலர் எதிர்ப்பார்கள். எதிலும் மெல்ல மெல்ல போய்க்கொண்டுதான் இருப்பீர்கள். சகோதரபாசம், காணி, வீடு, வாகனச் செலவுகள் அதிகரிக்கும். எதிர்ப்பாலாருடன் பகைக்க நேரிடலாம். பொதுத் தொண்டுகளால் பகை வரும். உணவுசமியாத்தன்மை, கை, கால்நோ, மனக்குழப்பம், நரம்புச் சோர்வு, மூட்டுவலி என்பன கொடுக்கும். மின்சாரத்துறை, இரும்புத் துறை, விவசாயத்துறை, நகைத் துறை, வாகனத்துறை, செய்தி - சினிமாத்துறையினருக்கு மாற்றங்கள் கொடுக்கும். வெளிநாட்டுச் செய்திகளால் நன்மைகள் ஏற்படும். பொருளில் கொடுக்கல் - வாங்கல் செய்வதனால் பல இழப்புக்களைச் சந்திப்பீர்கள்.

*அதிர்ஷ்டநாள்:- சனி, வியாழன், வெள்ளி.*

## கும்பம்.

எப்பொழுதும் கட்டுப்பாடாகவும் ஒழுங்காகவும் செயற்பட்டபடி இருப்பீர்கள். எதையும் அழபடுத்துவதில் கெட்டிக்காரர். தொழில்ஸ்தானத்தில் எதிர்ப்பாலாருடன் கருத்துவேற்றுமைகள் ஏற்பட இடமுண்டு. கைகால்வலி, நரம்புச் சோர்வு, நெஞ்சுப்படபடப்பு, மறதி என்பன கொடுக்கலாம். குருத்துறை, செய்தித்துறைகள், போக்குவரத்து வேலைகள், பத்திரிகைத்துறை, விவசாயத்துறை,கூலி வேலை செய்பவர்கள் நன்மை அடைவார்கள். இடமாற்றங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். வெளிநாட்டில் இருந்து நற்செய்திகள் வந்தாலும் மன நிறைவைக் கொடுக்காது. ஆலயங்களுக்குச சென்று வாருங்கள். சிலர் வைத்தியத்தின் [illegible] வைத்தியசாலைக்குச் சென்று வருவார்கள்.

*அதிர்ஷ்டநாள்:- சனி, வியாழன்.*

## மீனம்

இந்தஉலகமே கெட்டுவிட்டது. ஐரோப்பாவில் வடக்கே போர், இந்தியாவின் வடக்கே போர், இலங்கையின் வடக்கே போர் - இந்த வடக்குத்திசைகளில் ஏன் போர் அதிகரிக்கிறது? அணு ஆயுதங்களை ஏன் பிரயோகிக்கின்றார்கள்? என அடிக்கடி யோசிக்கிறீர்களா? போராட்டங்களினால்தான் விடிவுவரும் என்று மனிதர்கள் நினைக்கின்றார்கள். நீங்கள் தொழில் ஸ்தானத்தில் கோபித்துக் கோபித்து - போராடிப் போராடி உங்கள் காரியங்களைச் சாதித்துக் கொள்வீர்கள். வாய்வு, வாதஉளைவு, நரம்புச் சோர்வு, சளிப்பீடை, பித்தரோகங்கள் எனச் சிலருக்கு மாறிமாறி வரலாம். நகைத்தொழில், கமிசன் வேலை, மருந்துவியாபாரத்துறை, செய்தி - பத்திரிகைத்துறை, புடைவைத்தொழில், குருத்தொழில் செய்பவர்கள் அதிக நன்மை அடைவார்கள். குலதெய்வ வழிபாடு நன்மைதரும்.

*அதிர்ஷ்டநான்:- சனி, வியாழன்.*

# இருளுலகம் சேராத ஆறு

நமது மனம் வாளா இருக்கமாட்டாது. அது பலபல விடயங்களை நினைந்து கொண்டே இருக்கும். சில சமயம் 'இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ?' என்று எண்ணும். மறுபிறப்பில் சுவர்க்கம் புகவேண்டும் என நினைக்கும். இல்லை, நரகம கிடைத்துவிடுமோ என்று கூட அஞ்சும். நரகத்தை இருளுலகம் என்றும் கூறுவார்கள். எவரும் நரகத்தை விரும்புவது இல்லை. அறிஞர்கள் மக்களிடம் கொண்ட அருள் உள்ளத்தால் நரகஉலகம் புகாமல் இருக்க வழி கூறுவார்கள்.

வள்ளுவர் பெருமான் மறுபிறப்பு, சுவர்க்க – நரகம் முதலியன பற்றித் தெய்வத்திருக்குறளில் பல இடங்களில் குறிப்பிடுகிறார். சங்ககாலச் சான்றோருள் ஒருவர், 'மறுபிறப்பு இல்லை' என்பாரை மடவோர் என்கிறார். நரகம், 'இருள் சேர்ந்த இன்னா உலகம்' என்றும் 'அழறு' என்றும் எல்லாம் பேசப்படுகின்றது. நரக உலகை நிரயம் என்றும் நூல்கள் கூறும். பௌராணிகர் உலகு பதினான்கு என்பார்கள். மேலே ஏழு உலகங்களும், கீழே ஏழு உலகங்களும் இருக்கின்றனவாம். நரக உலகம் கீழே இருப்பதாகக் கூறப்படும்.

எங்கள் திரிகடுக ஆசிரியர் நல்லாதனார் இருளுலகம் சேராதிருக்க வழி கூறுகிறார். அதைக் காண்போம்.

எவரும் பொருள் கொண்டே பூதலத்தில் வாழவேண்டி இருக்கிறது. அதனால் ஒவ்வொருவரும் பொருள் ஈட்டவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். 'திரை கடல் ஓடியும் திரவியம் தேடு' என்கிறார்கள். பொருளைத் தேடுவது – தாமே உண்டு, உடுத்துக் காணி நிலம் வேண்டி, மாடிவீடு கட்டி, வங்கியில் வைப்புச் செய்து, மகிழ்ந்திருக்க மட்டுமல்ல. எங்கள் புலவர் என்ன சொல்லுகிறார்? 'ஈதற்குச் செய்க பொருளை' என்கிறார். அதாவது வறியார்க்குச் செல்வத்தை வழங்குவதற்காகவே அதனைக் கூட்டவேண்டும் என்கிறார். தெய்வப்புலவர் திருவள்ளுவரும் பிறர் பசியை நீக்கிப் பகுத்துண்டு வாழவேண்டும். அதனால் வரும் இன்பமே பெரிது என்கிறார்.

### தேன்கூடு

இவர் அடுத்து 'யாம் கற்பன எல்லாம் கற்று அறிந்தோம்' என்று கூறும் கல்விமான்களுக்கு அறிவுரை பகருகின்றார். 'பிறரெல்லாம் அறத்தின் வழியில் வாழவே நூல் செய்ய வேண்டும்' என்கிறார்

அறம் என்றதும் அது என்ன? என்ற வினா எழுகின்றது. பெரியோர், விதியானும் விலக்கானும் செய்வன – தவிர்வனவற்றை வரையறுப்பது அறம் என்று விளக்கம் கூறுவர். சுருங்கக் கூறின், மனித வாழ்வில் கொள்ளத்தக்ககனவும் தள்ளத்தக்கனவும் இவையென வரையறுப்பதெனலாம். ஆகவே நல்லன எல்லாம் – தகுதியாயின எல்லாம் – புண்ணியமெல்லாம் – நோன்பெல்லாம் – அறமே என்பது போதரும்.

வள்ளுவப் பெருமான் மனத்துக் கண் மாசிலனாதல் அறம் என்பர். மனத்தை மாசு செய்வன காமம், வெகுளி, மயக்கம் முதலியன. இன்னாச்சொல், மொழியை மாசுபடுத்துகின்றது. தூய இல்வாழ்கை செயலை தூய்தாக்கும். எனவே அறிஞர்களால் செய்யப்படும் நூல்கள் மனம், மொழி, செயல் என்பவற்றைத் தூய்தாகச் செய்ய வல்லனவாய் அமைதல் வேண்டும் என்பது போதரும்.

### சிந்திப்போம் செயற்படுவோம

மற்றும் ஒன்று – சொல்லுவன,பேசுவன எல்லாம் அருள் கலந்தன ஆதல் வேண்டும். வள்ளுவர் பெருமான் 'அருள் சேர்ந்த நெஞ்சினார் இருள் சேர்ந்த உலகம் புகார்' என்று கூறுவர். பிறசான்றோர், 'இன் சொலால் அன்றி இருநீர் வியனுலகம் வன்சொலால் மகிழாது' என்பர். எனவே அருளொடு கலந்த சொல்லினர் நரகம் அடையார் என்பது ஒருதலை.

இனித் திருகடுகம் பாடலை நோக்குவோம்

ஈதற்குச் செய்க பொருளை அறநெறி
சேர்தற்குச் செய்க பெருநூலை-யாதும்
அருள் புரிந்து சொல்லுக சொல்லையிம் மூன்றும்
இருளுலகம் சேராத ஆறு

செல்வர் ஈதலைச் செய்தும் அறிஞர் அறத்திறம் விளக்கும் நுல்களைச் செய்தும் யாவரும் அருள் கலந்து இன் சொல் இயம்பியும் நரகத்துன்பத்தை தவிர்த்துக் கொள்வோம்.

(தொடரும்)

-சிகண்டியார்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைந்துபோகும் கோலங்கள்

-இராகவன்-

"மாமா! அடிவேண்டிக் காட்இல்லாமப் போனா ஆமி பிடிக்கும்" அக்காவின் மகன் விதுரன் நான் வீட்டில் இருந்து புறப்பட்ட போது சொன்ன அந்த மழலைச் சொற்கள் சிரிப்பை வரவழைக்காமல் என்னைச் சிந்திக்க வைத்தன. இரண்டு வயதே நிரம்பிய அந்தப் பிஞ்சு உள்ளத்துக்கு தீக்குள் விரலை வைத்தால் எத்த கையை உணர்வு ஏற்படும் என்பதை அறிந்து கொள்ளக்கூடிய பக்குவம் இன்னும் வரவில்லை. ஆனால் அடையாள அட்டை இல்லாமல் வெளியே போகக் கூடாது என்பது மட்டும் தெளிவாகத் தெரிகின்றது. இதில் ஆச்சரியப்படுவதற்கெதுவுமில்லை. காலம் ஏதோ ஒரு வடிவில அந்தப்பிஞ்சு உள்ளத்துக்கு அனுபவம் போதித்திருக்கிறது.

காலம் என்பது யாருக்காகவும் காத்திருக்காது. அது ஒழுங்காக நகர்ந்து கொண்டே இருக்கும். சிலர் வாழ்வில் காலம் தனது காலடிச் சுவடுகளைப் பதித்துச் செல்லுகையில் பசுமையான நினைவுகளைப் பரிசளித்துச் செல்லும். சிலர் வாழ்வில் மாறாத வடுக்களைத் தந்து விட்டுப் போகும். இன்றைக்கு இலங்கைத் தமிழராகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் காலம் ஏதோவொரு வகையில் வேதனைக்கான அடையாளத்தைப் பதித்து விட்டு நகர்ந்து கொண்டேயிருக்கிறது. இனி வரும் காலங்களிலும் இத்தனை காலத்து வேதனை வடுக்களைவிடவும் பாரதூரமான துன்ப நினைவுகளை தரக்கூடும். இது தலைவிதியல்ல. தமிழனின் விதி.

என் வாலிபக் காலத்து வாழ்க்கையை ஒரு கணம் எண்ணிப் பார்க்கின்றேன். நான், தேவன், வாசவன், நேசன், குட்டி என ஐவர் அடங்கியது அந்த முறைசாராக்குழு. திருட்டுத்தனமாக இளநீர் பறிப்பது, மாங்காய் பறிப்பது முதல் கொண்டு சிறுவயதுக்குரிய அசட்டுத்தனமும் குறும்பும் நிறையவே எங்களிடம் இருந்தன. எங்கள் குழுவுக்கு நான்தான் தலைமை வகிப்பேன். கேதீஸ்வரன் என்ற என்னுடைய முழுப்பெயரை செல்லமாகத் தேவன், வாசன், நேசன் ஆகிய மூவரும் 'கேது' என்று அழைப்பார்கள். குட்டி மட்டும் 'கேதண்ணா' என்றே அழைப்பான். காரணம் அவன் மட்டும் அந்தக் குழுவில் வயது குறைந்தவன். மற்றவர் மூவரும் என் வயதுக்காரர்கள். குட்டியின் முழுப்பெயர் சோமேஸ்வரன். ஆனால் குட்டி என்றால்தான் எங்களுக்குத் தெரியும். இந்த ஐவரைவிட நான் கொஞ்சம் விஷயம் தெரிந்தவன் போல் காட்டிக் கொண்டதால் என்னைத் தல்லவராக ஏற்றுக்கொண்டார்கள். அதைவிட இன்னுமொரு விஷயம் என்னவென்றால் நான் கொஞ்சம் துணிவானவன்; பயமில்லாதவன். இதனால் நான் சொல்லும் ஆலோசனைகள் எவையாயினும் அதை ஆராயாமலே ஏற்றுக்கொள்ளும் தன்மை அவர்களிடம் இருந்தது. அதிலும் குட்டி மிகவும் பயந்த சுபாவம் உடையவன். இரவு நேரங்களில் தாயின் சேலைத்தலைப்பைப் பிடித்தபடியே திரிவான். எங்களுடன் எங்கேயும் வெளியில் வரமாட்டான்.

"டேய்! நாங்கள் நாலு பேர் இருக்கிறம்; உனக்கென்னடா பயம்?" நாங்கள் அவனுக்குத் துணிவை வரவழைக்க முயற்சிப்போம்.

"நான் வரேல்லை. அப்பா அடிப்பார்." அவன் தந்திரமாகப் பதில் சொல்லித் தப்பி விடுவான்.

நாங்கள் பகலில் கூட பேய்,பிசாசுகளைப்பற்றிக் கதைத்தால் குட்டிக்கு உடம்பெல்லம் வியர்க்கத் தொடங்கிவிடும். இதனால் அவனை வியர்க்க வைத்து வேடிக்கை பார்ப்பதற்கே பேய்க்கதைகளை ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்குவோம்.

எங்களுக்கு நெடுநாளாக ஓர் ஆசையிருந்தது. குட்டியை ஒரு நாளாவது இரவில் வெளியில் அழைத்துச் சென்று வேடிக்கை பார்க்க வேண்டும் என்பதே அந்த அவா. அந்த அவா நிறைவேறும் சந்தர்ப்பமும் வந்தது. யார்க்கரு பிள்ளையார் கோயிலில் காத்தவராயன் கூத்து ஒரு வெள்ளிக்கிழமை இரவு நடைபெற ஏற்பாடாகி இருந்தது. கூத்துப் பார்க்கும் சாக்காக குட்டியை இரவு வெளியில் அழைத்து வர முடிவு செய்தோம். குட்டி முன்னேற்பாடாக "அப்பா அடிப்பார். நான் வரரேல்லை" என்று சொல்லிவிட்டான். இருப்பினும் அவன் அப்பாவிடம் அனுமதி பெற்றுவிட்டோம். தகப்பனே அனுமதி தந்த பிறகு அவனால் எந்த விதச்சாக்குப் போக்கும் சொல்ல முடியவில்லை.

நாங்கள் ஏற்கனவே போட்ட திட்டப்படி தேவனும் வாசவனும் உடம்பு முழுவதையும் மறைத்து வெள்ளை உடை தரித்து கோயிலுக்குச் சற்றுத் தொலைவிலுள்ள யார்க்கருப் பள்ளிக்கூடத்தின் முன்பாகவுள்ள ஆலமரத்தில் ஏறி அமர்ந்திருந்தனர். நானும் நேசனும் குட்டியை நன்றாக இருட்டிய பிறகு அவனுக்குத் துணிவை வரவழைக்கக் கூடிய கதைகளைச் சொல்லி பள்ளிக்கூட ஆலமரத்தின் அருகாக அழைத்து வந்தோம். அதே நேரம் ஆலமரத்தின் மீது ஒளிந்திருந்த தேவனும் வாசவனும் பயங்கரமாகக் கூச்சலிட்ட படி வேகமாக இறங்கினர்.

"ஐயோ! அம்மா பேய்" எனப் பயங்கரக் கூச்சலிட்டபடி மூர்ச்சையானான் குட்டி. விளையாட்டு விபரீதமாக முடிந்ததால் நாங்கள் பயமடைந்தோம். கோயில் தண்ணீர்த் தொட்டியில் இருந்து தண்ணீர் மொண்டு வந்து குட்டியின் முகத்திற் தெளித்தேன் நான். மயக்கம் தெளிந்த அவன் "ஐயோ, பேய்!" என்று கூறியவாறு அழத்தொடங்கினான். "எடே பேயில்லையெடா நாங்கள் தான்ரா, உன்னைப் பயப்படுத்த அப்படிச் செய்தனாங்கள்"என்று நாங்கள்உண்மையைச சொல்லி அவனைச் சமாதானப்படுத்த முயன்றோம். முடியவில்லை. அவன் தொடர்ந்து அழுதபடியே இருந்தான். அவனை ஒருவாறு அழைத்துச்சென்று அவன் வீட்டில் சேர்த்தோம். அதற்குப் பிறகு அவன் இரண்டு, மூன்றுநாள்கள் காய்ச்சலிற் கிடந்தான். சில நாள்களில் அதுவும் சரியாகிவிட்டது.

இந்தச் சம்பவத்துக்குப் பிறகு அவன் எங்களுடன் சேர்வதை விட்டு விட்டான். காலப்போக்கில் நாங்கள் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்து உயர்தரப் பரீட்சைக்குத் தயாரானோம். அப்போது குட்டி சாதாரணதரத்தில் படித்துக் கொண்டிருந்தான். அப்போதும் கூட குட்டி தோற்றத்தில் சிறியவனாகவும் பயந்த சுபாவமுடையவனாகவும் இருந்தான். நாங்கள் தோற்றத்தில் பெரியவர்களாக இருந்தோம். கூடவே துணிச்சல்காரராகவும் இருந்தோம். இந்த நாள்களில் எங்களைக் கண்டால் நட்போடு சிரித்துவிட்டு நழுவி விடுவான் அவன்.

எத்தனை சந்தோஷத்துடன் சென்று கொண்டிருந்தது எங்கள் வாலிப வாழ்க்கை. இந்தச் சந்தோஷமான வாழ்க்கை சின்னாபின்னப்பட்டு சிதறித் திசைமாறிப் போகும் என்று எங்களுக்கு அப்போது தெரியாது. மகாத்மா திரையரங்கில் 'ஒரு கைதியின் டயறி', லக்ஷ்மி திரையரங்கில் 'பூவே பூச்சூடவா' பார்த்தபடியே எங்கள் வாழ்க்கை சந்தோஷமாகப் போய்க்கொண்டிருந்தது. உண்மையில் 1987ஆம் வருடம் எங்களுக்கு ஒரு மகிழ்ச்சிகரமான ஆண்டாகவே தோன்றிற்று. ஆனால் எங்கள் எண்ணம் எத்தனை தவறானது என்பது அடுத்து வந்த சில நாள்களில் தெளிவாயிற்று.

எல்லா நாள்களைப் போலவும் அந்த நாள் விடியவில்லை. அன்று விடிகாலை வானில் காகங்கள் பறப்பதற்குப் பதிலாக ஹெலிகளும், குண்டுவீச்சு விமானங்களும் பறந்தன. நான் நித்திரையில் இருந்து திடுக்கிட்டு விழித்தேன். அம்மா சொன்னாள் "தீசன்! ஹெலி, பொம்மர் எல்லாம் மோசமாய்ச் சுத்துது: எழும்பிக்கெதியா பங்கருக்குப் போடா" வழமையில் அம்மா சொல்லும் வார்த்தைகளுக்கு மறுத்து ஏதாவது பதில் சொல்லும் நான் எதுவும் சொல்லாமல் பதுங்குகுழியை நோக்கி ஓடினேன். அங்கே ஏற்கனவே அக்காவும் தங்கச்சியும் அடைக்கலம் புகுந்து நடுங்கிக் கொண்டிருந்தனர். நான் பதுங்குழி வாசலில் நின்று வானத்தைப் பார்த்தேன். இன்னமும் சூரியன் தன் கதிர்களைப் பரப்பாத வானத்தில் மங்கலாய்ப் பல குண்டுவீச்சு விமானங்கள் வட்டமிட்டுக் கொண்டிருந்தன."எணை! அம்மா கெதியா அப்பாவையும் கூட்டிக் கொண்டு வாணை" என்று நான் கத்தினேன். அடுத்தகணம் எங்கோ மிக அருகில் விமானம் ஒன்று வீசிய குண்டு பெருத்தசத்தத்துடன் விழுந்து வெடித்தது. அதைத் தொடர்ந்து மேலும் சில குண்டுகள் விழுந்து வெடித்தன. "ஐயோ! அம்மா, அப்பாவுக்கு என்ன நடந்ததோ கடவுளே!" அக்கா வசந்தியும் தங்கை சுகந்தியும் பதுங்குகுழிக்குள் அழுது புலம்பத் தொடங்கினர். அவர்களை ஆறுதல் படுத்த "அவைக்கு ஒண்டும் நடக்காது. நீங்கள் ஒப்பாரி வைக்காமல் காதைப் பொத்திக்கொண்டு இருங்கோ பார்ப்பம்" அதட்டலுடன் சொன்னேன்.

சத்தங்கள் ஓய்ந்த பின்னர் "பொம்மர் எல்லாம் போயிட்டுது: எல்லோரும் வெளியில் வாருங்கோ!அவன் அடுத்த தரம் குண்டு நிரப்பிக்கொண்டு வாற துக்கிடையிலே முகத்தைக்கிகத்தைக் கழுவிக் கெதியாயச் சாப்பிடுங்கோ" அப்பாவின் குரல் தெளிவாய்க் கேட்டது. அதைத் தொடர்ந்து, "ஓமோம், கெதியாய் அலுவலை முடியுங்கோ" என்ற அம்மாவின் குரல் கேட்டது. ஒரு தற்காலிக நிம்மதியுடன் பதுங்குகுழியில் இருந்து வெளியே வந்தோம். அப்பா செய்திக்காக வானொலியைத் திருகினார். "யாழ். குடாநாட்டில் வடமராட்சியை மையப்படுத்தி 'ஒப்பரேஷன் லிபரேஷன்' என்ற இராணுவ நடவடிக்கை ஒன்று ஆரம் பிக்கப்பட்டுள்ளது. அதனால் அப்பகுதியில் ஊரடங்கு உத்தரவு மறுஅறிவித்தல் வரை தொடர்ந்து அமுலில் இருக்கும்" என எந்தப் பதற்றமும் இல்லாமல் ஒருவர் செய்தி வாசித்துக் கொண்டிருந்தார்.

நான் கிணற்றடியில் முகம் கழுவிக் கொண்டிருந்த போது, மேற்கு வானில் இருந்து பறந்து வந்த இரண்டு ஹெலிகளில் ஒன்று நடுவானில் துண்டுப்பிரசுரங்களை அள்ளிவீசி விட்டுப் போனது. கொக்குக் கூட்டங்கள் பறந்து செல்வது போல அவை பல திசைகளிலும் பறந்தன. எங்கள் வீட்டு முற்றத்திலும் இரண்டொரு துண்டுப் பிரசுரங்கள் வந்து விழுந்தன. நான் மின்னல் வேகத்தில் விரைந்து சென்று அவற்றைப் பொறுக்கி எடுத்தேன். அப்பா கேட்டார். "என்னடா! நோட்டீசோ! என்னவாம். ஒருக்காப் பெலத்து வாசியன்."

நான் துண்டுப்பிரசுரத்தை வாசிக்கத் தொடங்கினேன்.

"அப்பாவித் தமிழ் மக்களே! நாட்டின் சமாதானத்தைக் குலைக்கவும், தமிழ், சிங்கள, முஸ்லிம் சகோதர ஒற்றுமையில் வேற்றுமையை ஏற்படுத்தவும் தீவிரவாதக்குழுக்கள் முயல்கின்றன. இத்தீவிரவாதக்குழுக்கள் தமது சுயநலத்துக்காக மக்களின் நிம்மதியைக் கெடுத்து யுத்தகாலங்களில் மக்களைக் கேடயமாகப் பயன்படுத்திவருகின்றன. இதனால் உங்களின் நிம்மதியை நிரந்தரமாக்கவும் சமாதானத்தை நிலைநிறுத்தவும் 'ஒப்பரேஷன் லிபரேஷன்' என்ற இராணுவ நடவடிக்கை ஒன்றை குடாநாட்டின் மீது துவக்கியுள்ளோம். இந்த நடவடிக்கையில் அப்பாவிகளாகிய நீங்கள் அநியாயமாகக் கொல்லப்படுவதைத் தவிர்க்குமுகமாக உங்கள் உறைவிடங்களுக்கு அருகில் உள்ள ஆலயங்களிலும் தேவாலயங்களிலும் மற்றும் வணக்க தலங்களிலும் தஞ்சம் புகுந்திருக்க தாழ்மையுடன் வேண்டுகின்றோம்.- பாதுகாப்புப் படையினர்."

நான் வாசித்து முடித்ததும் அம்மா பதறினார். "ஐயோ! வீட்டில இனி இருக்கிறது ஆபத்து, கெதியாய் வெளிக்கிடுங்கோ. தச்சன்தோப்புப் பிள்ளையார் கோயிலுக்குப் போவம்"

"பொறப்பா! உனக்கு எல்லாத்துக்கும் அவசரம். ஊர்டங்குச் சட்டம் போட்டிருக்கிறான். வெளிக்கிட்டுப் போகவிட்டுட்டு மேலயிருந்து தீட்டி விட்டான எண்டால், என்ன செய்யிறது? கொஞ்சம் பார்த்து வெளிக்கிடுவம்" என அப்பா அம்மாவை ஆறுதல் படுத்த முயன்றார்.

"வீட்டில் இளந்தாரிப்பிள்ளையையும், குமர்ப்பிள்ளையளையும் வைச்சுக் கொண்டு என்னண்டப்பா இருக்கிறது. நீங்கள் வராவிட்டால் இருங்கோ! நான் பிள்ளையளோட போறன்"அம்மா புலம்பினாள். இறுதியில் அம்மாவின் புலம்பல் வென்றது.

தச்சன்தோப்புப் பிள்ளையார் கோயில் நிரம்பி வழிந்தது. கோயில் திருவிழாவுக்குக் கூட இத்தனைசனம் வருவதில்லை. நாங்களும் அந்தச் சனத்துடன் இணைந்து கொள்கின்றோம். எல்லோருடைய பேச்சிலும் துயரம் கலந்திருந்தது. மரணபயத்தின் ரேகைகள் முகத்தில் படர்ந்திருந்தன. சிரித்த முகங்களைத் தேட வேண்டியிருந்தது. அங்கே கூடியிருந்தவர்களில் பெரும்பான்மையினர் காலை உணவுகூட அருந்தியிருக்க மாட்டார்கள். பசியிருந்தால்தானே சாப்பிட முடியும்? பசி வந்தால் பத்தும் பறந்தோடும் என்பது என்னவோ பழமொழிதான். ஆனால் மரணபயம் வந்தால் பசி பறந்தோடும் என்பது நடைமுறையில் உணரப்பட்ட உண்மை. கோயிலுக்கும் வீட்டுக்கும் மாறிமாறி அலைந்ததில் மூன்று நாள்கள் முழுமையாகக் கழிந்தன. நான்காம் நாள் நாங்கள் கோயிலுக்குச் சென்றபோது எல்லோரிடையேயும் ஒருபயம் கலந்த பரபரப்பு நில்வியது. "பொடியள் தங்களாலை ஏலாதெண்டு பின்வாங்கி விட்டாங்களாம். அதால ஆமி முன்னேறி வாறானாம்." சிலர் அச்சத்தோடு பேசிக் கொண்டனர். இராணுவம் முன்னேறிக் கொண்டு வருகிறது என்ற செய்தி கேட்டதும். எனக்கு உடல் பதறியது. எண்பத்தி மூன்றாம் ஆண்டுக்குப் பிறகு நான் இராணுவத்தைக் கண்டதேயில்லை. அது தவிரவும் "வல்வெட்டித்துறையில எல்லாரையும் வாளால் வெட்டிக் கொலை செய்தவங்களாம். இஞ்சையும் என்ன செய்கிறானோ" எனப் பலர் பேசிக்கொண்டதைக் கேட்டபிறகு என்பயமும் பதற்றமும் அதிகமாயிற்று. அக்காவையும் தங்கையையும் நினைத்துப் பார்க்கும் போது பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் ஞாபகத்துக்கு வந்து என் அச்சத்தை இன்னும் பல மடங்காக்கிற்று.

நேரம் நண்பகலான போது இராணுவம் கோயிலை முற்றுகையிட்டது. இராணுவத்தில் ஒருவன் மக்கள் மத்தியில் வந்து "சிங்களம் தெரிஞ்ச ஆள் இருக்கே?" என்று கேட்டான். பயத்தில் எவரும் பதில் சொல்லவில்லை. சில கணங்கள் அங்கே மயான அமைதி நிலவியது. தம்பிமுத்து விதானையார் தயங்கியபடியே எழுந்து நின்றார். அந்தச் சிப்பாய் அவரை அருகே வரும்படி சைகை செய்தான். அவர் அவனருகே சென்றதும் ஏதோ கைகளை அசைத்து அசைத்து சிங்களத்தில் என்னவோ சொன்னான்.

"பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட நாப்பத்தைஞ்சு வயதுக்குட்பட்ட ஆம்பிளையளை அந்த இலுப்பை மரத்தடிக்குப் போகட்டாம்" அவன் சொன்னதை தம்பிமுத்து விதானையார் எங்களுக்கு மொழிபெயர்த்தார்.'என்ன நடக்கப்போகிறதோ?' என எல்லோர் நெஞ்சிலும் பயம் படரத் தொடங்கியது. பாதுகாப்புப் படையினரின அறிவுறுத்தலின்படி பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட நாற்பத்தைஞ்சு வயதுக்கு உட்பட்ட ஆண்கள் எல்லோரும் அச்சம் என்பதை மட்டும் நெஞ்சில் சுமந்து பிள்ளையாரைக் கும்பிட்டபடி இலுப்பைமரத்தடிக்கு வரிசையாக நகர்ந்தனர். அந்த வரிசையில் நானும் சேர்ந்து கொண்டேன்.

என்னுடன் நின்றவர் எல்லோரும் (நான் உட்பட) தூக்கு மேடைக்குச் செல்வதற்காக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கைதிகளின் மனநிலையுடன், முகத்தில் மரணக்களை தெரிய நின்றிருந்தோம். தம்பிமுத்து விதானையார் எங்களிடம் வந்து "உங்கள் எல்லோரையும் தங்களுக்குப் பின்னால் வரட்டாம்" என்று எங்களுக்கு முன்னே நடந்து சென்று கொண்டிருந்த படையினரை நோக்கி தன் கைகளால் சுட்டிக் காட்டினார். நாங்களும் அவர்களின் பின்னே நடக்கத் தொடங்கினோம். ஒருவரல்ல இருவரல்ல நானூறு பேர் அவர்களுக்குப் பின்னால் நடக்கத் தொடங்கினோம்.


எங்களுக்குப் பின்னால் அம்மா, அக்கா, தங்கை, மனைவி, மாமி எனப் பற்பல உறவுகள் கண்ணீரும் கம்பலையுமாக பின் தொடர்ந்தன. தொடர்ந்து வந்த அவர்களை ஒரு சிப்பாய் துப்பாக்கியைத் தூக்கிப் பிடித்து விரட்டினான். "ஏய்! எல்லாம் திரும்பிப் போறது. இவங்களை நாங்க விசாரிச்சு விடுறது." அவன் மிரட்டலால் அவர்கள் பீதியடைந்திருக்க வேண்டும். அதன் பிறகு அவர்கள் பின் தொடர்ந்து வரவில்லை எனத் தெரிந்தது.

நாங்கள் திரும்பிப்பாராமல் நடந்து கொண்டேயிருந்தோம். கோவிற்சந்தை, கலிகை, துன்னாலை, மந்திகை, பருத்தித்துறை ஆகிய இடங்களை நடந்தே கடந்தோம். பருத்தித்துறையை அடைந்ததும். கால்கள் சோர்வடைந்தன. பசி வயிற்றை முறுக்கியது. எங்கள் எல்லோரையும் ஹாட்லிக் கல்லூரியினுள் தங்க வைத்தனர். ஆளுக்கொரு சீஸ்ரினும் கிறீம் கிறேக்கர் பிஸ்கற் பைக்கற்றும் தந்தார்கள். அது ஆனைப் பசிக்குச் சோளப்பொரியாயிற்றே தவிர பசி குறையவேயில்லை. அடுத்த நாள் சில இராணுவ அதிகாரிகள் பாடசாலைக்கு வந்தனர். நாங்கள் வரிசையில் நிறுத்தப்பட்டோம். எங்களுடன் அழைத்து வரப்பட்டவர்களில் நான் உள்ளடங்க 'பூசா'வுக்குக் கொண்டு செல்வதற்காக இருநூறு பேர் தரம் பிரிக்கப்பட்டு கொண்டு செல்லபட்டோம். எங்கள் உறவுகள் கண்ணீர் விட்டு அழுதன. எங்கள் மண்ணை முத்தமிட வேண்டும் போலிருந்தது. இனி உயிருடன் திரும்பி வருவது எவ்வளவு தூரம் சாத்தியப்படுமோ என்பதை நினைக்க கண்ணீர் பெருகியது. ஒருமுறை அந்த இடத்தைக் கண்குளிரப் பார்த்துவிட்டு பலிக் கடாக்களைப் போல் விடை பெற்றோம்.

நான் மூன்று மாதம் கழித்து 'பூசா' விலிருந்து வீட்டுக்கு வந்த போது அது மரணவீடு போலிருந்தது. அம்மா உட்பட அனைவரும் என்னைப் போல் மெலிவடைந்திருந்தனர்.அம்மா 'ஓ' வென ஒப்பாரிவைத்து அழுது விட்டாள். அதன் பிறகு "உன்னை இனி இஞ்ச வைத்திருந்து பலிகுடுக்க நான் மாட்டேன்". என்று சொன்ன அம்மா நகை, காணி, வீடு, வயல் என்று சொத்துக்களை ஈடுவைத்து ஏதோவொருவிதமாக என்னை ஜேர்மனிக்கு அனுப்பி வைத்தாள். என்னைப் போலவே தேவன், வாசவன், நேசன் ஆகியோரும் ஒவ்வொரு நாட்டுக்கு இடம்பெயர்ந்தனர். இதெல்லாம் நடந்து பத்து, பதினொரு வருடங்கள் கடந்து விட்டன. இக்காலப்பகுதியில் அக்காவுக்கும் தங்கச்சிக்கும் திருமணம் நடந்து, அம்மா விதவையாகி இரண்டு, மூன்று தடவைகள் இடம் பெயர்ந்து எத்தனை சம்பவங்கள் நடந்து விட்டன. இப்போது உறவுகளைப் பார்க்க இத்தனை வருடம் கழித்து ஊருக்கு வந்திருக்கிறேன். ஆனால் சுதந்திரமாக நடமாட முடியவில்லை.

சிந்தனைகளில் சிறைப்பட்டு வீதியில் நடந்து கொண்டிருந்த நான் சுய நினைவு வந்தவனாய் நிமிர்ந்து பார்க்கின்றேன். அந்த வீதியோரத்து சுமைதாங்கியில் ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டியில் ஓர் இளைஞன் ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான். உற்றுப்

(XV ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மௌன மொழி
## உங்கள் கவிதைகள்...

அம்மா....,
விரைவில் ஒரு நாள்...,
இவன் விழிகள் சிவக்கும்...!
விலங்கிட்ட கரங்கள்
வீறு கொண்டு எழும்...!
புயலொடு பூகம்பம்
பூமியைப் பிளக்க...,
சிறைகள் சிதையும்...!
சிலவேளை இவன் முகமுமிங்கு
முகவரியைத் தொலைக்கும்
ஆயினும்...முடிவில்
விலங்கறுத்த கரங்களில்
சுதந்திர விடுதலைக் கொடி
உயரவே பறக்கும்!!

- கலைநேசன்சிவம்-

(வீரத்) தமிழன் என்பதால்
விலங்கிடப்பட்டேன்
கூடிவந்த தமிழே
உனக்குமா
சிறை?

- சி.சிவாணி -
கந்தர்மடம்.

**எழுதிய கடிதம்
முடிக்கும் முன்னே
உன்கதை முடித்து
விடுவார் மகனே!- வேண்டாம்
விலங்குக் கையில் பேனா!**


- கே. ரூபி -
புலோலி தெற்கு.

அன்புள்ள அம்மா...
கலங்கிய கண்களுடன் - உன்
காத்திருப்புப் புரிகிறது.
'விலங்குகள்' பூட்டிய
விலங்குகள் இவையம்மா.
ஆனாலும்.....
கம்பிகளுக்குள்ளும்
கம்பீரமாகவே
என் ஆன்மா
எழுந்து நிற்கின்றது!

- இ. ஜெயக்குமார் -
குப்பிழான்

**தாய்க்காகவும்
தாய் மண்ணுக்காகவும்
எழு(து)ம் போது
கைவிலங்கும்
இரும்புச் சிறையும்
தமிழனுக்கு
ஒரு தடையல்ல!**

கு. விஜயகுமார்.
சாவகச்சேரி.



**அன்புள்ள அம்மா!
என்கதை முடிவெழுத
விரல்களில் வலுவில்லை
நாளைய விடியல்
என்சாவு காவி...
உன் கதவு தட்டுகையில்
மிஞ்சியிருக்கிற.... ஒரே
தம்பிக்குச் சொல்லு!
'உண்மைத் தமிழனாய்
அண்ணன் மடிந்ததாய்?'**

- ச.சாரங்கா -
சங்கத்தானை.

அன்புள்ள அம்மாவுக்கு
காணாமற்போன மகன்
எழுதும்
கண்ணீர் மடல்
களுத்துறையில் கவனமாய்
இருக்கின்றேன்.
உன்னிடம் ஒரு வினா
விடை தருவாயா?
என்னை ஏன்
தமிழ் மகனாய்ப்
பிரசவித்தாய்?
விலங்கு பூட்டவா?

- லக்ஷி -

அன்புள்ள அம்மாவுக்கு,
எனது மரணத்துடன்
அடக்கு முறைகளும்
அவலக் கைதுகளும்
எமது அடுத்த...
தலைமுறைகள்
சந்திக்க கூடாத
சரித்திர வடுக்களாய்
மாறட்டும்!

- ப. பிறேமலதா

மடிமீது தலை சாய்த்து
மயிர் கோதி நீ யிருக்க
மீண்டும் உன் மகனாக
தென்னாட்டு சிறைக்கதவு
வழி விடுமா?

- செய்யுங்கோ -
நீர்வேலி

கனத்த சுவர்களுக்கிடையே....
விலங்குகளின் பூட்டுக்களிடையே...
கடிதம் எழுதவும்
கட்டுப்பாடு அம்மா....
ஒரு சிட்டுக் குருவியைத் தானும்
காண முடியாமல்
தவித்துக் கிடக்கறேன்...
என் தம்பியையாவது
சிறையுடைக்கத் தயாராக்கு!

- ச.ஜனனி -
சங்கத்தானை.

*உதிரத்தைச் சேர்த்து உந்தன்
உதரத்தில் நீ வளர்த்த
உயிர்ப்பூ வாடுதிங்கே
'உயிர்ப்பு' தேடுது - எங்கே?*

- கி.ஜெனிஃபர் -

அன்புள்ள அம்மாவுக்கு,
எழுதுவதற்கு ஏதுமில்லை!
கம்பிக்குள் விலங்குகளாய்
சித்திரங்கள் வகை வகையாய்.
வழமை போல் இவைதானம்மா.
வருந்தாதே! - வருவான் தம்பி!

- சகி -

இவன் அம்மா...
இவனைத் தொலைத்த கவலையில்
கடைசி நிமிடமும்
கண்ணீர் உகுத்தபடி – நேற்றுக்
கண்மூடி விட்டாளாம்...!
அது தெரியாமல்
கண்ணீராய்க் கசியும்
கனிவின் ஊறலில் – இவன்
கரமெழுதும் கடிதம!

- தாட்சாயணி -

**கனத்த கம்பிகளால்
என்னைக் கட்டிப்போடு!
ஜீரணிக்க முடியாதஜீவனாக்கி
காரணமின்றி கழுத்தை நெரி!
கண்ணைத் தோண்டு
புண்ணாக்கிப் புதை....
ஆயினும் நான்
அழிய மாட்டேன்;
'எழுத்தாயுதம்'
என்னுடன் இருக்கும் வரை...**

- மானியூர் ரட்ணேஸ் -

**அம்மா!
நீ ஓலமிட்டு அலறும் ஓசை,
அப்படியே சிறையில் எனக்கு கேட்குதம்மா.
சும்மா நீ கண்கலங்கி சுகத்தைக் கெடுக்கலாமோ?
சுதந்திரம்தான் சுக்கோ மிளகுமாமோ?
எம் காந்திமகான் சிறையினிலே
பட்டகஷ்டம்
எட்டிலொன்றும் படுகிறேன் என்றெண்ணிடாதே!
தம்பி கண்ட கனவதுவும் பலிக்கும் வேளை
தாயாளைக் காண தம்பியுடன் வருவேன் நம்பு.**

- கரிகால்வளவன் -

தங்கையை
பரதம் பழக அனுப்பாதே:
சண்டைப் பயிற்சிக்கு அனுப்பு.
பயத்தைப் பழக்காதே
பாயப் பழக்கு
வலியதுதான் வாழும்
சுதந்திரமாய் வாழ
பசுத்தனம் மட்டும் போதாது
புலித்தனமும் வேணும்
சிறையில் இருக்கும் என்
சிந்தனை இதுதான்:
தேசத்தை வெல்ல வேண்டுமானால்
பாசத்தை வெல்ல வேண்டும்
மண்ணை வெல்ல வேண்டுமானால்
மனத்தை வெல்ல வேண்டும்
சிங்கத்தை வெல்ல வேண்டுமானால்
அங்கத்தை வெல்ல வேண்டும்.

- கதா -

**கம்பிக் கதவுகளின் பின்னால்
வாழும் உனது....
கரங்களிலும் சங்கிலிப் பிணைப்பு
இட்டதனால் ~ நீ
நிச்சயம் தமிழனே!**

- ஒ.பராங்கதன் -

*அன்புள்ள அம்மாவுக்கு
அன்றைக்கு என்னைத் தடுத்தாய்
இன்றைக்கு - நான் தடுப்பில்.....*

- சைதன்யன் -

**அப்பாவியாய் எனை வளர்த்த
அன்புள்ள அம்மாவுக்கு
நான் இங்கு -
நலம்...... (??)**

- சௌஜன்யா -

அன்னையே!
ஆயுதத்தின் ஆதிக்கம்
கரங்களை அழுத்தினாலும்
ஒரு தேசத்தின்
வரலாறு படைக்கும்!
ஆயத்தக் கரங்களுடன்
மாவீரன்......
நெப்போலியனாக
நான்..... இங்கே!

- க.நாகேஸ்வரா-

இங்கே, உழப்படுவது வயல் அல்ல!
இங்கே, விதைக்கப்படுவது விதை அல்ல!
இங்கே, இடப்படுவது பசளை அல்ல
இங்கே, கலப்பை வயலுடன் ஸ்பரிசிக்கிறது!
அந்தோ, பயிர் விருட்சிக்கிறது!
நாளை பூத்துக் குலுங்கி காய்த்துக் கனியும்!
தமிழ் அன்னையே அது வரை காத்திரு!

- ச.சுஜிதா -
அச்சுவேலி.

## மௌனமொழி -39



உங்கள் கவிதைக்கான எங்கள் ஓவியம இது.
இதனை வரைந்தவர் உடுவில் வி.ப.சசிவர்ணன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புள்ள அம்மாவுக்கு
நான்கு சுவர்களுக்கிடையில்
இருந்து கொண்டு
'நலமே' யுள்ளேன் என்று
எழுதினால்
அம்மா நீ நம்பமாட்டாய்
ஆனாலும் என் இந்நிலைக்கு
நீதான் காரணம் தாயே
'நான் என்ன தவறு செய்தேன்' என்று
இங்குள்ளவர்களைக் கேட்டேன்.
தமிழனாய் பிறந்ததென்று
சொல்கிறார்கள்.
எனவே அம்மா
என் துயருக்கெல்லாம்
நீதானே காரணம்
இப்படிக்கு
வருத்தத்துடன்
மகன்...

- கவிதா ஜெயப்பிரகாசம் -

முகவரி தெரியாத முகங்களாக
ஆதிக்க சக்தியின் அதிகார
இரும்புப் பிடியிலிருக்கும்
கரங்களினால் கருணை காட்டும்படி
அன்புள்ள அம்மாவுக்கு வரைகின்றேன்!
என் சிறை வாழ்வதனை நாளை
மலரும் (என்) சகோதரமாவது
சரித்திரமாகப் பொறிக்கட்டும்!

- கௌசல்யா-
புதுவையூர்.

*அன்புள்ள அம்மாவுக்கு
இந்நிலை உங்கள் மகனுக்கு மட்டுமா?
இல்லைத் தாயே......
ஈழத் தமிழர் அனைவருக்குமே!
அனைவரும் வீறுகொண்டெழுந்தால்,
இவ்விலங்குடைபும் காலம்
வெகு தொலைவில் இல்லை!*

- பிறேம் -

**என் இனிய அம்மாவுக்கு!
கருவறை யில் பத்து மாதம்
களுத்துறையில் பத்து வருடம் - உனைக்
கைகூப்பிக் கேட்கின்றேன் - இனியும்
கருவொன்றைச் சுமக்காதே!**

- வே.மயூரன் -
மருதங்கேணி.

# பால்கன் பிராந்தியத்தில் நெருக்கடி தளர உதவிய புதிய தீர்வுத் திட்டம்!

கொசோவோவிலும் காஷ்மீரிலும் இடம்பெற்றுவரும் நிகழ்வுகள் காரணமாக சர்வதேச கவனம் இந்த வாரம் பால்கன் பிராந்தியத்தை நோக்கியும் உபகண்டத்தை நோக்கியும் திரும்பி உள்ளது.

கொசோவோவில் இருந்து யூகோஸ்லாவியப் படைகள் வாபஸ் பெற ஆரம்பித்ததை அடுத்து பால்கன் பிராந்தியத்தில் நெருக்கடி தளர்வதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. இருண்ட அத்தியாயம் ஒன்று முடிவுக்கு வருகிறது.

ஆனால் காஷ்மீரில் நிலைமை நாளுக்கு நாள் மோசமடைந்து வருகிறது. பாகிஸ்தான் ஆதரவு ஊடுருவல்காரர்களுக்கும் இந்தியப் படைகளுக்கும் இடையில் சண்டை தொடர்ந்து நடைபெற்றுவருகிறது. பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் சர்தாஜ் அஸீஸ் கடந்த சனிக்கிழமை புதுடில்லி வந்து நடத்திய பேச்சுக்கள் தோல்வி அடைந்து விட்டன.

## ரஷ்ய ஆதரவுடன் தயாரிக்கப்பட்ட தீர்வுத்திட்டம்

ரஷ்யாவின் ஆதரவுடன் ஐரோப்பிய ஒன்றியம் கொசோவோ சம்பந்தமான தீர்வுத்திட்டம் ஒன்றைத் தயாரித்தது. இதற்கு அமையவே கடந்த 10ஆம் திகதியில் இருந்து யூகோஸ்லாவியா மீதான வான் தாக்குதல்களை நேட்டோப் படைகள் நிறுத்தின.

உலக் உலா
என்.பி.சீலன்

யூகோஸ்லாவியப் படைகள் கொசோவோவில் இருந்து வெளியேறி வருகின்றன. நேட்டோ தலைமையில் சர்வதேச நாடுகளின் அமைதிகாக்கும் படை ஒன்று கொசோவோவுக்குள் சென்றுகொண்டிருக்கிறது.

"ஒப்பரேஷன் ஜொயிண்ட் கார்டியன் (Operation Joint Guardian) என்ற பெயரில் நேட்டோ தலைமையில் சர்வதேச நாடுகளின் படைகளினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த நடவடிக்கை இரண்டாவது உலக மகாயுத்தத்தின் பின்னர் ஐரோப்பாவில் மேற்கொள்ளப்படும் பெரிய இராணுவ நடவடிக்கையாகக் கருதப்படுகிறது.



யூகோஸ்லாவியாவின் இராணுவ வாகன அணி ஒன்று கொசோவோவில் இருந்து வெளியேறுகிறது.

கொசோவோவுக்கு தற்பொழுது அனுப்பப்பட்டு வரும் இந்த சர்வதேச அமைதி காக்கும் படை (The International Kosova forces) 50 ஆயிரம் வீரர்களைக் கொண்டது. அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், இத்தாலி, ஜேர்மனி உட்பட 30 நாடுகளின் வீரர்கள் இந்த படையில் அங்கம் வகிக்கின்றனர்.

## வாக்கெடுப்பில் சீனா கலந்துகொள்ளவில்லை

K.L.A எனப்படும் கொசோவோ விடுதலை இராணுவத்தையும் யூகோஸ்லாவிய அரசையும் ஒரே சமயத்தில் திருப்திப்படுத்தக்கூடிய இந்த தீர்வுத் திட்டத்தில் நேட்டோ தளபதிகளும் யூகோஸ்லாவிய தளபதிகளும் மசெடோனியாவில் உள்ள குமானோலி நகரத்தில் வைத்து கடந்த 9ஆம் திகதி கைச்சாத்திட்டனர்.

அதே நாளில் இந்த தீர்வுத் திட்டம் ஐ.நா பாதுகாப்பு சபையிலும் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது. சீனா வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை. ஏனைய 14 நாடுகளும் தீர்வுத்திட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்தன. பாதுகாப்பு சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அடுத்த நாளே கொசோவோவில் இருந்து யூகோஸ்லாவிய படைகள் வெளியேற ஆரம்பித்தன. இரண்டு நாள்கள் கழித்து நேட்டோ தலைமையிலான சர்வதேசப் படைகள் கொசோவோவுக்குள் செல்ல ஆரம்பித்தன.

இந்தத் தீர்வுத்திட்டத்தின்படி ஒப்பந்தம் கைச்சாத்தாகி 11 நாள் களில் கொசோவோவில் இருந்து யூகோஸ்லாவியாவின் படைவாபஸ் பூர்த்தி அடைய வேண்டும். 3 நாள்களில் சகல விமான எதிர்ப்புப் பீரங்கிகளையும் யூகோஸ்லாவியா அகற்றிவிட வேண்டும்.

## தனிநாட்டுக் கோரிக்கைக்கு ஆப்பு

இந்த தீர்வுத்திட்டம் கொசோவோவில் உள்ள அல்பேனிய மக்களின் தனிநாட்டுக் கோரிக்கைக்கு ஆப்பு வைத்து விட்டது.

பிரான்ஸில் உள்ள ரம்புலெட் நகரில் இந்த வருட முற்பகுதியில் இடம்பெற்ற கொசோவோ சமாதானப் பேச்சுக்களின் போது சர்வதேச நாடுகளினால் தயாரிக்கப்பட்ட தீர்வுத்திட்டம் கொசோவோவில் உள்ள அல்பேனியர்களுக்கு தனிநாடு வழங்கும் சாத்தியத்தைக் கொண்டிருந்தது. அதாவது தீர்வுத்திட்டம் அமுலுக்கு வந்து 3வருடங்களின் பின்னர் தமக்கு தனிநாடு வேண்டுமா என்பதை சர்வஜன வாக்கெடுப்பு மூலம் அல்பேனியர்கள் தீர்மானிக்கலாம் என்று அந்த தீர்வுத் திட்டத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் தற்போதைய தீர்வுத்திட்டத்தில் கொசோவோ மக்களுக்கு அதிகபட்ச சுயாட்சி வழங்குவது என்றுமட்டுமே தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர்களது தனி நாட்டுக்கோரிக்கை பற்றியோ சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவது குறித்தோ எதுவுமே தெரிவிக்கப்படவில்லை.

எனினும் கொசோவோ விடுதலை இராணுவத்தின் ஆயுதங்களைக் களைவதற்கான கால அட்டவணை எதுவும் தற்போதைய ஒப்பந்தத்தில் இல்லை. முன்னைய ஒப்பந்தத்தில் 120 நாள்களில் கொசோவோ விடுதலை இராணுவத்தின் ஆயுதங்கள் களையப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. காலக்கெடு விதித்து ஆயுதங்களைக் களையும் யோசனைக்கு கொசோவோ விடுதலை இராணுவம் ரம்புலெட் மாநாட்டில் எதிர்ப்புத் தெரிவித்திருந்தது.

ரம்புலெட் சமாதானப் பேச்சுக்கள் முறிவடைவதற்கு அல்பேனிய மக்களின் தனிநாட்டுக் கோரிக்கை தொடர்பாக சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்ற யோசனையும் ஒரு காரணம் ஆகும். தீர்வுத்திட்டத்தை அமுல் செய்வதற்கு கொசோவோவுக்குள் நேட்டோப் படைகள் அனுப்பப்படுவதையும் யூகோஸ்லாவியா எதிர்த்தது. இதனாலேயே ரம்புலெட் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட தீர்வுத்திட்டத்தில் கைச்சாத்திட யூகோஸ்லாவியா மறுத்தது.

தீர்வு யோசனைகளை யூகோஸ்லாவியா ஏற்க மிகக் குறுகிய கால அவகாசம் வழங்கிவிட்டு மார்ச் 24 ஆம் திகதி யூகோஸ்லாவியா மீதான வான் தாக்குதல்களை நேட்டோ ஆரம்பித்தது.

கடந்த 10 ஆம் திகதி தாக்குதல் நிறுத்தப்படும் வரை 79 நாள்கள் நேட்டோவின் தாக்குதல்கள் நீடித்தன.

## 79 நாள்களில் 28 ஆயிரம் குண்டுகள்

இந்த 79 நாள் தாக்குதல்களின் போது 28 ஆயிரம் குண்டுகளை யூகோஸ்லாவியா மீது வீசியதாக நேட்டோ தெரிவிக்கின்றது. யூகோஸ்லாவியாவின் அரைப்பங்கு ஆட்லறிகளும் மூன்றிலொரு பங்கு கவச வாகனங்களும் அழிக்கப்பட்டன. விமான எதிர்ப்பு ஏவுகணைகளிலும் கணிசமான அளவு நாசமாக்கப்பட்டன.

நேட்டோவின் குண்டுகள் தவறுதலாக குடிமக்கள் வாழும் பகுதிகள் மீதும் விழுந்து உயிர்ச் சேதங்களை ஏற்படுத்தின. பெல்கிரேட்டில் உள்ள சீனத் தூதரகம் மீதான தாக்குதல் நெருக்கடி நிலையை உருவாக்கியது.

ஈராக்கைப் போலன்றி யூகோஸ்லாவியாவிடம் மிகவும் பலம் வாய்ந்த விமான எதிர்ப்பு சாதனங்கள் உள்ளன. யூகோஸ்லாவியா மீதான நேட்டோவின் வான் தாக்குதல்களுக்கு இது இடையூறாக இருந்தது.

## அல்பேனியர் வரவேற்பு

தற்போது கொசோவோ வரும் சர்வதேச படைகளுக்கு கொசோவோவில் உள்ள அல்பேனியர்கள் பெரும் வரவேற்பு அளித்து வருகின்றனர். வீதிகளில் மக்கள் கூடி நின்று ஆடிப் பாடி மகிழ்கின்றனர்.

அதேசமயம் நேட்டோவின் வான் தாக்குதல்கள் நிறுத்தப்பட்டதை தமக்குக் கிடைத்த பெரும் வெற்றியாக சேர்பியர்கள் கருதுகின்றனர். பெல்கிரேட்டில் நூற்றுக்கணக்கான வாகனங்கள் ஹோர்ன் ஒலிகளை எழுப்பியும் விமான எதிர்ப்பு பீரங்கிகள் முழங்கியும் வான் தாக்குதல் நிறுத்தப்பட்டதற்கு வரவேற்புத் தெரிவிக்கப்பட்டது.

## கொசோவோ விடுதலை இராணுவம் ஆயுதங்களை ஒப்படைக்க இணங்குமா?

## சேர்பியர்கள் வெளியேறுகின்றனர்

சர்வதேச அமைதிகாக்கும் படைகளின் வருகையைஅடுத்து கொசோவோவில் உள்ள சேர்பியர்கள் தற்பொழுது பெரும் அளவில் வெளியேற ஆரம்பித்துள்ளனர். பலர் மொண்ரநேக்ருவுக்கும் சேர்பியாவுக்கும் சென்றுள்ளனர். சேர்பியர்கள் மீது கொசோவோ விடுதலை இராணுவம் பழிவாங்கலாம் என்று அஞ்சப்படுகிறது. கொசோவோ சனத்தொகையில் 10 லட்சம் பேர் அல்பேனிய இனத்தவர்கள். 1 லட்சம் பேர் சேர்பியர்கள்.

## ரஷ்ய பங்களிப்பு கேள்விக்குறி


தற்பொழுது கொசோவோ சென்றுள்ள சர்வதேச அமைதிகாக்கும் படைக்கு ரஷ்யாவின் பங்களிப்பு இன்னும் கேள்விக்குறியாகவே இருந்து வருகிறது. நேட்டோவின் தலைமையின் கீழ் தனது படைகள் செயற்படுவதை ரஷ்யா எதிர்க்கிறது. கொசோவோவில் ஒரு பகுதி ரஷ்யப் படைகளின் பராமரிப்பில் விடப்பட வேண்டும் என்றும் ரஷ்ய கொமாண்டரின் தலைமையிலேயே அந்த படைகள் இயங்க வேண்டும் என்றும் ரஷ்யா யோசனை தெரிவித்துள்ளது.

கொசோவோ பிரச்சினையில் சேர்பியர்களுக்கு ஆதரவான போக்கை ரஷ்யா கடைப்பிடிப்பதால் ரஷ்யப் படைகளின் எந்தவொரு நடவடிக்கையும் அல்பேனியர்கள் கொசோவோவில் மீளக்குடியேறுவதை பாதிக்கலாம் என்று கருதப்படுகிறது. ரஷ்யாவின் நிபந்தனை ஏற்கப்பட்டால் 10 ஆயிரம் படையினரை கொசோவோவுக்குள் அனுப்ப ரஷ்யா தயாராக இருக்கிறது. ஏற்கனவே இருநூறு பேர் கொண்ட ரஷ்யப்படை ஒன்று கொசோவோவின் தலைநகர் பிரிஸ்ரினாவின் விமானநிலையத்தில் நிலை கொண்டுள்ளது. தீர்வுத்திட்டம் அமுலுக்கு வந்தவுடன் கொசோவோவுக்குள் முதலாவதாக நுழைந்த படையணி இதுதான்.

ரஷ்யப்படைகள் பிரிஸ்ரினா விமான நிலையத்தில் தங்கியுள்ளது நேட்டோவின் [illegible] நடவடிக்கைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்திவருகிறது. இது தொடர்பாக ரஷ்யாவும் அமெரிக்காவும் தற்பொழுது பேச்சுககளை நடத்திவருகின்றன.

## 8 லட்சம் மக்கள் இடம்பெயர்வு

கடந்த காலங்களில் கொசோவோ மீது யூகோஸ்லாவிய இராணுவம் நடத்திய தாக்குதல்கள் காரணமாக



நேட்டோ தலைமையிலான சர்வதேசப் படையைச் சேர்ந்த பிரிட்டிஷ் துருப்புக்கள் ஹெலியில் இருந்து இறங்குகின்றன.

சுமார் 8 லட்சம் அல்பேனியர்கள் வெளியேறி இருந்தனர். பலரை யூகோஸ்லாவிய இராணுவம் பலவந்தமாக ரயிலில் ஏற்றி அல்பேனியாவுக்கும் மசெடோனியாவுக்கும் அனுப்பியிருந்தது. இவர்களை மீள் குடியேற்றுவதற்கு ஐ.நா பெருமளவு நிதியை செலவிடவுள்ளது. கொசோவோவை மீண்டும் கட்டியெழுப்புவது மேற்கு நாடுகளின் பெரும் வேலைத் திட்டமாக இருக்கப்போகிறது. ஆனால் நேட்டோவின் வான் தாக்குதலால் அழிந்த யூகோஸ்லாவியாவின் ஏனைய பகுதிகளின் புனர்நிர்மாணப் பணிகளுக்கு நிதி உதவி வழங்கப் போவதில்லை என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது. யூகோஸ்லாவியா மீதான வான் தாக்குதல்கள் மிலோசேவிக் பதவி துறப்பதற்கு வழிவகுக்கலாம் என்றே அமெரிக்கா முதலில் நம்பியது. ஆனால் நினைத்தது நடைபெறவில்லை. நேட்டோவின் தாக்குதல் நிறுத்தப்பட்டது தனக்குப் பெரும் வெற்றி என்கிறார் மிலோசேவிக்.

## சர்வதேச நீதிமன்றில் மிலோசேவிக்கை தண்டிக்க முயற்சி

தற்போது மிலோசேவிக்கை தண்டிப்பதற்கு உள்ள ஒரேயொரு வழி ஹேக் நகரில் உள்ள சர்வதேச நீதிமன்றம்தான்.

தற்போதைய தீர்வுத்திட்டத்தில் யுத்தக்குற்றவாளிகளைத் தண்டிப்பதற்காக சர்வதேச நீதிமன்ற விசாரணைகளுக்கு நேட்டோவும் யூகோஸ்லாவியாவும் ஒத்துழைக்க வேண்டும் என்ற சரத்தும் அடங்கியுள்ளது.

மிலோசேவிக்குக்கும் அவரது நான்கு சகாக்களுக்கும் எதிராக கனேடிய பெண் வழக்குத்தொடுநர் ஒருவர் ஏற்கனவே சர்வதேச நீதிமன்றத்தில் யுத்தக் குற்றம் இழைத்ததாக வழக்குத் தொடுத்துள்ளார்.

ஆனால் மிலோசேவிக் இந்த விசாரணைகளுக்கு ஒத்துழைப்பார் என்பது சந்தேகமே. யுத்தக் கிரிமினல் ஒருவர் யூகோஸ்லாவியாவில் அதிகாரத்தில் இருக்கும்வரை யூகோஸ்லாவியாவின் புனர்நிர்மாணப் பணிகளுக்கு அமெரிக்கா உதவ மாட்டாது என்று கிளின்டன் திட்டவட்டமாக அறிவித்துவிட்டார்.

தற்பொழுது கொசோவோவில் இருந்து வெளியேறும் யூகோஸ்லாவியப்படைகள் கொசோவோவில் எஞ்சியுள்ள கட்டடங்களுக்கு தீ வைத்துவிட்டுச் செல்வதாக தெரிவிக்கப்படுகிறது. நேட்டோ தலைமையிலான சர்வதேச அமைதி காக்கும் படைகள் கொசோவோவுக்குள் நுழைந்த பின்னர் இதுவரை இரு ஜேர்மன் பத்திரிகையாளர்கள் உட்பட 7 பேர் யூகோஸ்லாவியப் படைகளால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். பிரிட்டிஷ் துருப்புக்கள் மீது தாக்குதல் நடத்த முயன்ற யூகோஸ்லாவிய வீரர் ஒருவரும் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

கொசோவோவில் பேரழிவுகளை ஏற்படுத்திக்கொண்டு யூகோஸ்லாவியப் படைகள் வெளியேறுவதும் சர்வதேச அமைதிகாக்கும் படையினர் மீது தாக்குதல் நடத்துவதும் கொசோவோ பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு ஏற்படும் சாத்தியத்தை குறைத்து வருகின்றன.



கொசோவோவின் தலைநகர் பிரிஸ்ரினாவில் அல்பேனியர்கள் ஆடி மகிழும் காட்சி.

தற்பொழுது கொசோவோ வந்துள்ள நேட்டோ தலைமையிலான சர்வதேச படைகளுக்கு, அல்பேனிய இனத்தவர்களின் தனிநாட்டுக் கோரிக்கைக்காக போராடி வரும கொசோவோ விடுதலை இராணுவம் அளிக்கப்போகும் ஒத்துழைப்பிலேயே கொசோவோ தீர்வுத்திட்டத்தின் வெற்றி தங்கி இருக்கப்போகிறது.

ஆயுதங்களைக் களையும் நடவடிக்கையை ஒரு கட்டத்தில் கொசோவோ விடுதலை இராணுவம் எதிர்க்க முற்பட்டால் கொசோவோ மீண்டும் போர்க்களம் ஆகிவிடலாம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாளை முளைக்கும் நல்ல பிள்ளை

3

ஏற்கனவே இரு கட்டுரைகள் இத்தலைப்பில் சஞ்சீவியில் இடம்பெற்று விட்டன. இத்தொடர் ஒரு சிறப்பான இளைய சந்ததியைப் பிரசவிக்க வழி காட்டவேண்டும்.


மீண்டும் அண்மைக்கால அமெரிக்க கள நிலைவரத்தை எடுத்துக்கொண்டு கட்டுரைக்குள் நுழையலாம். ஏன் அமெரிக்கா?..... அங்கு நடைபெறும் நிகழ்வுகள் நாளை இங்கும் பரவிவிடாமல் முன் எச்சரிக்கை நடவடிக்கைக்காகத்தான் என்றால் அது மிகையாகாது.

அது எங்கோ தொலைவில் இருக்கிறது; எமக்கு எட்டாதுஎன்று நினைத்து விடக்கூடாது. இப்போதுவெளிநாட்டுத் தொடர்புகள் அதிகம். அமெரிக்காவில் மட்டுமல்ல உலக நாடுகள் எங்குமே எமது ஆள்கள் கலந்து வாழ்கின்றார்கள்; வந்து போகின்றார்கள்; தொடர்பு கொள்கிறார்கள்; பழக்கவழக்கங்களை பழகிவிடுகிறார்கள்; பழக்கியும் விடுகிறார்கள்.

அங்கிருந்து படங்கள் வருகின்றன; கதைகள் வருகின்றன; கலாசாரம் வருகிறது; துப்பாக்கிகள் கூட வெளிவிப்படும் போதும் அவற்றைப் பாடமாக எடுத்துத் தவிர்க்கும் மனப்பக்குவத்தை வளர்த்துக் கொள்ள வேண்டியது அவசியம். இத்தகைய செய்திகளை வழிகாட்டியாக எடுத்துக் கொள்ளாமல் - வழிதவறப் பயன்படுத்துவதுதான் சிக்கலை வளர்க்கிறது.

அமெரிக்காவில் இப்போதெல்லாம் பாடசாலைகளில் துப்பாக்கிப் பிரயோகம் பிரபல்யம் அடைந்து வருவது கவலையளிக்கிறது. அடுத்தடுத்து அத்தகைய செய்திகளை வாசிக்க வாசிக்க புதியவர்களும் செய்தித் தலைப்புக்களைப் பிடிக்கும் வகையில் செயல்படுகிறார்கள்.

பாடசாலைகளில் சக நண்பர்களைச் சுட்டுப் பொசுக்கும் பாலர்கள் - இளைஞர்களின் படங்கள் - துப்பாக்கிகளுடன் மில்லியன் கணக்கில் பிரசுரமாகும் அமெரிக்க மற்றும் உலக சஞ்சிகைகளின் அட்டைகளில் இடம்பிடித்து விடுகின்றன. அவர்களின் பேட்டிகள் வேறு. வாழ்க்கை வரலாறுகள் - பின்னணிகள் வேறு ஆராயப்பட்டு எழுதப்படுகின்றன. இவற்றை அங்கும் பெரும்பாலானோர் அச்சத்துடனும் அதிர்ச்சியுடனும் தாளாத் துயருடனும்தான்



எதிர்கொண்டாலும், ஒரு சிலர் ஏதோ ஹீரோத் தனத்தைக் கண்டு விடுகிறார்கள் போலும்.

யில் இருந்துதான் வருகின்றன;கோலா முதல் மதுபானம், புகைப் பொருள்கள், போதைப் பொருள்கள் என்றெல்லாம் இறக்குமதியாகின்றன.

கணனிகள் வருகின்றன; இன்ரநெற் இணைப்புக்கள் கிடைக்கின்றன. இன்ரநெற்றில் காதலிக்கும் பாடல் வரிகள் வருகின்றன. வெளிநாட்டுப் படப்பிப்புடன் கூடிய ஆளை அசத்தும் தமிழ்ச் சினிமாப் படங்கள் வந்து குவிகின்றன. நாம் அந்நியமயப்படுத்தப்படுகிறோம்; தனித்துவம் இழக்கின்றோம். என்றாலும் கண்டதும் கற்றும் நம்வழி நின்றால் அது போதும். 'களவும் கற்று மற; ஆனால் எடுக்காதே!' என்பது போல.

எறும்பை மிதித்தால் அது பாவம் என்று மனிதன் நினைத்த காலம் அடுத்தவன் உயிரை அவன் எப்படி மதித்திருப்பான்! சமயம் வழி காட்டி நெறிப்படுத்த வளர்ந்து வந்த பண்பாட்டில் எத்தனை அமைதியும் ஒழுக்கமும்?

மாதா, பிதா, குரு, தெய்வம் வழிகாட்ட வணங்கிப் பணிந்து நிமிர்ந்த வாழ்க்கையில்தான் எத்தனை எழுச்சி! இன்று உலகியல் முன்னேற்றத்துக்கு ஈடுகொடுத்து வளர வேண்டியது அவசியம் எழுந்தாலும் ஏனோ பண்பாட்டைத் தூக்கி எறிய வேண்டும்?

ஓடம் தண்ணீரில் போகத்தான் வேண்டும். ஆனால் அது தண்ணீரைக் குடிக்கக் கூடாது. அது போலத்தான் வாழ்க்கை. உலகினில் நாம் இறங்கி விடத்தான் வேண்டும். ஆனால் அந்த நடப்புக்கள் எமக்குள் ஆக்கிரமிக்கக் கூடாது. உலகம் கெட்டுப் போகிறது என்று அதை விட்டு ஒதுங்கி ஒதுங்கி ஓடினால் பைத்தியம்தான் எஞ்சும். தனித்துப் பொத்தி வளர்த்த உலகமறியாப் பிள்ளை நாளைக்கு உதவாது.

எனவே கலந்து பழகித்தான் வாழ வேண்டும் ஆனால் வாழ்க்கையில் ஓர் இலட்சியம் வேண்டும். மனதினை மனிதன் ஆளவேண்டும். மனது மனிதனை ஆட்டி வைக்கக் கூடாது.

அதிர்ச்சியானதோ - சோகமானதோ - பரிதாபமானதோ - பயங்கரமானதோ - எத்தகைய சம்பவங்களைக் கேள்

இங்கு மட்டும் நிலமை பெரிய சுத்தம் என்று சொல்லிவிட முடியாது. வரப்பிரகாஷ் இறந்தவுடன் இனி ராக்கிங்கே அகராதியில் கிடையாது என்ற உணர்வு உதித்தது. ஆனால் நாளாக நாளாகப் பகிடிவதை பாலர் பாடசாலைக்கும் வந்துவிடும் போலிருக்கிறது.

வீட்டுக்குவீடு தோக்கத்தி இருக்கிறது என்பதற்காக அடுத்த ஆளில் கூர் பார்க்க வெளிக்கிடலாமா? இப்படி நினைத்தால் கத்திகளைத் தடை செய்ய வேண்டியதோர் சட்டத்தை இயற்ற வேண்டிய நிலமை எழுந்து விடும். நல்ல வேளையாக அப்படி ஏதும் ஏறுமாறாகச் சிந்திக்க நாம் பழகிவிடவில்லை. எனவே கத்திகள் தப்பிக் கொண்டன.

இங்கே வீட்டுக்கு வீடு தோக்கத்தி இருப்பது போலத்தான் அமெரிக்காவில் வீட்டுக்குவீடு துப்பாக்கிகள இருக்கின்றன. இது அவர்களின் கலாசாரம் என்று கூறிவிடலாம்.

சுமார் 70 மில்லியன் பேரின் கைகளில் துப்பாக்கிகள் சர்வசாதாரணமாகப் புழங்குகின்றன. அதுவும் சுமார் இருநூறு மில்லியன் துப்பாக்கிகள் தயராக இருக்கின்றன. ஆனால் துப்பாக்கியால் கதியால் வெட்டவா முடியும்? தேங்காய் உடைக்கவா இயலும்?

## மு.சிவநேசன்

இங்கும் கூட அவ்வளவு துப்பாக்கிகள் இருந்தால் ஆத்திரம் வரும் போதெல்லாம் ஆள்கள்பாடு ஆபத்துத்தான். நாங்கள் கூட ஒரு வேளை அமெரிக்கர்களைவிடக் கேவலமாக மாறிவிடுவோம். அண்மைக்காலச் சம்பவங்களைத் தொடந்து அமெரிக்க அரசு துப்பாக்கி தொடர்பான சட்டங்களை மீளாய்வு செய்வது பற்றித் தீவிரமாக ஆலோசித்து வருகிறது. அங்கே துப்பாக்கிகளைத் தடை செய்ய வேண்டிய அளவுக்கு நிலமை மோசமடையக் கூடும்.

போா - போர்ச் சூழல் என்பதை விட்டுவிட்டுச் சிவில் நிலையில் இடம்பெறும் குற்றச்செயல்கள் என்று பாாத்தால் இங்கும் கூட இடையிடையே வெளிவரும் செய்திகள் அவ்வளவு ஆரோக்கியமாக இல்லை.

கிணற்றில் சிசுவின் சடலம், பிள்ளைகளைக் கிணற்றில் தள்ளிய தாய், மனைவியைக் கொன்று புதைத்த...., கணவனைக்....., குடும்பத்தை கிரனேட் வீசித் தாக்கிய சிப்பாய், நாயைக் கொன்றவருக்கு வேட்டு, மில்லியன் கணக்கில் பெறுமதியான போதைப் பொருள் மீட்பு, தனியே இருந்த வயோதிப மாதுவின் கழுத்தை நெரித்து நகைகள் அபகரிப்பு, மயக்க மருந்துடன் உலாவும் திருடர்கள், பகிடிவதைக்குள்ளான மாணவன் வைத்தியசாலையில் அனுமதி, அடிதடி....... இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம்.

எனவே வெள்ளம் வரும்போது அணை போடும் நிலையில்தான் இப்போது பண்பாடு நிற்கிறது எனலாம். படிப்படியாக மாறிவரும் பிள்ளைகளின் வன்முறைப் போக்கு வீதிகளில் தெளிவாகத் தெரிகிறது. இதைப் பகிடி என்றே தொடரவிடுவது விளையாட்டை வினையாக வளர்க்கும் முயற்சிதான்.

தனித்துத் தனித்துக் கண்டவிடத்து கண்டிக்கும் கடமையை பெற்றோரோ ஆசிரியரோ சுற்றமோ செய்யத் தவறும் போதெல்லாம் - கூட்டம் கூடி கும்மாளம் அடிக்கும் கும்பல்களின் அட்டகாசம் தாங்கமுடியாத அளவுக்கு அதிகரித்தவரும் என்பதை அவ்வப்போது அவர்கள் உணர்ந்துவிடல் வேண்டும். கம்பத்தில் ஏறி ஆடினாலும் காசுவாங்க கீழேதான் வரவேண்டும். ஊர் சுற்றி என்ன கூத்து அடித்தாலும் வீடு வந்து பிள்ளை வழி தேடத்தான் வேண்டும். அப்போது சற்று விழிப்பாகவும் சுழியாகவும் பெற்றவர்கள் இருக்க வேண்டிய கால கட்டம் இது. வெள்ளம் வந்தபின்னே அணைபோட முடியாது.

பிள்ளைகளின் குறும்புகளை - ஏவிவிட்டு வேடிக்கை பார்த்துப் பெருமைப்படும் ஆங்கிலோ டைப் - அல்லது நாட்டு டைப் - பெற்றோர்களிடம் இந்த அறிவுரை எடுபடாமல் போகலாம். ஆனால் அடுத்ததோர் குறும்புக் கூட்டத்தால் அவர்களின் பிள்ளைகள் பாதிக்கப்படும் போதுதான் விழிப்பு வரும். வல்லவனுக்கு வல்லவன வையகத்தில் இல்லாமலா போவான்?

இனி அமெரிக்கப் பாடசாலை நிகழ்வுகளைச் சற்று விரிவாகப் பார்ப்போம். அதில் ஏதாவது பாடம் கற்க இருந்தால் கற்றுக் கொள்வோம்.

இங்கெல்லாம் பாடசாலைப் பாடத் திட்டத்துக்கு அமைய பரிசோதனைப் பொருள்களை எடுத்தச் சென்றாலே படையினருக்கு விளக்கம் சொல்லி - விஞ்ஞானம் போதித்துத்தான் - பொருள்களை உள்ளே கொண்டு செல்ல வேண்டிய தலைவிதி சில பள்ளிப் பிள்ளைகளுக்கு உண்டு.

ஆனால் அமெரிக்கப் பாடசாலைகளுக்கு சிறார்கள் துப்பாக்கிகளுடன் வந்துவிடுகிறார்கள். இப்போதெல்லாம் அடிக்கடி சரமாரியாகச் சுட்டும் விடுகிறார்கள். அங்கும்கூட பாடசாலை வாசலில் சோதனைச் சாவடிகளும், பொலித்தீன் புத்தகப்பைகளும் அவசியமாக்கப்படலாம்போல் நிலமை மாறுகிறது.

உலகினில்பயங்கரவாதத்தை புகுத்த நினைப்பதன் விளைவோ உள் வீட்டில் இத்தனை பூகம்பம்? முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் பயனிது என எண்ணத் தோன்றுகிறதோ?

கடந்த மாதம் இறுதிப்பகுதியில் தொம்சன் ஜே சொலமன் என்ற 15 வயதுச் சிறுவன் Conyers என்ற இடத்தில் தனது சக மாணவர்கள் மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்திருக்கிறான். ஆறு பேர் காயமடைந்து விட்டார்கள். நல்ல வேளையாக எவரும் இறக்கவில்லை.

உடனே பாடசாலை வாசலுக்கு ஓடியவன் தனது வாய்க்குள் துப்பாக்கிக் குழலை வைத்துவிட்டான். விசையை அழுத்தஏனோ துணிவு பிறக்கவில்லை. உப அதிபரிடம் சரண்! முகத்தை மூடிக்கொண்டு கேவிக் கேவி அழுதிருக்கிறான். பயந்துபோனதாக சொல்லியிருக்கிறான்! ஏன்? ஏன்? ஏன்?

சுயநினைவில் அவன் செயற்படவில்லையா? கடவுளிடம் நம்பிக்கை வைத்து தேவாலயம் சென்றுவரும் வழமையுடைய குடும்பம் அவனுடையது. இப்படி மாறும் வரை அவனை யாரும் அப்படி நினைக்கவில்லையே!

ஏன் அப்படிச் செய்தான்?........ தெரியவில்லை.

என்ன பாணியில் செய்தான்?...... இப்படி இருக்கலாம்! ஏப்ரல் 27 செவ்வாய்க்கிழமையன்றும் - அதாவது ஒரு மாதத்திற்கு முன்னர் - இதே போன்ற - இதைவிடப் பயங்கரமான சம்பவம் ஒன்று அமெரிக்க பாடசாலையில் நடந்தேறியிருக்கிறது.

18 வயதான எரிக் ஹரிஸ், 17 வயதான டிலான் கிளிபோல்ட் ஆகிய இருவரும் பாடசாலைக்குக் குண்டுகளுடனும் துப்பாக்கியுடனும் வந்திருக்கிறார்கள்.

குண்டுகளை வெடிக்கவைத்துத் துப்பாக்கிப்பிரயோகமும் செய்து 12 மாணவர்களைக் கொன்றுகுவித்தார்கள். தன்னுயிரைத் துச்சமென மதித்து ஓடிஓடி மாணவர்களை எச்சரித்துப் பல நூறு உயிர்களைக் காத்த ஆசிரியரான 47 வயதுடைய டேவ் சன்டேஸ் (Dave Sanders) கலைத்துக் கலைத்துச் சுடப்பட்டுச் சுருண்டு விழுந்தார்.

23பேர் மேலும் காயங்களுக்கு ஆளாகியிருந்தனர். பலரின் நிலமை கவலைக்கிடமாகவே இருந்தது.

வெடிப்பொலியும் வேட்டொலியும் கேட்டுத் தானும்ஓடி ஒளிக்காமல் மாணவர்கள் பலரையும் எச்சரித்துக் கலைத்துக் களப்பலியான அந்த ஆசிரியரின் தியாகமோ அளப்பரியது. நினைந்தவரையெல்லாம் மெய்சிலிர்க்க வைக்கிறது. அவருக்கு மட்டும் வாழ ஆசையில்லையா? பாவம்.

நூல் நிலையத்தில் எக்கச்சக்கமாக மாட்டிக்கொண்ட மாணவர் கூட்டம் தான் முற்றாகச் சன்னமழையில் அகப்பட்டுக் குருதியைக் கொப்பளித்தது.

எங்கெங்கோ வகுப்பறைகளிலும், உணவுச்சாலையிலும் நின்றிருந்த பெரும் எண்ணிக்கையானோர் மாட்டாமல் தப்பிவிட வழி வகுத்தவர் டேவ் சன்டேஸ்தான்.

இரு கொலையாளிகளும் பாடசாலையில் சேகரித்து வைத்திருந்த ஆயுத தளபாடங்களே - அத்தனை பேரையும் கூண்டோடு கைலாயம் அனுப்பும் திட்டத்தை அவர்கள் கொண்டிருந்ததை புட்டுக்காட்டின. அன்று காலம் நல்லதோ கெட்டதோ என்பது அவரவர் நிலைமையின் முடிவைப் பொறுத்ததே.

வெடித்த குண்டுகள் 10வரை இருக்கலாம். வெடிக்காத குழாயில் மருந்து அடைக்கப்பட்ட 30 குண்டுகளைப் பொலீஸார் செயலிழக்கச் செய்திருந்தனர். இவற்றைவிடச் சரமாரியான துப்பாக்கிப்பிரயோகம் வேறு.

இனிப் பாடசாலைக்குப் போக பிள்ளைகளுக்குத் துணிவு பிறக்குமோ? பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பப் பெற்றவர்களுக்கு மனம் வருமா? 'நியூஸ்வீக்' சஞ்சிகையின் கருத்துக் கணிப்பின்படி 63 வீதமான பெற்றோர் தமது பிள்ளைகள் செல்லும் பாடசாலையில் இத்தகைய அசம்பாவிதம் நிகழக்கூடும் என்று ஏங்குகிறார்களாம்.

மரணபயம் மனதினை ஆளும் இத்தகைய நிலைமைகளுக்கு வித்திட்டவர்கள் யார்? அன்றன்றாடம் மாறி வரும் - கண்ணுக்குப்புலப்படாத - சிறுவர் சீர்கேடுகளை அனுமதித்து வரும் பெரியவர்கள்தான் என்றால் பிழையாகுமா? பழியைப் பள்ளிப் பிள்ளைகள் மீது போடலாமா?

இத்தகைய பாடசாலையொன்றில் தப்பிப்பிழைக்கும் சிறுசுகளின் மன நிலை எப்படி இருக்கும்? கற்பனையிலும் பயங்கரம் புரிகிறதா?

இந்தச் சிறுசுகள் சகமாணவர்களின் அஞ்சலி ஆராதனை நிகழ்வுகளில் கண்கலங்கி நிற்கும் காட்சி காண்பவரை உருகவைக்கிறது.

காரணமில்லாக் கொலைகள், இரக்கமற்ற கொலைகள் என்றே அவை வருணிக்கப்பட்டன. ஏதாவது ஆபத்தை எதிர்நோக்கியும் - பிள்ளையைப் பாடசாலைக்கு அனுப்பிப் பறிகொடுத்து இருந்தால் பெற்றோரையும் பழி சொல்லலாம். இதை என்னென்பது?

கடவுளை நம்புகிறீர்களா? என்றொரு கேள்வி. 'ஆம்' என்று பதில் வந்ததும் வேட்டுக்களைத் தீர்த்தனராம் கொலையாளிகள். கடவுளைநம்பினோர் கைவிடப்பட்டனர். இதையும் விதி என்பதா?



12 சக மாணவர்களைக் கொன்று குவித்த 18 வயதான எரிக் ஹரிஸ்

சதி என்பதா? கதி என்பதா?

சிரித்துச் சிரித்துக் கலகலத்தபடியே நண்பர்களைச் சுட்டுத் தள்ளிய அவர்களின் வெறியை என்னென்பதோ?

காலை 11.15மணி இருக்கும். இக்களேபரம் நடக்கையிலே. மதியம் 12.30 வரையில் பாடசாலைக்குள் அவதானமாக நுழைந்த மீட்பு அணிகள் செயற்படத் தொடங்கின.

மாலை 2.30மணிக்கு பீதியுடன் தப்பிப்பிழைத்துத் தவித்த மாணவர்களை - கை உயர்த்தி நிற்கும்படி ஆணையிட்டு அவர்களின் ஆடைகளைத் தடவித்துளாவி ஆயுதங்கள் ஒளித்து வைத்திருக்கின்றனரா எனத் தேடிக் கொண்டிருந்தனர் பொலீஸார்.

கொலையாளிகளோ தமக்குத்தாமே வேட்டுவைத்துத் தற்கொலை செய்து கொண்டதை பொலீஸார் கண்டுபிடித்தனர்.

மீட்புப்பணியாட்கள் காயமடைந்தவர்களையும் இறந்தவர்களையும் இளம் இரத்த வெள்ளத்திலிருந்து மீட்டெடுத்து ஸ்ரெச்சரில் ஏந்திவந்த காட்சி விழிகளைககலங்கவைத்தது. உயிரை உருகி ஓடவைத்தது.

சம்பவம் தொடங்கியவேளை உணவுச்சாலைக்குள் அகப்பட்டுக் கொண்டவர்களில் ஒருவனான மத்தியூ என்ற மாணவன் - தனது தகப்பனின் நண்பனான ஜோனிற்கு தொலைபேசியில் தகவல் தெரிவித்து இருந்தான். இருவருமே பொலீஸ் அதிகாரிகள்தான்.

கதிரைகளையும் உணவு மூடைகளையும் தாழிட்டகதவின் பின்னே அடுக்கிக்குவித்து கதவு திறபடாமல் அரண் அமைத்து விட்டார்கள உள்ளே அகப்பட்டவர்கள்.

தொலைபேசியின் மறுமுனையில் வேட்டொலிகளையும், கதவு தட்டப்பட்டு உடைபடும் ஓசையையும், துவக்குகள் மீண்டும் லோட் செய்யப்படும் ஓசையையும் ஜோன் கேட்கக் கூடியதாக இருந்தது.

தானும் இறந்துவிடுவேன் போல் உள்ளது என்றும், தனது அன்பைத் தந்தையிடம் தெரியப்படுத்தும்படியும் மத்தியூ மிக அமைதியாகச் சொன்ன கணம் ஜோன் விக்கித்து நின்றான்.

தகவல் அறிந்து பெற்றோர் பலரும் பதறினார்கள். நிலமைகளை நேரில் பார்த்த ஐந்நூறுக்கு மேற்பட்ட மாணவர்களின் மனநிலை எப்படி இருக்கும்?

ஆரம்பத்தில் இதை ஒரு வேடிக்கை என்றே சகமாணவர்கள் நினைத்தார்கள். வீடியோ படம் எடுக்க ஒரு நடிப்புக்காட்சி என நினைத்தவர்களும் உண்டு. வேட்டொலி கேட்டும் சிலர் நம்பவில்லை. ரவைகள் தாக்கி இரத்தம் வழியும் போதும் படப்பிடிப்பில் பயன்படும் வர்ண உருண்டைகள் வெடித்து சிவப்புச் சாயம் வழிவதாக நினைத்தான் டெனிரோ என்ற 15 வயதுச் சிறுவன். உண்மை நிலவரத்தை உணரச் சற்று நேரம் பிடித்தது.

தமது பிள்ளைகள் நடாத்திய இரத்தக் களரிக்காக உலகின்முன் தலை குனிந்து நிற்கிறார்கள் இருவரின் பெற்றார்களும். அவர்களைத் திட்டித்தீர்த்த ஏனைய பெற்றோர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள்.

பிள்ளைகளைச் சரிவர வளர்க்காத பழியை ஏற்கவேண்டிய பரிதாபம் அவர்களுக்கு. அவமானம் தாங்க இயலவில்லை. அவர்கள் மீது பழியைப் போடுவதில் எந்தஅர்த்தமுமே இல்லை என்று வக்காலத்து வாங்கினர் பொலீஸார். உண்மையும்கூட அதுதான்.

இத்தகைய சம்பவங்களுக்கு முழுப் பொறுப்பையும் குறிப்பிட்ட பெற்றோர் மீது சுமத்திவிட்டுச் சமுதாயம் வாளாவிருக்க முடியாது. தமது பிள்ளைகள்

(XV ஆம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## நாளை முளைக்கும்......

(XIVஆம் பக்கத் தொடர்ச்சி)
இறந்துவிட்ட கவலையைக்கூட நினைக்க முடியாத அளவுக்கு - ஏனைய பிள்ளைகளை கொன்ற பழி தலைகுனியவைக்க அந்தப் பெற்றோரும்தான் தவித்திருப்பார்கள்.

அவர்களா பிள்ளைகளிடம் துப்பாக்கியைக் கொடுத்துப் பாடசாலைக்கு அனுப்பினார்கள்? வழமை போலத் தானே அன்றும் அனைவரும் பாடசாலைக்கு வந்தார்கள்.

ஆனால் இப்போது கொலையாளிகளின் வரலாறையும் பெற்றோரையும் பின்னணிய்யும் உளவுத்துறை நிபுணர்களும், பத்திரிகையாளர்களும் அக்குவேறு ஆணிவேறாக ஆராயாமலா விடுவார்கள்?

பின்னணியில் பாரதூரமாக எதுவும் பிழையாக இருக்கவில்லை. பொதுவான அமைதி வாழ்க்கையில் இப்போது இல்லை என்பதைத் தவிர வேறில்லை.

அந்த அமைதியின்மைக்கு இன்ரநெற், வீடியோ, வீடியோ விளையாட்டுக்கள் (Video games), துப்பாக்கிப் புழக்கம் போன்ற நாளாந்த நிகழ்வுகள் காரணமாக அமைவதாகக் கூறப்படுகிறது.

கொலையாளிகளின் மூளை அமைப்புக்கள் - மூளையில் ஏற்படக்கூடிய உயிரியல் மாற்றங்கள், ஓமோன் சுரப்பிகளின் தன்மை என்றெல்லாம்கூட ஆய்வுகள் முடுக்கிவிடப்படுகின்றன. இதையெல்லாம் வைத்துக்கொண்டு பாடசாலைச் சிறார்களை இனம்கண்டு தனித்துப் பிரித்து எதிர்கால அனர்த்தங்களைத் தவிர்ப்பதும் சாத்தியமாகுமா?

ஆபத்தான பிள்ளைகளை இனங்காணப் பயன்படும் பின்னணித் தகவல்களில் ஏதாவது ஒன்று ஒவ்வொரு அமெரிக்கப் பிள்ளையிடமும் இருந்துவிட்டால் எப்படிப் பிள்ளைகளை வேறுபடுத்திப் பிரித்துப் பள்ளியில் பயில வைக்க இயலும்? அடுத்த வேட்டுக்களுக்கு இலக்காகும் பாடசாலை எது என்ற ஏக்கம் மறுபுறம் மனதைக் கௌவும்.

எனினும் பின்வரும் பின்னணிகள் கவனத்தில் எடுக்கப்பட வேண்டும் எனப் பட்டியலிடப்படுகின்றன. பட்டியலை நாங்களும் படித்துவைத்தால் எச்சரிக்கையாக இருக்கும்.

1. அவசரமாக ஓடிப்பறந்து உழைக்கும் தகப்பனும் தாயும் தமது பிள்ளைகளைச் சரிவரப் பராமரிக்காத நிலையில் அங்கு வளரும் பிள்ளைகள் -

2. குற்றச்செயல்களிலும் வன்முறைகளிலும் ஈடுபடும் பெற்றோரின் பிள்ளைகள் -

3. கடும்போக்காகவோ - தவறாகவோ வழிநடத்தப்படும் பிள்ளைகள் -

4. அதிக செல்லம் கொடுத்து வளர்க்கப்படும் பிள்ளைகள் -

5. கூடிக் கும்மாளமடிக்கும்போது வரம்பு மீறும் கூட்டங்களில் இணைந்து குதூகலிக்கும் பிள்ளைகள் -

6. சதா வீடியோ, வீடியோ விளையாட்டு என்று அலையும் மனங்கொண்ட பிள்ளைகள் -

7. துப்பாக்கிகளையும் ஆயுதங்களையும் கையிலெடுத்தால் கம்பீரமாகத் தம்மைக் கற்பனை பண்ணும் பிள்ளைகள் -

8. போதைப்பொருள், புகைப்பொருள், மதுபானம் பாவிக்கும் நாட்டம் அதிகமுள்ள பிள்ளைகள் -

9. கைது செய்யப்படுமளவுக்கு அடிதடி குற்றச் செயல்களில் இறங்கும் பிள்ளைகள் -

10. உணர்விலும், செயலிலும், சிந்தனையிலும் முரண்பட்டுப் பெற்றோருடனும் மற்றோருடனும் முறைத்து எதிர்த்து வாழப்பழகும் பிள்ளைகள -

11. தமக்குள் ஒத்துப்போகாது ஆள் மீது ஆள்பாயும் பெற்றோரைப் பெற்றுக்கொண்ட பிள்ளைகள் -

12. நடவடிக்கைகள் நுட்பமாகப் பெற்றோராலோ ஆசிரியர்களாலோ அவதானிக்கப்படாமையால் கவனிப்பாரற்று விடப்படும் பிள்ளைகள் -

13. வீடியோ மற்றும் பொழுது போக்குத் தெரிவுகளில் வன்முறை மற்றும் பாலியல் பக்கம் சார்ந்து உல்லாசத்தை தேர்ந்தெடுக்கும் பிள்ளைகள் -

போன்றோரே பெரும்பாலும் தவறுகின்றார்கள்.

இப்படி நிறைய அடுக்கிக் கொண்டே போகலாம்.

இதனை வாசிக்கும் பெற்றோர்களும் பிள்ளைகளும் தங்களை இனங்கண்டு திருத்திக்கொள்ளாவிட்டால் நிலமை மோசமடைந்துவிடும்.

இத்தகைய தன்மைகள் கொண்ட பிள்ளைகளை வேறாக்கித் தனிப் பாடசாலைகளில் கண்காணிப்புடன் பயில்வதற்கு அனுமதிப்பதற்கு மனித உரிமைகள் இடம் கொடுக்குமா என்பது ஒரு கேள்வி.

அப்படி வேறாக்கிவிட்டால் ஏனைய பிள்ளைகள் பயிலும் பாடசாலைகளில் உயிருக்கு உத்தரவாதம் இருக்குமா என்பது அடுத்த கேள்வி.

எந்தரகப் பாடசாலையில் மாணவர் தொகை அதிகம் இருக்கும் என்பது மூன்றாவது கேள்வி.

இப்படிப் பல கேள்விகளையும் எழுப்பிக்கொண்டே போகலாம்.

இப்போது பிரச்சினை எப்படிப் பிள்ளைகளை வளர்த்துப் பூரண மனிதர்களாக உருவாக்கிச் சமுதாயத்தை உருப்படியாக்கிவிடுவது என்பதல்ல.

பாடசாலையில் பிள்ளையின் உயிருக்கு உத்தரவாதம் கொடுப்பது எப்படி என்பதுதான் சிக்கல் என்ற அளவுக்கு நிலமைகள் தரம் தாழ்ந்து வந்து கொண்டிருக்கின்றன.

என்னதான் வாழ்க்கைத்தரம் உயர்ந்தாலும் - இளசுகள் பெற்றோரிலும் பெரிய மூளைசாலிகளாக வளர்ந்தாலும் - அந்த மூடப் பெற்றோர்களின் பண்பாட்டை எட்டிப்பிடிக்க இவர்களால் இயலவில்லை. அவர்களிடம் இருந்த அமைதியான வாழ்க்கை அடுத்த சந்ததிக்குக் கிடைப்பதில்லை.

இன்று பிள்ளைகளைக் கொழும்புக்கும் வெளிநாட்டுக்கும் அனுப்பிப் படிப்பிக்கும் பெற்றோர் சாதிப்பது என்ன? அவர்களின் அறிவு, ஆற்றல், நுட்பத் திறமைகளை வளர்க்க அங்குள்ள வசதிகள் நிச்சயம் துணை போகும் என்பது உண்மைதான். ஆனால் கிராமத்திலோ - குடும்பம், சுற்றத்தோடு கலந்து உதவி ஒத்தாசை செய்து வாழும் வாழ்விலோ - பிறக்கும் அமைதியான மனபக்குவத்தை போகுமிடமெல்லாம் விலை கொடுத்து வாங்கி விட முடியாது.

பிள்ளை வளர்ப்பில் காணப்படும் சிக்கல்கள் பற்றி ஏராளமான புள்ளி விவரங்களை அண்மைய 'நியூஸ்வீக்' சஞ்சிகை வெளியிட்டு இருக்கிறது. தகவல்கள் தலைச் சுற்றுவனவாகவே இருக்கின்றன. அவற்றில் சில....

பெற்றோர் இருவரும் வேலைக்குப் போவதால் 60வீதமான பிள்ளைகள் பராமரிக்கப்படவில்லை. தாய்மட்டும் தனித்திருக்கும் குடும்பங்களில் இதே வேலைப்பிரச்சினை 70வீத பிள்ளைகளைக் கைவிடுகிறதாம்.

பத்துமுதல் பதினெட்டு வயதுடைய சிறுவர்களில் 100பேரில் ஐந்து பேராயினும் குற்றச்செயல்களுக்காக கைது செய்யப்படுகிறார்களாம்.

வளர்ந்தவர்களே அதற்காக கைது செய்யப்படாத நாடுகளில் இப்புள்ளி விவரங்களைத் திரட்டிப் பலன் யாது?

இருபது வயதில் எண்பது வீதமான அமெரிக்கச் சிறுவர்கள் உறவு வைத்துவிடுகிறார்கள். அதி உச்சத் தடுப்பு வசதிகள் இருக்கும் நாட்டில் 15 வயதிற்கும் 20 வயதுக்கும் இடைப்பட்டோரின் வேண்டாத கர்ப்பம் ஒரு பாரிய பிரச்சினையாக உருவெடுக்கிறது.

1997 இல் 50வீத மதுப்பாவனை, 40வீத சிகரெட் பாவனை, 25வீத போதைப்பொருள் பாவனை எனச் சிறார்கள் ஆட்கொள்ளப்பட்டு விடுகிறார்கள். 1999 இல்??.........

பாவிக்கிறார்களோ இல்லையோ 90 வீதமான வளர்ந்த சிறார்களுக்கு கஞ்சா எட்டும் வாய்ப்புக்கள் உண்டு..

98 வீத சிறார்கள் நாளொன்றுக்கு 11 மணி நேரம் ரி.வி. வீடியோ பார்க்கிறார்கள். அடித்து நொருக்கித் தூள் கிளப்பும படங்களுக்கோ நல்லகிராக்கி.

பிள்ளைகளிடம் எடுக்கப்பட்ட கருத்தக் கணிப்புக்கள் நிச்சயம் பெற்றோரை வழிகாட்ட உதவும்.

85 வீதத்தினர் தாயன்பை எதிர்பார்க்கிறார்கள். 58 வீதத்தினர் தகப்பனிடம் அதை எதிர்பார்க்கிறார்கள். எனவே அமெரிக்காவிலும் கூட சம உரிமை கேட்டு பிள்ளைகளைக் கவனிக்கும் கடமையில் இருந்து தாய்மார் ஒதுங்கி விட முடியாது.

25வீத பிள்ளைகளுக்கே பாடசாலை விட்டு வீடு வரும் போது தாய் வீட்டில் இருக்கிறாள். 10 வீத பிள்ளைகளை தகப்பன்மார் வரவேற்பதாகக் கூறுகிறார்கள். மீதம் பரிதாபம்தான்.

65வீத பிள்ளைகள் அதிகம் பெற்றோரிடம் ஆலோசனை கேட்காமலே சுயமாகச் சிந்தித்து முடிவெடுத்துப் பொழுதைப் போக்குகிறார்கள். அப்படியானவர்களை சரிவர வழி நடத்தாத பெற்றோர் பழியை ஏற்கத்தானே வேண்டும்?

பிள்ளைகளைப் புரிந்துகொள்ளும் பெற்றோர் 35வீதம்தான். பிள்ளைகளின் கரங்களில் தாராள பணப்புழக்கம் காணப்படுகிறது. மாதம் ஒன்றுக்கு 400 முதல் 500 அமெரிக்க டொலர்களை அவர்கள் விரயமாக்குகிறார்கள். இந்த நிலைமையில் எந்த வில்லங்கத்தைத்தான் விலைக்கு வாங்க முடியாது?

சமைத்துப் போடாமல் காசைக் கொடுத்து எதையாவது வாங்கிச் சாப்பிடு என பிள்ளையை வழி அனுப்பி வைத்தால் அதன் போக்கில் மாற்றம் விரைவாகப் புரியும். அதற்காகப் பிள்ளை வளர்ப்பை பரிசோதனைக் களமாக்கி ஆய்வு செய்ய முடியுமா?

ஹிப்பீ-ஹீரோ பாணியில் முடி வளர்த்தல், முரட்டுத் தோற்றம் காட்டுதல், கடுக்கண், மூக்குத்தி அணியும் ஆண்கள், விதவிதமான முரட்டு மற்றும் கலர் ஆடைகளுடன் உலா வரத் துடிக்கும் இளைஞர்கள், மார்பில் வாசகங்கள் எழுதிய ஆடைகளுடன்- பார்ப்பவர்களை வாசித்து உற்று நோக்க வைக்கும் பெண்கள், ஹீரோக்களின் படங்கள் பொறித்த ஆடைகள் அணிபவர்கள் எல்லோரும் எதையோ வில்லங்கத்துக்கு வாங்கத் துடிக்கிறார்கள் என்று மேற்கு நாடுகள் கருதும் போது எம்கதி என்னாவது?

Titanic என்றால் என்ன வென்று சரிவர அர்த்தம் புரியாது மார்பில் Titanic பொறித்த ரீசேட்டை அணிந்து வரும் பெண்களைப் பார்த்து அர்த்தம் தெரிந்தோ தெரியாமலோ வீதிக் கரை இளைஞர்கள் டைட்டானிக் ஏன்று அழைக்கிறார்கள். சேலை உடுத்திவிட்டால் இந்தச் சோலி இல்லையே.

வஞ்சகமில்லாமல் நாம் பின்பற்றும் - பிள்ளைகளைப் பின்பற்ற அனுமதிக்கும் - அன்றாடப் பழக்கவழக்கங்கள், நாளடைவில் சோலியை விலைக்கு வாங்காவிட்டால் சரி.

அவசியம் ஏற்படும் போது அங்கம் 4 இல் சந்திக்கும் வரை கட்டுரைத் தொடரை இடைநிறுத்திச் சிந்திப்போம்.

## தேர்தல் பற்றி.....!

தேர்தல் வரையிலும்
இலட்சியப் பேச்சு!
தேர்தல் கடந்ததும்
அலட்சியப் போக்கு!!

தேர்தல் முடியும்முன்
கொள்கை முழக்கம்!
தேர்தல் முடிந்தபின்
கொள்கை மயக்கம்!!

தேர்தல் முடியும்வரை
அணைத்துக் கதைப்பர்!
தேர்தல் முடிந்தபின்
உதைத்து வதைப்பர்!!

தேர்தலின் முன்னரோ
வாக்காளர் 'பெருமக்கள்'!
தேர்தலின் பின்னரோ
வாக்காளர் 'குடிமக்கள்'!!

தேர்தல் முடியும்முன்
வாக்காளர் 'மன்னர்கள்'
தேர்தல் முடிந்தபின்
வென்றோரே 'மன்னர்கள்'!!

தேர்தல்கள் எங்களை
ஏய்த்திடக் கண்டோம்!
தேர்தல்கள் எங்களை
மேய்த்திடக் கண்டோம்!!

தேர்தலில் நாங்கள்
நொந்ததே மிச்சம்!
தேர்தலால் நாங்கள்
வெந்ததே மிச்சம்!!

தேர்தலில் நின்றிட
மொழிவெறி வளர்த்தனர்!
தேர்தலில் வென்றிட
மதவெறி வளர்த்தனர்!!

இனவெறி வளர்த்திடத்
தேர்தல்கள் நிகழ்த்தினர்!
தேர்தல்கள் நிகழ்த்திட
இனவெறி வளர்த்தனர்!!

- வயலூர் முருகன்.

## விடைகள்

IXஆம் பக்கத்தில் 'சிறுவர் சுடர்' பகுதியில் 'கண்டுபிடியுங்கள்' என்ற தலைப்பில் பிரசுரமாகியுள்ள புதிருக்கான விடைகள் வருமாறு:-

| | |
|---|---|
| A - 4 | D - 3 |
| B - 5 | E - 2 |
| C - 1 | F - 6 |

## கலைந்து போகும்....


(XI ஆம் பக்கத் தொடர்ச்சி)
பார்த்தேன். 'எடகுட்டி!' என்னையறியாமல் என் நா அந்தப் பெயரை உச்சரித்தது. அந்தச் சுவரொட்டி ஆங்காங்கே கிழிக்கப்பட்டிருந்தாலும் சில வாசகங்களை என்னால் வாசிக்க முடிந்தது. ஐந்தாமாண்டு நினைவஞ்சலி. "உயிராயுதமானவனே நீ மீண்டும் பயிராவாய்"

என்னால் நம்பமுடியவேயில்லை. அன்றொரு நாள் பிசாசுக்குப் பயந்து ஓடிய குட்டி, சாரைப்பாம்பைக் கண்டால் ஓடி மறையும் குட்டி, எப்படித் துணிந்தவனானான்? மீண்டும் சுவரொட்டியில் இருந்த குட்டியைப் பார்க்கின்றேன். அவன் கண்களில் ஏக்கம் தெரிகின்றது. 'இந்த மண்ணுக்கு நீ என்ன செய்தாய்? உன்னுடைய உயிரைக் காப்பாற்றிக்கொள்ள வெளிநாட்டுக்கு ஓடிப்போனது எப்படி நியாயம்? நீயும் உன் தோழர்களும் துணிந்து நின்றிருந்தால் சில நேரம் எங்கள் இலட்சியம் முன்னோக்கி நகர்த்தப்பட்டிருக்கும்' என்று சொல்வதைப் போல் இருந்தது. என் நெஞ்சில் ஒரு குற்ற உணர்வு தோன்றியது. நாய்கள் மோசமாகக் குரைப்பது கேட்கிறது. திரும்பிப் பார்க்கிறேன். தூரத்தில் படையினர் ரோந்து வருவது தெரிகிறது. இனி இந்த இடத்தில் நிற்பது நல்லதல்ல எனத் தீர்மானித்தவனாய் திரும்பி வீடு நோக்கி நடக்க ஆரம்பிக்கின்றேன்.

(யாவும் கற்பனை)

# சொற்சிலம்பம்

## புதிர்ப் போட்டி இல.107




### சொற்சிலம்பம் இல. 107

சஞ்சீவி,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்:- ..............................................................

விலாசம்:- ..............................................................
..............................................................

..............................இங்கே வெட்டுக..............................

முடிவுத் திகதி: 25-06-1999

### இடமிருந்து வலம்

1. சகலரும் ஒன்றாகப் பேணப்படும் நிலை. 6. மாரி காலத்தில் அதிகம் தேவைப்படும். 7. நோவு. 8. சேறு. 9. பூமியில் பொருள் நின்று பிடிப்பதற்கு இதுதான் காரணம். 10. அழிப்பு. 12. மஜ்னுவின் உயிர். 13.மாறுபாடு. 15. இரவு. 17. பெரிய. 18. உதயன். 20. காதல், சாதல் இரண்டிலும் உண்டு. 21. தோடு, மூக்குத்தி போன்றவற்றின் ஒரு பகுதி. 22. வித்தை.

### மேலிருந்து கீழ்

1. துஷியந்தன் மனைவி. 2. நீர் பாயும் தூவாரம். 3. அறுசுவையில் ஒன்று. 4. உடலை குறாண்டி இழுக்கும் நோய். 5. ஒன்றன் பின் ஒன்றாகுவதால் வருவது. 8. பொறுப்பு ஏற்றல். 9. இரண்டு; பேனுக்கு முந்தியது. 11. அறிவுக்கு வழங்கும் பட்டம். 13. செல்வம். 14. மகள். 16. தலை. 17. பல. 18. மகிழ். 19. எல்லையைக் குறிக்கும் சொல்.

### சொற்சிலம்பம் 105 இன் விடைகள்

### இடமிருந்து வலம்

| | | | |
|---|---|---|---|
| 1. பதிப்பகம். | 6.கரு.. | 7. ரவி. | 8. குலை. |
| 9. லட்சம். | 10. அருமை. | 11.வடு. | 12. புரளி. |
| 14. உதவாக்கரை. | 16. கடல். | 17. குண. | 18. பாளம். |
| 19. தம்படி. | 21. திரிபுரம். | 22. திக். | |

### மேலிருந்து கீழ்

| | | | |
|---|---|---|---|
| 1. பகலவன். | 2. திருட்டு. | 3. பரம்புதல். | 4. கவி. |
| 5. தலைமை. | 8. குரு. | 10.அளிக்கும். | 13. ரவா. |
| 14. உடம்பு. | 15. கணபதி. | 16. களரி. | 18. பாதி. |
| 19. தம். | 20. டிக். | | |

பல நூற்றுக்கணக்கான வாசக நேயர்கள் இப்போட்டியில் ஆர்வத்துடன் பங்குபற்றி சரியான விடைகளை எழுதி அனுப்பியுள்ளனர். அவர்களில் அதிர்ஷ்ட சீட்டிழுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகள் வருமாறு:-

முதலாம் பரிசு:- *திருமதி.ஜெயரஞ்சனி ரவீந்திரராஜ், 4 ஆம் கட்டை, இருபாலைச் சந்தி, கோப்பாய்.*

இரண்டாம் பரிசு:- *வி. செல்வநாயகம், 126/4, பலாலி வீதி, திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம்.*

மூன்றாம் பரிசு:- *திருமதி. கா. சண்முகசுந்தரம், 'றாமா பகாங்', உரும்பராய்.*

இவர்கள் மூவருக்கும் சரியான விடை எழுதிய ஏனைய சகல வாசக நேயர்களுக்கும் எமது பாராட்டுக்கள்.

புதிர்ப்போட்டிக்கு விடைகள் அனுப்பும்போது கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் போட்டியின் இலக்கத்தை தவறாது குறிப்பிடவும்.

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசில்கள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் - சஞ்சீவி ஊழியர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் போட்டியில் கலந்துகொள்ள முடியாது.

| | |
|---|---|
| முதற் பரிசு: | ரூபா 150.00 |
| இரண்டாம் பரிசு: | ரூபா 100.00 |
| மூன்றாம் பரிசு: | ரூபா 50.00 |

புதிர்ப்போட்டி இலக்கம் 106 இன் முடிவுகள் அடுத்தவார சஞ்சீவியில் வெளிவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராட்டத்திலிருந்து நம் மக்களை அந்நியப்படுத்த முயல்கிறது 'உதயன்'

உதயனே!

உன்னிலுள்ள நிறைகளைக் சுட்டிப் பாராட்டுவதைவிட குறைகளைச சுட்டிக்காட்டி உன்னை மேலும் மெருகுறச் செய்ய வேண்டுமென்று நான் விரும்புகிறேன். அதன் விளைவே - இம்மடல்,

செய்தித்தாள் என்பது பொதுவாக பரபரப்பை ஏற்படுத்தும் ஓர் ஊடகமாக இருக்க வேண்டும். அதிலும் போர்நடக்கும் நாடென்றால் மிகவும் சூடான விடயங்கள் அடங்கியதாக இருக்க வேண்டும். ஆனால் உதயனோ ஆறிய செய்திகளையும் உப்புச் சப்பில்லாத விடயங்களையும் பெரும்பகுதி விளம்பரங்களையும் உள்ளடக்கியதாகவே வருகின்றது. ஓர் அன்பர் பாராட்டியிருந்தார் 'உதயன்' வெளிநாட்டுச் செய்திகளை உடனுக்குடன் வெளியிடுவதாக. அவர் வேறு எந்தச் செய்தி ஊடகத்திலும் தொடர்பற்றவர் போலும். பல வெளிநாட்டு விடயங்கள் பி.பி.ஸி.யில் சொல்லி இரண்டு மூன்று தினங்களின் பின்பே உதயனில் வருகிறது. சில நாள்களில் உதயனில் வெளிநாட்டுச் செய்திக்குரிய பக்கம் காணமல் போய்விடுகிறது. ஏன்? அன்று வெளிநாடுகளில் எந்தவிதச் சம்பவங்களும் நடக்கவில்லையா? மேலும் வெளிநாட்டுச் செய்தி என்றால் தனியே இந்தியாவும், கொசோவாவும், ஐ.நாவும் மட்டும்தானா? வெளிநாட்டுச் செய்தியிலும் போர்பற்றியவை மட்டும்தான் செய்தியாகுமா? ஏனைய விடயங்கள் ஏன் பெரும்பாலும் புறக்கணிக்கப்படுகின்றன?

விளையாட்டுச் செய்திகளை தரக்கோரி எத்தனையோ வாசகர்கள் எழுதியபோதும் இதுவரை அது நிறைவேற்றப்படவில்லை. 'உலகக் கிண்ணம்' பற்றிக்கூட மொட்டையாகவே 'ஸ்கோர்' விவரம் பிரசுரமாகிறது. அதுகூட சில வேளைகளில் இல்லை. வாசகர்களின் விருப்புக்கு உதயன் கொடுக்கும் மதிப்பு இவ்வளவுதானா? சமய செய்திகளுக்கும், ஆன்மீக செய்திகளுக்கும் கொடுக்கும் முக்கியத்துவத்தில் ஒரு சிறு பகுதியையாவது விளையாட்டுச் செய்திகள், வெளிநாட்டுச் செய்திகள், பொது அறிவுச் செய்திகள் போன்றவற்றிற்கு கொடுங்கள்.

உதயனில் மேற்குறிப்பிட்ட எல்லாக் குறைகளுக்கும் மேலாக பெரிய குறை என்னவெனில் அதுதான் அதன் ஆசிரியர் தலையங்கமே. போர் நடக்கும் தேசத்தில் மிகவும் சூடான பகுதியாக ஒரு பத்திரிகையில் இருக்க வேண்டியது அதன் ஆசிரியர் தலையங்கம். ஆனால் உதயனில் ஆசிரியர் தலையங்கங்கள் பெரும்பாலுமே பணிவான போக்கையும் தேவையற்ற விடயங்களையும் தவறான கொள்கைகளையும் வெளிக்காட்டுகின்றன. இதன் உச்சகட்டமாகவும் மக்களையும் சமூகத்தையும் தவறான பாதையில் திருப்பக்கூடியதுமான ஆசிரியர் தலையங்கம் 03-06-99 பத்திரிகையில் தீட்டப்பட்டிருந்தது. அதுபற்றி என் கருத்துக்களைக் கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

மக்கள் நலன் என்னும் தலைப்பில் தீட்டப்பட்டுள்ள அத்தலையங்கம் 'இராணுவத்தினதும் புலிகளினதும்' போரால் மக்களே பாதிப்புறுகிறார்கள். 'யாழில் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்தி விட்டோம்' என வெளியுலகிற்கு காட்ட அரசு செய்யும் பிரசாரமும் அதைத் தடுக்க புலிகள் செய்யும் காகித யுத்தமும் மக்களையே பாதிக்கிறது!" என்ற சாரப்பட அமைந்திருந்தது. அதில் முடிவாக பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது:-

"மொத்தத்தில் எல்லாத் தரப்பினர் மேற்கொள்ளும் நடவடிக்கைகளின் விளைவுகளை அவை நல்லதோ கெட்டதோ, சரியோ பிழையோ மக்களே இடையில் நின்று அனுபவிக்க நேரிடுகிறது. இதனை சம்பந்தப்பட்ட சகல தரப்பினர்களும் உணர்ந்து மக்கள் நலனை முன்னிறுத்தி முன்னுரிமை கொடுக்குமாறு மக்கள் சார்பில் வேண்டுகின்றோம்."

இக்கருத்து விடுதலைப்போரில் மக்களின் பங்கை கொச்சைப்படுத்துவதாக உள்ளது. இரண்டு தனிப்பட்ட குழுக்கள் இடையில் அவற்றின் தனிப்பட்ட நலன்களுக்காக நடைபெறும் சண்டையெனில் மேற்படி கருத்தை ஏற்றுக் கொள்ளலாம்.

ஆனால் இங்கு நடப்பதோ அப்படியல்ல! ஒரு விடுதலைப்போர். தமிழ் மக்கள் தம் இறைமையைக் காக்க நடத்தும் போர். இதிலிருந்து மக்கள் விலக முடியாது. சும்மா இருந்தால் சுதந்திரம் வராது. மக்கள் நலன் பாதிக்கப்படும் என போர் நடவடிக்கைகளைக் செயற்படுத்தப்படாவிடின் விடுதலை கிடைக்காது. எந்த ஒரு வெற்றிக்கும் ஒரு விலை உண்டு. அதை கொடுத்தால்தான் வெற்றி கிடைக்கும். மக்களுக்காக நடக்கும் போரில் மக்கள் நலன் பாதிக்கக் கூடாது என மக்கள் சார்பில் கேட்பது 'பிச்சை வேண்டாம்; நாயைப்பிடி!' என்ற நிலைக்கு நாங்கள் வந்துள்ளதைதான் வெளிக்காட்டுகிறது. சிவில் நிர்வாகக் குலைப்பால் மக்களுக்கு ஏற்படும் கஷ்டங்களை விடுதலைப் போருக்கான - தம்மாலான - சிறு பங்களிப்பாக மக்கள் உணரத் தலைப்பட வேண்டும். அதையே உதயனும் உணர்த்த முயல வேண்டும். அதை விடுத்து தவறான திசையில் போரில் இருந்து மக்களை அன்னியப்படுத்தும் முயற்சியில் உதயன் இறங்கியுள்ளது என்ற தோற்றப்பாட்டையே உனது ஆசிரியர் தலையங்கம் வெளிக்காட்டுகிறது. போரிலிருந்து மக்கள் அந்நியப் படுதப்படின் இப்போர் பிறகு யாருக்காக? இதுவரை கொடுத்த விலை, தியாகம் எல்லாம் வீண் ஆவதா?

யாழ். மக்களின் ஒரே செய்தி ஊடகம் 'உதயன்'. கொஞ்சமாவது பொறுப்பாக நடந்து கொள்ளக் கூடாதா? பொறுப்பான முறையில் செய்தி வெளியிடுங்கள். கருத்துக்கூறுங்கள். 'துணிச்சலான பத்திரிகைக்கு' துணிச்சலைப் பற்றி நாமா கூற வேண்டும்?

"உதயனை வேண்டினா தண்ணி ஊத்தி போட்டுத்தான் வாசிக்க வேணும்" என்று கூறும் அளவுக்கு நீ சூடாக(சூடான செய்திகளுடன்) வெளியே வரவேண்டும் என்பதே எமது விருப்பம்.

இனிவருங்காலங்களில் தவறுகளைக் திருத்திக்கொண்டு, ஓர் அதிரடியான பத்திரிகையாக வருவாய் என்றே எதிர்பார்க்கிறோம்.

**யாழ்ப்பாணம். ஜெ.பி.தீபன்.**

## உங்கள் உள்ளத்திலிருந்து

## மக்களுக்குத் தொண்டு செய்ய வாருங்கள்!

'துணிச்சலான பத்திரிகைக்குரிய 'தேசிய விருது' உதயன் பத்திரிகைக்குக் கிடைத்தது மிகப் பொருத்தமானது; சரியானது; நீதியானது. இதனை ஓர் அன்பர் "ஆலை இல்லாத ஊருக்கு இலுப்பைப்பூ சக்கரை" என விமர்சித்திருந்தார். இது வேதனைக்குரியதும், விசனத்திற்குரியதுமான அவரது அறிவீனத்தின் வெளிப்பாடு.

இன்றைய யாழ். குடாநாட்டில் காணப்படும் அரசியல் சூழ்நிலையில் துணிச்சலாகவும், நடுநிலையாகவும், நீதியாகவும் செய்தியை வெளியிடுவது என்பது வாள்மேல் நடப்பதற்கு ஒப்பானது. ஓர் அரசியல் கட்சியாலேயே ஆற்ற முடியாத பெரும்பணி இதுவாகும். மல்லிகைப்பூ தோட்டக் காவல்காரனுக்கு அதன் மணத்தின் மகிமையைப் புரிந்து கொள்ள முடியாது. ஏனெனில் அம்மணத்திற்கு அவன் இசைவாக்கம் அடைந்து விட்டான். வெளியில் இருப்பவனுக்குத்தான் அதனை உணரமுடியும். கழுதைக்குத் தெரியுமா கற்பூரவாசனை? உண்மைகள் எப்போதும் கசப்பவைதான். அதை ஜீரணிக்கக் கூடிய பக்குவம் ஒவ்வொரு மனிதனிடமும் இருக்க வேண்டும். எந்தவொரு பிரச்சினையையும் ஆழமாகவும், பரந்த கண்ணோட்டத்துடனும், பக்கச்சார்பின்றியும் ஆராய வேண்டும். அதைவிடுத்து எழுந்தமானத்திற்கு 'பக்கச் சார்பு' என்றும், 'பயம்' என்றும் நுனிப்புல் மேய்ந்து விட்டு விமர்சிப்பதில் அர்த்தமில்லை. உண்மையே என்றும் வெல்லும். இது உலக அனுபவங்களில் இருந்து கிடைத்த படிப்பினை. தூற்றுவார் தூற்றட்டும், போற்றுவார் போற்றட்டும். உனது பாதையில் இருந்து சிறிதும் விலகாது உனது பணியைத் தொடர்வதே உனக்குரிய சிறப்புப் பண்பு.

வன்னியில் வாழும் எமது உடன்பிறவா சகோதரர்கள், எமது தொப்புள் கொடி உறவுகள் பசிக்கும், பட்டினிக்கும், நோய்களுக்கும் நாளாந்தம் இரையாகின்றார்கள். பல சிறுவர்கள் போஷாக்குள்ள உணவு வசதியின்றி கொடிய நோய்களுக்கு ஆளாகின்றார்கள். "நெருப்பினுள் துஞ்சலும் ஆகும்; நிரப்பினுள் யாதொன்றும் கண்பாடு அரிது" ஒருவன் நெருப்பினுள் இருந்து தூங்க முடியும். ஆனால் வறுமை நிலையில் எவ்வகையிலும் கண்மூடித்தூங்குதல் அரிது என்கிறார் திருவள்ளுவர்.

இதே நிலையில்தான் எமது வன்னியில் வாழும் சகோதரர்கள் வாழ்க்கை நடத்துகின்றனர். வன்னி மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நிதி சேகரித்து அவர்களுக்கு உதவியிருந்தார்கள் என்பது யாவரும் அறிந்த ஒரு விடயம். இது பாராட்டப்பட வேண்டிய விடயம் மட்டுமல்ல முன்மாதிரியான நிகழ்வும்கூட. ஏன் இதனை ஏனைய அமைப்புக்கள் பின்பற்றவில்லை? தொழில்நுட்பக்கல்லூரிகள், பாடசாலைகள், தனியார்கல்வி நிலையங்கள், சனசமூக நிலையங்கள், வணிகர்கழகங்கள், அரச நிறுவனங்கள்...என்று ஏன் இவை விஸ்தரிக்கப்படவில்லை. எதற்கும் போட்டி போட்டு முன்நிற்கும் எமது யாழ். சமூகம் இதில் மட்டும் ஏன் பின்நிற்பான்? கோயில் திருவிழாக்கள், தேர்தல் திருவிழாக்கள், ஆண்டுவிழாக்கள், வேறு களியாட்ட நிகழ்வுகளுக்காக வாரி இறைக்கும் எமது சமூகம் இதில் மட்டும் ஏன் பின்நிற்கின்றது?

இன்று ஒவ்வொரு கோயில் பரிபாலனசபையிடமும் ஏராளமான நிதி தேங்கிக் கிடக்கின்றது. அதில் ஒரு சிறுபகுதியை மட்டும் இம்மக்களுக்காக வழங்க முன்வரமாட்டார்களா? நிதியில் வீழ்ச்சி ஏற்பட்டால் சாமி சபித்துவடுவார் என்ற பயமா? அல்லது ஆமி சல்லடை போட்டுவிடும் என்ற பயமா? இறைவனுக்காக மக்களா? மக்களுக்காக இறைவனா? மக்கள் பசியாலும் பட்டினியாலும் வாடுகின்றபோது, கோயில் தர்ம கர்த்தர் சபையிடம் கோடி கோடியாகப் பணம் இருந்து என்னபயன்? பக்தி முத்தித்திரியும் பக்குவப்பட்டவர்கள் இதை எப்போது உணர்வார்களா?

**தொல்புரம். V.S.T. குமரன்.**

## 'உதயன் - சஞ்சீவி' வெறும் துண்டுப்பிரசுரம் அல்ல

'துண்டுப்பிரசுரத்துக்கு விருது ஏன்?' என்ற தலைப்பில் தங்கை இதயநிலா நக்கலாக, நகைப்பாக ஒரு மடலை சஞ்சீவியில் வரைந்திருந்தார். வாசித்தோம்; வருந்துகிறோம்.

இத்தகைய காலகட்டத்தில் - போர்க்கால சூழ்நிலையில் - இத்தகைய ஒரு பத்திரிகையாகுதல் வெளிவருகிறதே என்ற மனத்திருப்தி நமக்கு வேண்டும். சுதந்திரன், Saturday Review, Hot Spring, உதயன் - சஞ்சீவி, முரசொலி, ஈழநாடு, ஈழநாதம் முதலிய பல பத்திரிகைகள் வெளிவந்த யாழ். மாவட்டத்தில் அவற்றின் கடமையை தற்பொழுது - ஒரேயொரு பத்திரிகை - 'உதயன் - சஞ்சீவி' மாத்திரமே செய்கிறது. கொழும்பு மாவட்டத்துக்கு அடுத்தபடியாக யாழ். மாவட்டத்திலேதான் இவ்வளவு தொகையான பத்திரிகைகள் வெளிவந்தன.

யாழ். மாவட்டத்தில் பல பத்திரிகைகள் வெளிவருவதை அறிந்த வெளிமாவட்டத் தமிழ் மக்கள் ஆச்சரியமும் பொறாமையும் அடைந்தார்கள்.

"வெறும் மரணஅறிவித்தல்களையும் திறப்பு விழாக்கள் பற்றிய செய்திகளையும் பிரசுரித்து விட்டு உதயனுக்கு விருதா?" என்று தங்கை விநயமாக அங்கலாய்க்கிறாரே! மரணஅறிவித்தல்கள் அவசியம்/கட்டாயம் தேவை. சில சமயங்களில் - வேறு இடங்களிலுள்ள எமது உறவினர்கள், நண்பர்கள் மரணித்ததைக் கூட உதயன் வாயிலாகத்தான் அறிகிறோம்.

தங்கை Daily News, Sunday Observer போன்ற பத்திரிகைகளைப் பார்ப்பதில்லையோ? இவை அரசு சார்பான பத்திரிகைகள்; பணக்காரப்பத்திரிகைகள். இவற்றில் வெளிவருவதில் பெரும்பகுதி விளம்பரங்கள்தான். 'அவர் அப்படிச் சொன்னார்'- 'இவர் இப்படிச் சொன்னார்' 'அமைச்சர் இப்படிச் சொன்னார்' என்றவற்றைத் தவிர, முழுக்க முழுக்க அந்தப் பத்திரிகைகளில் வெளிவருவது விளம்பரங்களே. இவை குறித்து இதயநிலா என்ன சொல்லுவாரோ?

விளம்பரங்கள் வெளிவருகின்ற துண்டுப் பிரசுரம் உதயன் என்று அவர் கூறியிருந்தார். விளம்பரங்கள் மேலதிகமாக வெளிவருவதற்கு ஆசிரியர் பீடத்தையோ அல்லது நிர்வாகத்தினர் மீதோ குறைகூற முடியாதே!

பெருந்தொகையான விளம்பரங்கள் வெளிவருவது மக்களைப் பொறுத்தது. விளம்பரங்களை மக்கள் விரும்பிக் கொடுக்கிறார்கள். விளம்பரங்கள் பிரசுரிக்கப்படுகின்றன. இது மக்களின் விருப்பம். ஆதலினால் மேலதிக விளம்பரங்கள் வெளிவருவது இப்பத்திரிகைக்கு மக்கள் மத்தியில் பெரும் செல்வாக்கு இருக்கின்றதென்பதை எடுத்துக்காட்டுகிறது.

அடுத்து "களப்போரில் மாண்டவர்களுக்கு அஞ்சலி செலுத்தியதா? ஈழ தேசத்தினை வரவேற்கிறதா?" என்று விநயமாகப் கேள்வி கணைகளைத் தொடுத்திருந்தார் தங்கை. இத்தகைய விடயங்களை பிரசுரிப்பதானால் கால நேரம் இடம்தர வேண்டுமே! தக்க தருணம் அறிந்தல்லவா நாம் கதைக்க வேண்டும்? புத்தி சாதுரியம், இராஜதந்திரம், சாணக்கியம் நமக்கு வேண்டும். விளக்கில் விழுந்தழியும் விட்டிலைப் போல் நாம் ஆகக் கூடாதல்லவா?

தங்கைக்கு அனுபவக் குறைவா - அல்லது அறிவுக்குறைவா தெரியவில்லை.

இக் காலக்கட்டத்தில் கூட - இக்கட்டான சூழ்நிலையில்கூட - மக்கள் ஊடகமாக ஒரேயொரு பத்திரிகையாகுதல் வெளிவருகிறது என்ற மனத்திருப்தி எம்க்கு இருக்கவேண்டும்.

**கொக்குவில். சபா. சுப்பிரமணியம்.**

## வெட்கத்தைத் தரும் கடிதம் பிரசுரம்

கடந்த மாத இறுதிச் சஞ்சீவியில் இந்தப் பகுதியில் ஜெய்குமார் என்பவர் வரைந்திருந்த மடல் கண்டு எமது இரத்தம் கொதித்தது.

யாரய்யா அந்த ஜெய்குமார்?! இவர் போராட்டகாலத்தில் எங்கு இருந்தார்?! எதை அர்த்தமற்ற போராட்டம் என்று விளித்தார்.

புலிகளின் போராட்டத்தில் பொதிந்துள்ள நியாயத்தை இவர் முழுமையாக அறிந்திருக்கவில்லை போலும். அந்நியரின் ஆதிக்கத்தில் எதைக் கண்டு மயங்கி இவ்வாறு எழுதத் தோன்றியது?!

இறைவன் சில உணர்ச்சிகளுக்கு வார்த்தைகளோ, எழுத்துக்களோ இன்னும் படைக்கவில்லை. இவர் மடல் கண்டு அப்படிப்பட்ட ஓர் உணர்ச்சிக்கு ஆளாகினோம்.

போராட்டத்தைப் பற்றி முழுமையாக அறியாத இவர்களின் மடல்களை போயும், போயும் பிரசுரிக்கின்றீர்களே! சீச்... சீ.... வெட்கக் கேடு (நமக்கு)!

தயவு செய்து இவ்வாறான கருத்துக்களை பிரசுரிக்காதீர்கள். ஏனெனில் இன்றும் மறத்தமிழன் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறான்.

**மாதகல். அ. பாரதி.**

## சீரழிவைச் சுட்டிக் காட்டுவது தேசத் துரோகமாகி விடுமா?

வித்துவான் தேசத்துரோகி என்று ஒரு வாசக அன்பர் இப்பகுதியில் எழுதியிருந்தார். அவருக்கு நான் சிறு விளக்கம் ஒன்று கொடுக்க விரும்புகிறேன்.

நாம் யாழ். மண்ணில் வந்து பலவித கஷ்டங்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். அதை நாம் எமது சொந்தமண்ணில் மறக்கவில்லை.

ஆனால் அதை சில இளைஞர், யுவதிகள் உணரவில்லை. மூலைக்கு மூலை ஒழுங்கைகளில் நின்று காதல் ரியூசன் எடுக்கிறார்கள். யாழ். கோட்டை நூல்நிலையப் பகுதிகளில் மாலை நேரங்களில் காதல் பாடம் படிப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

சில நாள்களுக்கு முன்பு 'சஞ்சீவியில்' பாடசாலைக்கு சென்ற மகளைக் காணவில்லை என்று தாய் பொலீஸில் முறைப்பாடு கொடுத்த - செய்தி வெளியாகி இருந்தது. ஆனால் மகளோ காதலனுடன் காணாமல் போய்விட்டாள் என்பது பிறகுதான் தெரிய வந்தது.

இப்படியான சமூகச் சீர்கேடுகளை சுட்டிக் காட்டுவது தேசத்துரோகமா?

**மருதடி. மருதடியான்.**

## பலமும் பலவீனமும்

ஒருவனிடத்தில் எவ்வளவுதான் வீரம் இருந்தாலும் அங்கு ஒரு பலவீனமும் இருக்கத்தான் செய்யும். அதேகதிதான் உதயன் - சஞ்சீவியினதும்.

உடுவில் அரவிந்தன் என்ற நேயரால் "தகுதி" தலைப்பில் எழுதப்பட்டு 29-05-99 அன்றைய சஞ்சீவியில் வெளிவந்த சிறுகதை இதற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டு.

அண்மைக்காலத்தில் நடந்த ஓர் உண்மைச் சம்பவத்தை அப்படியே சித்திரித்து ஒரு தனி நபரை அவமானப்படுத்தும் நோக்கிலேயே அரவிந்தனால் அக்கதை எழுதப்பட்டிருந்தது. இது சம்பந்தமான சகல தகவல்களும் ஆசிரிய பீடத்திற்கு தெரிந்திருந்தும் அவர்களும் அதை அப்படியே பிரசுரித்து விட்டார்கள். இது அவர்களதும் கையாலாகாததனத்தையே தெளிவாகச் சுட்டிக் காட்டுகிறது.

சமுதாயத்தில் தவறுகளைத் திருத்தி ஒரு மனிதனை முழுமனிதானாக்க வேண்டிய ஒரு பொறுப்புள்ள பத்திரிகையே இப்படியான சம்பவங்களை மீண்டும் மீண்டும் பெரிதுபடுத்தி ஒருமனிதனை குட்டிச்சுவராக்க நினைப்பது என்னைப் பொறுத்தமட்டில் மாபெரும் தவறாகவே படுகிறது. இது சஞ்சீவியின் சாபக்கேடே அன்றி சமூக வேலை அல்ல.

சிறுகதை எழுத வேண்டும் என்று ஆவல் உள்ளவர்கள். உண்மையிலேயே அவர்கள் நல்ல சமூகவாதிகள் என்றால் சமூகத்திற்கு வேண்டிய சிறுகதைகளை எழுதலாமே?

இன்று வரைக்கும் வேர்விட்டு விருட்சமாய் வளர்ந்து வரும் சாதி, மத சண்டைகளை கருவோடு அழிக்கும் வகையில் அவர்கள் கருத்தாழம் மிக்க சிறுகதைகளை எழுதினால் அது அனைவருக்கும் நற்பயன் அளிக்குமே.

இதைவிடுத்து ஒருவரின் தனிப்பட்ட பிரச்சினைகளை எல்லாம் கதையாய் எழுத இனிமேல் காலங்களிலும் யாரும் முன்வருவார்களேயானால் அது அவர்கள் சமூகம் மீது காட்டும் கொடூரம் என்றே கொள்ள வேண்டும்.

இனிமேலும் இத்தகைய தகவல்களை வாசகர்கள் சுட்டிக் காட்டும் அளவிற்கு இடமளிக்காது சஞ்சீவியின் வளர்ச்சியில் பங்கெடுக்க வேணடியவர்கள் இன்றைய எழுத்தாளர்கள் அல்ல; ஆசிரியர் பீடம்தான்.

**அச்சுவேலி. சு.ப. கஜானன்.**

## துணிச்சலான ஆசிரியர், விருதும் கொடுக்கலாம்!

துணிச்சலான பத்திரிகைக்குரிய தேசிய விருது உதயனுக்கு கிடைத்தது வியப்பல்ல. ஆனால் உதயன் ஆசிரியருக்குத் "துணிச்சலான ஆசிரியருக்குரிய பரிசு" கிடைக்கவில்லையே என்பதுதான் வேதனை. அவருக்குக் கொடுக்கலாம். இதுவே எம்போன்ற பலரின் அபிப்பிராயம்.

ஏன் தெரியுமா?

இந்த 'வித்துவான்' என்றொரு விபரீதப் போக்கான - மனிதனை, 'கேள்வி பதில்' மூலம் உதயன் சஞ்சீவியில் தோற்றுவித்தமைக்கு -

சமுதாயத்தில் மிக உன்னதமாக, மதிப்பான மனிதர்கள் விநயமாகக் கூறியும் பேரையோ போக்கையோ மாற்றாத வித்துவானை, அவரின் இரட்டை அர்த்தம் தொனிக்க எழுதும் வக்கிரமான பதில்களை, அசிங்க வார்த்தைப் பிரயோகங்களை தமது வருமானங்கருதி மேலும் மேலும் ஊக்குவிக்கும் ஆசிரியருக்குள்ள துணிச்சல் அலாதியானதுதான். ஓரளவு ஜனரஞ்சகமாகப் பத்திரிகை போகட்டும்; பல ரசிகர்களின் பராட்டுவந்து சேரட்டும்; பத்திரிகை விற்பனை அதிகரிக்கட்டும் என்ற எண்ணம் உங்களுக்கு இருப்பது எமக்குத் தெரிகிறது. ஆனால் - முன்னிருந்ததை விட வித்துவான் என்ற மனிதனால் 'உதயன் - சஞ்சீவி' கற்றோர் - மதிப்பானோர் மட்டத்தில் மதிப்பு இழந்து வருகிறது. இது உங்களுக்குப் போகப் போக விளங்காமல் விடாது; விளங்கியே தீரும்.

**மீசாலை. மாந்தோப்பான்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org